# சட்டக்கதிர்

சட்ட மாத இதழ்

SATTAKADIR TAMIL MONTHLY

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அறங்கூறாயங்கள் அறமே செய்யட்டும்"

25 SILVER JUBILEE 1992 - 2016-17 வெள்ளி விழா ஆண்டு

ஜுலை 2026 | ஆடித் திங்களிதழ் | விலை ரூ.75/-

Vol - 34 | July - 2026 | Issue - 8 | Price Rs.75/-

Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026


- துணைவேந்தர் நியமனமும் ஒன்றிய அரசின் நடைமுறையும் மாநில அரசின் புதிய சட்டமும்
  - தலையங்கம்
- பணி நிரந்தரமாக்கலில் நிலவும் 'சமமற்ற பேரம் பேசும் ஆற்றல்' – மகாராஷ்டிர போக்குவரத்து ஊழியருக்கு பின்னீட்டு ஊதிய நிலுவையை வட்டியுடன் வழங்க ஆணை
  - சென்னை உயர்நீதிமன்றம்
- தத்தெடுத்தல் விதிகளை மீறி தத்தெடுக்கப்பட்டவர் பாகப்பிரிவினை சொத்துக்களில் பங்கு கோரவியலாது.
  - சென்னை உயர்நீதிமன்றம்
- காலவரம்பு என்பது உண்மை மற்றும் சட்டம் சார்ந்த கலப்பு வினா என்பதால், வாதிகளைக் கேட்காமல் வழக்குகளைத் தள்ளுபடி செய்யக்கூடாது.
  - சென்னை உயர்நீதிமன்றம்
- உயிலும் அதனை நிறைவேற்றுதல் முறையும்
  - சென்னை உயர்நீதிமன்றம்
- தொடரும் கணக்கில் காலவரம்பு விலைப்பட்டியல் நிலுவையில் துவங்குகிறது
  - சென்னை உயர்நீதிமன்றம்
- ஓட்டுனர், நடத்துனர் பணிக்கு அமர்த்தப்பட்டவர்களை தொழிற்சங்க நிர்வாகி என இதரப் பணிகள் (OD) என்ற பெயரில் பணி செய்ய அனுமதிக்கக் கூடாது
  - சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை அமர்வு)

SATTAKADIR

## முக்கிய தீர்ப்புகள் - சட்ட விளக்கங்கள்


ஆசிரியர் : டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத், எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

www.sattakadir.com | http://epaper.sattakadir.com


VIT®
Vellore Institute of Technology
(Deemed to be University under section 3 of UGC Act, 1956)
FIND YOUR FUTURE
Education opens up the mind and allows you to improve your life in so many ways.
At VIT, we believe it is crucial to provide students with an environment that positively influences their thoughts, stimulates their interest and encourages learning in different settings. Our programmes are structured in line with the changing times. Our faculty and infrastructure are geared to be future ready. And, our students learn and imbibe lifelong values that equip them to be futuristic.
VIT
VELLORE INSTITUTE OF TECHNOLOGY
www.vit.ac.in vituniversity VIT_univ vellore-institute-of-technology vellore_vit VITUniversityVellore

# சட்டக்கதிர்

**தமிழ்நாடு அரசு விருது பெற்ற இதழ்**

ஜூலை 2026 http://epaper.sattakadir.com ஆடித் திங்கள் இதழ் 2026


**பொருளடக்கம்**


1. துணைவேந்தர் நியமனமும் ஒன்றிய அரசின் நடைமுறையும் மாநில அரசின் புதிய சட்டமும் – தலையங்கம் 5

2. பணி நிரந்தரமாக்கலில் நிலவும் 'சமமற்ற பேரம் பேசும் ஆற்றல்'– மகாராஷ்டிர போக்குவரத்து ஊழியருக்கு பின்னீட்டு ஊதிய நிலுவையை வட்டியுடன் வழங்க ஆணை – இந்திய உச்சநீதிமன்றம் 7

3. தீர்ப்பாணை வழக்கு நடப்பில் உள்ளபோது நிறைவேற்றப்படுதல் – சென்னை உயர்நீதிமன்றம் 10

4. தத்தெடுத்தல் விதிகளை மீறி தத்தெடுக்கப்பட்டவர் பாகப்பிரிவினை சொத்துக்களில் பங்கு கோரவியலாது. – சென்னை உயர்நீதிமன்றம் 12

5. காலவரம்பு என்பது உண்மை மற்றும் சட்டம் சார்ந்த கலப்பு வினா என்பதால், வாதிகளைக் கேட்காமல் வழக்குகளைத் தள்ளுபடி செய்யக்கூடாது. – சென்னை உயர்நீதிமன்றம் 19

6. உயிலும் அதனை நிறைவேற்றுதல் முறையும் – சென்னை உயர்நீதிமன்றம் 29

7. தொடரும் கணக்கில் காலவரம்பு விலைப்பட்டியல் நிலுவையில் துவங்குகிறது – சென்னை உயர்நீதிமன்றம் 41

8. விற்பனையும் அதன் விளைவுகளும் – சென்னை உயர்நீதிமன்றம் 48

9. ஓட்டுனர், நடத்துனர் பணிக்கு அமர்த்தப்பட்டவர்களை தொழிற்சங்க நிர்வாகி என இதரப் பணிகள் (OD) என்ற பெயரில் பணிசெய்ய அனுமதிக்கக் கூடாது – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை அமர்வு) 55

10. தடையுறுத்து ஆணையும் உரிமை மூல பாத்தியதையும் – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்) 57

11. நீதியும் ஏஐ-யும் ஒரு புதிய திருப்பம் – மாண்புமிகு டாக்டர் நீதிபதி எஸ்.விமலா 64

12. நீதித்துறையில் ஊழல் இல்லை என யாரும் மறுக்க முடியாது நீதிபதிகளை புனிதர்களாக சித்தரிக்கும் அவசியமில்லை (இந்து தமிழ் திசை) 66

13. 1994ஆம் தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்விச் சட்டம் – தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 68

14. 2006ஆம் தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டம் – தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 72

15. 2021ஆம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டம் – தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 75

# சட்டக்கதிர்

*ஆசிரியர் வெளியிடுபவர்:*
முனைவர் வே.இரா.சே.சம்பத்

*சிறப்பு ஆலோசனைக் குழு:*
*மூத்த வழக்கறிஞர்கள்:*
திரு.ஆர்.காந்தி, திரு.ஆர்.விடுதலை
திரு.ஆர். சண்முகசுந்தரம்,
டாக்டர் எ. தியாகராஜன்

*சட்ட/தமிழ் வல்லுநர்கள்:*
டாக்டர் ஆர். மீனாட்சி சுந்தரம்
முனைவர் மு. முத்துவேலு

*வழக்கறிஞர்கள்:*
திரு. டி.வீரசேகரன், திரு.வி.இரவி
திரு. சரவணன் தனபால், திரு.எஸ். நாகநாதன்
திருமதி ஆதிலட்சுமி லோகமூர்த்தி
திருமதி டி. ஸ்ரீதேவி, திரு. எஸ். பாலமுருகன்

*சென்னை உயர்நீதிமன்றத் தொடர்பாளர்:*
திரு.ஏ.என்.புருஷோத்தம், வழக்கறிஞர்

*டெல்லி உச்சநீதிமன்றத் தொடர்பாளர்:*
திருமதி இந்திரா, வழக்கறிஞர்

*மொழி பெயர்ப்பாளர் குழு:*
திருமதி ஓ.பா.சாந்தி, மதுரை திரு.எஸ்.சம்பத்
திரு.து. முத்துசாமி, வழக்கறிஞர்
திரு.பா.ஞானசேகரன், திரு.மா.வெற்றிவேல்

*அலுவலகப் பணிக்குழு:*
முனைவர் ச. அரவிந்தன்
முனைவர் ச. அழகிரி
திரு. டி.கே.எஸ். மணிவண்ணன்
திரு. கதிரவன் வெங்கடேசன்

*வடிவமைப்பு:* வாசன் அச்சகம், சென்னை

| சந்தா விவரம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் | ₹ 75 | US $ 3 |
| ஆண்டுச் சந்தா | ₹ 900 | US $ 25 |
| வாழ்நாள் சந்தா | ₹ 10,000 | US $ 250 |
| காப்பாளர் சந்தா | ₹ 25,000 | US $ 500 |

சந்தாத் தொகையைச் ''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக் காசோலை **(Cheque),** வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சந்தாத் தொகையைப் பணவிடை **(Money Order)** மூலமாக அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரத்திற்கான விவரத்தையும் தொகையையும் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்க.

**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028.
தொலைபேசி 91-44-24953915 / 24620198
தொலைநகல் 91-44-24959515
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com


# சட்டக்கதிர் வெளியீடுகள்

சட்டக்கதிர் ஆண்டுத் தொகுப்பு
(12 இதழ்களைக் கொண்ட தொகுப்பு) ரூ.1200/-

நீதிமன்றங்களில் தமிழ் ரூ.500/-

தமிழ்நாட்டில் நீதிமுறைகள் (அச்சில்) ரூ.500/-

அறிஞர்களின் பார்வையில் அண்ணா ரூ.500/-

தமிழர் தமிழ்நாடு சமூக பொருளாதார வளர்ச்சி ரூ.500/-

சட்டமும் சமுதாயமும் (அச்சில்) ரூ.150/-

சென்னையிலிருந்து உலகை நோக்கி ரூ.200/-

உன்னுள் என்னைப் பார் ரூ.150/-

உலகெங்கும் கலைஞர் ரூ.300/-

"International Conference of Tsunami, Disaster Management and Coastal Development Report" (English) Rs.500/-

"சட்டக்கதிர்" என்ற பெயருக்குக்
காசோலை **(Cheque),**
வங்கி வரைவுக் கேட்போலை **(DD)**
மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி
நூல்களைப் பெற்றுக் கொள்ளவும்.

**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.

E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com



**சட்டக்கதிர் QR CODE ஸ்கேன் செய்து சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தலாம். சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தி தடங்கலின்றி இதழ்கள் கிடைக்கப் பெறுவீர்!**

# சட்டக்கதிர்

"முன்னேற்றமே எங்கள் பேச்சு – உயர்
முத்தமிழே எங்கள் மூச்சு"

ஆடித் திங்கள் இதழ்

சட்டம் – 34 ஜூலை 2026 கதிர் – 9

## துணைவேந்தர் நியமனமும் ஒன்றிய அரசின் நடைமுறையும் மாநில அரசின் புதிய சட்டமும்

தமிழ்நாட்டில் மாநில பொறுப்பில் உள்ள 20க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் கடந்த சில மாதங்களாக துணைவேந்தர் நியமிக்கப்படவில்லை. மாநில அரசுக்கும் மாநில ஆளுநருக்கும் ஏற்பட்ட சட்டச் சிக்கல் காரணமாக இன்று வரையில் துணைவேந்தர் நியமனம் நடைபெறவில்லை. இது குறித்து மாநிலம் முழுவதும் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்வியாளர்கள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.

1976இல்தான் கல்வி மாநில பட்டியலிலிருந்து ஒத்திசைவு பட்டியலுக்கு மாற்றப்பட்டது. அனைத்து பல்கலைக்கழக கல்வியிலும், நிர்வாக அமைப்பிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறது.

1947–ல் இருந்து 1990 வரை ஒரு சில மத்திய பல்கலைக்கழகங்களே இருந்து வந்தன. அதன் பார்வையாளராக குடியரசு தலைவர் இருந்து வந்தார். அந்தப் பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் நியமனம் என்பது தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்பட்ட மூவரில் ஒருவரை ஒன்றிய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டு வந்தது.

1996க்கு பிறகு ஒன்றிய அரசு வருமான வரியுடன் சேர்த்து கல்வி வரி என கூடுதலாக 4% வசூலிக்க ஆரம்பித்தது. இதன் மூலம் பல்லாயிரம் கோடி நிதி கல்வித் துறைக்கான வருவாயாக கிடைத்தது. கல்வி பொது பட்டியலில் உள்ளதால் இதில் வரும் வருவாயை மாநில அரசோ அல்லது மாநில அரசு ஒன்றிய அரசிடமிருந்து கேட்டுப் பெறவில்லை.

கல்வி ஒத்திசைவு பட்டியலில் இருப்பதால் இந்த நிதியை வைத்துக் கொண்டு மத்திய பல்லைக் கழகங்கள், ஐ.ஐ.டி. நிறுவனங்கள் போன்றவற்றை ஒன்றிய அரசே தொடர்ந்து தொடங்க ஆரம்பித்தது. இதற்கான துணைவேந்தர் குழுவினை ஒன்றிய மனிதவள மேம்பாட்டு அமைச்சகமே நியமித்தது. இதன் பிறகு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மனிதவள மேம்பாட்டு அமைச்சகமே துணைவேந்தர்களை நியமித்து வருகிறது. இதில் குடியரசு தலைவருக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்பது தெளிவாகிறது.

மத்திய பல்கலைக்கழகத்திற்கான பார்வையாளராக குடியரசு தலைவரே இருந்து வருகிறார். இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பல்வேறு மத்திய பல்கலைக்கழகங்களுக்கு தலைவராக கல்வியாளர்கள் அல்லது புகழ்பெற்ற பிரதிநிதிகள் அல்லது சமூக சேவையாளர் என பலரையும் நியமிக்கிறார்கள். உதாரணமாக தமிழ்நாட்டில் உள்ள திருவாரூர் மத்திய பல்கலைக்கழகம், சென்னை அருகாமையில் உள்ள தேசிய கடல்சார் பல்கலைக்கழகம் இவை இரண்டிலும் புகழ்பெற்ற கல்வியாளர்களை தலைவர்களாக நியமித்துள்ளார்கள். அதேபோல் ஒன்றிய அரசால் நடத்தப்படுகிற ஐ.ஐ.டியின் தலைவர்களாக புகழ்பெற்ற கல்வியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். குடியரசு தலைவர் இந்தியா முழுவதிலும் உள்ள மத்திய பல்கலைக்கழகத்திற்கு பார்வையாளராக மட்டுமே உள்ளார்.

பட்டமளிப்பு விழாவிற்கு தலைமை தாங்குவதற்கும், மற்ற பணிகளுக்கும் புகழ்பெற்ற கல்வியாளர்கள் தலைவர்களாக நியமனம் செய்யப்படுகின்றனர். இதேபோல் தமிழ்நாட்டில் உள்ள 20க்கும் மேற்பட்ட மாநில பல்கலைக்கழகங்கள், தற்போது வேந்தராக உள்ள ஆளுநர் அனைத்து மாநில பல்கலைக்கழகங்களிலும் வருடத்திற்கு 2 முறை பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதும், அது சம்மந்தமான நடவடிக்கைகளில் கலந்து கொள்வதும், ஆளுநரிடம் பல்கலைக்கழகங்கள் தேதி பெறுவதும் மிகவும் சிக்கலான ஒன்றாக இருக்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன்னால் சென்னை பல்கலைக்கழகமும், மதுரை பல்கலைக்கழகமும் மட்டுமே இருந்தது. ஆனால், தற்போது இருபதிற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் வந்து விட்டன. மாநில அரசின் கொள்கையாக மாவட்டத்திற்கு ஒரு பல்கலைக்கழகம் என மாநில அரசு தொடங்கும் நிலையில் ஆளுநர் அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் சென்று வர முடியுமா? இந்த அடிப்படையில் பார்த்தால் ஆளுநர் அரசியலமைப்பு சட்டத்தில் சொல்லப்பட்ட அவரது கடமையை நிறைவேற்றுவதற்கு பதிலாக பல்கலைக்கழகங்களின் நிர்வாகத்தை பார்ப்பதே அவருக்கு பெரிய பணியாக இருந்து வருகிறது. இதனால் தான் தமிழ்நாட்டின் ஆளுநர் மாநில சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட சட்ட முன் வடிவுகளை ஒப்புதல் அளிப்பதில் கூட தன் கடமையை சரிவர செய்ய முடியாமல் அவர் பதவியின் வழி வந்துள்ள பல்கலைக்கழக நிர்வாகத்தை பெரிதும் தன் கையில் எடுத்து பணியாற்றி வருகிறார். எனவே, ஆளுநர் பல்கலைக்கழக வேந்தராக இருப்பதற்கு பதிலாக தலைவர் என புதிய பதவியை உருவாக்கி கல்வியாளர்களை பார்வையாளராக நியமிக்க மாநில அரசு பரிசீலிக்க வேண்டும்.

வேந்தர் என்ற சொல் பிரிட்டிஷ் காலத்தில் ஆளுநர்கள் பல்கலைக்கழகத்தின் தலைவர்களாக இருந்த காரணத்தினால் வேந்தர் என்று அழைக்கப்பட்டனர். ஏனெனில் அவர்கள் பிரிட்டிஷ் இராணியின் பிரிதிநிதியாக இங்கு பணியாற்றினார்கள். இந்தியா விடுதலை பெற்ற 1947க்கு பிறகு இந்தியாவினுடைய எந்த இராஜாக்களுக்கு ராஜ அதிகாரம் இல்லை. இந்தியா ஒரு பரிபூரண ஜனநாயக நாடாக விளங்கிக் கொண்டிருக்கிறது. பல்கலைக்கழகங்களுக்கு வேந்தரோ, துணை வேந்தரோ இன்றைய சூழ்நிலையில் தேவைதானா என்பதையும் மாநில அரசு மாற்ற வேண்டிய தருணம் வந்து விட்டது. ஆகவே, பல்கலைக்கழக வேந்தரை தலைவர் என்றும் துணை வேந்தர்களை துணைத் தலைவர் என்றும் மாற்றம் செய்திட வேண்டும். மத்திய பல்கலைக்கழகங்களில் குடியரசு தலைவர் பார்வையாளராக இருப்பதை போல் ஆளுநர் அதிகாரமற்ற பார்வையாளராக நியமிக்கலாம்.

தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் ஒன்றிய அரசால் நடத்தப்படுகின்ற பல்கலைக்கழகங்கள் கல்வியாளர்களை தலைவராக நியமிப்பது போல சிறப்பு பெற்ற கல்வியாளர் களை தலைவர்களாக நியமிக்கலாம்.

ஒன்றிய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகமே துணை வேந்தர்களை நியமிப்பது போல் மாநில அமைச்சரவையின் ஒப்புதலினை பெற்று துணைவேந்தர்களை நியமிக்கலாம். தமிழ்நாடு அரசால் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் மாநில அரசே அதாவது முதலமைச்சரே மாநில பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தராக நியமிக்கலாம். இதனை எதிர்த்து பலரும் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கில் உச்சநீதிமன்றம் இந்தச் சட்டம் செல்லும் என அறிவித்தது. அதற்கு பிறகும் பலரும் வழக்கு தொடர்ந்து இன்றும் பல்வேறு கோரிக்கைகள் எழுப்பப்பட்ட நிலையில் தமிழ்நாட்டில் 20க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் நியமிக்கப்படவில்லை.

மாநில அரசின் புதிய சட்டப்படி துணைவேந்தர்களை நியமிக்க அனுமதிக்க வேண்டும் அல்லது ஒன்றிய அரசின் மனிதவள அமைச்சகம் தன் கீழ் உள்ள பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களையும் வேந்தர்கள்/தலைவர்களை நியமிக்கிற முறைப்படி அந்தந்த மாநில அரசுகள் தனது பொறுப்பில் உள்ள பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிக்க ஒன்றிய அரசு தலையிடாமல் இருக்க வேண்டும். இதனையே இன்றைய கல்வியாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

– ஆசிரியர்

# பணி நிரந்தரமாக்கலில் நிலவும் ‘சமமற்ற பேரம் பேசும் ஆற்றல்’ - மகாராஷ்டிர போக்குவரத்து ஊழியருக்கு பின்னீட்டு ஊதிய நிலுவையை வட்டியுடன் வழங்க ஆணை

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி சஞ்சை கரோல்**
**மாண்புமிகு நீதிபதி என்.கோடீஸ்வர் சிங்**
C.A.@ SLP (C) No.21724/2022
**பாலாஜி மதுக்கர் கொங்கன்வார் ...மேல்முறையீட்டாளர்**
**–எதிர்–**
**மகாராஷ்டிரா அரசு போக்குவரத்துக் கழகம் ...எதிர்மனுதாரர்**

## ஆணை:

**நீதிபதி சஞ்சய் கரோல்**

1. மேல்முறையீடு செய்வதற்கான அனுமதி வழங்கப்படுகிறது.

2. மும்பை உயர்நீதிமன்றத்தின் (நாக்பூர் அமர்வு) நீதித்துறை, ரிட் மனு எண்: 299/ 2022–இல் 2022 ஆகஸ்ட் 01 அன்று பிறப்பித்த இறுதித் தீர்ப்பு மற்றும் உத்தரவினால் மேல்முறையீட்டாளர்–தொழிலாளி பாதிக்கப் பட்டுள்ளார். அந்த உத்தரவின் மூலம், சந்திராபூர் தொழிலாளர் நீதிமன்றம் IDA வழக்கு எண் 10/ 2016–இல் 14 ஜனவரி 2020 அன்று பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்பட்டது. தொழிலாளர் நீதிமன்றத்தின் அந்த உத்தரவு, மேல்முறை யீட்டாளருக்கு 1993 அக்டோபர் முதல் 2011 ஜனவரி 20 வரையிலான காலத்திற்கு ஆண்டுக்கு 12% வட்டியுடன் சேர்த்து நிலுவை ஊதியம் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

3. கீழமைநீதிமன்றங்களால் விவரிக்கப்பட்டுள்ள படி, இந்த மேல்முறையீட்டிற்கு வழிவகுத்த வழக்கு பின்னணி விவரங்கள் பின்வருமாறு:

(i) மேல்முறையீட்டாளர்–தொழிலாளி, எதிர் மனுதாரரின் சந்திராபூர் பிரிவில் 1993 ஏப்ரல்1 அன்று ரூ.500 மாதச் சம்பளத்தில் துப்புரவாளராக நியமிக்கப்பட்டார். அவர் தினக்கூலித் தொழிலாளி யாகத் தொடர்ந்து 1994 மே 20 வரை அந்தப் பதவியில் பணி யாற்றினார். பின்னர் அவர் வாய்மொழியாகப் பணியிலிருந்து நீக்கப்பட்டார். அவர் அளித்த விண்ணப்பத்தின்பேரில், தொழிலாளர் ஆணையர் அவரை மீண்டும் பணியில் அமர்த்தவும், நிலுவை ஊதியம் வழங்கவும் உத்தரவிட்டார்; இருப்பினும், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதன் பின்னர், அவர் மகாராஷ்டிர மாநில சந்திராபூர் தொழிலாளர் நீதிமன்றத்தை ‘வழக்கு எண்: குறிப்பு (IDA) 4/95’ மூலம் அணுகினார். அங்கு மேல்முறையீட்டாளர்–தொழிலாளியின் பணி நீக்கம் சட்டவிரோதமானது மற்றும் முறை யற்றது என்றும், எனவே அவர் பணித்தொடர்ச்சி யுடன் மீண்டும் பணி அமர்த்தப்படுவதற்கும் பின்னீட்டு நிலுவை ஊதியம் பெறுவதற்கும் தகுதியானவர் என்றும் கண்டறியப்பட்டது.

(ii) எதிர்மனுதாரர், உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு எண் 4738/2002–ஐத் தாக்கல் செய்தார். அதில் 2003 மே 2 தேதியிட்ட இடைக்கால உத்தரவின் மூலம், அவரை மீண்டும் பணியில் அமர்த்துவதற்கு எதிரான இடைக்காலத் தடை மறுக்கப்பட்டதுடன், நிலுவை ஊதியத் தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யுமாறு உத்தர விடப்பட்டது. அதன்படி, அவர் 2003 ஜூன் 23 அன்று மீண்டும் தினக்கூலித் தொழிலாளியாகப் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

(iii) 2004–ஆம் ஆண்டில், மேல்முறை யீட்டாளர்–தொழிலாளி தொழில்துறை நீதிமன்றத்தை அணுகி, தான் 180 நாட்கள் பணியை நிறைவு செய்த தேதியிலிருந்து தனது பணியை வரன்முறைப்படுத்த கோரினார். புகார் எண்: 86/2004–ஐ விசாரித்த மகாராஷ்டிர தொழில்துறை நீதிமன்றத்தின் சந்திராபூர்

அமர்வு, 2012 ஜனவரி 12 தேதியிட்ட உத்தரவின் மூலம், அந்த மனுவை பகுதியாக அனுமதித்தது. மேலும், 1985–ஆம் ஆண்டின் உடன்படிக்கை யின் பிரிவு 19(1)–இன் கீழ் வழங்கப்பட்டுள்ள படி, காலியாக உள்ள ஒரு பணியிடத்திற்கு எதிராக, அவர் 180 நாட்கள் பணியை நிறைவு செய்த தேதியிலிருந்து அவரது சேவைகளை வரன்முறைப்படுத்துமாறு உத்தரவிட்டது.

(iv) எதிர்மனுதாரர்கள் தங்களுக்கு மட்டுமே தெரிந்த காரணங்களுக்காக, இந்த உத்தரவு களுக்குக் கீழ்ப்படியத் தொடர்ந்து மறுத்து வந்தனர். இறுதியாக, 2011 ஜனவரி 22 அன்று ஒரு சுபதினத்தில், அவர் துப்புரவாளர் (இளநிலை) என்ற அனுமதிக்கப்பட்ட பணி யிடத்தில் ஒரு நிரந்தர ஊழியராகப் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இருப்பினும், இந்த இடைப்பட்ட காலத்தில் கூட்டப்பட்ட தேர்வு வாரியங்களின் மூலம் வேறு சில நபர்கள் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(v) 2013 ஜூன் 11 அன்று, உயர் நீதிமன்றம் ‘மகாராஷ்டிர மாநில சாலைப் போக்குவரத்துக் கழகம் –எதிர்– கிசான் நாராயணராவ் காலே மற்றும் இன்னொருவர்’ என்ற தலைப்பிலான ரிட் மனு எண்: 3720/2011–இல், அந்த வழக்கின் எதிர்மனுதாரரான ஒரு மின்சாரப் பணியாளர், தனது 180 நாட்கள் பணியை நிறைவு செய்த தேதியிலிருந்து வரன்முறைப் படுத்தப்படுவதற்குத் தகுதியானவர் என்று தொழில்துறை நீதிமன்றம் அளித்த கண்டறிதலை ஏற்றுக் கொண்டு உத்தரவிட்டது. இந்த உத்தரவின் அடிப்படையில், மேல்முறை யீட்டாளர்–தொழிலாளி 1993 முதல் தனது பணியை வரன்முறைப் படுத்தக் கோரி 2016–இல் இதேபோன்ற நிவாரணத்தை நாடினார். மேலும், மேலே குறிப்பிடப்பட்ட இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப் பட்ட ரிட் மனு எண்: 4738/2002 ஆனது 2013 டிசம்பர் 23 அன்று தள்ளுபடி செய்யப் பட்டது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட்டது.

(vi) தொழிலாளர் நீதிமன்றம் IDA வழக்கு எண்: 10/2016–இல் 2020 ஜனவரி 14 அன்று அளித்த தீர்ப்பில், அவர் வரன்முறைப் படுத்தப்படுவதற்குத் தகுதியான தேதியிலிருந்து அவர் உண்மையில் வரன்முறைப்படுத்தப்பட்ட நாள் வரை, அதாவது 1993 அக்டோபர் முதல் 2011 ஜனவரி 20 வரையிலான காலத்திற் கான நிலுவை ஊதிய நிவாரணத்தை வழங்கியது. மேல்முறையீடு செய்யப்பட்டுள்ள தற்போதைய (உயர் நீதிமன்ற) தீர்ப்பு இந்த உத்தரவை ரத்து செய்துள்ளது, இதனால் பாதிக்கப்பட்ட மேல் முறையீட்டாளர்–தொழிலாளி இந்த விவகாரத்தை மேல்முறையீடாக நம்முன் கொண்டு வந்துள்ளார்.

4. எனவே, நாம் தீர்மானிக்க வேண்டியது என்னவென்றால், மேல்முறையீட்டாளர்–தொழிலாளி 1993 அக்டோபர் முதலா அல்லது அவர் உண்மையில் வரன்முறைப்படுத்தப்பட்ட 2011–ஆம் ஆண்டிலிருந்தா நிலுவை ஊதியம் பெறத் தகுதியானவர் என்பதாகும். இந்த நிலைப்பாட்டை எதிர்க்கும் எதிர்மனுதாரர்கள், மேல்முறையீட்டாளர்–தொழிலாளி ஒரு குறிப்பிட்ட தேதியிலிருந்து வழக்கமான பணியை ஏற்றுக்கொண்டு நிபந்தனைகளுக்கு உடன்பட்டு கையெழுத்திட்ட பிறகு, அதற்கு முந்தைய தேதியிலிருந்து அதன் பலன்களைக் கோர அவருக்கு உரிமை இல்லை என்று வாதிடு கின்றனர்.

5. இத்தகைய வாதத்தை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. மேல்முறையீட்டாளர்–தொழிலாளி எவ்வித முறைப்படியான அறிவிப்பும் இன்றி அவரது பணியிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு முன்பே 180 நாட்கள் பணியை முடித்திருந்தார் என்பது ஆவணப்பூர்வமான உண்மையாகும். அதேபோன்று, அன்றிலிருந்து இன்றுவரை தனக்கு உரிமையுடன் சேர வேண்டியதைப் பெறுவதற்காக அவர் தொடர்ந்து ஒரு போராட்டத்தை நடத்தி வருகிறார் என்பதும் உண்மையே. மேலும், அவர் மேற்கொண்ட சட்டபூர்வ நடவடிக்கைகளின் விளைவாக, 2003 முதல் அவர் தொடர் சேவையை ஆற்றியுள்ளார். நிலைமை இவ்வாறு இருக்க, முரண்பட்ட நடத்தை தடைக்கோட்பாடு எதிர்மனுதாரருக்கு ஒரு கேடயமாக அமைந்து, மேல்முறை யீட்டாளரின் கடின உழைப்பால் ஈட்டிய ஊதியத்தை வழங்குவதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற முடியாது. இந்தத் தொகை சும்மா

வழங்கப்படுவது அல்ல, மாறாக அவர் ஆற்றிய சேவைகளுக்கான இழப்பீடாக வழங்கப்படுவதாகும்.

6. தொழில்துறை நீதிமன்றம், ஏறத்தாழ 19 ஆண்டுகளுக்கு முன்பே, மேல்முறையீட்டாளர்–தொழிலாளி 180 நாட்கள் நிறைவு செய்த தேதியிலிருந்து நிலுவை ஊதியம் பெறத் தகுதியானவர் என்று உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவை நடைமுறைப்படுத்தாததற்கு எதிராக அவர் நீதிமன்ற அவமதிப்பு மனுவைத் தாக்கல் செய்திருந்தார். பின்னர் அவர் பணி வரன்முறைப் படுத்தப்படுவார் என்ற உறுதியின்பேரில் அது திரும்பப் பெறப்பட்டது. முன்பே குறிப்பிட்டபடி, அவர் 2011–இல் வரன்முறைப்படுத்தப்பட்டார். இந்த உத்தரவின் கண்டறிதல்கள் சவாலுக்கு உட்படுத்தப்படவில்லை, எனவே அவை இறுதித் தன்மையை அடைந்துவிட்டன. 2020–இல் தொழிலாளர் நீதிமன்றத்தின் உத்தரவு இந்த உண்மையை மறைமுகமாக அங்கீகரித்த போதிலும், உயர்நீதிமன்றம் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ள தனது உத்தரவில் இதை முற்றிலும் தவறி விட்டது. இந்த கட்டத்தில், மேல்முறையீட்டாளர்–தொழிலாளி 2011–இல் வரன்முறைப்படுத்தப்பட்டபோது அவருக்கு வழங்கப்பட்ட பணி நியமனக் கடிதத்தை நாம் கவனிக்க வேண்டும். அது கூறுவதாவது:

‘எனவே நீங்கள் எஸ்.டி. சிமூர் பணிமனையில் 2090–2989 என்ற ஊதிய விகிதத்தில் துப்புரவாளர் (இளநிலை) பணியிடத்தில் பணியமர்த்தப்படுகிறீர்கள். எனவே, நீங்கள் உடனடியாக எஸ்.டி. சிமூர் பணிமனை மேலாளரிடம் பணியில் சேரவும். நீங்கள் 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை முடித்த பிறகும், அதன் பின்னர் உங்களது ஒழுங்கீன பதிவுகள் மற்றும் வருகை தராத நாட்கள் ஆகியவற்றை பரிசீலித்த பிறகும் வரன்முறைப்படுத்தப் படுவீர்கள்.’

2007–லேயே தொழில்துறை நீதிமன்றம் 180 நாட்கள் நிறைவு செய்த தேதியிலிருந்து வரன்முறைப்படுத்துமாறு ஏற்கனவே உத்தரவிட்டிருந்த நிலையில், மேலும் அந்த நிபந்தனை சவாலுக்கு உட்படுத்தப்படாதபோது, மேலும் ஐந்து ஆண்டுகள் பணியை முடித்த பின்னரே அவர் வரன்முறைப்படுத்தப்படுவார் என்ற மேலே குறிப்பிட்டுள்ள நிபந்தனையை மேல்முறையீட்டாளர்–தொழிலாளி மீது சுமத்த எதிர்மனுதாரருக்கு எவ்வாறு அதிகாரம் இருக்க முடியும் என்ற கேள்வியை நாமே கேட்டுக்கொள்கிறோம். ஒரு முதலாளியாக எதிர்மனுதாரர், தொழிலாளியிடம் காட்டிய சமமற்ற பேரம் பேசும் ஆற்றலின் பயன்பாடு இதுவல்ல என்றால், வேறு எது அவ்வாறு கருதப்படும் என்று எங்களுக்குத் தெரியவில்லை.

7. இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, 1993 அக்டோபர் முதல் 2011 ஜனவரி 20 வரை நிலுவை ஊதியமாக ரூ.8,09,218/– ஐ மேல்முறையீட்டாளர்–தொழிலாளிக்கு இழப்பீடாக வழங்கி 2020–இல் தொழிலாளர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை உயர் நீதிமன்றம் ரத்து செய்தது தவறு என்று நாங்கள் தீர்ப்பளிக்கிறோம். அதன்படி, மேல்முறையீடு செய்யப்பட்டுள்ள (உயர்நீதிமன்றத்தின்) உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. இருப்பினும், 1993 அக்டோபர் முதல் 12% வட்டி விதிக்கும் உத்தரவின் நிதிரீதியான தாக்கங்களை முறையாகக் கருத்தில் கொண்டு, வட்டிப் பகுதியை 8% ஆகக் குறைக்கிறோம். அதன்படி உத்தரவிடப்படுகிறது.

8. மேல்முறையீட்டாளர்–தொழிலாளியின் தரப்பு வழக்கறிஞர், இந்தத் தீர்ப்பு வெளிவந்த ஒரு வாரத்திற்குள் தனது கட்சிக்காரரின் வங்கி விவரங்களை எதிர்மனுதாரரின் வழக்கறிஞரிடம் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், அத்தொகை அதனுடன் திரண்ட வட்டியுடன் சேர்த்து எட்டு வாரங்களுக்குள் அவருக்கு வழங்கப்பட வேண்டும்; தவறினால், அசல் நிபந்தனையான 12% வட்டி மீண்டும் நடைமுறைக்கு வரும்.

9. தற்போதைய வழக்குச் சூழல் மற்றும் பின்னணியைக் கருத்தில் கொண்டு, மேல்முறையீட்டாளர்–தொழிலாளிக்கு வழக்குச் செலவாக ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) வழங்க உத்தரவிடுகிறோம். நிலுவையிலுள்ள இதர விண்ணப்பங்கள் (ஏதேனும் இருப்பின்) இத்துடன் முடித்து வைக்கப் படுகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

# தீர்ப்பாணை வழக்கு நடப்பில் உள்ளபோது நிறைவேற்றப்படுதல்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி என்.சதீஷ்குமார்**
**உ.சீ.ம.எண் 2920, 3300/2025**
**உபம எண் 18239/2025 நாள்: 8.8.2025**
**2025 (5) CTC 786**

**எம். பாமா 2. எம்.செந்தில்குமார் ...மனுதாரர்கள்**

**–எதிர்–**

**1. கே.கணேஷ்மூர்த்தி 2. கே.ராதாமணி ...எதிர்வழக்கீட்டாளர்கள்**

கே. அனுசயா, மனுதாரர்களின் வழக்கறிஞர் உ.சீ.ம.எண் 2920/2025, எம்.ஜெகன் மனுதாரர்கள் உ.சீ.மே.எண் 3300/2025இன் வழக்கறிஞர்.

உ.சீ.ம.க்கள் தள்ளுபடி செலவுத் தொகை யின்றி. ப.ம.முடிக்கப்பட்டது.

கோரிக்கை: உ.சீ.ம.எண் 2920/2025, மு.வ.எண் 55/1997இல் 20.6.2025 தேதி யில் அவினாசியும் கீழமை நீதிமன்ற நீதிபதி யால் பிறப்பிக்கப்பட்ட கையுடைமையை ஒப்படைப்பதற்கான ஆணை கா.ம.எண் 68/ 2017. இதனைத் தள்ளுபடி செய்யக் கோரியும் இந்திய அரசமைப்பின் 227ஆல் உறுப்பின்படி உரிமை யியல் சீராய்வு மனு முன்னிடப்பட்டது.

உ.சீ.ம. 3300/2025: மு.வ.எண் 55/ 1997இல் 21.4.2025 தேதியிட்டு பிறப்பிக்கப் பட்ட ஆணையை கீழ்நிலை நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட கா.ம.எண் 68/2017 மற்றும் உடைமையை ஒப்படைப்பு செய்யும் ஆணை தள்ளுபடி செய்யக் கோரி. உ.வி.தொ.ச. இன் 115ஆம் பிரிவின்படி உரிமையியல் சீராய்வு மனு முன்னிடப்பட்டது.

## தீர்ப்பு

1. திருப்பியளித்த டாக்கெட் ஆணை பிறப்பித்த நிறைவேற்றுதல் நீதிமன்றத்தின் ஆணையை எதிர்த்த வாங்குபவரின் சட்ட வாரிசுகளால் முன்னிடப்பட்ட உ.வி.தொ.ச.இன் கட்டளை 21, விதி 97 உடன் சேர்ந்து படிக்கப் படும் 151ஆம் பிரிவின்படி உ.சீ.ம.எண் 2920/2025 சீராய்வுக்காக முன்னிடப் பட்டுள்ளது.

2. நிறைவேற்றுதல் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஒப்படைப்பு ஆணையை எதிர்த்து உ.சீ.ம.எண் 3300/2025 தீர்ப்புக் கடனாளியினால் இந்த சீராய்வு முன்னிடப் பட்டுள்ளது.

3. முதன்முதலில், குறிப்பிடப்பட்ட நிறைவேற்றுதல் மனு முன்னிடப்பட்டது. மு.வ.எண் 55/1997இல் திருப்பூர் மாவட்ட முனிசீப் நீதிமன்றத்தில் முன்னிடப்பட்டது. 16.10.2025 தேதியிட்ட உடன்படிக்கையினை நிறைவேற்றுவதற்காக முன்னிடப்பட்டது மற்றும் வழக்குத் தரப்பினர் களின்றி தீர்ப்பாணை பெறப்பட்டது. 10.9.2001 அன்று, தீர்ப்பாணை பெற்றவர் அதன் பின்னர், நி.ம.எண் 6/2002இனை முன்னிட்டு விற்பனை ஆவணத்தை பதிவு செய்யக் கோரியுள்ளார். பின்னர், நி.ம.எண் 160/2004 முன்னிட்டார். இது பின்னர் மனு எண்ணிடப்பட்டது. நி.ம. எண் 68/2017. இது அவினாசி துணை நீதிமன்றத்தின் முன்பு கையுடைமை ஒப்படைப்பிற்கானது.

4. நிறைவேற்றுதல் நடவடிக்கைகளில் தீர்ப்புக் கடனாளி 10.9.2001 தேதியிட்ட தரப்பினரில்லா தீர்ப்பாணையினை தள்ளுபடி செய்ய விண்ணப்பித்திருந்தார். அத்துடன் காலத் தாழ்வினை ஏற்க மனுவும் முன்னிடப்பட்டது. இதில் 5915 நாள் காலத் தாழ்வு மு.வி.எண் 33/2020. சொல்லப்பட்ட விண்ணப்பம் 17.3.2022 அன்று நிறைவேற்றுதல் நீதிமன்றத்தினால் உ.சீ.ம.எண் 3088/2022, 24.4.202 தேதியிடப்பட்டது. உறுதி செய்யப் பட்டது. எனவே, தீர்ப்புக் கடனாளிக்கு எதிரான தீர்ப்பாணை மற்றும் தீர்ப்பு அறுதி செய்யப் பட்டது. அதன் பின்னர், 17.3.2025 அன்று அவினாசி மாவட்ட முனிசீப் நீதிமன்றத்தினால் ஒப்படைப்பு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதனை

எதிர்த்து, உ.சீ.ம.எண் 3300/2025 தீர்ப்புக் கடனாளியினால் முன்னிடப்பட்டது.

5. இதற்கிடையில், தீர்ப்பாணை பிறப்பிக்கப் பட்ட பின்னர், தற்போதைய சீராய்வு மனுதாரர் களின் தந்தைக்கு சொத்தானது உரிமை மாற்றம் செய்யப்பட்டதாக தெரிகிறது. உ.சீ.ம.எண் 2920/2025, 19.12.2003 தேதியிட்டவாறு நிறைவேற்றுதல் நடவடிக்கைகளின் செயற்பாடு நடப்பில் உள்ளபோது இத்தகைய வாங்குதல், வழக்கு நடப்பில் உள்ளபோது செயற்பட்டது தெளிவாகிறது.

6. சொல்லப்பட்ட பிந்திய வாங்குநர் மணி கா.வி.41/2005 பிரிவு 47இன்படி விண்ணப்பம் முன்னிடப்பட்டது மற்றும் 13.12.2019 அன்று இது தள்ளுபடி செய்யப்பட்டது. இதுவும் அறுதிநிலையை அடைந்தது. இப்போது, சட்ட வாரிசுகள் சொல்லப்பட்ட மனுவால் மீண்டும் உ.வி.தொ.ச.இன் கட்டளை 21, விதி 9, 79இன்படி விண்ணப்பம் ஒன்று முன்னிடப் பட்டது. இது விசாரணை நீதிமன்றத்தினால் திருப்பியளிக்கப்பட்டது. சொல்லப்பட்ட திருப்பி யளித்தவை எதிர்த்து, சீராய்வு உ.சீ.ம.எண் 2920/2025 சட்ட வாரிசுகளால் முன்னிடப் பட்டது. அதாவது பிந்திய வாங்குபவர்/மூன்றாம் தரப்பினரால்.

7. இரு தரப்பினர்களும் கேட்டறியப்பட்டு, பதிவேடுகளில் கிடைக்கத்தக்க பொருட்பாடுகள் கவனமாக கூர்ந்தாய்வு செய்யப்பட்டது.

8. முதல் எடுப்பில், இந்த நீதிமன்றம் கருதுவது வழக்கு நடப்பில் உள்ளபோது வாங்கியவர் அவர் அல்லது அவரது சட்ட வாரிசுகள் அந்த ஒப்படைப்பை எதிர்த்து விண்ணப்பம் எதனையும் முன்னிட தடை செய்யப்படுகிறது. அதாவது உ.வி.தொ.ச.இன் கட்டளை 21 விதி 102இன்படி அது பின் வருமாறு.

“102. உரிமை மாற்றம் செய்யும் வழக்கு நடப்பில் உள்ள போது செல்லத்தகாத பொருந்தாத விதிகள்: விதி 982100இல் உள்ள எதுவும், எதிர்ப்பாக அல்லது தடையாக. அதாவது தீர்ப்பாணையை நிறைவேற்றுவது தொடர்பாக. அசையாச் சொத்து எதனையும் கையுடைமை யில் ஆள் ஒருவர் கொள்வதை அவருக்கு தீர்ப்புக் கடனாளி வழக்கினைத் தொடுத்த பின்னர் சொத்தினை உரிமை மாற்றம் செய்துள்ள போதும். அதில் தீர்ப்பாணை வழங்கப்பட்டிருந்து அல்லது அத்தகையவருக்கு உடைமையில்லாத போதும் பொருந்தாது.

எனவே, மேற்சொல்லப்பட்ட வகைமுறை இதனை நன்கு தெளிவுபடுத்துகிறது. அதாவது தீர்ப்பாணைக்குப் பின்னர் சொத்து உரிமை மாற்றம் செய்யப்படும்போது அந்த உரிமை மாற்றத்தின் அடிப்படையில் அவரது உரிமையை நீதிமுறைத் தீர்ப்பின் மூலம், கட்டளை 21 விதி 97இன்படி விண்ணப்பம் ஒன்றை வைத்து வர முடியாது. எனவே, எனக்கு இந்த உ.சீ.ம.எண் 2920/2025இல் எந்த நற்குறிப்பும் இருப்ப தாகத் தெரியவில்லை.

9. உ.சீ.ம.3300/2025 தொடர்பாக சீராய்வு என்பது, தீர்ப்புக் கடனாளியின் வாதம் மட்டுமே. வன் இயற்கெனவே தனது சொத்தினை உரிமை மாற்றம் செய்துள்ளார். அதாவது நிறைவேற்றுதல் மனு நடப்பில் இருந்தபோது, கா.ம. அவருக்கு எதிராக செல்லத்தக்கதல்ல. அத்தகைய முடிவு செயற்பட முடியாது. அதற்கு நிற்க (ஆதாரம் இல்லை) கால்கள் இல்லை. இதில் கவனிக்க வேண்டியது. விற்பனை ஆவணம் ஏற்கெனவே 2002ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. அதாவது பிந்திய வாங்குநருக்கு மிக முந்தியே செய்யப்பட்ட விற்பனை பொருண்மையின்படி, பிந்தய வாங்குபவர் எந்த உரிமைமூல பாத்தியதையையும் எதிர்க்கவில்லை. ஏனெனில் உரிமை மூல பாத்தியதை ஏற்கனவே உரிமை மாற்றம் செய்யப்பட்டது. நீதிமன்றத்தினால் எனவே அத்தகைய வாதம் எந்த ஆதாரமும் இல்லாது நிற்காது. அடுத்த வாதமாவது சீராய்வு மனுதாரர்கள் உ.சீ.ம.2920/2025. அவர்கள் கட்டுமானத்தை அமைத்துள்ளனர். அதில் மேம்பாட்டை செய்துள்ளனர். நிறைவேற்றுதல் நீதிமன்றத்தின் முன்பு இவர்கள் இவற்றை நிரூபித்தல் அவசியம். அத்தகைய கட்டுமானம் நல்லெண்ணத்தில் செய்யப்பட்டது. ஆனால் இவ்வாறு அது மெய்ப்பிக்கப்படுமானால் அவர் களுக்கு இழப்பீடு கிடைக்கலாம். இதில் அது நல்லெண்ணத்தில் செய்யப்பட்டதா அல்லது பிந்திய வாங்குபவரால் கட்டுமானம் செய்யப்ப ட்டதா என்பது நிறைவேற்றுதல் நீதிமன்றத்தி னால் மட்டுமே கருதுகை செய்யப்பட முடியும். எனவே, நான் இந்த சீராய்வுகளில் எந்த நற்குறிப்பையும் காண முடியவில்லை.

10. அவ்வாறே இரு உரிமையியல் சீராய்வு மனுக்களுக்கும் தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகையின்றி, இதன் விளைவாக தொடர்புடைய பல்வகை மனுக்கள் முடிக்கப் படுகின்றன.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# தத்தெடுத்தல் விதிகளை மீறி தத்தெடுக்கப்பட்டவர் பாகப்பிரிவினை சொத்துக்களில் பங்கு கோரவியலாது

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி வி.லட்சுமி நாராயணன்
உசீம (பிடி) 1952/2024 மற்றும் உபம எண் 10298/2024
நாள் : 15.11.2024
2025 (3) CTC 705

பி.ரேவதி ...மனுதாரர்

–எதிர்–

ஹரிராஜ் 2. வட்டாட்சியர்,
கோயம்புத்தூர் வடக்கு வட்டம்,
கோயம்புத்தூர் –641018.
3.மாவட்ட ஆட்சியர், ஆட்சியரகம்,
கோயம்புத்தூ 641018 ...எதிர்மனுதாரர்

திரு.வி.ரகுபதி, மனுதாரரது வழக்குரைஞர் சுரேஷ் வி.சௌலி சார்பில்

திரு.எஸ்.லக்ஷ்மணசாமி, 1வது எதிர்மனு தாரரது வழக்குரைஞர்; திரு.என்.முத்துவேல். அரசு வழக்குரைஞர். 2–3வது எதிர்மனுதாரர் களுக்காக.

உசீம ஏற்றுக் கொள்ளப்பட்டது – எம்1/வாதி மீது செலவு தொகை விதிக்கப்பட்டது.

**கோருகை**: கோயம்புத்தூரிலுள்ள மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றக் கோப்பி லான வழக்கு எண் 691/2023இல் உள்ள வழக்குரையை நீக்கிட இந்திய அரசமைப்பு சாசன உறுப்பு 227 கீழ் உரிமையியல் சீராய்வு மனு தாக்கலாகிறது.

## தீர்ப்புரை

1. கோயம்புத்தூரிலுள்ள மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்ற கோப்பிலான வழக்கு எண் 691/2023இல் உள்ள வழக்குரை தாக்கலிடலுக்கு இந்த உரிமையியல் சீராய்வு மனு சவாலிடுகிறது.

2. திரு.பூபதி என்பவரால் அவர் 11.2.1998 அன்று தத்தெடுக்கப்பட்டார் என்பது வாதி திரு.ஹரிராஜின் வழக்காகும். 26.2.2013 அன்று பூபதி இயற்கை எய்தியதால் ஒரு தத்தெடுப்பு ஆவணம் காரணமாக பூபதியின் சொத்தை அவர் பெற்றடைந்திருக்கிறார் என அவர் கூறுகிறார். இறந்த பூபதியின் உடன் பிறந்தோர்கள் வாரிசுகள் அவர்கள் ஆவார்கள் எனும் விளம்புகை கோரிக்கொண்டு முதலேற்பு வழக்கு எண் 2639/2013ஐ இறந்த பூபதியின் உடன்பிறந்தோர்கள் முன்னிட்டார்கள். அந்த அடிப்படையில் அவர்கள் சொத்தை அவர் களுக்குள் பிரித்துக் கொள்ள முனைந்தி ருந்தார்கள்.

3. இந்து வாரிசுரிமை சட்டம் காரணத்தால் அவர் வகுப்பு 1 வாரிசு ஆவார் எனவும் ஆகையால் முவ எண் 2639/2013இல் உண்டான தீர்ப்பாணை அறவே இல்லாநிலையதாகும் எனவும் வாதி கூறினார். எனவே முதலேற்பு வழக்கு எண் 2639/2013இல் உண்டான 2.4.2014 தேதிய தீர்ப்பாணையை ரத்தாக்க அவர் முவ எண் 691/2023ஐ முன்னிட்டார். வழக்கில் 1வது எதிர்வாதியான திருமதி பி ரேவதி முவ எண் 2639/2013 இல் 5வது வாதியாக இருந்தாள். ஆகையால் அவள் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டு இப்போதைய வழக்கு தாக்கலானது.

4.வழக்குரை தாக்கலானதால் துயருற்ற திருமதி பி.ரேவதி சீராய்வில் மனுச் செய்துள்ளார்.

5.1வது எதிர்மனுதரரரது வழக்குரைஞர் திரு.சுரேஷ் வி சௌலி சார்பில் திரு.வி.ரகுபதியை யும் 2–3வது எதிர்மனுதாரர்களுக்காக திரு. என்.முத்துவேலையும் நான் கேட்டறிந்தேன்.

6.வழக்குரைக்கு சவாலிடும் சீராய்வாக இது உள்ள நிலையில் 1வது எதிர்மனுதாரர்/வாதி

யால் வைக்கப்படும் மறுப்புரை பற்றிய கேள்வியை நான் ஆராய்ந்திட இயலாது. வழக்குரையில் சொல்லப்பட்ட உறுத்துகூற்று களுடனும் வழக்குரை ஆவணங்களும் நான வரம்பிட்டு வழக்கு சட்டநெறி துர்பிரயோக மாகுமா அல்லது சட்ட நெறி வகையம் எதனாலும் தடையாகிறதா என்பதை கண்டறிதலும் ஆகும்.

7. சுப்புராஜு என்பவர் ஆதிலக்சுமியை மணந்ததும் அவர்கள் ஐந்து மகன்களையும் நான்கு மகள்களையும் பிறப்பித்தார்கள் என்பதும் மறுக்கப்படா பொருண்மைகளாகும். எளிதாக புரிந்தறிதல் பொருட்டு வழக்குரையில் தரப்படும் கொடிவழி கீழே தரப்படுகிறது.

கொடிவழி சுப்புராஜு (5.10.1956 அன்று இறந்தார்)

ஆதிலக்சுமி (மனைவி 7.3.1971அன்று இறந்தாள்)

வெங்கிடபதி (இறந்தவர்), திருமால்பதி (இறந்தவர்), பூபதி (இறந்தவர்), ரகுபதி (இறந்தவர்), தனலக்சுமி (இறந்தவர்), ஜானகியம்மாள் (இறந்தவர்), ஜம்பலக்சுமி (இறந்தவர்), ராஜாமணி (இறந்தவர்), ரேவதி (1வது எதிர்வாதி)

பூபதி: தத்தெடுத்த தந்தை

சந்திராதேவி (க/பெ. பூபதி) இறந்தது. 27.8.1999 வாதியை தத்தெடுத்த தாயார்.

8. கோயம்புத்தூரில் வழக்குரைஞராக தொழில் செய்து கொண்டிருந்த மூன்றாவது மகன் பூபதி சந்திராதேவி என்பவளை மணந்தார் என்பதில் தகராறில்லை. சொன்ன சந்திராதேவி பூபதிக்கு முன்னராக இறந்தாள். அவள் 27.8.1999 அன்று காலமானார். துரதிர்ஷ்ட வசமாக பூபதிக்கும் சந்தராதேவிக்கு உண்டான திருமண பந்தத்தில் குழந்தைகள் ஏதுமில்லை. மேலே சுட்டப்பட்டவாறு 26.2.2013 அன்று பூபதி இறந்தார். வகுப்பு 1 வாரிசுகள் எவரும் இல்லாததால் வகுப்பு2 இன் பிரிவு 2 கீழ் வரும் உடன்பிறந்தோர்கள் ஆன வெங்கிடபதி, திருமால்பதி, எஸ்.ரகுபதி, ராஜாமணி மற்றும் பி. ரேவதி ஆகியோர் அவர்கள் அமரர் பூபதியின் சட்டபூர்வ வாரிசுகள் ஆவார்கள் என்ற விளம்புக்கைக்கான வழக்கை தாக்கலிட்டார்கள். கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரையும், கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியரையும் வழக்குரையில் தரப்பினர்களை சேர்த்து வழக்குரையை முன்னிட்டார்கள். அழைப்பாணை சார்வாதல்பேரில் உறவுமுறையை நீதிமன்றம் ஆராய்ந்து இறந்த நபரின் சட்டபூர்வ வாரிசு களாக பூபதியின் உடன்பிறந்தோர்கள் உள்ளார்கள் என விளம்பி 2.4.2014 அன்று நீதிமன்றம் தீர்ப்பாணையிட்டது.

9. முவ எண் 352/2015இல் இந்த தீர்ப்பாணைக்கு மோகன்குமரன் என்பவரால் சவாலிடப்பட்டது. சொன்ன வழக்கில் 8வது எதிர்வாதியாக இப்போதைய வாதி திரு. ஹரிராஜ் வழக்கில் சேர்க்கப்பட்டார். வழக்கு 7.2.2017 அன்று திருப்பிப் பெறப்பட்டதாக தள்ளுபடி யானது. அழைப்பாணை சர்வாக்கப் பெற்ற 8வது எதிர்வாதி சொன்ன வழக்கில் முன்னிலை யாகவில்லை. முவ எண் 2639/2013இலுள்ள தீர்ப்பாணையை ரத்தாக்க கோரிக் கொண்டு இப்போதைய வழக்கை தொடுத்திட்டார். அவருக்கு ஆறாண்டுகளுக்கு மேலாக காத்தி ருக்கிறார் என தோன்றுகிறது.

10.வாதியை 11.2.1998 அன்று பூபதியும் சந்திராதேவியும் தத்தெடுத்திருந்தார்கள் என்பது வாதியின் வழக்கின் அடிப்படையாகும் என திரு வி.ரகுபதி வாதிடுகிறார் சொன்ன தத்தெடுப்பு நாளன்று வாதி சுமார் 46 வயதினராக இருந்தார் என அவர் சுட்டிக் காட்டுகிறார். வழக்குரை ஆவணம் 1 ஆக தாக்கலாகியிருந்த தத்தெடுப்பு ஆவணத்துக்கு எனது கவனத்தை அவர் ஈர்க்கிறார்.

11.திரு.வி.ரகுபதியின் வேண்டுகோள் சரியான என்பதை தட்டச்சு தாள் கோப்பில் பக்கம் 36இல் இணைப்பாகும் சொன்ன ஆவணத்தை ஆழ்ந்து வாசித்தல் காட்டுகிறது. ஹரிராஜுக்கு 46 வயதானது எனவும்

11.2.1998இலிருந்து சொன்ன ஹரிராஜை இறந்த பூபதியும் சந்திராதேவியும் தத்தெடுத்தி ருப்பதாக சொல்லப்பட்டது. எனவே அது1956 இன் இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்பு சட்டத்துக்கு முரணாக உள்ளதால் வழக்கு சட்ட நெறி துர்பிரயோக எனவும் அதில் வாசிப்பாகிறது என அவர் வாதுரைக்கிறார்.

12.மாறாக, அவளது எழுத்திலான விளக்கவு ரையை உரிமையியல் சீராய்வு மனுதார்ர/1வது எதிர்வாதி ஏற்கனவே சமர்த்திருப்பதால் உரிமை யியல் சீராய்வு மனு நிலைக்கதக்கதில்லை என திரு எஸ்.லஷ்மண சாமி வலியுறுத்துகிறார். முவ எண் 2639/2013இல் உண்டான தீர்ப்பாணை மாவட்ட ஆட்சியருக்கும் வட்டாட்சியருக்கும் இப்போதுள்ள உரிமையியல் சீராய்வு மனுதார ருக்கும் இடையான கூட்டு சதியாகும் எனவும் ஆகையால் சொன்ன தீர்ப்பாணைக்கு மதிப்பு தரப்பட கூடாது எனவும் அவர் மேலும் வாது ரைக்கிறார். தத்தெடுப்பு பெற்றோர்கள் மரபுவழி பெற்றோர்கள் மற்றும் தத்தெடுப்பட்ட மகனே தவிர்த்து தத்தெடுப்பின் செல்லுமை பற்றி கேள்வியெழுப்ப உரிமை அல்லது வழக்கிட லுரிமை எவருக்கும் கிடையாது என் அவர் வாதுரைக்கிறார். சொன்ன முன்மொழிவு ரைக்காக அவர் கீழ்வரும் தீர்ப்புரைகளில் நம்புகை கொள்கிறார்.

(i) ஸ்ரீ கடப்பா சத்யப்பா தெரனி –எதிர்– ஸ்ரீ சித்தப்பா கந்தப்பா தெரனி மு.இ.மே எண் 1483/ 2005(PAR) மற்றும்

(ii) டாக்டர் எம்.ஏ.எம். ராமசுவாமி செட்டி யாரின் செட்டி நாடு அறக்கட்டளை பொறுப்புக் கழகம் –எதிர்– வட்டாட்சியர் மற்றும் ஒருவர், 2023 (2) CWC 168– நீபேமே எண் 2625/2022 இல் 23.1.2023 தேதியது. இப்போதை சீராய்வை முன்னிடலுக்கு உரிமையியல் சீராய்வு மனுதார ருக்கு வழக்கிடலுரிமை ஏதும் கிடையாது என அவர் வாதுரைக்கிறார்.

13. ஒவ்வொரு தரப்பிலான பணிந்துரையை யும் நான் பரிசீலித்துள்ளேன். மொத்த பதிவெண்களையும் நான் ஆராய்ந்துள்ளேன்.

14. 1956இன் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்பு சட்டப் பிரிவு 10இல் நான் குறிப்பாடு கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில் இந்துக்களாகவும் பட்டுரோஜா சமூகத்தை சேர்ந்தவர்களாகவும் தரப்பினர்கள் உள்ளார்கள் என்பதில் தகராறில்லை. எவர் தத்துக் கொடுக்கப் பட இயலும் என்பது பற்றி சில நிபந்தனைகளை அது பிரிவு 10 கீழ் விதிக்கிறது. பிரிவுகள் 10(iii) &10(iv) கீழ் ஏற்கனவே மணமான ஒருவர் தத்துக் கொடுக்கப்பட முடியாது. கூடுதலாக ஒரு நபர் 15 வயதை கடந்திருந்தால் தத்துக்காக அவர் அல்லது அவள் கொடுக்கப்பட முடியாது. தரப்பினர்களுக்கு பொருந்துறுவாகும் பழக்கம் அல்லது பயன்பாடு உள்ளது எனவும் அதன் கீழ் மணமான அல்லது 15 வயதை கடந்திருந்த ஒருவர் அல்லது ஒருத்தி தத்து கொடுக்கப்பட முடியும் எனும் குறித்த வாதுரை தத்து கோரும் நபரால் எழுப்பப்பட வேண்டும் என்பது இந்த விதிக்கு விலக்காக அமைகிறது.

15 துரதிர்ஷ்டவசமாக மணமான அல்லது 15 வயதை அடைந்துள்ள ஒருவர் தத்து கொடுக்கப்படும் பழக்கும் பட்டுரோஜா சமூகத்தில் நிலவுகிறது என வாதியலான எந்த வாதுரையும் கிடையாது. இத்தகைய வாதுரை இல்லை யானால் அப்போது தத்தெடுப்பு சொன்ன சட்டத்தின் பிரிவுகள் 10(iii) & 10(iv) செயலாற்றும்.

16. தத்தெடுப்பு நாளன்று 1வது எதிர்மனு தாரருக்கு/வாதிக்கு ஏறகனவே மணமானது என்பதில் தகராறு கிடையாது. மேலும், சொன்ன தத்தெடுப்பு நாளன்று அவருக்கு சுமார் 56 வயதானது என்பதிலும் தகராறில்லை. ஆகையால் பூபதியின் தத்தெடுக்கப்பட்ட மகனாக உள்ள வாதி 1956இன் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் முன்சொன்ன பிரிவு களால் நேரடியாக பாதிப்புறுகிறார். விளைவாக இறந்த பூபதியின் சட்டபூர்வ மகனாக அவர் உள்ளார் எனும் விளம்புகையை கோரலுக்கு வாதிக்கு வழக்குமூலம் கிடையாது.

17.பொருண்மைகள் விளக்கத்தின்போது பூபதி வழக்குரைஞராகவும் கோயம்புத்தூரில்

அமைந்துள்ள பல்வேறு பெருநிறுவனங்களுக்கு ஆலோசகராகவும் இருந்தார் என்பதை நான் சுட்டிக் காட்டியுள்ளேன். ஆகையால் 1956இன் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்பு சட்டப் பிரிவு 10 பற்றி பூபதி அறியாதிருந்தார் என வாது ரைத்தல் என்னால் நம்பவியலா கதையாக உள்ளது.

18. இந்த இடர்பாடை எதிர்கொண்டு இந்த சீராய்வின் செல்லுமையையே திரு.எஸ்.லஷ்மண சாமி எதிர்த்தார். அவரது கூற்றுப்படி 1வது எதிர்மனுதாரரின் பெற்றோர்களும் பூபதி, சந்திரா தேவி அல்லது வாதியே மட்டுமே தத்தெடுப்பை எதிர்க்க இயன்றிந்திருககும்.

19. வல்லுனர்களுக்கு திரும்பு, முன் பூபதி யின் மரணம் வழக்கின் வழக்கு மூலமாக உள்ளது என்பதை நான் சுட்டிக்காட்ட வேண்டும். பூபதி 26.2.2013 அன்றும் அவரது மனைவி சந்திராதேவி 27.8.1999 அன்றும் இறந்தார்கள். வாதியின் தாயார் ஜம்பலக்சுமி 11.3.2002 அன்று இறந்தாள். 1வது எதிர்மனுதாரரின் தந்தை அவளுக்கு முன்பே இறந்திருந்தார். ஆகையால் பூபதி இறந்த 26.2.2013 நாளன்று தரப்பினர்களில் எவரும் உயிருடன் இருக்கவில்லை. வழக்கை இறந்தவர்கள் தொடுத்திருக்க வேண்டும் என கூறுதல் சாத்திய மற்ற வேண்டுகையாக உள்ளது. இறந்தவர்கள் வழக்கு தொடுப்பதில்லை.

20. இவ்விடத்தில் 1956இன் இந்து வாரிசு ரிமை சட்டத்தை நான் குறிப்பிட வேண்டி யுள்ளது. இந்து வாரிசுரிமை சட்டப் பிரிவு 8 கீழ் உயிலெழுதாது ஒருவர் இறந்தால் ஆஸ்தியை எவர் சேர்ந்தடைய முடியும் என்பது சட்டத்தில் அட்டவணையில் குறிப்பிடப்படுகிறது. வகுப்பு 1 வாரரிசு வகுப்பு 2 வாரிசை விலக்குகிறார். வகுப்பு 1 வாரிசு இல்லாத நிலையில் சொன்ன அட்டவணையின் வகுப்பு 2க்கு நான் திரும்ப வேண்டியுள்ளது. வகுப்பு 2 கீழ் சொத்துக்கு சேர்ந்தடைய பாத்தியமான 9 வகை நபர்கள் உண்டு. வாதி அல்லது வேறு நபர் நபர் சேரும் பிரிவுக்கு மேலான பிரிவில் ஒருவர் காணப் பட்டால் அப்போது முன்னவர் பின்னவரை விலக்குவார். இதுவும் பிரிவு 8 இயல்பாக வாசித்தலிலிருந்து தெளிவாகும்.

21. முவ எண் 2639/2013 இன் வாதிகள் பூபதியின் உடன்பிறந்தோர்கள் ஆவார்கள். ஆகையால் அவர்கள் இந்து வாரிசுரிமை சட்டத்தின் வகுப்பு 2 பிரிவு 2 கீழ் வருகிறார்கள். சகோதரியின் மகன் ஆன வாதி வகுப்பு 2 பிரிவு4 (2) கீழ் வருகிறார். ஆகையால் பூபதியின் உடன்பிறந்தோர்கள் இயல்பாகவே ஆஸ்திக்கு வந்தடைதிலிருந்து வாதியை வெளியேற்று கிறார்கள். அதன் காரணமாகவே, அவர் வகுப்பு 1 வாரிசாக உள்ளார் என கோரிட தத்தெடுப்பு ஆவணத்தை வாதி முன்னிறுத்தியிருந்தார். மேலே சுட்டப்பட்டவாறு 1956இன் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்பு சட்டப் பிரிவு 10 இக்கு தத்தெடுப்பு ஆவணம் ஒவ்வாததாகிறது. விளைவாக வாதியின் வாதுரையிலேயே இறந்த பூபதியின் உயிர்வாழும் உடன்பிறந்தவர்களல் உரிமையியல் சீராய்வு மனுதாரர் இறந்த பூபதியின் ஆஸ்திக்கு சேர்ந்தடைவதிலிருந்து வாதியை வெளியேற்றுகிறார்.

22. முவ எண் 2639/2013இல் வட்டாட்சிய ருக்கும் மாவட்ட ஆட்சியருக்கும் இடையில் கூட்டுசதி இருந்தது என திரு. எஸ்.லஷ்மண சாமி வலியுறுத்துகிறார். அந்த வழக்கில் இரண்டாவது எதிர்வாதியான வட்டாட்சியர் அவருகு சட்டப்பூர்வ வாரிசு சான்றிதழ் அளித்திருந்தார் எனவும் ஆகையால் முவ எண் 2639/2013இல் உள்ள வழக்கு தள்ளுபடிய்யாக் பெற்றிருக்க வேண்டும் எனவும் அது செய்யப்படாததால் அது முன்சொன்ன வழக்கில் எதிர்வாதிகல் இடையிலான கூட்டு சதியாகும் எனவும் அவர் கூறுகிறார்.

23. கூட்டுசதி பற்றி திரு.எஸ்.லக்சுமணசாமி வாதுரைத்திருந்ததால் வழக்குரையை நான் மறுபடியும் ஆராய்ந்தேன். இது ஏனெனில் உவிதொதொச வகுமுறை 6 விதி 4 கீழ் விழலாக்கும் சந்தர்ப்பங்கள் பற்றி ஒரு தரப்பினர் வாதுரையில் 1வது எதிர்வாதியுடன் எவ்வாறு மற்றும் எப்போது கூட்டுசதியில் வட்டாட்சியர்

ஈடுபட்டிருந்து முவ எண் 2539/2013 தீர்ப்பாணையிட நீதிமன்றத்தை அனுமதித்தார் என்பதை வாதுரைத்தல் அவரது /அவளது கடமையாகும். கூட்டு சதி குறித்த வாதுரை எதனையும் காணும் நிலைமையில் திரு.எஸ்.லஷ்மண சாமியும் நானும் இருக்கவில்லை. ஆகையால் இந்த வாதுரை விரக்தியில் உருவான ஒன்றாக உள்ளது. பதிவாவணங்கள் அடிப்படையில் அல்ல.

24. சீராய்வை தோல்வியாக்க திரு.எஸ்.லஷ்மண சாமியால் குறிப்பாடாகும் தீர்ப்புரைகளுக்கு திரும்புக் கொண்டு , நான் முதலில் வீரபத்ரய்யா ஆர்.ஹிர்மத் –எதிர்– இயரய்யா ஏ.எஃப்.பரய்யா ஹிரெமத்ச்டிணூ 2006(3) Kar 252 வழக்கில் குறிப்பாடு வைக்கிறேன். அந்த வழக்கில் 1961வது வருடத்தில் செய்யப்பட்டிருந்த தத்தெடுப்புக்கு சவாலிட்டுக் கொண்டு வழக்கு 1992இல் தாக்கலாகியிருந்தது. அந்த வழக்கில் வாதி தத்தடுப்பு ஆவணத்தை ஏற்றுக் கொண்டி ருந்தார். தத்தெடுத்த தந்தைக்கு மோட்சி செய்து கொண்டும் உரகாத செல்வாக்கு கொண்டும் அது 1961 வருடத்தில் உருவாக்கப்பட்டது எனவும் ஆகையால் அந்த வழக்கில் தீர்ப்பாணைக்கு அவருக்கு பாத்தியதையுண்டு எனவும் அவர் வாதுரைத்தார். வாதியின் வாதுரையை நீதிபதி பரிசீலித்துக் கொண்டு, தத்தெடுத்த தந்தைக்கு மோசடி செய்யப்பட்டி ருந்தால் தத்தெடுப்பு ரத்துக்காக அவரே வழக்கு தாக்கலிட முடிந்திருந்திருக்கு என்ற முடிவை எட்டினார். இந்த முடிவை எடுக்கையில் இயல்பால் சந்தர்ப்பங்களில் தத்தெடுப்பு இயற்கை பெற்றொர்க்ளால் தத்தெடுத்த பெற்றோர்களால் அல்லது தத்தெடுக்கப்பட்ட குழந்தையால் தத்தெடுப்புக்கு சவாலிடப்பட முடியும் என அவர் கூறியிருந்தார். அனைத்து சந்தர்ப்பங்களிலும் இந்த மூன்று வகையினர் மட்டுமே வழக்கு தக்கலிட முடியும் எனும் சட்டநெறியை நீதிபதி வகுத்திருந்ததில்லை என்பதை இது காட்டுகிறது. சேர்மானமாக அந்த வழக்கில் குடும்பத்துக்கு வாதி அன்னியராக இருந்தார் என்பதை தனி நீதிபதி சுட்டியிருந்தார்.

25.அதே நிலைமை கடப்பா வழக்கிலும் மேலோங்குகிறது. தத்தெடுப்பு 1947இல் நிகழ்ந்திருந்தது எனும் முடிவுக்கு நீதிபதி வந்தார். 1956இன் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்பு சட்ட பிரகடனத்துக்கு முன்னரான நேர்வாக அது உள்ள நிலையில் அந்த வழக்கு பொருண்மை களுக்கு சொன்ன சட்டத்தை பொருத்துதல் பற்றி கேள்வி எழவில்லை. இந்த வழக்கில் சொல்லப் படும் தத்தெடுப்பு 1998வது வருடத்தில் நிகழ்ந்திருந்தது என்பதிலும் தெளிவாக அது 1956இன் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்பு சட்ட பிரகடனத்துக்கு பிந்தையதானது என்பதில் உள்ள இந்த வழக்கு பொருண்மைகளில் தகராறில்லை. எனவே இந்த தீர்ப்புரைகள் இப்போதைய வழக்கு பொருண்மைகளுக்கு பொருந்துறுவாது.

26. இறுதியாக டாக்டர் எம்.ஏ.எம். செட்டி யாரின் செட்டி நாட்டு அற பொறுப்புக் கழக, 2023 (2) CWC 168 வழக்கு திரும்பிக் கொண்டு மேலை மேற்கோளான வல்லுனர்களது தீர்ப்புரையை நீதிபதிகள் பின்பற்றியிருந்து, தத்தெடுப்பு சம்பிரதாயத்தில் பகுதியாகவும் தத்தெடுப்பான மகனது வயது பற்றியும் தத்தெடுப்பு சமயத்தில் அவர் சேர்ந்த பிரிவு பற்றும் அறிந்த ஒரு பொறுப்புரிமையரால் சார்படற்றமாகி தத்தெடுப்புக்கு சவாலிட்டவராக உள்ள பொறுப்புகழகம் சொன்ன பொருண்மை அறியாமை கோர முடியாது எனும் முடிவை எட்டினார்கள். அங்குள்ள 2வது எதிர்மனு தாரரின் குடும்பத்துக்கு பொறுப்புக் கழகம் அன்னியராக இருந்தது என்பதும் சுட்டிக் காட்டப் பட்டது. கூடுதலாக, சொன்ன தீர்ப்புரையின் 2வது பத்தியிலிருந்து தெளிவாக்குதல் போன்று அந்த வழக்கில் 2வது எதிர்மனுதாரர் நாட்டுக் கோட்டை செட்டியார் சமூகத்தை சேர்ந்தவராக இருந்தார் என்பதில் தகராறு கிடையாது. நாட்டுக் கோட்டை செட்டியார் சமூகத்தினர்களுக்குள் பதினைந்து வயதுக்கு மேலானவரை அவள் அல்லது அவர் ஏற்கனவே மணமான போதும் கூட தத்தெடுப்பு வழக்கம் உண்டு என்பது அறுதி யான சட்ட நெறியாகும்.

27. மேலே சுட்டப்பட்ட கலந்தாய்வுகளில், அத்தகைய வழக்கம் பட்டுரோஜா சமூகத்தில் நிலவுகிறது எனவாக வாதியாலான/1வது எதிர்மனுதாரராலான குறித்த வாதுரை ஏதும் கிடையாது என் தீர்ப்பிட்டுள்ளேன். வழக்கம் குறித்தவாறு வாதுரைப்பாகி மெய்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு வாதிரைக்கப்படாவிடில் அது நீதிமன்றத்தால் துணிபாக்கப்பட முடியாது.

28. மேலும் முவ எண் 2639/2013இல் உண்டான தீர்ப்பாணை பற்றி தெரிந்த ஆறு வருடங்களுக்கு பின் வழக்கு முன்னிடப்பட்டதால் அது காலவரம்பு சட்ட உறுப்பு 58-59 காரணத்தால் தடையாகிறது. காலவரம்பு சட்ட உறுப்பு 58-59 கீழ் தீர்ப்பாணை பற்றி அறியப் பெற்ற மூண்றாண்டுக்குள் ஆவணத்தை நீக்கற வாக்கலுக்கான வழக்கு தாக்கலிடப்பட வேண்டிய தாகும். வழக்கு எண் 352/2015இல் தரப்பின ரான வாதி 8.8.2023 வரையில் வழக்கை தாக்கலிடவில்லை. ஆகையால் அது தோற்றத்திலேயே காலவரம்பால் தடையாகிறது.

29. 1வது எதிர்மனுதாரருக்கு சட்டபூர்வ வாரிசு சான்றிதழை வட்டாட்சியர் வழங்கி யிருந்தார் எனவும் ஆகையால் எது நிகழ்விலும் வழக்கு எண் 2639/2013 நிலைக்கதக்க தல்ல எனவும் திரு.எஸ்.லக்ஷ்மணசாமி வாது ரைத்தார்.

30.இறந்த நபருடன் உள்ள தரப்பினர்களது அந்தஸ்தை அல்லது அவர்களது சட்டபூர்வ உறவுமுறையை வட்டாட்சியர் அறிவிக்க இயலாது என பி.வெங்கடாச்சலம் -எதிர்- வட்டாட்சியர், நாமக்கல், 2022 (4) CTC 1(FB):2022 (2) CWC வழக்கில் இந்த நீதிமன்றத்தின் முழு அமர்வால் தீர்ப்பாகியுள்ளது. உச்ச பட்சத்தில் வட்டாட்சியரால் இயற்றப்படும் சான்றிதழ் உறவுமுறை சான்றிதழாக மட்டுமே உள்ளது. அத்தகைய சான்றிதழ் உரிமையியல் நீதிமன்றத்தை கட்டுறுத்தாது. தத்தெடுப்பு விஷயத்தில் அல்லது வகுப்பு 2 சட்டபூர்வ வாரிசுகள் விஷயத்தில் சட்டபூர்வ உறவுமுறை சான்றிதழை வட்டாட்சியர் வழங்க முடியாது என கூறும் போதியதற்கும் அதற்கு அதிகமாகவும் தமிழ்நாடு அரசால் இயற்றப்படும் ஆணைகள் உண்டு.

31. சட்ட நிலைமை அதுவாக உள்ள நிலைமையில் வட்டாட்சியரிடமிருந்து 1வது எதிர்மனுதாரரால்/வாதியால் பெறப்பட்ட வாரிசு சான்றிதழ் அவரது வழக்கை மேம்படுத்த வில்லை. தரப்பினர்களது அந்தஸ்து பற்றி தகராறு இருக்குமானால் குறித்த பரிகார சட்டப் பிரிவு 34 கீழ் சொன்ன அந்தஸ்து விளம்புகைக் காக உரிமையியல் நீதிமன்றத்தை நாடுதல் அந்தஸ்து மறுக்கப்பட்ட தரப்பினரது கடமை யாகும். முவ எண் 2639/2013இல் உள்ள தரப்பினர்கள் வகுப்பில் 2 வாரிசுகளாக இருந்த தால் அவர்கள் நீதிமன்றத்தை சரியாக அணுகியியிருந்து தீர்ப்பாணை பெற்றார்கள். முவ எண் 2639/2013இல் வாதிகளாக உள்ளவர்கள் இறந்த பூபதியின் உடன்பிறந்தோர்கள் ஆவார்கள் என்பதில் தகராறில்லை என நான் நிறுவுத்திக் கொள்ள வேண்டும்.

32. ராணிபேட்டை நகராட்சி -எதிர்- எம்.சம்சீர் கான், 1998 (1) CTC 66 வழக்கில் நீதிபதி திரு. சுப்ரமணியால் சுட்டிக்காட்டப்பட்ட வகைகளில் ஒன்றுக்கு அதிகமானதை ஈர்க்கும் வழக்காக இது உள்ளது. நீதிமன்ற முறைமை துர்பிரயோக மாக இது உள்ள நிலையில் இத்தகைய வழக்கு களில் வழக்கை கிள்ளியெறிதலுக்கு உரிமை யியல் விசாரணைமுறை தொகுப்புச் சட்டப் பிரிவு 151 உடன் வாசிப்பாகும். இந்திய அரசமைப்பு சட்ட உறுப்பு 227 கீழான ஆள்வையை இந்த நீதிமன்றம் கொண்டுள்ளது.

33. மேமும் சகோதர நீதிபதி திரு.டி.பரத சக்கரவர்த்தியால் என்.பெரியசாமி -எதிர்- மொஹமத் பிலால்தீன் மற்றும் பிறர், உசீம (ஏம்டி) எண் 671/2022 22.8.2024 வழக்கு தீர்ப்பில் சுட்டிக் காப்பட்டவாறு வழக்கே செயல் முறைமை துர்பிரயகமாக உள்ளது போதுள்ள வழக்குகளில் தரப்பினர்களை வழக்கு விசாரணை யில் உட்படுத்தல் அவர்களை துன்புறுத்துவ தாகும். இந்த முடிவை எடுத்தலுக்கு முன்னராக இந்திய அரசமைப்பு சட்ட உறுப்பு 227இன்

குறியெல்லை அதிகாரம் மற்றும் உள்ளடக்கம் பற்றி உச்ச நீதிமன்றத்து மற்றும் இந்த நீதிமன்றத்தின் பல்வேறு தீர்ப்புரைகளை நீதிபதி திரு.டி.பரத சகரவர்த்தி பகுப்பாய்ந்திருந்தார்.

சேர்மானமாக பதிவாவண தோற்றத்தில் வாதி வழக்கிட்டிருக்கும் வழக்கின் அடிப்படையாக ஆவணம் ஜோடிப்பான ஆவணம் ஆகும் என்பது தெளிவாகிறது. சொன்ன தத்தெடுப்பு இரு பக்கங்களில் அமைந்திருந்து அது சான்றுறுதி அதிகாரியால் சான்றுரைப்பானதாக சொல்லப்படுகிறது. ஆவணம் அவரது முன்னிலையில் சான்றுரைக்கப்பட்டது என சான்றிட்டுக் கொண்டு ஓர் ஆவணத்தை சான்றுறுதி அதிகாரி சான்றுரைக்கிறார்.ஆவணம் ஒப்பமாகியிருந்தது போல அவரது ஒப்பத்தையும் முத்திரையையும் சான்றுறுதி அதிகாரி இட்டிருந்தார் என்பதை ஆவணத்தின் 1வது பக்கத்தை ஆழ்ந்து வாசித்தல் காட்டுகிறது. எனினும் சொன்ன பக்கத்தில் ஆவணத்தின் தரப்பினர்களில் எவரும் அவரது ஒப்பங்களை இட்டிருக்கவில்லை. அது சான்றுறுதி அதிகாரியால் ஒப்பாமாகியிருக்கும் மரியாதைக்கு ஆவணம் தகுதி கொண்டிருக்கவில்லை என்பதை இதுவே காட்டுகிறது. சான்றுறுதி அதிகாரி உயிரோடில்லை என திரு. எஸ்.லக்ஷ்மணசாமி கூறுகிறார். எனவே இது பற்றி எந்த பணித்தலையும் நான் பிறப்பிக்கவில்லை.

35.மேலுள்ள கலந்தாய்தல் பின்னொளியில் வழக்கு முழுமையான நீதிமன்ற முறைமை துஷ்பிரயோகமாகும் எனவும் நேர்மையில்லா வழக்காடிக்கு ஊக்கமளிப்பதாக வழக்கை நீதிமன்ற கோப்பில் இருத்தலுக்கு வழக்குமூலம் ஏதுமின்றி வழக்கு உள்ளது என நான் தெளிவாக கருதுகிறேன். உரிமையியல் சராய்வு மனு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கோயம்புத்தூரிலுள்ள முதன்மை மாவட்ட நீதிமன்ற கோப்பிலிருந்து முவ எண் 691/2023 நீக்கப்படுகிறது. ரூ.50000 [ரூபாய் ஐம்பதாயிரம்] செலவுத் தொகையாக வாதிக்கு விதிக்கப்படும். விளைவாக தொடர்புறு பல்வகை மனு முடித்து வைக்கப்படுகிறது.

**மொழியாக்கம் : பா.ஞானசேகரன்**

## தேசிய மக்கள் நீதிமன்றம்: தமிழகத்தில் 91,000 வழக்குகளுக்கு தீர்வு

தமிழகத்தில் 13.6.2026 நடைபெற்ற தேசிய மக்கள் நீதிமன்றத்தில் (லோக் அதாலத்) 91,369 வழக்குகள் தீர்வு காணப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.664.47 கோடி பெற்றுத் தரப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் நீண்ட காலமாக நிலுவையில் இருக்கும் வழக்குகளை விரைவாக முடிவுக்கு கொண்டு வர தேசிய அளவில் ஆண்டுக்கு 4 முறை லோக் அதாலத் என்ற மக்கள் நீதிமன்றம் நடத்தப்படுகிறது. அந்த வகையில் நாடு முழுவதும் லோக் அதாலத் அன்று 18.6.2026 நடத்தப்பட்டது.

தமிழகத்தில் நடத்தப்பட்ட லோக் அதாலத் குறித்து சட்டப் பணி ஆணைக்குழு உறுப்பினர் செயலர் எஸ்.பாலகிருஷ்ணன் கூறியதாவது.

தமிழகத்தில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி வழிகாட்டுதலின் படி தேசிய லோக் அதாலத் நடைபெற்றது. சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் பி.வேல்முருகன், பி.டி.ஆஷா, என்.செந்தில்குமார், ஜி.அருள்முருகன் மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதி பி.கோகுல்தாஸ் ஆகியோர் தலைமையில் 5 அமர்வுகள், மாவட்டம் மற்றும் தாலுகா அளவிலான நீதிமன்றங்களில் நீதிபதிகள், குற்றவியல் நடுவர்மன்ற நீதிபதிகள் என மொத்தம் 506 அமர்வுகள் அமைக்கப்பட்டன.

இந்த அமர்வுகள் நீதிமன்றத்தில் நிலுவையில் மோட்டார் வாகன விபத்து வழக்குகள், காசோலை மோசடி வழக்குகள், தொழிலாளர் தொடர்பான வழக்குகள், மின் வாரியம் தொடர்பான வழக்குகள், ஜீவனாம்ச வழக்குகள் என்று பல்வேறு வகையான வழக்குகளை விசாரித்தது.

இதில், இரு தரப்பினர் இடையே பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களின் முழு சம்மதத்துடன், 91,369 வழக்குகள் சமரசத்துக்கு வந்தன. இதன் மூலம், பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.667.47 கோடி கிடைத்துள்ளது என்று அவர் கூறினார்.

**நன்றி : தினமணி 14.6.2026**

# காலவரம்பு என்பது உண்மை மற்றும் சட்டம் சார்ந்த கலப்பு வினா என்பதால், வாதிகளைக் கேட்காமல் வழக்குகளைத் தள்ளுபடி செய்யக்கூடாது.

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு ஆர்.சக்திவேல்**
**CRP No. 1214/2022 and**
**CMP No. 6530/2022**
**(2026 (2) CTC 679)**

1. தமிழ்நாடு அரசு – சார்பாற்றம் அதன் மாவட்ட ஆட்சியர், நாமக்கல் மாவட்டம்
2. மாவட்ட வருவாய் அலுவலர், நாமக்கல்
3. மாவட்ட வருவாய் கோட்டாட்சியர், நாமக்கல்
4. வட்டாட்சியர், நாமக்கல் …மனுதாரர்கள்

–எதிர்–

பொன்னுசாமி,
வேட்டம்பட்டி கிராமம், நாமக்கல் தாலுகா …எதிர்மனுதாரர்

**வேண்டுகை:** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 227–வது பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த சிவில் சீராய்வு மனுவானது, நாமக்கல் சார்பு நீதிமன்றத்தால் எண் இடப்படாத O.S.SR.No.448/2022–ல் கடந்த பிப்ரவரி 25, 2022 அன்று பிறப்பிக்கப்பட்ட குறிப்பாணை உத்தரவை ரத்து செய்யக் கோரியும், மேற்கண்ட வழக்கின் புகாரை கோப்பிற்குள் எடுத்துக்கொண்டு வழக்கை மேற்கொண்டு நடத்துமாறு நாமக்கல் சார்பு நீதிமன்றத்திற்கு உத்தரவிடக் கோரியும் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

- மனுதாரர்களுக்காக: திருமதி. ஆர். அனிதா, சிறப்பு அரசு வழக்கறிஞர்
- எதிர்மனுதாரருக்காக: அறிவிப்பு ‘போதிய முகவரி இல்லை’ எனக் கூறி திரும்பப் பெறப்பட்டது. எனவே, இந்த உத்தரவின் மூலம் அறிவிப்பு அனுப்புவது தவிர்க்கப்படுகிறது.
- நீதிமன்ற உதவியாளர்: திரு. சரத் சந்திரன், வழக்கறிஞர்

## உத்தரவு

இந்த சிவில் சீராய்வு மனு தாக்கல் செய்யப் படுவதற்கு வழிவகுத்த சுருக்கமான பொருண்மைகள் பின்வருமாறு: நாமக்கல் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் நாமக்கல் வட்டாட்சியர் ஆகியோரால் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் தமிழ்நாடு அரசு, கடந்த பிப்ரவரி 10, 2022 அன்று, எண் இடப்படாத அசல் வழக்கான O.S.(SR) No.448/2022–ல் வாதிகளாக உள்ளனர். இந்த வழக்கு புகார் பிப்ரவரி 9, 2022 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. வழக்கின் பிரார்த்தனையானது, O.S. No.320 of 2007–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை செல்லாதது என அறிவிக்கக் கோரியும்; O.S. No.320 of 2007–ன் நிறைவேற்று மனுவான R.E.P. No.14 of 2012–ல் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என நிரந்தரத் தடை உத்தரவு கோரியும்; மற்றும் வழக்குச் செலவுத் தொகை கோரியும் தாக்கல் செய்யப் பட்டது. விசாரணை நீதிமன்றமான நாமக்கல் சார்பு நீதிமன்றம், இந்த வழக்கின் ஏற்புடைமை குறித்து வாதிகள் தரப்பில் விளக்கம் அளிக்க வேண்டும் எனக் கூறி, O.S. (SR) No.448 of 2022–ன் வழக்கு புகாரைத் திருப்பி அனுப்பியது. பிப்ரவரி 25, 2022 அன்று, வழக்கின் ஏற்புடைமை குறித்த வாதிகளின் விளக்கக் குறிப்பு மற்றும் சில முன்முடிவு வழக்குச்

சட்டங்களுடன் இந்த வழக்கு புகார் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டது. அதே நாளில், வழக்கு புகார், அதன் ஆவணங்கள் மற்றும் தாக்கல் செய்யப் பட்ட விளக்கக் குறிப்பு ஆகியவற்றை பரிசீலித்த விசாரணை நீதிமன்றம், அதற்கு எண் இடாமலேயே வழக்கைத் தள்ளுபடி செய்தது. சிவில் நடைமுறைச் சட்டம் 1908 –ன் கட்டளை VII விதி 11–ன் கீழ் வழக்கு புகார் தள்ளுபடி செய்யப்பட்டதால் அதிருப்தி அடைந்த வாதிகள், பிப்ரவரி 25, 2022 தேதியிட்ட விசாரணை நீதிமன்றத்தின் தள்ளுபடி உத்தரவை ரத்து செய்யவும், வழக்கு புகாருக்கு எண் இடக் கோரி யும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 227–வது பிரிவின் கீழ் இந்த சிவில் சீராய்வு மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

2. வசதிக்காக, தரப்பினர் இனிமேல் O.S. (SR) No.448 of 2022 வழக்கு புகாரில் உள்ள வரிசைப்படியே குறிப்பிடப்படுவார்கள். அதாவது, சீராய்வு மனுதாரர்கள் 'வாதிகள்' என்றும், இங்குள்ள எதிர்மனுதாரர் 'பிரதிவாதி' என்றும் குறிப்பிடப்படுவார்கள்.

**வாதிகளின் வாதம்:**

3. O.S. (SR) No.448 of 2022–ல் வாதிகளின் வாதம் என்னவென்றால், 1905–ஆம் ஆண்டின் புல வரைபடப் புத்தகத்தின்படி, சேலம் மாவட்டம், நாமக்கல் தாலுகா, நாமக்கல் மிட்டாவுக்கு உட்பட்ட மிட்டா நில அளவை எண் 72 ஆனது மொத்தம் 9 ஏக்கர் 48 செண்ட் பரப்பளவைக் கொண்டிருந்தது. 1905 புல வரைபடத்தின்படி, நில அளவை எண் 72 ஆனது ஆறு உட்பிரிவு களாகக் கொண்டிருந்தது. 1905 புல வரைபடப் புத்தகத்தின்படி, ஒவ்வொரு உட்பிரிவிலும் உள்ள பரப்பளவு விவரங்கள் பின்வருமாறு:

| நில அளவை எண் | உட்பிரிவு எண் | இட அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 72 | 1 | 0.35 |
| | 2 | 1.60 |
| | 3 | 1.35 |
| | 4 | 1.93 |
| | 5 | 1.89 |
| | 6 | 2.36 |
| | மொத்தம் | 9.48 |

3.1. வாதிகளின் கூடுதல் வாதம் என்ன வென்றால், நில அளவை எண் 72–ன் உட்பிரிவு 2 என்பது அரசு நிலமாகும். கடந்த 1945–ஆம் ஆண்டில், பிரதிவாதியின் தாத்தாவான எல். ரெங்கம நாயக்கர் என்பவர், 02 ஜுன் 1945 தேதியிட்ட கிரையப் பத்திரம் மூலமாக, கருப்ப போயன் என்பவரிடமிருந்து, நில அளவை எண் 72–ன் உட்பிரிவுகள் 3 முதல் 6 வரை உள்ள மொத்தம் 7 ஏக்கர் 53 செண்ட் பரப்பளவில், குறிப்பிட்ட நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட 40 செண்ட் பரப்பளவையும் மற்றும் 73 செண்ட் பரப்பளவையும் விலைக்கு வாங்கினார். வாதி களின் கூற்றுப்படி, மேற்கண்ட 02 ஜுன் 1945 தேதியிட்ட கிரையப் பத்திரத்தில் சர்வே எண் 72/ 2 இடம் பெறவில்லை; மேலும் சொல்லப் போனால், அந்த கிரையப் பத்திரத்தில் உள்ள இரண்டாவது சொத்தின் தெற்கு எல்லையானது 'மிட்டா புறம்போக்கு' என்று காட்டப்பட்டுள்ளது, அது வேறு எதுவும் அல்ல, சர்வே எண் 72/ 2–ல் உள்ள அரசு நிலம் தான்.

3.2. பின்னர், 1960–ஆம் ஆண்டில், நில அளவை எண் 72–ல் உள்ள நிலம் மறு அளவை செய்யப்பட்டு, அதன் உட்பிரிவுகள் மாற்றியமைக்கப்பட்டன; அத்துடன் கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளபடி ஒரு புதிய புல வரைபடப் புத்தகம் தயாரிக்கப்பட்டது:

| நில அளவை எண் | 1960ம் புல வரைபடத்தின் படி புதிய உட்பிரிவுகள் | இட அளவு ஏக்கரில் | 1905ம் வருட புல வரைபடத்தின்படி தொடர்புடைய பழைய உட்பிரிவுகள் |
|---|---|---|---|
| 72 | 1 | 2.19 | 5 – 6 |
| | 2 | 3.81 | 2,3,4,5,6 |
| | 3 | 1.51 | 3 –4 |
| | 4 | 0.35 | 1 |
| | 5 | 0.67 | 2,3,4,5,6 |
| | 6 | 0.95 | 2,3,4 |
| மொத்த இட அளவு | | 9.48 | |

3.3. வாதிகளின் கூற்றுப்படி, 1905 புல வரைபடப் புத்தகத்தில் இருந்த பழைய நில அளவை எண் 72/2–ன் பெரும் பகுதி, 1960

புல வரைபடப் புத்தகத்தில் உட்பிரிவு எண்கள் 5 மற்றும் 6 ஆக பிரிக்கப்பட்டு, அவை ‘புறம்போக்கு (கல்லாங்குத்து) நிலம்’ அல்லது வேறு வார்த்தைகளில் கூறுவதானால் ‘அரசு நிலம்’ என்று தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

3.4. நிலைமை இவ்வாறு இருக்க, பிரதிவாதி தற்போதைய வாதிகள் 1 மற்றும் 4 ஆகியோருக்கு எதிராக நாமக்கல் மாவட்ட முனிசிப் நீதிமன்றத்தில் O.S. No.320 of 2007 என்ற அசல் வழக்கைத் தாக்கல் செய்தார். அதில், புதிய சர்வே எண் 72/5-ல் உள்ள 94 சென்ட் மற்றும் புதிய சர்வே எண் 72/6-ல் உள்ள 1 ஏக்கர் 18 சென்ட் ஆகிய வழக்குச் சொத்துக்களுக்கு உரிமைப் பிரகடனம் கோரியும், வருவாய்ப் பதிவேடுகள் மற்றும் ‘அ’ பதிவேட்டில் தனது பெயரைப் பதிவு செய்யக் கோரி கட்டாயத் தடையுத்தரவு கோரியும் பிரார்த்தனை செய்திருந்தார். பிரதிவாதியின் A¢u O.S. No.320 of 2007 வழக்கில், நாமக்கல் மாவட்ட முனிசிப் நீதிமன்றமானது, ஆவண ஆதாரங்களைச் சரியான கோணத்தில் பரிசீலிக்காமல், அதில் பிரதிவாதிகளாக இருந்த தற்போதைய வாதிகள் 1 மற்றும் 4 ஆகியோருக்கு எதிராக 20 ஜுலை 2007 அன்று எதிர்தரப்பில்லா ஒருதலைபட்சமான தீர்ப்பாணையை பிறப்பித்தது.

3.5. கடந்த 15 டிசம்பர் 2021 அன்று தான், கடும் முயற்சிகளுக்குப் பிறகு, வாதிகளால் எழும்பூர் ஆவணக் காப்பகத்திலிருந்து 1905-ஆம் ஆண்டின் புல வரைபடப் புத்தகத்தை பெற முடிந்தது. அந்த 1905 புல வரைபடத்தைப் பெற்று, அதனை 1960 புல வரைபடத்துடன் ஒப்பிட்டுப் பார்த்த பிறகுதான், சர்வே எண் 72-ன் புதிய உட்பிரிவுகளான 5 மற்றும் 6 ஆகியவை பழைய சர்வே எண் 72-ன் உட்பிரிவு 2-க்கு இணையானவை என்பதும், புதிய உட்பிரிவுகள் 5 மற்றும் 6 ஆகியவை அரசு நிலங்களைக் கொண்டவை என்பதும் வாதிகளுக்குத் தெரியவந்தது. வாதிகளின் கூற்றுப்படி, பிரதிவாதி உண்மைகளை மறைத்து, அரசு நிலத்தைக் கையகப்படுத்தும் உள்நோக்கத்துடன், பழைய உட்பிரிவு 2-க்கு இணையான புதிய சர்வே எண் 72-ன் உட்பிரிவுகள் 5 மற்றும் 6-ல் தனக்கு உரிமை இருப்பது போல தனது வழக்கில் சொத்துக்களைத் தவறாக விவரித்துள்ளார். அதில் கூறப்பட்டுள்ள வழக்குச் சொத்துக்கள், 02 ஜுன் 1945 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் கீழ் வரவில்லை மற்றும் அவை பிரதிவாதிக்குச் சொந்தமானவை அல்ல.

3.6. தங்களுக்கு எதிராக 20 ஜுலை 2007 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒரு தரப்பில்லா ஒருதலைப்பட்சமான தீர்ப்பாணையை ரத்து செய்வதற்காக வாதிகள் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் வீணாயின. இதன் காரணமாகவே O.S. (SR) No.448 of 2022 என்ற இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

4. இந்த விவகாரம் இந்த நீதிமன்றத்திற்கு வந்ததற்கான பின்னணி ஏற்கனவே மேலே விவரிக்கப்பட்டுள்ளது, எனவே அதை மீண்டும் கூறத் தேவையில்லை. கடந்த 26 ஏப்ரல் 2022 அன்று, மாண்புமிகு நீதியரசர் திரு.என். சேஷசாயி அவர்கள் முன்னிலையில் இவ்வழக்கு பட்டியலிடப்பட்டபோது, ‘‘முந்தைய வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு, ஆனால் வழக்கை நடத்தாமல் விட்டுவிட்டு, ஒருதலைப்பட்சமான தீர்ப்பானை பிறப்பிக்க அனுமதித்த ஒரு தரப்பினருக்கு, அந்த முந்தைய ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்வதற்கான நடைமுறை ரீதியான தீர்வுகளைப் பயன்படுத்திய பிறகும், நீதிமன்றத்தில் மோசடி நடந்துள்ளதாகக் கூறி புதிய வழக்கைத் தாக்கல் செய்ய உரிமை உள்ளதா?’’ என்ற பரிசீலனைக்குரிய சட்டப் புள்ளியின் அடிப்படையில் இந்த சிவில் சீராய்வு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது; மேலும், இந்த விவகாரத்தில் நீதிமன்றத்திற்கு உதவ வழக்கறிஞர் திரு.சரத் சந்திரன் அவர்கள் ‘நீதிமன்ற உதவியாளராக’ நியமிக்கப்பட்டார்.

5. அதன் பின்னர், 30 ஏப்ரல் 2024 அன்று மாண்புமிகு நீதியரசர் திரு.வி. லக்ஷ்மிநாராயணன் அவர்கள் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு வந்தபோது, மாண்புமிகு தனி நீதிபதி அவர்கள், வழங்கிய ‘கே.எஸ். கீதா -எதிர்- ஸ்டான்லி பக் மற்றும் டாக்டர் பி. சேது அம்மாள்’ (AIR 2003 Mad 146) என்ற இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பை இருதரப்பு வழக்கறிஞர்களின் கவனத்திற்கும் கொண்டு வந்தார்;

அத்துடன், வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட ஒரு விரிவான காரணங்களைக் கொண்ட உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப் பட்டுள்ள இந்த சிவில் சீராய்வு மனுவின் ஏற்புடைமை குறித்து வாதங்களை முன்வைக்கு மாறு கேட்டுக்கொண்டார்.

6. சீராய்வு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் ஆஜரான மதிப்பிற்குரிய சிறப்பு அரசு வழக்கறிஞர் திருமதி ஆர்.அனிதா அவர்கள், 'பிரதிவாதி உண்மையை மறைத்து, புதிய சர்வே எண்கள் 72/5 மற்றும் 72/6-ல் உள்ள நிலம் தனக்குச் சொந்தமானது என்பது போல் வழக்குச் சொத்துக்களைத் தவறாக விவரித்து ஒருதலைப் பட்சமான தீர்ப்பாணையைப் பெற்றுள்ளார்; இது நீதிமன்றத்தை ஏமாற்றிய மோசடிச் செயலுக்கு சமமாகும்' என்று வாதிட்டார். மேற்கண்ட உண்மைகள், கடந்த 15 டிசம்பர் 2021 அன்று எழும்பூர் ஆவணக் காப்பகத்திலிருந்து 1905 புல வரைபடத்தைப் பெற்ற பிறகுதான் வாதி களின் கவனத்திற்கு வந்தது. அதன்பின் உடனடி யாக, வாதிகள் 09 பிப்ரவரி 2022 அன்று வழக்கு புகாரைச் சமர்ப்பித்தனர். விசாரணை நீதிமன்றம், வழக்கு எண் எதையும் வழங்காமலும், இயற்கை நீதி நெறிமுறைகளைப் பின்பற்றா மலும், வழக்கு புகாரில் கோரப்பட்டுள்ள பரிகாரங்கள் ஏற்புடையவை அல்ல என்றும், காலவரம்பைக் கடந்தது என்றும் கூறி வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்துள்ளது.

அவர் மேலும் வாதிடுகையில், 'இவ்வழக்கில் காலவரம்பு என்பது உண்மை மற்றும் சட்டம் ஆகிய இரு கூறுகள் சார்ந்த ஒரு கேள்வியாகும்; எனவே, சிவில் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை X-ன் கீழ் தரப்பினரின் வாதங்களைக் கேட்டறிந்த பிறகோ அல்லது வழக்கு விசாரணை யின் போதோதான் இதனைத் தீர்மானிக்க முடியும் என்ற உண்மையை விசாரணை நீதிமன்றம் கணக்கில் கொள்ளவில்லை. எவ்வாறாயினும், காலவரம்பு குறித்த புள்ளியில் வாதிகளின் தரப்பு விளக்கத்தை விசாரணை நீதிமன்றம் கேட்டறிந்திருக்க வேண்டும்; ஆனால், விசாரணை நீதிமன்றம் அவ்வாறு செய்யத் தவறிவிட்டது. விசாரணை நீதிமன்றம் இயற்கை நீதி நெறிமுறைகளை மீறியுள்ளதால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 227-வது பிரிவின் கீழான இந்த சீராய்வு மனு ஏற்புடைய தாகும்' என்று குறிப்பிட்டார். அதற்கிணங்க, அரசியலமைப்புச் சட்டத்தின் 227-வது பிரிவின் கீழான அதிகார வரம்பைப் பயன்படுத்தி, விசாரணை நீதிமன்றம் 25 பிப்ரவரி 2022 அன்று பிறப்பித்த குறிப்பாணை உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்றும், வழக்கு புகாருக்கு எண் இடுமாறு விசாரணை நீதிமன்றத்திற்கு உத்தரவிட வேண்டும் என்றும் அவர் பிரார்த்தித்தார்.

7. இங்குள்ள எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பானது 'போதிய முகவரி இல்லை' எனக் கூறி திரும்பப் பெறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. வழக்கின் உண்மை களையும் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு, இந்த சிவில் சீராய்வு மனுவில் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்புவது அவசியமில்லை என்றும், அது இதன் மூலம் தவிர்க்கப்படுகிறது என்றும் இந்த நீதிமன்றம் கருதுகிறது.

8. இந்த நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட மதிப்பிற்குரிய நீதிமன்ற உதவியாளர் திரு.சரத் சந்திரன் அவர்கள் வாதிடுகையில், 'விசாரணை நீதிமன்றம், ஒரு பரிகாரத்தைக் கோருவதற்கும், அந்தப் பரிகாரத்தைப் பெறுவதற்கான தகுதி இருப்பதற்கும் இடையேயான வேறுபாட்டைக் கவனிக்கத் தவறிவிட்டது. நீதிமன்றம் இறுதியில் அந்தப் பரிகாரத்தை வழங்குமா? இல்லையா? என்பதைப் பொருட்படுத்தாமல், தனக்குத் தேவையான ஒரு குறிப்பிட்ட பரிகாரத்தைக் கோருவது வழக்காடியின் உரிமையாகும். வழக்கு புகாருக்கு எண் இடாமல், ஒரு குறிப்பிட்ட பரிகாரத்தைப் பெற வாதிக்கு உள்ள தகுதியை ஆய்வு செய்ய முடியாது. பிரதிவாதிகளின் எதிர்வாதங்களையும், ஆவணப் பதிவுகளில் உள்ள ஆதாரங்களையும் பரிசீலித்த பிறகுதான் அதைச் செய்ய முடியும். கோரப்பட்ட பரிகாரங் களில் ஒன்று சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ளது என்று வைத்துக்கொண்டாலும், வழக்கு புகாரை ஒரு பகுதியாக மட்டும் தள்ளுபடி செய்ய முடியாது' என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் வாதிடுகையில், ‘ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் தங்களுக்கு ஒரு குறிப்பிட்ட உண்மை தெரியவந்தது என்றும், அதுவே வழக்குத் தொடரக் காரணமாய் அமைந்தது என்றும் வாதிகள் வழக்கு புகாரில் கோரி வாதிடும்போது, சிவில் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை VII விதி 11-ன் கட்டத்தில் அதனைச் சரியானது என்றே ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, அத்தகைய விபரம் அவர் களுக்குத் தெரிந்ததற்கான ஆதாரம்/ உண்மைத் தன்மை குறித்து வழக்கு புகாருக்கு எண் இடும் கட்டத்தில் ஆய்வு செய்ய முடியாது. விபரம் தெரிந்ததற்கான ஆதாரம் என்பது சாட்சியம் சார்ந்த விஷயமாகும்; மேலும், இதுபோன்ற வழக்குகளில் சாட்சியம் சார்ந்த விவகாரம் என்பது உண்மை மற்றும் சட்டம் சார்ந்த கேள்வி யாகும். இதனை வழக்கு விசாரணைக்குப் பிறகே தீர்மானிக்க முடியும்’ என்று தெரிவித்தார். மேலும், வழக்கு புகாருக்கு எண் இடுவது என்பது ஒரு நீதித்துறை சார்ந்த செயலாகும் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட, ‘குஞ்சம்மா -எதிர்- மாணிக்கம் பிள்ளை’ என்ற இந்த நீதிமன்றத்தின் மாண்புமிகு தனி நீதிபதியின் தீர்ப்பை [2025 (4) CTC 798 : 2025 & 3 & L.W.181] அவர் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். கூடுதலாக, தன் வாதங்களுக்கு ஆதரவாக பின்வரும் தீர்ப்புகளையும் அவர் முன்வைத்தார்:

(i) ‘இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் -எதிர்- சி.எம். ஹரிராஜ்’ என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் மாண்புமிகு தனி நீதிபதி அளித்த தீர்ப்பு ங்2002-3-ஃ.ரூ.476சி;

(ii) ‘செல்வராஜ் -எதிர்- கூடங்குளம் அணுமின் நிலையம் இந்தியா லிமிடெட்’ என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் மாண்புமிகு தனி நீதிபதி அளித்த தீர்ப்பு ங்2021-3-ஃ.ரூ.677சி;

(iii) ‘ஸ்டான்லி பக்’ வழக்கு [மேலே சுட்டிக் காட்டப்பட்டது];

(iv) அமராவதியில் உள்ள மாண்புமிகு ஆந்திரப் பிரதேச உயர்நீதிமன்றத்தின் மாண்புமிகு தனி நீதிபதி, ‘கொர்ரிபதி வீர வெங்கட ராவ் -எதிர்- எத்தலபாகா வனஜா’ என்ற வழக்கில் அளித்த தீர்ப்பு [2025 SCC OnLine AP 50].

9. மதிப்பிற்குரிய சிறப்பு அரசு வழக்கறிஞரின் வாதங்களும், மதிப்பிற்குரிய நீதிமன்ற உதவி யாளரின் வாதங்களும் கேட்கப்பட்டன. ஆவணப் பதிவுகளில் உள்ள அனைத்து ஆதாரங்களும் பரிசீலிக்கப்பட்டன.

10. வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட ஒரு விரிவான காரணங்களைக் கொண்ட உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப் பட்டுள்ள இந்த சிவில் சீராய்வு மனுவின் ஏற்புடைமை குறித்து இந்த நீதிமன்றம் முதலில் பரிசீலிக்கும். ‘தீர்ப்பாணை’ என்பதைப் பற்றி விவரிக்கும் சிவில் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 2 (2)-ஐ இங்கு குறிப்பிடுவது பொருத்த மானது எனக் கருதுகிறது:

‘2. வரையறைகள்: இந்தச் சட்டத்தில், பொருளுக்கோ அல்லது சூழலுக்கோ முரணாக ஏதேனும் இருந்தாலன்றி, - xxxxxxxxxxxxxx

(2) ‘தீர்ப்பாணை’ என்பது, அதனைப் பிறப்பிக்கும் நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில், வழக்கில் சர்ச்சைக்குரிய அனைத்து அல்லது ஏதேனும் ஒரு விவகாரத்தில் தரப்பினரின் உரிமைகளை இறுதியாகத் தீர்மானிக்கும் ஒரு நீதிமுறைத் தீர்வின் முறையான வெளிப் பாடாகும்; இது முதல்நிலையாகவோ அல்லது இறுதியானதாகவோ இருக்கலாம். இது ஒரு வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்வதையும் மற்றும் பிரிவு 144-ன் கீழ் எழும் ஏதேனும் ஒரு கேள்வியைத் தீர்மானிப்பதையும் உள்ளடக்கிய தாகக் கருதப்படும்; ஆனால் பின்வருவன வற்றை உள்ளடக்காது: - (அ) ஓர் உத்தரவிற்கு எதிரான மேல்முறையீடு போன்று, மேல்முறையீடு செய்யக்கூடிய எந்தவொரு நீதிமுறைத் தீர்வும், அல்லது (ஆ) வராமைக்காகத் தள்ளுபடி செய்யப் படும் எந்தவொரு உத்தரவும்.

**விளக்கம்**: வழக்கை முழுமையாக முடிப்ப தற்கு முன்பு, மேற்கொண்டு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருக்கும் போது அந்தத் தீர்ப்பாணை ‘முதநிலைத் தீர்ப்பாணை’ ஆகும். அத்தகைய நீதிமுறைத் தீர்வு வழக்கை முழுமை யாக முடித்து வைக்கும்போது அது ‘இறுதித் தீர்ப்பாணை’ ஆகும். இது பகுதியாக முதநிலை

யாகவும், பகுதியாக இறுதியானதாகவும் இருக்கலாம்;'

11. சிவில் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 96 பின்வருமாறு கூறுகிறது:

'96. அசல் தீர்ப்பாணைக்கு எதிரான மேல்முறையீடு:

(1) இந்தச் சட்டத்தின் உள்ளடக்கத்திலோ அல்லது நடைமுறையிலுள்ள பிற சட்டங் களிலோ வேறு விதமாகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, அசல் அதிகார வரம்பைச் செலுத்தும் எந்தவொரு நீதிமன்றத்தாலும் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு தீர்ப்பானைக்கும் எதிராக, அத்தகைய நீதிமன்றத்தின் முடிவு களுக்கு எதிரான மேல்முறையீடுகளைக் கேட்க அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட வேண்டும்.

(2) எதிர்தரப்பில்லா வகையில் பிறப்பிக்கப் பட்ட அசல் தீர்ப்பாணைக்கு எதிராகவும் மேல் முறையீடு செய்யலாம்.

(3) தரப்பினரின் பரஸ்பர சம்மதத்துடன் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக எந்தவொரு மேல்முறையீடும் செய்ய முடியாது.

(4) சிறுவழக்கு நீதிமன்றங்களால் அறிந்து கொள்ளக்கூடிய தன்மையுடைய ஒரு வழக்கின் அசல் பொருளின் மதிப்பு அல்லது தொகை பத்தாயிரம் ரூபாய்க்கு மிகாமல் இருக்கும் போது, அத்தகைய வழக்கின் தீர்ப்பானைக்கு எதிராக சட்டம் சார்ந்த கேள்விக்காக அன்றி வேறு எதற்காகவும் மேல்முறையீடு செய்ய முடியாது.'

12. சிவில் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 2 (2) ஆனது, வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்வது ஒரு 'தீர்ப்பாணை' எனக் கருதப்படும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. ஒரு சில விதிவிலக்குகளுக்கு உட்பட்டு, ஒவ்வொரு தீர்ப்பாணைக்கு எதிராகவும் மேல்முறையீடு செய்யப் பிரிவு 96 வழிவகை செய்கிறது; தற்போதைய விவகாரத்தைப் பரிசீலிக்கும்போது அந்த விதிவிலக்குகள் நமக்குத் தேவையில்லை. நீதிமன்றமானது இயற்கை நீதி நெறிமுறை களைப் பின்பற்றி, சிவில் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை VII விதி 11-ன் கீழ் வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்து ஓர் உத்தரவைப் பிறப்பித்தால், அது ஒரு தீர்ப்பாணையாகவே கருதப்படும்; இதனால், பிரிவு 96-ன் கீழான மேல்முறையீட்டுத் தீர்வைப் பெற வழிவகுக்கும். ஆனால், இத்தகைய உத்தரவு இயற்கை நீதி நெறிமுறைகளை மீறி பிறப்பிக்கப்பட்டால், உயர் நீதிமன்றம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 227-வது பிரிவின் கீழ் தனக்குள்ள அதிகாரங் களைப் பயன்படுத்தி அதனை ரத்து செய்ய முடியும் [சி.எம்.ஹரிராஜ் வழக்கு (மேலே சுட்டிக்காட்டப்பட்டது) காண்க].

இவ்வழக்கில், விசாரணை நீதிமன்றம் வழக்கு புகாருக்கு எண் இடாமலும், காலவரம்பு புள்ளி குறித்து வாதிகள் தங்கள் தரப்பு வாதங்களை முன்வைப்பதற்கும் வழக்கின் ஏற்புடைமை குறித்து விளக்கம் அளிப்பதற்கும் போதிய வாய்ப்பளிக்காமலும், கடந்த பிப்ரவரி 25, 2022 தேதியிட்ட அதன் உத்தரவின் மூலம் வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்துள்ளது; இந்த உத்தரவே இங்கு சவாலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவ தானால், சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள இந்த உத்தரவு இயற்கை நீதி நெறிமுறைகளை மீறி பிறப்பிக்கப்பட்டுள்ளது; இதன் காரணமாகவே, 'சி.எம். ஹரிராஜ்' வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டபடி, அரசியலமைப்புச் சட்டத்தின் 227-வது பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த சிவில் சீராய்வு மனு ஏற்புடையதாகிறது.

13. 'செல்வராஜ்' வழக்கில் [மேலே சுட்டிக் காட்டப்பட்டது] இந்த நீதிமன்றம், வழக்கு புகாருக்கு எண் இடும் செயல் என்பது ஒரு நிர்வாக ரீதியான செயலே அன்றி, நீதித்துறை சார்ந்த செயல் அல்ல என்று தீர்ப்பளித்துள்ளது. மேலும், ஒரு சில குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் மட்டுமே எண் இடும் கட்டத்திலேயே நீதிமன்றம் வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வரையறுக்கப்பட்ட காரணங்களில் பின்வருவன அடங்கும்: வழக்கினை விசாரிப்ப தற்கான உள்ளார்ந்த அதிகார வரம்பு

நீதிமன்றத்திற்கு இல்லாதபோது [2014 (2) MWN (Civil) 617–ல் வெளியிடப்பட்ட 'வி.விஜயகுமார் –எ– எம்.முருகதாஸ்' காண்க]; ஒரு சட்டத்தின் மூலம் வழக்கு தெளிவாகத் தடைசெய்யப்பட்டிருக்கும்போது; போதிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டும் சிவில் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை VII விதி 9–ன் விதிகளை வாதி பின்பற்றத் தவறும்போது; அல்லது முற்றிலும் சட்டம் சார்ந்த கேள்வியாக, வழக்கு காலவரம்பைக் கடந்தது என்பது வெளிப்படையாகத் தெரியும்போது [(2020) 7 SCC 366–ல் வெளியிடப்பட்ட 'தாகிபென் –எதிர்– அர்விந்த்பாய் கல்யாண்ஜி பானுசாலி' காண்க. காலவரம்பு குறித்த கேள்வி என்பது உண்மை மற்றும் சட்டம் கலந்த கேள்வியாக இருக்கும்பட்சத்தில், அதற்கு வழக்கு விசாரணை அவசியமாகும்; அத்தகைய சூழ்நிலையில், சிவில் நடைமுறைச் சட்ட கட்டளை VII விதி 11–ன் கீழ் வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்ய முடியாது. அத்தகைய சூழ்நிலையில், விசாரணை நீதிமன்றம் வழக்கு புகாருக்கு எண் இட்டு, காலவரம்பு புள்ளி குறித்து திறந்த நீதிமன்றத்தில் வாதிகளின் விளக்கத்தைக் கேட்டறிய வேண்டும்; அதன் பிறகுதான், சிவில் நடைமுறைச் சட்டக் கட்டளை VII விதி 11–ன் கீழ் காலவரம்பால் தடைசெய்யப் பட்டு வழக்கு புகார் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமா என்ற முடிவுக்கு நீதிமன்றம் வர வேண்டும்.

14. மதிப்பிற்குரிய நீதிமன்ற உதவியாளர், இந்த நீதிமன்றத்தின் மாண்புமிகு தனி நீதிபதி 'குஞ்சம்மா' வழக்கில் [மேலே சுட்டிக் காட்டப்பட்டது] வழக்கு புகாருக்கு எண் இடுவது என்பது நிர்வாக ரீதியான செயல் என்ற பிரிவின் கீழ் வராமல், நீதித்துறை சார்ந்த செயல் என்ற பிரிவின் கீழ்தான் வரும் என்று தீர்ப்பளித்து உள்ளதைச் சுட்டிக்காட்டினார். மாண்புமிகு தனி நீதிபதியின் அந்தப் பார்வையை இந்த நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 'செல்வராஜ்' வழக்கில் [மேலே சுட்டிக் காட்டப்பட்டது] தீர்ப்பளிக்கப்பட்டபடி, ஒரு வழக்கிற்கு எண் இடுவதற்கு நீதித்துறை சார்ந்த அறிவை மிக அதிகமாகப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை; மேலும், அது முதன்மையாகச் சட்டத்தின் அடிப்படையில் வழக்கு புகாரைப் புரிந்துகொள்ள நீதிமன்றத்தைக் கோரவில்லை; எனவே, அது ஒரு நிர்வாக ரீதியான செயலே ஆகும். எவ்வாறாயினும், இவ்விரு பார்வைகளும் இந்த சிவில் சீராய்வு மனுவின் முடிவை எந்த வகையிலும் பாதிக்காது.

15. எது எப்படியாக இருந்தாலும், 'மோசடி என்பது அனைத்து முறையான சட்டப்பூர்வ செயல்களையும் சிதைத்துவிடும்' என்பது நிலைநாட்டப்பட்ட ஒரு சட்டப்பூர்வமான நிலையாகும். நீதிமன்றத்தை ஏமாற்றி ஏதேனும் ஒரு உத்தரவோ அல்லது தீர்ப்பாணையோ பெறப்பட்டால், அது செல்லாததாகிவிடும். இது தொடர்பாக, (1994) 1 SCC 1–ல் வெளியிடப் பட்ட 'எஸ்.பி. செங்கல்வராய நாயுடு –எதிர்– ஜெகன்னாத்' வழக்கை இங்கு குறிப்பிடலாம். தங்களுக்குச் சாதகமான நிலையைப் பெறுவதற்காக அல்லது நீதிமன்றத்தைத் தவறாக வழிநடத்துவதற்காக, தொடர்புடைய மற்றும் மிக முக்கியமான தகவல்களை மறைப்பதும் மோசடிக்குச் சமமானதாகும்.

16. மேலும், வழக்கு புகாரை ஆய்வு செய்யும் கட்டத்தில், அது காலவரம்பாலோ அல்லது நடைமுறையிலுள்ள ஏதேனும் ஒரு சட்டத்தாலோ தடைசெய்யப்பட்டுள்ளது என்று நீதிமன்றம் கருதினால், நீதிமன்றம் அந்த வழக்கு புகாருக்கு வழக்கு எண் வழங்கி, அதனை வழக்கு பதிவேட்டில் பதிவு செய்து, பின்னர் வழக்கு நாள்காட்டியின் 'ஏற்புடைமை குறித்த விசாரணைக்காக' என்ற தலைப்பின் கீழ் பட்டியலிட வேண்டும். திறந்த நீதிமன்றத்தில் வாதிகள் தரப்பைக் கேட்டறிந்த பிறகும், வழக்கு புகார் மற்றும் அதன் ஆவணங்களைப் பரிசீலித்த பிறகும், விசாரணை நீதிமன்றம் திருப்தி அடையவில்லை எனில், அது சிவில் நடைமுறைச் சட்டக் கட்டளை VII விதி 11–ன் கீழ் வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்து உத்தரவிடலாம். இத்தகைய நடைமுறையைப் பின்பற்றும்போது, விசாரணை நீதிமன்றம் ஒரு முறையான தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உத்தரவை பிறப்பிக்கும்; வழக்கின் முடிவு வழக்கு பதிவேட்டில் பதிவு செய்யப்படும்; மேலும் அது 'இ–கோர்ட்ஸ்' இணையப் பக்கத்திலும் புதுப்பிக்கப்படும். மாறாக, வழக்கு புகாருக்கு எண் இடாமலேயே ஓர் உத்தரவைப் பிறப்பிக்க விசாரணை நீதிமன்றம் முற்படும்

போது, பிற்காலத்தில் இந்த விவகாரம் மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் முன் வரும்போது, வழக்கின் நிலையை அறிந்துகொள்வதோ அல்லது வழக்குக் கட்டைக் கண்டறிவதோ கடினமாகிவிடும்.

மேலும், ஒருமுறை வழக்கு புகார் தள்ளுபடி செய்யப்பட்டால், சிவில் நடைமுறைச் சட்டப் பிரிவு 2 (2)–ல் உள்ள தீர்ப்பாணையின் வரையறைப் படி, அந்தத் தள்ளுபடி உத்தரவு ஒரு தீர்ப்பாணை யாகவே கருதப்படும். இது, வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்யும்போது விசாரணை நீதிமன்றம் ஒரு முறையான தீர்ப்பாணை/தீர்ப்பாணை உத்தரவை தயாரிக்கக் கோருகிறது; ஒரு முறையான தீர்ப்பாணை/தீர்ப்பாணை உத்தரவு இல்லாதபட்சத்தில், சிவில் நடைமுறைச் சட்டப் பிரிவு 96–ன் கீழ் மேல்முறையீடு செய்வது சாத்தியமில்லாமல் போகும். அத்தகைய சூழ்நிலையில், வழக்கு புகார் கோப்பிற்குள் மட்டுமே இருக்க முடியும், அதற்கு வழக்கிற்கு எண் இடுவது அவசியமாகும். எண் இடப்படாத வழக்குக் கோப்புகள் கவனக்குறைவாகவோ அல்லது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதற்கான மற்றும் நீதிமன்றத்தின் முடிவிற்கான தடயங் களை அழிக்கும் நோக்கோடு திட்டமிட்டோ காணாமல் போவதற்கான சாத்தியக்கூறுகளை யும் நிராகரிக்க முடியாது. வழக்கு எண் இல்லாதது, வழக்கு நடைமுறைகளில் முறைகேடுகள் மற்றும் முறையற்ற மாற்றங்கள் ஏற்படுவதற்கு வழிவகுக்கும். வழக்கிற்கு எண் இடுவதன் மூலம் இவை அனைத்தையும் தவிர்க்க முடியும்.

17. முதலாவதாக, இவ்வழக்கில் விசாரணை நீதிமன்றமானது அசல் வழக்கு புகாருடன் தள்ளுபடி உத்தரவையும் இணைத்து வாதி களிடமே திருப்பி அனுப்பியுள்ளது. எனவே, தொழில்நுட்ப ரீதியாகப் பார்த்தால் இது ஒரு தள்ளுபடி உத்தரவு அல்ல. மிகச் சரியாகச் சொல்வதானால், இதனை வழக்கு புகாரைத் திருப்பி அனுப்பும் உத்தரவாக மட்டுமே கருத முடியும். இரண்டாவதாக, எழும்பூர் ஆவணக் காப்பகத்திலிருந்து 1905 புல வரைபடப் புத்தகத்தைப் பெற்ற கடந்த 15 டிசம்பர் 2021 அன்றுதான், பிரதிவாதி நீதிமன்றத்தை ஏமாற்றிச் செய்த (அப்படியாகக் கூறப்படும்) மோசடி தங்களுக்குத் தெரியவந்தது என்றும், எனவே 1963–ஆம் ஆண்டின் காலவரம்புச் சட்டத்தின் பிரிவு 59–ன்படி, இந்த வழக்கு காலவரம்பால் தடை செய்யப்படவில்லை என்றும் வாதிகள் வாதிடுகின்றனர்.

மேற்கண்ட வாதங்கள், இவ்வழக்கில் கால வரம்பு குறித்த கேள்வியை உண்மை மற்றும் சட்டம் கலந்த ஒரு கேள்வியாக மாற்றுகின்றன. இந்த வாதங்களின் உண்மைத்தன்மையை சிவில் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை ஙீ–ன் கீழ் தரப்பினரை ஆய்வு செய்யும் போதோ அல்லது வழக்கு விசாரணையின் போதோதான் தீர்மானிக்க முடியும். இது தொடர்பாக, (1977) 4 SCC 467–ல் வெளியிடப்பட்ட, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் 'டி. அரவிந்தந்தம் –எதிர்– டி.வி. சத்யபால்' வழக்கின் தீர்ப்பை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். அதில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

'5. ...வழக்கு புகாரை வெறும் கடமைக்காக அல்லாமல் ஆழமாகப் படித்துப் பார்க்கும்போது, அது அப்பட்டமாக வதவதவென்றோ அல்லது எந்தவொரு தகுதியும் அற்றதாகவோ, அதாவது வழக்குத் தொடரத் தெளிவான உரிமை எதையும் வெளிப்படுத்தாததாகவோ இருந்தால், முன்சீப் அவர்கள் சிவில் நடைமுறை சட்டக் கட்டளை VII விதி 11–ன் கீழ் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்; அதே வேளையில் அதில் கூறப்பட்டுள்ள காரணங்கள் முழுமை யாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், சாமர்த்தியமான எழுத்து நடை மூலம் வழக்குத் தொடரக் காரணம் இருப்பது போன்ற ஒரு மாயை உருவாக்கப்பட்டிருந்தால், முதல் விசாரணையிலேயே சிவில் நடைமுறை சட்டக் கட்டளை X–ன் கீழ் அந்தத் தரப்பினரைத் தீவிரமாகத் துருவித் துருவி விசாரிப்பதன் மூலம் அதனை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிய வேண்டும். பொறுப்பற்ற முறையில் தொடரப் படும் வழக்குகளுக்கு ஒரு சுறுசுறுப்பான நீதிபதியே தீர்வாக இருக்க முடியும். போலி வழக்குகளை ஆரம்பக் கட்டத்திலேயே சுட்டு

வீழ்த்தும் வகையில், முதல் விசாரணையிலேயே தரப்பினரை விசாரிப்பதை விசாரணை நீதிமன்றங்கள் கட்டாயமாக்க வேண்டும். இத்தகைய நபர்களை எதிர்கொள்வதற்குத் தண்டனைச் சட்டமும் போதுமான வழிகளைக் கொண்டுள்ளது (அத்தியாயம் XI), மேலும் அவர்களுக்கு எதிராக அது பயன்படுத்தப்பட வேண்டும்.' (குறிப்பு: தடிமனாக்கப்பட்ட வரிகள் இந்த நீதிமன்றத்தால் வலியுறுத்தப்பட்டவை யாகும்)

18. ஆனால் இவ்வழக்கில், விசாரணை நீதிமன்றம் இந்த விவகாரங்களைக் கருத்தில் கொள்ளாமலும், காலவரம்பு புள்ளி குறித்து வாதிகளின் விளக்கத்தைக் கேட்டறியாமலும், வழக்கு புகாருக்கு எண் இடாமலேயே அதைத் தள்ளுபடி செய்துள்ளது. எனவே, விசாரணை நீதிமன்றத்தின் இந்த அணுகுமுறை தவறானது, இயற்கை நீதி நெறிமுறைகளுக்கு முரணானது மற்றும் சட்டத்திற்குப் புறம்பானது ஆகும்; ஆகவே, வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்து 25 பிப்ரவரி 2022 அன்று விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யத்தக்கதாகும்.

19. 'ஸ்டான்லி பக்' வழக்கை [மேலே சுட்டிக் காட்டப்பட்டது] பொறுத்தமட்டில், அதில் வாதி(கள்) வழக்கு புகாரைச் சமர்ப்பித்தபோது, பிரதி வாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி, சிவில் நடைமுறை சட்டக் கட்டளை VII விதி 11 மற்றும் பிரிவு 151–ன் கீழ் ஒரு இடைக்கால மனுவைத் தாக்கல் செய்து, வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்யக் கோரினர். அந்த வழக்கில் விசாரணை நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும் கேட்ட றிந்த பிறகு, இடைக்கால மனுவை அனுமதித்து வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்தது. அதனை எதிர்த்து வாதிகள் இந்த நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தனர். நாம் தற்போது பரிசீலிக்கும் வழக்கைப் போலல்லாமல், அந்த வழக்கில் வழக்கு புகாருக்கு எண் இடப்பட்டி ருந்தது; மேலும் விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் இயற்கை நீதி நெறி முறைகள் எவ்விதத்திலும் மீறப்படவில்லை. இத்தகைய உண்மைகள் மற்றும் சூழ்நிலை களின் அடிப்படையில் தான், வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்யும் உத்தரவுக்கு எதிராக மேல் முறையீடு மட்டுமே செய்ய முடியும். சீராய்வு மனு செய்ய முடியாது என்று இந்த நீதிமன்றத்தின் மாண்புமிகு தனி நீதிபதி தீர்ப்பளித்தார். அந்தத் தீர்ப்பின் பின்னணி உண்மைகள் தற்போதைய வழக்கிலிருந்து மாறுபட்டிருப்பதால், அது இந்த வழக்கிற்குப் பொருந்தாது.

20. மதிப்பிற்குரிய நீதிமன்ற உதவியாளர் தன் வாதத்திற்கு ஆதாரமாக முன்வைத்த, 'செல்வராஜ்' வழக்கை [மேலே சுட்டிக்காட்டப் பட்டது] பின்பற்றிப் பிறப்பிக்கப்பட்ட பிற முன் முடிவுத் தீர்ப்புகளுடன் எந்தவொரு முரண்பாடும் இல்லை.

21. கடந்த 27 ஏப்ரல் 2022 தேதியிட்ட உத்தரவின் மூலம் மாண்புமிகு நீதியரசர் திரு.என். சேஷசாயி அவர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு (மேலே விவரிக்கப்பட்டுள்ளது) விடையளிக்கும் விதமாக: 'மோசடி என்பது அனைத்து முறையான சட்டப்பூர்வ செயல்களை யும் சிதைத்துவிடும்; மேலும் நீதிமன்றத்தை ஏமாற்றிப் பெறப்படும் எந்தவொரு உத்தரவோ அல்லது தீர்ப்பாணையோ சட்டத்தின் பார்வை யில் செல்லாததாகிவிடும்' என்பது நிலைநாட்டப் பட்ட ஒரு சட்டப்பூர்வமான நிலையாகும். எனவே, வழக்கில் பிரதிவாதிகளாக இருந்து, அந்த வழக்கை நடத்தாமல் விட்டு விட்டு, ஒருதலைப்பட்சமான தீர்ப்பாணை பிறப்பிக்க அனுமதித்த இந்த வாதிகள், அதனை ரத்து செய்வதற்கான நடைமுறை ரீதியான தீர்வுக ளைப் பயன்படுத்திய பிறகும், அத்தகைய உத்தரவு, தீர்ப்பு அல்லது தீர்ப்பாணை செல்லாதது என அறிவிக்கக் கோரி புதிய வழக்கைத் தொடர முழு உரிமை உடையவர்கள் ஆவர்.

22. இந்த உத்தரவை நிறைவு செய்வதற்கு முன்பாக, இந்த நீதிமன்றத்திற்குத் தகுந்த உதவிகளை வழங்கிய மதிப்பிற்குரிய நீதிமன்ற உதவியாளர் திரு.சரத் சந்திரன் அவர்களின்

மனமார்ந்த முயற்சிகளை இந்த நீதிமன்றம் அங்கீகரிக்க விரும்புகிறது மற்றும் அவரது பங்களிப்பைப் பாராட்டுகிறது.

23. மேலே விவரிக்கப்பட்டபடி, வழக்கு புகாரைத் தள்ளுபடி செய்து விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த 25 பிப்ரவரி 2022 தேதியிட்ட குறிப்பாணை உத்தரவு ரத்து செய்யத் தக்கதாகும். அதன் விளைவாக, இந்த உத்தரவின் நகல் கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 15 நாட்களுக்குள், அசல் வழக்கு புகார் மற்றும் அவர்களிடம் உள்ள வழக்கு ஆவணங்களுடன் விசாரணை நீதிமன்றத்தில் மீண்டும் சமர்ப்பிக்குமாறு வாதிகளுக்கு உத்தரவிடப்படுகிறது. விசாரணை நீதிமன்றம் அதற்கு வழக்கு எண் வழங்கி, போதிய வாய்ப்புகளை அளித்து, காலவரம்பு மற்றும் வழக்கின் ஏற்புடைமை அம்சங்கள் குறித்து விசாரிக்க வேண்டும்; அதில் திருப்தி ஏற்படும் பட்சத்தில், பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பி, சட்டப்படி வழக்கைத் தொடர வேண்டும். அவ்வாறு விசாரித்த பிறகும் வழக்கு புகாரை ஏற்பதில் விசாரணை நீதிமன்றத்திற்குத் திருப்தி இல்லை எனில், அது சட்டம் மற்றும் தனது நீதித் துறை மனச்சாட்சியின்படி தகுந்த உத்தரவை பிறப்பிக்கலாம். இந்த உத்தரவில் வழக்கின் தகுதி குறித்து இந்த நீதிமன்றம் ஏதேனும் கருத்துக்களைத் தெரிவித்திருந்தாலும், அவற்றின் தாக்கம் அல்லது செல்வாக்கு ஏதுமின்றி விசாரணை நீதிமன்றம் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் எனக் தனியாகக் குறிப்பிடத் தேவையில்லை.

24. முடிவாக, இந்த சிவில் சீராய்வு மனு மேற்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது. இவ்வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, சீராய்வு மனுதாரர்கள் தங்கள் சொந்த வழக்குச் செலவுகளைத் தாங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனுடன் தொடர்புடைய சிவில் இதரவகை மனு இத்துடன் முடிக்கப்படுகிறது.

மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை

**மாநில தகவல் ஆணையத்துக்கு எதிராக வழக்கு: பொது தகவல் அதிகாரிக்கு அபராதம்**

மாநில தகவல் ஆணையத்தின் உத்தரவுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்த பொது தகவல் அதிகாரிக்கு ரூ.10,000 அபராதம் விதித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆர்ய வைசிய சமூகத்தில் பொருளாதார ரீதியில் பின் தங்கிய மக்களின் சமூக நலத் திட்டங்களுக்காக தொடங்கப்பட்டது. வி. திருவேங்கடதான் செட்டி அறக்கட்டணை இந்த அறக்கட்டளையை நிர்வகித்து வந்த ராவ் பகதூர் வி.திருவேங்கடதான் செட்டி 1941ஆம் ஆண்டு தமிழ்நாடு அறங்காவலர் சட்டத்தின் கீழ் உயில் ஒன்றை எழுதி வைத்துள்ளார். அந்த உயில் தமிழக அரசையும் ஓர் அறங்காவலராக அங்கீகரிக்கிறது. இந்த நிலையில், அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில் ஸ்ரீகுமார் என்பவர் அறக்கட்டளை தொடர்பான சில விவரங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரியிருந்தார். அதில், 1941ஆம் ஆண்டு எழுதப்பட்ட உயில், இந்த அறக்கட்டளை தொடர்பாக 1942இல் சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு உள்ளிட்ட ஆவணங்கள், அறக்கட்டளையின் கடைசி 5 ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள், அசையா சொத்துகளின் விவரங்களைக் கேட்டிருந்தார்.

இதையடுத்து, மனுதாரருக்கு அறக்கட்டளை தொடர்பான உயர்நீதிமன்ற ஆவணங்களை வழங்கவும், சட்டத்தின் சில விதிகளின் கீழ், உயில் மற்றும் நிதி நிலை, தணிக்கை அறிக்கை உள்ளிட்ட தகவல்களை வழங்கவும் பொது தகவல் அதிகாரி மறுத்து விட்டார். இதையடுத்து மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மேல்முறையீட்டை விசாரித்த மாநில தகவல் ஆணையர் வி.பி.ஆர்.இளம்பரிதி, உயில் தொடர்பான விவரங்கள் வழங்கக் கோருவது பொதுநலன் இல்லை என்பதால் அவற்றை வழங்க முடியாது. அதேநேரம் நிதிநிலை, தணிக்கை மற்றும் அசையா சொத்து விவரங்கள் ஆரிய வைசிய மாணவர்களின் கல்வி உதவித் தொகை வழங்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது. எனவே, அந்த விவரங்களை 7 நாள்களுக்குள் மனுதாரருக்கு வழங்குமாறு உத்தரவிட்டார்.

இதை எதிர்த்து பொது தகவல் அதிகாரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கு நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி மாநில தகவல் ஆணையம் பிறப்பித்துள்ள உத்தரவின்படி 2 வாரங்களுக்குள் மனுதாரருக்கு சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்க பொது தகவல் அதிகாரிக்கு உத்தரவிட்டு ரூ.10,000 அபராதத்துடன் வழக்கை தள்ளுபடி செய்தார்.

**நன்றி : தினமணி 18.6.2026**

# உயிலும் அதனை நிறைவேற்றுதல் முறையும்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி டாக்டர் ஆர்.என்.மஞ்சுளா**
**உ.மு.வ.எண் 6/2020**
**நாள் : 3.11.2025**
**2025 (6) CTC 767**

**பி.பவானி, த.த.பெ. பி.வி.பத்மநாபராவ்,**
**நெல்லூரில் நிலையான கிடப்பில், தற்காலி இருப்பிடம்,**
**23/13 ஸ்ரீ பசவராஜ் நிலையம், நாகர்ஜுனா முதல் தெரு,**
**ரங்கராசபுரம், கோடம்பாக்கம், சென்னை–600 024. ...மனுதாரர்**

–எதிர்–

**பி.ராஜேஸ்வரி (இறப்பு) வ/மு.ஹெச் எண் 5.11.692/7 வித்யாரான்புரி**
**யூனிவர்சிடி காலனி, அலுமகொண்டா வாராங்கல் ஆந்திரபிரதேசம் 506 009**
**மற்றும் பிறர் ...எதிர்வாதிகள்**

## தீர்ப்பு

1. உயில்வழி மூல வழக்கு முன்னிடப்பட்டது. இதில் நிர்வாகக் கடிதங்கள் இறந்தவர் இணைக்கப் பட்டது. உயில்வழி நடைபெறுபவரான மகள் இறந்தவர் பி.யூ.பத்மநாப ராவ் இதன் விளைவு தமிழ்நாடு மாநிலம் முழுமைக்கும்

2.திரு. ஓ.பத்மபிரகாஷ் வாதியின் வழக்கறிஞர், எதிர்வாதியின் வழக்கறிஞர்களிடம் கேட்டறியப் பட்டனர் மற்றும் பதிவேட்டின்பேரில் கிடைக்கத் தக்க பதிவேடு கூர்ந்தாயப்பட்டது.

3. வாதுரையில் முன்னிடப்பட்ட வாதங்கள் வாதியால் முன்னிடப்பட்டவை பின்வருமாறு.

இறந்த பி.வி.பத்மநாபரால் என்பவரின் மகள் வாதி வாதியின் தந்தை சாதாரணமாகத் தங்கி யிருந்ததே 23/13 ஸ்ரீபசவராஜா நிலையம், நாகார்ஜுனா முதல் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை–600 024. இவர் 20.2.2010 இறந்துள்ளார். அவர் ரொக்கமாகப் பணம் ரூ.3,50,000/- வைத்துள்ளார். அதாவது சென்னையில் அவரது இறப்பின் போது இறந்தவர் 22.2.2008 தேதியிடப்பட்ட ஓர் உயிலையும் விட்டுச் சென்றுள்ளார். வாதி இறந்துபோனவரின் சொத்துக்களை கோரும் உரிமை கொண்டுள்ளார். 22.2.2008 அன்று உயில் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டது. இது ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் உயில் மூலமாக இவருக்கு சொந்தமானது என்பது மட்டுமேல்ல. ஆனால், உரியவாறு வாதி இறந்தவரின் கடன்கள் எதனையும் உரியவாறு வகை செய்வதாக உறுதியளிக்கிறார். எனவே, நிர்வாகக் கடிதங்களை அளிக்குமாறு கோரப் படுகிறது.

4. எதிர்வாதிகள் 1 முதல் 4 வரையிலான வர்கள் இறந்த, பி.யு.பத்மநாபராவுக்கு பிறந்தவர்கள். அதாவது முதல் மனைவி மூலமாக, வாதி, பி.பி. பத்மானந்தராவுக்கு, மகனாகப் பிறந்துள்ளார். முதன் மனைவி மூலமாக, இதில் இரண்டாவது வாதி பிறந்தது, பி.வி. தர்மானந்தராவ் மூலமாக, அவரது இரண்டாவது மனைவி மூலமாக, ஐந்தாம் எதிர்வாதி பி.யூ.பத்மநாபராவுக்கு பிறந்தவர். மூன்றாம் மனைவி மூமாக.

5. இந்த வழக்கு நடப்பில் இருந்தபோது, D1 இறந்துள்ளார். அதாவது சட்ட உரிமம் பெற்ற வாரிசுகள் D6, D7 ஆக உள்ளே சேர்க்கப்பட்டனர்.

6. எதிர்வாதியால் முன்னிடப்பட்ட எழுத்து மூல விவர உரையில் கூறப்பட்ட உறுதி கால 1 முதல் 5 வரை பின்வருமாறு.

இறந்த பி.வி. பத்மபநாபரால் சரோஜம்மா என்பவரை திருமணம் செய்துகொண்டுள்ளார். அவரே D1 முதல் D4 வரையிலானவர்களின் தாய் 1956ஆம் ஆண்டு. அதாவது அவரது திருமணத்தை அடுத்து, மற்றொருவரான லஷ்மி

என்பவருடன் சேர்த்து வாழ்ந்து இரண்டு குழந்தைகளை அவள் மூலம் பெற்றுள்ளார். முரணி மற்றும் பி. பவானி என்பவர்களை. இதில் வாதியாவர் இவள் மூலமாகப் பிறந்தவர்கள். 1962ஆம் ஆண்டு பி.வி.பத்மநாபரால் பிரமிளா என்பவருடன் உறவு ஏற்படுத்திக் கொண்டுள்ளார் மற்றும் 3ஆம் எதிர்வாதி அவள் மூலம் பிறந்தவர் 1992ஆம் ஆண்டு 5ஆம் எதிர்வாதியின் தாய் இறந்துள்ளார். 1994ஆம் ஆண்டு எதிர்வாதிகளான 1 முதல் 4 வரை யிலானவர்களின் தாயும் இறந்துள்ளார்.

6.1. 2004ஆம் ஆண்டில் இறந்த பி.வி. பத்மநாபரால் கட்டிடம் கட்டுமானப் பணி யாளரிடம் 50 மே வரையிலானவர்களை பங்குகளின் அடிப்படையில். அவ்வாறே கட்ட உள்ள 2 பிளாட்டுகளில் 6 ப்ளாட்டுக்குள் இறந்த பி.வி. ஆனந்தராவ்வினை சென்றடையும். எஞ்சிய 6 கட்டிடம் கட்டு பவானிக்கு சொந்த மாகும். வாதியின் சகோதரர் முரளி என்பவர் பி.வி.பத்மானந்தராவ்வை அவர் சார்பாக அவரது குடும்பத்திற்கு 3 பிளாட்டுகளை ஏற்பாடு செய்யக் கோரியுள்ளார். அவ்வாறே இரண்டு பிளாட்டுகள் இணையாக, முரளிக்கும் அவரது தாய் லஷ்மிக்கும் சொந்தமானது மற்றும் ஒரு பிளாட் வாதிக்கானது, 2008ஆம் ஆண்டு கட்டுமானம் செய்பவர் பி.வி.பத்மநாபராவுக்கு 4 பிளாட்டுகளை மாற்றி வைத்துள்ளார் மற்றும் இவர் கள்ளத்தனமாக இரண்டு பிளாட்டுகளால் உயில் மூலம் பெற வேண்டியவர்களது பங்கி லிருந்து விற்றுள்ளார். அதாவது அவரது அனுமதியின்றி மற்றும் பின்னர் இதற்கான நஷ்ட ஈடமாக ரூ.20,00,000/- அளிக்க உடன் பட்டுள்ளார். 2010ஆம் ஆண்டு பி.வி.பத்மநாப ராவ் இறந்துள்ளார். அந்தக் காலத்தின்போது கட்டுமானம் செய்பவர் 16,50,000/- மட்டுமே செலுத்தியிருந்துள்ளார். இந்த நேரத்தில் வாதி யின் சகோதரர் வலுக்கட்டாயமாக (அடாவடித் தனமாக) ஒரு பிளாட்டினைப் பிடித்துள்ளார். அதாவது அவருக்காக மற்றும் அவரது தாய் எஞ்சிய 3 பிளாட்டுகளை வாடகைதாரர்களுக்கு குத்தகைக்கு அளித்துள்ளார் மற்றும் பல லட்சங்களை அவர்களிடமிருந்து பெற்றுள்ளார். அதாவது குத்தகைத் தொகையாக இவற்றையும் பெற்று அனைத்து பணங்களையும் தானே பயன்படுத்தியுள்ளார். அந்தக் காலத்தில் அவரது காலம் வரை உயில் வழி உரிமம் பெற்றவர் களின் மூலம் பிறந்த பிள்ளைகளை இந்தப் பிளாட்டுகளில் அனுமதிக்கவில்லை.

6.2. வாதி தவறாக தகவல்களைத் திருத்தக் கூறி அவளது தந்தையை 2004ஆம் ஆண்டு ஏற்படுத்திய ஏற்பாடு ஆவணத்தின் 3 ஆவணங் களையும் ரத்து செய்ய வலியுறுத்தியுள்ளார். வாதி சார்பாகவும் அவரது தாய் சார்பாகவும் மற்றும் அதே நாளில் உயிலும் ஏற்படுத்தி யுள்ளார். மொத்தத்தில் 8 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டன. 3. ஏற்பாட்டு ஆவணங்கள் ரத்து செய்யப்பட்டன. அத்துடன் 4 புதிய ஏற்பட்டு ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதிலி ருந்து 3 ஏற்பாட்டு ஆவணங்கள் வாதி சார்பாகவும் லஷ்மி சார்பாகவும் ஏற்படுத்தப்பட்டன. ஒரு உயில் 22.2.2008 தேதியிடப்பட்டது. வாதிக்கு எதிராக ஓர் உரிமை வழக்கு போடப்பட்டது. அதில் இந்த நடவடிக்கைகள் வெளிதாகி விழலாகும் என்று விளம்பக் கோரப்பட்டது. வாதிக்கெதிராக முன்னிடப்பட்டது. உயில் மெய்யானதல்ல என்றும் கூறப்பட்டது. இறந்த பி.வி.பத்மநாபராவ் ஆங்கியலம் பற்றிய ஆய்வு அற்றவர் அவர் ஆங்கிலத்தில் கையொப்பம் மட்டுமே இடக் கூடியவர். அவர் உயிலின் உள்ளடக்கம் பற்றி அறியாதவர். உளவில் கட்டிடப் பணியாள ரானவையும் கடப்பாடு பற்றி கூறப்படவில்லை. அதாவது மொத்த 3,50,000 செலுத்தங்கள் பற்றிய கடப்பாடு இதில் 3,50,000 எவ்வாறு பெறுதல் வேண்டும் என்பது. இதில் ரூ.3,50,000/- வசூலிக்கப்பட உரிமையுடையவர். எனவே வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதாகும் என்பது.

7. மேற்சொல்லப்பட்ட வாதங்களின் அடிப்படையில் கருதுகைக்காக பின் வனையப் படுகிறது.

(i) 22.2.2008 தேதியிடப்பட்ட உயில். பி.வி.பத்மநாபராவ் என்பவரால் நிறைவேற்றப் பட்டது உண்மையானதா செய்யத்தக்கதா?

(ii) 22.2.2008 தேதியிட்ட உயில் நிறைவேற்றப்பட்டதா பி.வி.பத்மநாபராவினால் அதாவது அப்போது நல்ல மனநிலையில் இருந்து இதனை நிறைவேற்றினரா?

(ii) வாதிக்கு கோரப்பட்டவாறு நிர்வாகக் கடிதங்களையும் பெற உரிமை உள்ளதா மற்றும் இவருக்கு வேறு என்ன உய்திகள் உள்ளன?

8. விசாரணையின்போது, வாதியின் தரப்பில், வாதி PW1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் மற்றும் இதனை எழுதியவர் PW2 விசாரிக்கப் பட்டுள்ளார் மற்றும் ExP1 முதல் P5 வரை குறியீடு செய்யப் பட்டன. எதிர்வாதிகள் தரப்பில் 4ஆம் எதிர்வாதி DW1 ஆக விசாரிக்கப்பட்டு ExD1 முதல் D6 வரையிலானவரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9. வாதியின் வழக்குரைஞர், பணிந்தனுப்பியதாவது சான்றொப்பமிடுபவர்கள் விசாரிக்கப்பட முடியாது. ஏனெனில் வாதி அவர்களை கண்டுபிடிப்பது கடினம். இவர்களின் குறுக்கு விசாரணையின்போது, அதாவது DW1 ஏற்றுக் கொண்டதாவது அவரது தந்தையால் உயில் நிறைவேற்றப்பட்டது என்பதை. வாதியின் வழக்கிற்கு முக்கியமானவர்கள் ஆக மாட்டார்கள். இந்த நீதிமன்ற வழக்கின் தீர்ப்பே முன்னிடப் பட்டது. இந்த நீதிமன்ற வழக்கின் தீர்ப்பே முன்னிடப்பட்டது. பூ ம நி –எதிர்– முருகேசன் 2023 (2) த.த.வ. 273 (நீ.ஆ.), 2023 (1) M.W.N. (உரிமையியல்) 787, (நீ.ஆ.). எனினும் வாதி உயிலை எழுதியவரை விசாரித்துள்ளார். அவர் ஒரு வழக்கறிஞர் அதாவது PW2 ஆக அவர் அவரது சாட்சியத்தில் கூறியுள்ளதாவது உயில் தொடர்பாக இது எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்று கூறி யுள்ளார். அவர் சான்றளித்துள்ளதாவது உயில் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பது பற்றி. சான்றொப்பமிடும் சாட்சிகளும்கூட இந்த உயிலில் கையொப்பமிட்டுள்ளனர். எனவே எதிர்வாதிகள் சான்றொப்ப சாட்சிகள் தங்கள் பெயர்களை மட்டுமே எழுதியுள்ளதாகக் கூறுவது. அதுவும் கையொப்பமிடவில்லை என்று கூறுவது சரியல்ல. சாட்சிகள் அந்த உயிலில் கடைசியில் கையொப்பமிட்டுள்ளனர் உயிலின் முதல் பக்கத்தின் பின் பக்கத்தில் கையொப்ப மிட்டுள்ளனர். அது இடப்பட்டது ஆவணப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் நேரத்தில் எந்த சந்தேகச் சூழ்நிலையும் உயிலைச் சூழ்ந்துள்ளதாகக் தெரியவில்லை. உயிலானது எதிர்வாதிகளைப் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உயில் மெய்யானது அல்ல என்று வாதிகள் கூறுவதற்கு அவர்கள் பிற குழந்தைகள் தன் தந்தைக்கு பிறந்ததை மறுக்கவில்லை. அதாவது பிற மனைவியருடன், உயில் எழுதியவர் இது தொடர்பாக ஏற்கனவே ஏற்பாட்டு ஆவணத்தை சரோஜப்பா சார்பாக நிறைவேற்றியுள்ளார். சட்ட வாரிசுகள் எவருக்கு அவர்கள் வாரிசுகள் அல்ல என்று எங்கும் விலக்கப்படவில்லை. வேறு சட்ட வாரிசுகளுக்கும் சொத்துக்கள் அளிக்கப் பட்டுள்ளது. பி.வி. பத்மநாபராவ் என்பவரால் அவரது வாழ்நாளின்போது.

10. எதிர்வாதிகளின் வழக்கறிஞர் பணிந்துள்ளதாவது உயில் எழுதியவர் ஆங்கில அறிவு அல்லாதவர். அதாவது உயிலின் உள்ளடக்கம் பற்றி அறிந்து கொள்ளும் அளவுக்கு. பிற குழந்தைகள் இருந்து வந்தது. அதாவது இறந்தவரின் குழந்தைகள் பற்றிய விவரங்கள் வாதியிடம் மறைக்கப்பட்டது. வாதி ஒரு பொய்யான சட்ட வாரிசு சான்றிதழை பெற்றுள்ளார். இதில் பிற சட்ட வாரிசுகளின் பெயர்களை சேர்க்கப்படவில்லை. வாதி இதில் வாதி உயிலினை நிறைவேற்றியபோது, உயில் எழுதியவர் நல்ல மனநிலையுடனும் நல்ல ஆரோக்கியத்துடனும் இருந்துள்ளார். PW2இன் சான்று நம்பத்தகுந்ததல்ல. இவர் உயில் பற்றி மட்டுமே பேசியுள்ளார். இதில் 8 ஆவணங்களை பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்த உயிலினைச் செய்யப்பட்ட நேரத்தில் உயில் எழுதியவர் இதனை கட்டியவரிடம் பூசல் ஏற்பட்டிருந்தார் மற்றும் இவர் அவரிடமிருந்து பணச் சரியீடு களைப் பெற்றதாகத் தெரிகிறது. ஆனால் PW2க்கு இவை பற்றி எதுவும் தெரியவில்லை. இது தொடர்பாக எந்த சான்றொப்பம் சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது.

11. வாதி உயில் எழுதியவரிடம் மகள் பி.வி. பத்மநாபராவால் மற்றும் மகளுக்கும் இடையே எந்தப் பூசலும் இல்லை. பொருண்மையாவது முதல் மனைவி சரோசம்மா மற்றும் எதிர்வாதிகள் 1 முதல் 4 வரையிலானவர்கள் பி.வி.பத்மநாபரால் மற்றும் சரோசம்மா இரண்டுக்குமிடையே பிறந்தவர்கள். சொல்லப்

பட்ட பி.வி.பத்மநாபரால் திருமணத்திற்கு வெளியேயான உறவுகள் மூலமாகவும் அதாவது வாதியின் தாயுடனும் அவனது பெயர் லஷ்மி மற்றும் இந்தக் கருத்தில் வாதி மற்றம் இறந்த சகோதரர் முரளி அவருக்குப் பிறந்தவர்கள் லஷ்மி மூலமாக சொல்லப்பட்ட பி.வி.பத்மநாப ராவால் பரிமளா என்பவருடன் சிநேகம் வைத்திருந்தார்.

இவள் மூலமாக 5ஆம் எதிர்வாதி பிறந்துள்ளார். உயிலின் உண்மைத் தன்மையையும் செல்லுந் தன்மையையும் எதிர்வாதிகள் 1 முதல் 4 வரை எழுப்பியதாவது. உறவு முறை சரியற்றது என்பது. அதாவது இறந்த பத்மநாபராவ் மற்றும் லஷ்மி இடையேயான உறவு. இது எதிர்வாதி களால் 1 முதல் 4 வரையிலானவர்களால் கோரப்பட்டது. பி.வி.பத்மநாப ராவ் அவர்களது தாயை மட்டுமே திருமணம் செய்திருந்தார் மற்றும் வாதியின் தாய் லஷ்மி பி.வி.பத்மநாப ராவின் சட்டப்படி திருமணமான மனைவியாக முடியாது என்பது. எனவே லஷ்மி பற்றி சுட்டுகை அதாவது மனைவியா அந்த உயிலில் காட்டப் பட்டுள்ளதால் உயிலின் உண்மைத்தன்மை கேள்வியாக்கப்பட்டது.

12. இந்த உயில் பதிவு செய்யப்பட்ட ஒன்று மற்றும் இது 22.2.2008 அன்று நிறைவேற்றப் பட்டது. இது வாதியினால் பணிந்தனுப்பப்பட்டது. 1994இல் ரோசப்பா இறந்துள்ளார். பி.வி.பத்மநாப ராவ் லஷ்மியை மனைவியாக விவரித்துள்ளார். ஏனெனில் 2008ஆம் ஆண்டில் முதல் மனைவி உயிருடன் இல்லை. அதாவது உயில் நிறைவேற்றப்பட்டபோது, எதிர்வாதிகள் 1 முதல் 4 வரை வாதி அவர்களது தாய் சரோசம்மா உயில் நிறைவேற்றப்பட்டபோது உயிருடன் இருந்தார் என்பது. பி.வி.பத்மநாபரால் DW1 முதல் DW4 வரையிலானவர்களுடன் வாழ வில்லை. அதுவும் சாரியான தொடர்புற்ற காலத்தில் அதாவது உயில் நிறைவேற்றப்பட்ட போது எனவே வாதியின் தாயை மனைவியாக விவரிக்காதது. அதாவது பி.வி.பத்மநாபராவ் இதற்காக வாதியிடம் தவறு இருப்பதாகக் கூற முடியாது. அதாவது பி.வி. பத்மநாபராவின் மனைவியாக வாதியை குற்றப்படுத்தப்பட அல்லது இது ஒரு காரணம் மட்டுமே உயிலை சந்தேகிக்க காரணமாகாது.

13. பொருண்மையின்படி வாதி அந்த நேரத்தில் அதாவது அவளது தந்தை அவளது தாயுடன் உறவாட வந்தபோது, எதிர்வாதியின் தாய்க்கும் சரோசப்பா உடன் பி.வி. பத்மநாபராவ் நடவடிக்கையில் தரப்பினர்கள். எனவே இந்த உறவுமுறை தொடர்பாகவும் சட்ட வழிமுறை வாரிசு தொடர்பாகவும் எந்த சந்தேகமும் வாதியின் மன எதிர்வாதியிடமும் இல்லை. இதில் பணிந்தளிக்கப்பட்ட சட்ட வாரிசு சான்றிதழ் 16.8.2010 தேதியிடப்பட்டது. இறந்த பி.வி. பத்மநாபராவின் உயில் இது ExP3 என்று குறியிடப்பட்டது. இதில் அனைத்து சட்ட வாரிசுக்கு காட்டப்படவில்லை மற்றும் வாதி இதனை மறைத்துள்ளார். பொருட்பாடு தொடர்பான பொருண்மைகள் இதன் சட்ட வாரிசு சான்றிதழ் பெறுவது தொடர்பாக. இது வருவாய்த் துறை அதிகாரிகள் தொடர்பானது. உரிய விசாரணை நடத்த வேண்டியது தொடர்பாக. அதாவது எந்த விண்ணப்பத்தின் பேரிலும் அதாவது சட்ட வாரிசு சான்றிதழ் கோருவது தொடர்பாக. சட்ட வாரிசு சான்றிதழின் உள்ளடக்கம் எதுவாக இருந்தபோதிலும். வாதி எந்த சட்ட வாரிசையும் மறைக்க முயற்சிக்க வில்லை. இறந்த பி.வி.பத்மநாபராவ் எனவே வாதிக்கு எதிராக எந்த உறவுமுறையையும் கொடுமையாக்கும் அளவுக்கு மறைக்கவில்லை என்பது.

14. வாதியின் தாயை உயில் எழுதியவரின் மனைவி என்று குறிப்பிட்டது தொடர்பாக. அதன் சட்டநிலை பற்றியது நீங்கலாக, எஞ்சிய வாதங்கள் எதிர்வாதிகள் 1 முதல் 4 வரையி லானவர்களால் எழுப்பப்பட்ட மறுப்புகள் அதாவது உயில் தொடர்பாக.

(i) உயிலில் உயில் எழுதியவர் கூறியுள்ள தாவது அதாவது அவருக்கு 2 குழந்தைகள் மட்டுமே உள்ளதென்பது மற்றும் பிற இடத்தில் இவர் குறிப்பிட்டுள்ளதாவது தனக்கு 3 பிள்ளைகள் உள்ளதாக இது உண்மைக்கு புறம்பானதாக கூறப்பட்டது. இவருக்கு 7 குழந்தைகள் பிறந்தன சரோசம்மா, லஷ்மி மற்றும் பரிமளா மூலமாக.

(ii) உயிலில் குறிப்பிடப்பட்டதாவது வேறு சொத்துக்கள் சிம்ஹாடிரிபுரம், ஆந்திரப்பிரதேசம் மற்றும் உயில் எழுதுபவர்களின் சகோதரர் சார்பாக அளிக்கப்பட்டது. ஆனால், இது பற்றிய விவரங்கள் அளிக்கப்படவில்லை. அளிக்கப்பட்ட பொருண்மைகளில் அவருடைய ஒரு சகோதரர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். பிற வழக்குகளில் கூறப்பட்டதாவது அவரது சான்றில் உயில் எழுதியவர் சொத்து எதனையும் கொண்டிருக்கவில்லை. சொல்லப்பட்ட கிராமம் சகோதரர்களுக்காக அளிக்கப்பட்டவை.

(iii) பல்வேறு ஆவணங்கள் நிறைவேற்றப்பட்டன அதுவும் ஒரே நாளில் உயில் நீங்கலாக இவற்றில் இருந்து மூன்று ஏற்பாட்டு ஆவணங்கள் வாதி சார்பானதாகும். வாதி மற்றும் சகோதரர்கள் நீங்கலாக பிற சட்ட வாரிசுகள் இறந்தவருடையன. பி.வி.பத்மநாப ராவ்வினால் சட்டவழிமுறையாக அளிக்கவில்லை என்பது.

(iv) சான்றொப்ப சாட்சிகள் கையொப்பமிடவில்லை. உயில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

(v) உயில் எழுதியவருக்கு ஆங்கிலம் பற்றிய புரிதல் இல்லை என்பது, உயிலின் உள்ளடக்கும். அவருக்கு புரிந்திருக்க முடியாது. இது ஆங்கிலேயத்தில் எழுதப்பட்டுள்ளது மற்றும்

(vi) ரூ.3,50,000/- நலப்பயன் பற்றி கூறப்பட்டது. அதாவது உயில் எழுதியவருக்கு கொடுக்கப்பட வேண்டியது மற்றும் கட்டுமானம் செய்தவரின் கடமைப் பொறுப்பு பற்றி எதுவும் கூறப்படவில்லை.

15. அனைத்து காரணங்கள் பற்றிய வாதங்களில் கோரப்பட்டதாவது, எதிர்வாதிகள் 1 முதல் 4 வரையிலானவர்களினால் அந்த உயிலானது ஒரு மோசடியான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது. திருத்துக் கூறுதல் மூலமும் தகாத செல்வாக்கையும் பயன்படுத்தி செயற்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. பிற எதிர்ப்புகள் பற்றிய பார்ப்பதற்கு முன்னர் நாள் கருதுவது, உயிலின் மெய்ப்பிப்பு பற்றி முறைப்படுத்துவது அதுவும் சான்றொப்பக் காட்சிகளை விசாரணை செய்யாதபோது.

16. வாதியின் வழக்கறிஞர் பணிந்தளிப்பதாவது எதிர்வாதிகள் தாமே ஏற்றுக் கொண்டதாவது உயில் நிறைவேற்றப்பட்டது பற்றி ஆனால் அது சுதந்திரமாக அதை செய்யும் மனநிலையில் செய்யப்பட்டதா என்பது. அதாவது சான்றொப்பதாரர்களை விசாரிக்கத் தவறியுள்ள போது, உயிலின் உண்மைத்தன்மை மெய்ப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் எதிர்வாதிகள் உயில் எழுதியவர் எந்த தகாத கட்டாயப்படுத்தல் என்பதும் இல்லை மற்றும் உயிலானது அவர் தாமே முற்பட்டு நிறைவேற்றவில்லை என்பது. நான்காம் எதிர்வாதி 1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் அவரது குறுக்கு விசாரணையின் போது, அவர் ஏற்றுள்ளதாவது அந்த உயிலானது அவரது தந்தையினால் பதிவு செய்யப்பட்டது என்பது மற்றும் அது பதிவு செய்யப்பட்டதையும் ஏற்றுள்ளார். இதுவே மெய்ப்பிப்பாக அமையும் என்பது. உண்மைத் தன்மை பற்றிய மெய்ப்பிப்பு மற்றும் விசாரணை இல்லாதது சான்றொப்ப சாட்சிகள் உயிலின் மெய்ப்பிப்பினை செய்யாதது உயிலின் மெய்ப்பிப்பினை தேவையற்ற தாங்காது.

17. மேற்சொல்லப்பட்ட வாதங்களுக்கு ஆதாரமாக வழக்கறிஞர் இந்த நீதிமன்றத்தின் கவனத்தை ஈர்த்துள்ளார். நீதியர் ஆயத்தினால் அளிக்க முற்பட்டபோது, அத்துடன் பல்வேறு உச்சநீதிமன்றம் பூபதி (சிறப்பு), ஜெயராமன் மற்றும் பிறர், 2023 (2) த.த.வ. 273 (நீ.ஆ.), 2023 (6) M.W.N. (உரிமையியல்) (நீ.ஆ.) சொல்லப்பட்ட உச்சநீதிமன்ற தீர்ப்பில் பல்வேறு தீர்ப்புகள் பற்றி சுட்டுகை செய்யப்பட்டுள்ளது. அதாவது உயிலின் மெய்ப்பிப்பு தொடர்பாக. ரமேஷ் வர்மா வழக்கில் ரமேஷ் வர்மா (இறப்பு) அவரது சட்ட சார்பாற்றுநர்கள் மூலமாக –எதிர்– ராஜேஷ் காக்ஸானா (இறப்பு) (அவரது ச.சா. மூலமாக. 2012 (1) உச்.நீ.வ. 257. உச்ச நீதிமன்றம் கூறியதாவது எதிர்தரப்பினர் வழக்கிலும் இவர் குறிப்பாக உயில் நிறைவேற்றுதல் பற்றி மறுத்துள்ளார். எதிர் தரப்பினர் இதனை குறிப்பாக எதிர்க்கவில்லை. அதாவது அவர்கள் எழுத்துவழி விவர உரையில், வாதி உயிலின் மெய்ப்பினை ஏற்றுள்ளார்.

அதாவது சான்றுச் சட்டத்தின் பிரிவு 68 கூறப்பட்டுள்ளவாறு. இந்த நிலை வேறு பிற தீர்ப்புகளில் பின்பற்றப்பட்டிருப்பினும் இதில் நிலை வேறு பிற தீர்ப்புகளில் பின்பற்றப்பட்டி ருப்பினும். இதில் மாறுபாடு செய்யப்பட்டுள்ளது. “குறிப்பாக மறுக்கப்பட்டது” மற்றும் “குறிப்பாக மறுக்கப் படாதது” பற்றியும் அது “ஏற்கப்பட்டது” பற்றியும்.

18. இந்த நீதிமன்றத்தினால் காட்டப்பட்ட வேறுபாட்டின்படி, “குறிப்பாக மறுக்கப்பட்டது” என்பது எழுப்பப்பட்டும் சூழ்நிலைகளில் இது வாதியின் மீதுள்ள மெய்ப்பிப்பு சுமையை மாற்றாது. அதாவது சான்றுச் சட்டத்தின் பிரிவு 68இன்படி உயில் மெய்ப்பிப்பு சுமையை. ஆனால் ஏற்பது தொடர்பாக சான்றுச் சட்டத்தின் பிரிவு 68இன்படி உயில் மெய்ப்பிப்பு சுமையை. ஆனால் ஏற்பது தொடர்பாக சான்றுச் சட்டத்தின் பிரிவு 58 செயற்பாட்டிற்கு வரும் பிரிவு 58 கூறுவதாவது. இந்த பொருண்மைகள் ஏற்கப் பட்டது. நிலை மெய்ப்பிக்கப்பட தேவையில்லை. எனவே இந்தச் சூழ்நிலைகளில்/நேர்வுகளில் உயிலின் நிறைவேற்றுதல் ஏற்கப்பட்டுள்ள போது அவை மெய்ப்பிக்கப்பட வேண்டிய தேவையில்லை. எனவே இந்த வழக்குகளில் உயில் நிறைவேற்றப்பட்டது ஏற்கப்பட்டுள்ள போது இதனை மெய்ப்பிக்கும் சூழல் எழாது மற்றும் ஏற்பது மட்டுமே. போதிய மெய்ப்பிப்பாக அமையும். இங்கு தொடர்புற்ற பத்தியை எடுத்துக் கூறுவது பயனுள்ளதாக அமையும் அது பின்வருமாறு.

“25. இந்த நீதிமன்றம் “குறிப்பாக மறுக்கப் பட்டது” மற்றும் “குறிப்பாக மறுக்கப்படாதது” மற்றும் “ஏற்கப்பட்டது” என்பனவற்றிற்கிடையே உள்ள வேறுபாட்டை எடுத்துக் கூறுகிறது. முதல் இரண்டு நிலைகளிலும் குறித்து கூறுவதில் “குறிப்பாக மறுக்கப்பட்டது” மற்றும் “குறிப்பாக மறுக்கப்படாதது”. இவை ஒரு வகையின் கீழ்வரக் கூடும். உயில் பற்றி மெய்ப்பிப்பை பொருத்த வரை உயிலானது கட்டாயமாக மெய்ப்பிக்கப்பட வேண்டியது. அதாவது அதை வெளிப்படுத்திய வரால். எனினும் எதிர்தரப்பினர் ஒட்டு மொத்த மாக அதனை ஏற்க முன்வரும்போது நியாய மானது முற்றிலும் மாறுபடும். இந்தியாவில் நாம் பின்பற்றுவது “எதிரான நடைமுறைகள்” இதுவே பிரிட்டிஷ் நீதிமன்றங்களிலும் பின்பற்றப் பட்ட நடைமுறை. இந்த வகை பள்ளியின் தொடக்கம் தரப்பினர்கள் பொருண்மையில் உள்ள பிரச்சினையினை தீர்க்க முற்பட வேண்டும் என்பது. அதாவது உறுதி செய்யப்பட்ட பொருண்மைகள் மறுக்கப் பட்ட பொருண்மைகள் அதாவது வழக்கின் தரப்பினர்களும் மற்றும் நீதிமன்றமானது இத்தகைய பிரச்சினைகளின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளும். சில பொருட் பாடுகள் தொடர்பாக. தரப்பினர்களுக்கிடையே எந்தப் பூசலும் இல்லாத போது, நீதிமன்றம், மெய்ப்பிப்பு பற்றி கோரிக்கை செய்யாது. அதாவது ஏற்கப்பட்ட பொருண்மை களின்பேரில்.

26. இத்தகைய சூழ்நிலைகளில் இதில் இந்திய சான்றுச் சட்டத்தின் பிரிவுகள் 17, 58இயின் சுட்டுவது தொடர்புற்றதா அமையும் என்பது.

“17. ஏற்கப்பட்டது, மறுக்கப்படுவது ஏற்ப என்பது ஒரு உரை. வாய்மொழியாக அல்லது ஆவண வழியாக அல்லது மின்னணு முறை யில் இது சிந்திக்க செய்வதாவது. ஏதேனும் பொருண்மை தொடர்பான ஊகம் பிரச்சினை அல்லது தொடர்புற்ற பொருண்மை தொடர்பாக மற்றும் ஆட்கள் எவராலும் செய்யப்பட்டது மற்றும் இத்தகைய சூழ்நிலை களில் இதில் இதற்குப் பின்னர் குறிப்பிடப் பட்டுள்ளவை.

58. ஏற்கப்பட்ட பொருண்மைகள் மெய்ப்பிக்கப் பட வேண்டியதில்லை. எந்த நடவடிக்கையிலும் எந்த பொருண்மையும் மெய்ப்பிக்கப்பட வேண்டியதில்லை. அதாவது தரப்பினர்கள் அல்லது அவர்களது முகவர்கள் உடன்படுகிற வற்றை அல்லது உடன்பட்டு என்பனவற்றை மெய்ப்பிக்க தேவையில்லை. அதாவது வழக்கு கேட்டறியப்படும்போது அல்லது கேட்டறியப் படுவதற்கு முன்னர், இவர்களது கைப்பட எழுதப் பட்டவற்றை ஏற்க உடன்படும்போது அல்லது அதாவது வாதுரைகளின்மூலம் இவர்கள் ஏற்கப்பட்டதாக அந்த நேரத்தில் சொல்லப்பட்ட வாதங்களின் விதிகளின்மூலம் கூறப்பட்டவை. நீதிமன்றத்தினால் வகை செய்யப்படலாகிற வாறு, அதன் உளத்தேர்வின்படி. கோரப்படும்

பொருண்மைகள் ஏற்கப்பட்டு மெய்ப்பிக்கப்படும் வேறு வகையில் அத்தகைய ஏற்புரை மூலமாக.

27. "ஏற்பது" என்னும் பொருள்வரை யினைச் செயற்படுத்தி அதாவது இந்திய சான்றுச் சட்டத்தின் 17ஆம் பிரிவில் கூறப்பட்டிருப்பது தொடர்பாக. பிரிவுகள் 56 முதல் 58 வரை பொருந்தும். இதன் மூலம் பெறப்படும் முடிவாவது ஏற்கப்பட்ட பொருண்மைகள் அவை வாய்மொழி யாகவோ ஆவண பொருண்மைகளாகவோ இருந்தபோதிலும் இவை மெய்ப்பிக்கப்பட வேண்டிய தில்லை என்பது. இந்தப் பிரிவுகள் வகைப்படுத்தப் பட்டுள்ளன. இவை ஒரு தனி அத்தியாயமா ஆக்கப்பட்டுள்ளது. அதாவது அத்தியாயம் III, பகுதி II, இந்திய சான்று சட்டம் மெய்ப்பிப்பு தொடர்பாக. பொருண்மைகள் ஒரு ஆவணத்தில் மெய்ப்பிப்பை கோருபவை. உயிலைப் போன்றே இந்த அளிக்கப்பட்ட வழக்கில் நீதிமன்றம் பின்வரும் அத்தியாயங்களினால் கட்டுப்பட்ட தாகும். அதாவது அத்தியாயம் IV வாய்மொழி சான்று பற்றி வகை செய்யப்பட்டுள்ளது. அத்தியாயம் V ஆவணச் சான்று பற்றி கூறி யுள்ளது. எனவே அத்தியாயம் IV, Vஇன்படி மெய்ப்பிப்பு கட்டாயமான தேவை. இது பொருண்மைப் பிரச்சினை ஆகும்போது தேவை யாகிறது. அதாவது தரப்பினர்களிடையே இது நீட்டிக்கப்பட முடியாது மற்றும் பொருண்மை பிரச்சினை தரப்பினர்களுக்கிடையே உள்ள போது இது ஒரு வழக்கில் நீட்டிக்கப்பட முடியாது. இது தெளிவாக அத்தியாயம் IIIஇன் 4 மூலை களுக்கு இடையே வருவது. அதுவும் குறிப்பாக பிரிவு 58 இது தொடர்புற்றது அதும் தற்போதைய வழக்கின் நோக்கங்களுக்காக.

28. மேற்சொல்லப்பட்ட வேறுபாடுகளை மனதில் கொண்டு, இந்த நீதிமன்றம், தற்போதைய வழக்கின் ஏற்கப்பட்ட பொருண்மைகள் பற்றி மீண்டும் கவனிக்க உள்ளது. தற்போதைய வழக்கில், முந்திய உயில் பற்றி எந்தப் பூசலும் இல்லை. இது இரு தரப்பினராலும் ஏற்கப் பட்டுள்ளது. அத்தகைய சூழ்நிலைகளில் 4.10.1991 (ExB) உயிலின் செல்லுந்தன்மை பற்றிய அல்லது மெய்ப்பிப்பு தொடர்பாக விசாரணை நீதிமன்றம் பிரச்சினை எதனையும் வனைவதற்கான தேவையில்லை. மேற்சொல்லப் பட்ட கலந்தாய்வின் கருத்தில் 4.10.1991 (ExB) தேதியிடப்பட்ட உயில் மெய்ப்பிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று கூறியுள்ளது. ஒரு கூடுதல் காரணமாவது முக்கிய சூழ்நிலைகளில் மு.வ.எண் 172/1992 வழக்கு முன்னிடப் பட்டது. இதில் உயில் எழுதியவரா வாதிகளில் ஒருவரானார். பொருண்மைப்படி, இந்த நீதிமன்றம் மூல உயில் 4.10.1991 தேதியிடப்பட்டது. இந்த வழக்கில் ஆவணமாக முன்னிடப்பட்டது என்பதை நீதிமன்றம் கண்டறிந்துள்ளது. இந்தச் சூழ்நிலை களில் இதில் இந்திய சான்றுச் சட்டத்தின் பிரிவு 78இனைச் சுட்டுவது தொடர்புற்றதாக அமையும் இது பின்வருமாறு படிக்கப்படுகிறது.

"70 சான்றொப்பமிடப்பட்ட ஆவணம் தரப்பினர் களால், நிறைவேற்றப்பட ஏற்கப்படுதல் ஒரு தரப்பினர் ஒரு சான்றொப்பமிடப்பட்ட ஆவணத்தை அதனை நிறைவேற்ற அவராக நிறைவேற்றுவது என்பது போதிய மெய்ப்பிப்பாக அமையும். அதாவது அவருக்கு எதிராக, அந்த ஆவணம் சட்டப்படி சான்றொப்பமிடப்பட வேண்டியது.

29. தற்போதைய வழக்கின் பொருண்மைகள் தெளிவாக புலப்படுத்துவதாவது பிரிவு 70இன் பொருந்துதல் பற்றிய தொடர்பு உயில எழுதியவரே தகுதி வாய்ந்த நீதிமன்றத்தின் முன்பு முன்னிலையாகி தனது முறையாவணம் தன்னில் நிறைவேற்றப்பட்டதை ஏற்கும்போது இவ்வாறு அவர் ஏற்றது போதிய மெய்ப்பிப்பாகும் அதாவது எழுதியவருக்கு எதிராக அது நிறைவேற்றப் படுவது அதாவது அந்த ஆவணம் சட்டப்படி சான்றொப்பமிடப்பட வேண்டிய ஒன்றாக அமையப் பெறும்போது.

19. வஞ்சியம்மாள் (இறப்பு) அவருடைய ச.வாரிசுகள் சார்பாற்றம் –எதிர்– வித்யா மற்றும் பிறர். உ.சீ.ம.3659/2013, 21.4.2017 தேதி யிடப்பட்டது. இதில் கூறப்பட்டதாவது ஏற்கப்பட்ட வில்லை மெய்ப்பிக்கப்பட வேண்டியதில்லை என்பது. இது நீதிமன்ற விலைமதிப்பற்ற நேரத்தை வீணடிப்பதற்கு ஒப்பாகும். எனவே, பல்வேறு தீர்ப்புகளைப் படித்த பின்னர், ஏற்கப்படும் நேரத்தில், நீதியர் ஆயத்தினால் முடிவாகக் கூறப்பட்டதாவது. அதாவது பூமதி வழக்கில், கூறப்பட்டது. வஞ்சியம்மாள் வழக்கில்

கூறப்பட்டது. சரியான ஒன்று என்பது. அதாவது எதிர்தரப்பினர், தெளிவாக ஏற்பதாவது உயிலானது நிறைவேற்றப்பட்டது என்பதை ஏற்கப்பட்ட பொருண்மையை மெய்ப்பிக்க பிற தரப்பினருக்கு எந்தக் கடப்பாடும் இல்லை. எனவே, மேற் சொல்லப்பட்ட தீர்ப்பிலிருந்து எடுத்துக் கொள்ளப் படுவதாவது, எதிர்தரப்பானது. இந்த வழக்கில் குறிப்பாக மறுத்துள்ளனர் அல்லது குறிப்பாக மறுக்கவில்லை அல்லது ஏற்றுள்ளனர் என்பது.

20. எதிர்வாதிகளால் முன்னிடப்பட்ட எழுத்து மூல விவர உரையிலும் கூட உயிலின் செல்லுந் தன்மை மட்டுமே கேள்வியாக்கப்பட்டது. அதன் உண்மைத்தன்மை பற்றி எதுவும் இல்லை. மேற்சொல்லப்பட்ட எழுத்துமூல விவர உரை, மூலம் அறியப்படுவது எதிர்வாதிகள் உயில் நிறைவேற்றப்பட்டதை ஏற்கின்றனர். ஆனால் அதன் செல்லுந்தன்மையை மட்டுமே சந்தேகிக் கின்றனர். எனவே இதில் வாதமாவது உயில் எழுதுபவரால் அது நிறைவேற்றப்பட்டது. இது தவறாக திரித்துக் கூறுதல் மூலமாக அல்லது மோசடியா மற்றும் செல்வாக்கை அவர் மீது பயன்படுத்தி செய்யப்பட்டிருக்கலாம். சான்று DW1 இது பற்றி கூறுவதில் அதிக தெளிவு உள்ளது. இவரால் கூறப்பட்ட உரையின் வாதத்தின் மூலம் DW1 இடம் ஒரு குறிப்பிட்ட ஆலோசனை கூறப்படும்போது, அதுவும் குறுக்கு விசாரணையில் எந்த உயிலானது அவரது தந்தையால் நிறைவேற்றப்பட்டு பதிவு செய்யப்பட்டது என்பதும் அது உரிய நிறைவேற்று தலாகக் கொள்ளப்படும் என்பதும், DW1இனை நேர்மறையாகவே பதில் அளித்துள்ளார். அதாவது உயிலானது அவரது தந்தை பி.வி.பத்ம நாபராவ் என்பவரால் பதிவு செய்யப் பட்டது என்று.

21. வாதங்களை சேர்த்து வாசிப்பதில் எதிர் தரப்பு மற்றும் எழுத்து மூல விவர உரை அவரது சான்று மூலம் அறிய வருவதாவது உயில் நிறைவேற்றுதல் என்பது ஏற்கப்பட்ட ஒன்று என்பதும் அதன் செல்லுந்தன்மை மட்டுமே கேள்வியாக்கப்படுகிறது அதுவும் நிறைவேற்று பவரால் அதை வகை செய்யும் நோக்குடன் தன்னிச்சையாக அவரால் செயற்படுத்தப்பட்டதா என்பது. மேற்சொல்லப்பட்ட சட்ட நிலை வாதி யினை காக்க வருகிறது. இதன் பொருண்மை பற்றிய பின்புலம் விசாரிக்கப்படாதது அதாவது சான்றொப்பமிட்ட சாட்சிகள் வாதியில் விசாரிக்கப் படாதது இதன் முழுமைக்காக அதுவும் கருதுஜக செய்யப்பட வேண்டியதே.

22. உயிலினைக் கூர்ந்தாய்வு செய்வதன் பேரில் அது ExP என்று குறியிடப்பட்டுள்ளது. இதில் காணப்படுகிறவாறு இது இரண்டு சாட்சி களால் சான்றொப்பமிடப்பட்டுள்ளது. அவர்களது பெயர்கள் எம்.வினோத்குமார் மற்றும் டி.ஜான் ஜகநாதன் வாதி கூறியதாவது. அந்த சாட்சிகளை அவர் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது. ஏற்கப்பட்டவாறு, இறப்பு சான்றிதழ் அளிக்கப் படவில்லை. அதாவது அந்த சாட்சிகள் உயிருடன் இல்லை என்று மெய்ப்பிக்க இதன் மூலமாக ஊகிக்கப்படுவது எதிர்வாதிகள் கூறுவது முதல் சாட்சி இறந்ததாகக் கொள்ளப் பட்டாலும், மற்றொரு சாட்சியான வினோத் குமார் விசாரிக்கப் பட்டிருக்க வேண்டும். ஏனெனில் அவர் பிற ஆவணங்களிலும் கையொப்ப மிட்டுள்ளார். அதே நாளன்று அவை நிறைவேற்றப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. அதாவது பி.வி.பத்மநாப ராவ் என்பவரால், அந்த குறுக்கு விசாரணையின் போது, RW1 ஒரு குறிப்பிட்ட கேள்வி எழுப்பப் பட்டது. அதாவது 11.10.2017 அன்று எம்.வினோத் குமாருக்கு எதிராக காலி செய்யு மாறு வழக்கு முன்னிடப்பட்டுள்ளது. அது அனுமதிக்கப்பட்டதா என்பது. வாதி ஏற்றுக் கொண்டதாவது, எம்.வினோத்குமாருக்கு எதிராக அளவில் காலி செய்யுமாறு வழக்கு முன்னிடப் பட்டது என்பது. அதாவது அந்த காலி செய்யும் மனு முன்னிடப்படும்போது, சாதாரணமாக எம்.வினோத்குமார் எந்த இணைப்பு சொத்தினை விட்டுச் சென்றிருப்பார். எனவே வாதிக்கு எம்.வினோத்குமார் எங்கு சென்றார் என்று அறிய வாய்ப்பில்லை. வாதிக்கு வினோத்குமார் சென்ற இடம் தெரியக் கூடும் என்று ஊகித்தாலும், எம்.வினோத்குமாருக்கு எதிராக வழக்கு முன்னிடப்பட்டிருக்கும்போது அவர் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுவாரேயானாலும் அவருக்கு எதிராக தனக்குள்ள விரோதத்தை அவர் வெளிப்படுத்தக் கூடும் என்பது.

23. எதிர்தரப்பினரே உயில் நிறைவேற்றப் பட்டதை ஏற்கும்போது இதனை ஏற்றது பற்றிய நலனைத் துய்க்காது. வாதி தேவையற்று அதன் நிறைவேற்றுகை பற்றிய வேறு எதையும் செய்யத் துணிய மாட்டார். எனவே பொருண்மை யின் நிலையாவது இவர் எம்.வினோத்குமாரின் இருப்பு பற்றி அறிய வாய்ப்பில்லை என்பது நியாயமான ஒன்றே. அதாவது அவரை விசாரிப்பதற்கு வாதியானவர் உயிலினை மெய்ப்பித்தல் வேண்டும் என்பது கட்டாயம் என்ற போதிலும் சான்றுச் சட்டத்தின் பிரிவு 68கிணங்க, இதில் நிறைவேற்றும் நிலை இல்லை. வாதி அது ஏற்கப்பட்டது என்பதின் நலப்பயனாக பெறுவார். அதாவது எதிர் தரப்பினர் மூலமாக சொல்லப்பட்ட சட்டத்தின் 58ஆம் பிரிவின்படி.

24. உயில் எழுதியவர், தகாத முறையில் கட்டாயப்படுத்தப்பட்டார் அல்லது, தவறாக வழி நடத்தப்பட்டார். தவறாக திரித்துக் கூறப்பட்டன போன்றவற்றை மெய்ப்பிக்க பகுப்பாய்வு தேவைப்படுகிறது. ஐயமின்றி உயிலானது பதிவு செய்யப்பட்ட ஒன்று DW1 ஏற்கப்பட்டதாவது உயில் எழுதியவர். அதனைப் பதிவு செய்துள்ளார் என்பது. இத்தகைய நேர்வில், வாதி சார்பாக துணிபு கொள்ள வேண்டியுள்ளது மற்றும் எதிர்வாதிகளையே மெய்ப்பிக்கும் சுமை சென்ற டையும் அவர்கள் அதனை பூசலாக்கினால் இந்த உயில் நிறைவேற்றப்பட்டது மெய்ப்பிக்கப்படும் போது உரியவாறு அது எழுதியவரால் பதிவு செய்யப்பட்டிருக்கும்போது, பிற சூழ்நிலைகள் அதாவது எதிர்வாதி உயிலினை செல்லாததாக்க எடுக்கக் கூடிய முயற்சிகள் எதிர்வாதிகளால் மட்டுமே மெய்ப்பிக்கப்பட வேண்டியது.

25. சூழ்நிலைகளில் ஒன்று எதிர்வாதிகளால் இந்த உயில் பிற சட்ட வாரிசுகளை கொண்டிருக்க வில்லை. அதாவது சொத்தினை பெறும் அளவிற்கானதாக அதாவது பி.வி.பத்மநாப ராவின் சொத்துக்களை, முன்பே கூறப்பட்டவாறு. திரு.பி.வி.பத்மநாபராவால் மூன்று பெண்கள் மூலமாக குழந்தைகளைக் கொண்டிருந்தார். இந்த உயிலின் நுதல் பொருளாக உள்ள சொத்து எண் 23/13 நாகார்ஜுன நகர், முதல் தெரு, கோடம்பாக்கம், சென்னை. இதே தெருவில் உள்ள பிற சொத்துக்கள் அதாவது பி.வி.பத்மநாப ராவுக்கு கதவு எண் 13, நாகார்ஜுன நகர் முதல் தெரு, கோடம்பாக்கத்தில் வேறு சொத்து உள்ளது. இதில் வாதியில் வாதமல்ல. அதாவது மூன்று பெண்களுடன் அனைத்து குழந்தை களுடன் அவர் ஒரே குடும்பமாக ஒரே வீட்டில் வாழ்ந்தது பற்றி. இனை குறுக்கு விசாரணை செய்வதில் மேற்சொல்லப்பட்ட குறிப்பு தெளிவாக்கப்படும். சொத்து எண் 19, நார்ஜுனா நகர், முதல் தெரு, சரோசம்மா என்னும் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர் எதிர்வாதிகள் 1 முதல் 4 வரையிலானவர்களின் தாய், சரோசம்மாவிற்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் இல்லை. மேற்சொல்லப்பட்ட கதவு எண் 19, 2000ஆம் ஆண்டில் விற்கப்பட்டது. இதில் பங்கு எதுவும் வாதிக்கு அவளது தாய் மற்றும் சகோதரர்கள் அளிக்கப்படவில்லை. இவை அனைத்தும் DW1இனால், குறுக்கு விசாரணை இவை ஏற்கப்பட்டது. அவர் மேலும் ஏற்பதாவது வாதி அவளது சகோதரன் மற்றும் தாய் D-19 நாகர்ஜுனநகர் முதல் தெரு, கோடம்பாக்கம் சொத்து தொடர்பான விற்பனை பற்றி எந்த கோரிக்கையும் எழுப்பவில்லை.

26. மேற்சொல்லப்பட்ட சொத்தின் ஒரு பகுதி 5ஆம் எதிர்வாதியான தாய்க்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது. அதாவது பரிமளா இவருக்கு அளிக்கப்பட்ட பகுதி சொத்து தொடர்பாக. DW1இன் தாய்க்கு முதலில் உரிமை மாற்றும் செய்யப்பட்டது. அதாவது பி.வி.பத்மநாபராவால் சார்பாக மற்றும் பின்னர் பரிமளாவுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது. சரோசம்மா, 5ஆம் எதிர்வாதி தாய்க்கு அளிக்கப்பட்டது தொடர்பாக. எந்தக் கேள்வியையும் எழுப்பவில்லை. எஞ்சிய சொத்து எண் 19 நாகார்ஜுன நகர் முதல் தெரு கோடம்பாக்கத்தில் உள்ளது. சாட்சிகள் DW1இன் படி 4000 சதுர அடி (40 x 100) ஒரு குறிப்பிட்ட கேள்வி DW1 இடம் கேட்கப்பட்டது. குறுக்கு விசாரணையின்போது மேற்சொல்லப் பட்ட பரப்பிடம் பரிமளாவிற்கு அளிக்கப்பட்ட பகுதி நீங்கலாக இந்த சொத்தா என்பது. இது பற்றி அவர் நேர்மறையான பதிலை அளித்துள்ளார். எனவே உயிலில் குறிப்பிடப்பட்ட சொத்து

ஏறக்குறைய இதே போன்ற பரப்பிடம் (40' x 108 அடி)

27. எதிர்வாதிகள் 1 முதல் 4 வரையிலான வர்கள் அல்லது அவர்களது தாய் சரோசம்மா எந்த மறுப்பையும் தெரிவிக்க வில்லை. கதவு எண் 19, நாகர்ஜுனா நகர் முதல் தெரு, கோடம்பாக்கம். இதில் பகுதி 5ஆம் எதிர்வாதி சார்பாக. உரிமை மாற்றம் செய்யப் பட்டது தொடர்பாக. எந்த எதிர்ப்பும் தெரிவிக்க வில்லை. அதாவது பரிமளாவின் தாய் 40' x 100' சதுர அடி அவர்கள் பயன்பாட்டுக்கு உபயோகிக்கப்பட்டது. எதிர்வாதிகள் இதனை மறைக்கவில்லை. வாதி மற்றும் அவளது சகோதரர்கள் மற்றும் தாய் கதவு எண் 19, நாகர்ஜுனா நகர், தொடர்பாக பங்கு எதனாலும் கோரலாம். அவரது தாய் மற்றும் எதிர்வாதிகள் 1 முதல் 4 வரை வாழ்ந்து வருகின்றனர். எதிர்வாதிகள் 1 முதல் 4 வரை யிலானவர்கள் ஏற்றுள்ளதாவது குடும்ப அட்டை இவர்களது முகவரியை பயன்படுத்தி அளிக்கப் பட்டது. அதாவது கதவு எண் 19, நாகர்ஜுனா நகர், முதல் தெரு, கோடம்பாக்கம் குடும்ப உறுப்பினர்கள் அவர்களது தந்தையாக கட்டப் பட்டது மற்றும் தாய் எதிர்வாதிகள் 1 முதல் 4 வரையிலானவர்கள். வாதியின் குடும்பம், தனி குடும்ப கார்டினை பெற்றது மற்றும் இதில் நாற்றுவதாவது சட்ட வாரிசு சான்றிதழ் வழங்கப் பட்டுள்ளது. இரு ரேசன் கார்டுகள் வேறுபட்ட முகவரிகளில் அளிக்கப்பட்டது.

28. வழக்கு எந்தவாறு இருப்பினும், பி.வி. பத்மநபராவ் என்பவரின் மனைவி மற்றும் குழந்தைகள் எந்த முறையில் வாழ்ந்தனர் என்பதில் அறியப்படுவது. பி.வி. பத்மநாபராவ் குடும்ப உறுப்பினர்களை ஒருவருடன் மற்றவர் கலந்துவிடாது வாழ்ந்தார். அதாவது இரு மனைவிகள் மற்றும் பிற பெண்கள் தொடர்பாக. அவ்வாறே, அவரது ஒவ்வொரு குடும்ப உறுப்பினருக்கும் ஏற்பாடு செய்துள்ளனர். இவர்களிடையே ஒருவருக்கு பங்கீடு செய்யும்போது அடுத்தவர்கள் இடையீடு செய்யாததும் மறுக்காததும் பங்கீடு செய்யப் பட்டது. வாதி அவரது சகோதரன் மற்றும் தாய் தொடர்பாக. அவர்கள் தனித்தனியாக வாழ்ந்தவர். கதவு எண் 23/13, நாகார்ஜுன நகர், முதல் தெரு, கோடம்பாக்கம், 5ஆம் எதிர்வாதி பரிமளாவின் தாய் 1992ஆம் ஆண்டு இறந்துள்ளார். சரோசம்மா D1 முதல் D4 வரையிலானவர்களின் தாய் அவர் 1994இல் இறந்துள்ளார் மற்றும் அதன் பின்னர் லஷ்மி இருந்துள்ளார். பி.வி.பத்ம நாபராவ் லஷ்மியுடன் வாழ்ந்துள்ளார். அவருடைய மகன் முரளி மற்றும் மகள். இதில் வாதி நான்காம் எதிர்வாதி DW1 ஆக விசாரிக்கப்பட்டார். அவரது சோதனை யில் அவர் ஹைதராபாத் மாற்றப்பட்டார் மற்றும் அவர் அவரது தந்தையை அவ்வப்போது சென்று ஆண்டு வந்தார்.

27. DW1இனால் கூறப்பட்டவாறு, அவர் இந்த வழக்கை மேலாண்மை செய்கிறார். வழக்கறிஞர்களுக்கு ஏவுரை அளிக்கிறார். வேறு எதிர்வாதிகள் 2 மற்றும் 3, 5 வழக்கறிஞரைப் பார்க்கவில்லை. ஏவுரைகளும் அளிக்கவில்லை. முதல் எதிர்வாதி வழக்கு நடப்பில் இருந்தபோது அவரது சட்டவாரிசுகள் இடையீட்டாளர்களாக்கப் பட்டனர். D6 முதல் D7, DW1 ஹைதாராபாத்திற்கு மாற்றப்பட்டார் மற்றும் அவரது அனைத்து சகோதரிகளும் ஆந்திரப்பிரதேசத்தில் அவர் களது குடும்பங்களுடன் சேர்த்திருந்தனர். 5ஆம் எதிர்வாதியும் திருமணமாகி சென்னையில் வாழ்ந்து வருகிறார். வேறு எவரும் பிற எதிர் வாதிகள் யாரும் வழக்கில் எதிர்கொள்ள முயற்சிக்கவில்லை. நான் DW1 ஆக விசாரிக்கப் பட்டுள்ளார். அவர் ஹைதாராபாத்தில் தங்கி யுள்ளார். அவர் அவரது தந்தையை கேள்வி கேட்கவில்லை. அதாவது லஷ்மியுடனும் அவரது குழந்தைகளுடன் வாழ்வது தொடர்பாக.

30. இதில் 8 ஆவணங்கள் அதேநாளில் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், அனைத்து ஆவணங்கள், தாவாவில் உள்ள சொத்து தொடர்பாக மட்டுமே அமைவன. அந்த ஆவணங்கள் சொத்து தொடர்பான குடும்ப சொத்துக்கள் தொடர்பானவை. பி.வி.பத்மநாப ராவ் சரோசம்மா மற்றும் பரிமளா மூலம் அமையப் பட்டது. இதில் கூறப்பட்டதாவது பி.வி.பத்மநாப ராவ் இணையான உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டது. அதுவும் தாவாவில் உள்ள சொத்து தொடர்பாக. அதன் அமைப்பாளர் தொடர்பாக. எதிர்வாதிகள் இதில் வாதமாக்காதது வாதிகள்

அவளது தந்தையை மாற்றி அந்த ஆவணங் களை ரத்து செய்ய முயற்சிக்கவில்லை. எதிர் வாதிகளின் பணிந்தனுப்புதல்களுக்கிணங்க, இது வாதியின் தாய் மற்றும் சகோதரர்கள் தொடர்பானது, அவர்கள் வாழ்ந்து சொத்தினை மேலாண்மை செய்துள்ளனர் மற்றும் முந்தைய ஏற்பாடுகள் வாதியில் பெயரால் செய்யப் பட்டவை மற்றும் அவளது தாயில் பெயரில் உள்ளவை.

31. எனவே, பி.வி. பத்மநாபராவினால் செய்யப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பாக. தாவாவில் உள்ள சொத்து, வாதியை மட்டுமே உள்ளடக்கி யுள்ளது மற்றும் அவரது தாய் மற்றும் சகோதரன் மற்றும் இவர்கள் எதிர்வாதிகள் அல்ல. வாதியின் சகோதரன் முரளியும் இறந்துள்ளான். என். பி.வி.பத்மநாபரால் தாவாவில் உள்ள சொத்தினை வாதி சார்பாக எழுதியுள்ளார். அவரே சட்டவாரிசு ஆவார். இறந்த லஷ்மி மற்றும் லஷ்மியுடன் வாழ்த்தி பி.வி.பத்மநாபராவ் எனவே இந்த சொத்து வந்தமை பிற எதிர் வாதிகள் எந்த சந்தேகமாக சூழ்நிலைகளையும் ஏற்படுத்தவில்லை. பொருண்மையின்படி கிடைக்கத்தக்க சான்று, அதுவும் சிறப்பான சான்று. இதனை தெளிவாக்குகிறது. அவரது தந்தை பி.வி. பத்மநாபராவ் எந்த மூன்று குடும்பத்தையும் கலக்கவில்லை. அவர் இவ்வாறு அதனை பராமரித்துள்ளார். அவர் ஒவ்வொரு குடும்பத்திற்குமான ஏற்பாட்டினைச் செய்துள்ளார். எதிர்வாதிகள் 1 முதல் 4 வரை யில் மற்றும் அவரது தாய் சொத்து தொடர்பாக நலப் பயன் அடைந்துள்ளார். கதவு எண் 19, நாகார்ஜுன நகர், முதல் தெரு, பி.வி.பத்மநாப ராவ் தெளிவாக செயற்பட்டுள்ளார். அவர் எவராலும் தவறாக வழி நடத்தப்படவில்லை எவரது அழுத்தத்திற்கும் உட்பட வழி நடத்தப் படவில்லை.

33. வழக்கறிஞர், உயிலினை வளர்ந்தவர்க விசாரிக்கப்பட்டவர் மற்றும் அவரது சான்று மட்டுமே உயில் எழுதியவரைக் காட்டியது. இவர் ஆங்கிலத்தை சரளமாக கூறுபவர் மற்றும் இவருக்கு ஆங்கிலப் பயன்பாடு செயற்பாட்டி லிருந்தது. எனவே உயிலில் உள்ளடக்கத்தை அறிவதில் இவருக்கு கடினம் எதுவும் இல்லை. ஏனெனில் உயில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டி ருந்தது. எனவே உயிலை எழுதியவர் இதனை அறிய முடிந்தது மற்றும் உயிலின் உள்ள டக்கத்தையும் நன்கு நன்கு அறிந்திடுக. உயிலானது ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. பி.வி.பத்மநாபராவ் உயிருடன் உள்ளவரானால், நான்காம் எதிர்வாதி அல்லது அவரது பிள்ளைகள் தாவாவில் உள்ள சொத்து தொடர்பாக எந்தக் கோரிக்கையையும் வைக்கவில்லை. இவர் தள அமைப்பு எதிலும் உரிமை தொகையும் கோர வில்லை. இவர் இவரது தந்தையின் கிடைத்து இடங்களை பிளாட்டுகளா வாங்குவதற்கான இணை உடன்பாட்டினை செயற்படுத்தி அதில் தந்தைக்கு உதவியாளர்கள் செயற்பட்டார். இதில் கிடைக்கத்தக்க சான்று DW1 குறுக்கு விசாரணை செய்தது தொடர்பாக. இதனை தெளிவாக்குவது உயில் எழுதியவர், தாவாவில் உள்ள சொத்து தொடர்பாக வகை செய்தல் இதில் வாதி மறு பயனை கருதுகை செய்வதால் செயற்படுவார். இதில் இவரது பிற குழந்தைகளான நீக்கி யுள்ளார்.

34. வாதி உயிலினை மட்டுமே மெய்ப்பிக்காது. இதன் உண்மைத் தன்மையினையும் மெய்ப்பித்துள்ளனார். இதனை மேற்சொல்லப் பட்ட அடிப்படையின்பேரில் செயற்படுத்தி யுள்ளார் மற்றும் இது பற்றிய சான்று. இதில் எதிர்வாதிகள் உயில் சேர்க்கத்தக்கதல்ல என்பதை மெய்ப்பித்தல் வேண்டும். எதிர்வாதிகள் ஆவணங்கள் எதனையும் முன்னிடவில்லை. அதாவது ஆர்.வி.பத்மநாபராவ் தன் நிலையில் சொத்தினை வகை செய்யும் மனநிலையில் இல்லை என்று மெய்ப்பிக்க வேண்டியது. பி.வி.பத்மநாபராவ் உயிருடன் இருந்தபோதே திடீரென்று வாதிக்கு எதிராக கோரிக்கைகளை செய்ய ஆரம்பித்தார். இதில் எதிர்வாதிகள் கோரியதாவது, வாதிக்கும் எதிர்வாதிக்கும் இடையே பிற வழக்குகள் நடப்பில் உள்ளதாகக் கூறப்பட்டது. இவை எதிர்வாதிகளால் முன்னிடப் பட்டவை. அதாவது வழக்கைப் பொருத்தவரை இது உயிலை நிறைவேற்றுவது தொடர்பானது அதன் உண்மைத்தன்மையும் செல்லுந் தன்மையும்.

35. அடுத்த வாதமாவது சிம்மாதிரிபுரத்தில் ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள சொத்து தொடர்பாக. இதில் இதனை எழுதியவர் தனக்காக எந்தப் பங்கையும் வைத்துக் கொள்ள இந்த சொத்தைப் பொறுத்தவரை இது சகோதரர்களுக்கு அளிக்கப் பட்டது. அதாவது பி.வி.பத்மநாபராவில் சகோதரர் களுக்காக பி.வி.பத்மநாபராவின் சகோதரர் புருஷோத்தமன் என்னும் பெயர் கொண்டவர். இவர் பிற உரிமையியல் வழக்குகளில் விசாரிக்கப் பட்டுள்ளார். இதில் கூறப்பட்டுள்ளதாவது பி.வி.பத்மநாபராவ் சொத்து எதனையும் கொண்டிருக்கவில்லை. அதாவது சிம்மபுரத்தில் எனவே மேற்சொல்லப்பட்ட சொத்து எந்த விதத்திலும் அதன் உண்மைத்தன்மையைப் பாதிக்காது அல்லது உயிலின் செல்லுந் தன்மையைப் பாதிக்காது.

36. வாதி உயிலின் உண்மைத் தன்மை யினையும் அதன் செல்லுந்தன்மையினையும், மெய்ப்பித்ததும், அதாவது வாய்மொழி மற்றும் ஆவணச் சான்றுகள் மூலமாக நீதிமன்றம் மனநிறைவடையும் நிலையில் அவை உள்ள போது, எதிர்வாதிகள் அவர்கள் மீது வந்தடைந்த மெய்ப்பிப்புச் சுமையினை மெய்ப்பிக்க முன் வரவில்லை. அதாவது பி.வி.பத்மநாபராவ் உயிலினை நிறைவேற்றியுள்ளார் என்பதை அதாவது அவர் நல்ல மனநிலையில் இல்லாத போது நிறைவேற்றியதாக இதில் பி.வி.பத்ம நாபராவ் பதிவு அலுவலகத்திற்கு சென்று அதனைப் பதிவு செய்துள்ளார். இதுவே அவர் நல்ல மன மற்றும் உடல்நிலையில் இருந்தார் என்பதற்கான மெய்ப்பிப்பாக அமையும். அதாவது உயில் பதிவு செய்யப்பட்டபோது வாதி அது நிறைவேற்றப்பட்டதை மட்டும் மெய்ப்பிக்க வில்லை. அதன் உண்மைத்தன்மையையும் அதன் செல்லுந்தன்மையையும் மெய்ப்பித்து ள்ளார். அவ்வாறே, பிரச்சினை எண் 1 முதல் 3 வரை வாதி சார்பாக பதில் பெறுகிறது.

37. இதில் வாதி தேவையான நீதிமன்றக் கட்டணத்தை செலுத்தியுள்ளதாலும் அவள் அதன் செல்லுந்தன்மையையும், உண்மைத் தன்மையினையும் மெய்ப்பித்துள்ளதாலும், அவளால் கோரப்பட்டவாறு தாவாவில் உள்ள சொத்தினை நிர்வகிக்கக் கடிதம் பெறும் உரிமையுடையவர் ஆகிறார்.

38. முடிவாக இந்த உயில் வழி முதன்மை வழக்கு வாதியில் கோரப்பட்டவாறு நிர்வாகக் கடிதம் சொத்து தொடர்பாகக் கிடைக்கப் பெறுகிறது. உயிலுடன் 22.2.2008 தேதியிட்ட கடிதம் பி.வி.பத்மநாபராவ் இணைக்கப் பட்டது. அத்தகைய நிர்வாகக் கடிதம் தமிழ்நாடு முடிவதற்கும் செயற்பாட்டினைக் கொண்டிருக்கும். விதி ரூ.25,000/- தொகைக்கான பிணை ஆவணத்தை நிறைவேற்ற கோரப்படுகிறார். அதாவது உதவி பதிவாளர் பெயரில் (உரிமை யியல் பிரிவு) நீதிமன்றத்தில் வாதி தனது உடைமைகள் பற்றிய கணக்குகள் அடங்கிய உரையினை முறையே ஆறு மாதங்கள் மற்றும் ஓராண்டில் முன்வருமாறு பணிக்கப்படுகிறார். செலவுத் தொகையின்றி.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

---

## சர்வதேச கப்பல் சட்ட தீர்ப்பாய நீதிபதியாக இந்தியர் தேர்வு

ஐ.நா.சபைக்கான இந்திய தூதரகம் 19.6.2026 அன்று வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது.

நியூயார்க்கில் நடைபெற்ற தேர்தலில், சர்வதேச கடல் சட்ட தீர்ப்பாயத்தின் நீதிபதியாக தேர்ந்தெடுக்கப் பட்ட பிமல் படேலுக்கு வாழ்த்துகள். அவரது இந்தத் தேர்வு, கடல் சட்டங்கள் மீதான இந்தியாவின் நீண்ட கால அர்ப்பணியை காட்டுகிறது. அவருக்கு ஆதரவு அளித்த நாடுகளுக்கு நன்றி என்று தெரிவித்து உள்ளது.

பிமல் படேல் தற்போது ஐ.நா. சர்வதேச சட்ட ஆணையத்தின் உறுப்பினராகவும் ராஷ்ரிய ரக் ஷா பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பொது சர்வதேச சட்டப் பேராசிரியராகவும் உள்ளார். மேலும் பிரதமர் அலுவலகத்தின் கீழ் செயல்படும் தேசிய பாதுகாப்பு ஆலோசனைக் குழு, தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகம் ஆகியவற்றில் உறுப்பினராக உள்ளார்.

**நன்றி : இந்து தமிழ் திசை 20.6.2026**

# தொடரும் கணக்கில் காலவரம்பு விலைப்பட்டியல் நிலுவையில் துவங்குகிறது

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை : மாண்புமிகு நீதிபதி முனைவர் அனிதா சுமந்த்**
**மாண்புமிகு நீதிபதி சி.குமரப்பன்**
**முதலேற்பு பிரிவு மேல்முறையீடு எண் 305/2018**
2025 (3) CTC 696

**ரிலையன்ஸ் ஆயுள் காப்பீடு நிறுவனம் லிட்.,**
**குருகான் கிழக்கு, மும்பை - 400 063 ...மேல்முறையீட்டாளர்**
**-எதிர்-**
**ஹார்போ காப்பீடு மற்றும் கல்வி கலை கழகம் பிரைவேட் லிட்.,**
**அண்ணாசாலை, தேனாம்பட்டை,**
**சென்னை-600006.**
**சார்பாற்றம் அதன் இயக்குனர் எம்.ஓ.எச் இக்பால் ...எதிர்மேல்முறையீட்டாளர்**

திரு.எஸ்.நமசிவாயம், மேல்முறையீட்டாளரது வழக்குரைஞர்

திரு.பி.சுனில் எதிர்மேல்முறையீட்டாளர் வழக்குரைஞர்

முபிமே தள்ளுபடியானது. செலவுத் தொகை யில்லை.

கோருகை: உவ எண் 443/2011 இல் உண்டான 26.7.2017 தேதிய தீர்ப்புரையை யும் தீர்ப்பாணையையும் நீக்கறவாக்கி இந்த மேல்முறையீடை ஏற்றுக் கொள்ளுமாறு இறைஞ்சிக் கொண்டு முதலேற்பு பிரிவு மேல்முறையீடு உரிமை பட்டய சட்ட சரத்து 15 உடன் வாசிப்பாகும் முதலேற்பு பிரிவு விதிகளின் வகுமுறை 36 விதி 1 கீழ் தாக்கலானது.

13.2.2025 அன்று தள்ளிவைப்பான தீர்ப்புரை 24.4.2025 அன்று பகரப்பட்டது.

## தீர்ப்புரை

**சி.குமரப்பன், நீதிபதி**

1. உவ எண் 443/2011இல் உண்டான 26.7.2017 தேதிய தீர்ப்புரைக்கும் தீர்ப்பாணை க்கும் எதிராக இப்போதைய முபிமே பிறக்கிறது. அதனில் உள்ளவாறு எதிர்வாதி மேமு ஆகவும் வாதி எமேமு ஆகவும் உள்ளார்கள்.

2. வசதியின் பொருட்டு உவ எண் 443/ 2011 இல் வழக்கிடல் அந்தஸ்து வரிசைப்படி வழக்காடும் தரப்பினர்கள் குறிப்பிடப்படுவார்கள்.

3. தேவையற்ற விவரங்கள் நீக்கலாகி, மேல்முறையீட்டின் தீர்வுக்கு முக்கியமாகும் தொடர்புறு வாதுரைகள் கீழ் வருவனையாக அமைகின்றன.

(ஏ காப்பீடு ஒழுங்குமுறை மேம்பாடு ஆணையத்தால் [கா.ஒ.மே.ஆல் ஒப்புதலாகி அதனுடன் இணைந்துள்ள நிறுவனம் வாதி யாகும். காப்பீடு நிறுவனம் எதிர்வாதி ஆகும். கா.ஒ.மே.ஆ. வழிகாட்டல் படி கா.ஒ.மே.ஆ.ஆல் ஒப்புதலான நிலையத்தில் அளிக்கப்படும் பயிற்சியினை மேற்கொண்டோர்களை மட்டுமே முகவர்களாக காப்பீடு நிறுவனம் நியமிக்க வேண்டியதாகும் என்பது வாதிகளது பணிந்துரை யாகும். ஒப்புதலான நிலையமாக வாதி உள்ள தால் ஆயுள் மற்றும் பொது காப்பீடு அலுவலில் செய்முறை பயிற்சிக்காக மாணாக்கர்களை எதிர்வாதி வழக்கமாக அனுப்பியது. இத்தகைய பயற்சியளித்த பின்பாக ஆதரவளிக்கப்படும் மாணாக்கர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும் என்பது வாதியின் கூடுதல் பணிந்துரையாகும். அத்தகைய மாணவர்கள் தேர்வில் வென்றா லொழிய முகவராக செயல்பட அவர்கள் தகுதியுற மாட்டார்கள் என வாதி மேலும் பணிந்துரைக்கிறது.

(பி) ஒப்பந்தப்படி ஆதரவளிக்கப்படும் மாணக்கர்களது பாட நிறைவு சான்றிதழ்களை அனுப்பி அவர்களது தொழில்முறை கட்டணங் களுக்கு விலைப்பட்டியை உருவாக்குதல் அவர் களுக்கு வழக்கமானது என்பது வாதியின் கூடுதல் பணிந்துரையாகும். 2005-2006 இலிருந்து 2007-2008 வரை பல்வேறு தொகுதிகள் கீழ் எதிர்வாதியின் மாணாக்கர் களுக்கு அவர்கள் பயிற்சி அளித்திருந்தார்கள் என வாதி மேலும் பணிந்துரைக்கிறது. எதிர் வாதிகள் வழக்கமாக பகுதி செலுத்துகைகள் செய்தார்கள் என்பதும் மொத்த பரிவர்த்தனை களும் தரப்பினர்களாலும் தொடரும் கணக்காக பாவிக்கப்பட்டது என்பதும் அவர்களது கூடுதல் பணிந்துரையாக அமைகிறது. வாதியினது கூற்றுப்படி, தொடரும் கணக்குபடி ரூ.6150795 எதிர்வாதியிடமிருந்து அவர்களுக்கு உரித்த மானது. எதிர்வாதியால் செய்யப்பட்ட செலுத்துகைகள் வரவில் வைக்கப்பட்டுள்ன என்பதும் வாதிக்கும் எதிர்வாதிக்கு இடையேயான கடைசி பரிவர்த்தனை 21.5. 2008 தேதியதாகும் என்பதும் வாதியின் குறித்த பணிந்தளிப்பாகும். கோருகையை அறுதியாக்க எதிர்வாதி முன்வாரததால் அவர்களுக்கு 4.8.2010 அன்று சட்டப்படியான அறிவிப்பை வாதி அனுப்பியது.

(சி) எனினும், கோரிக்கையை மறுக்காமல் அவர்கள் கணக்கை சரிபாரப்பதில் ஈடுப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என கூறிய எதிர்வாதிகள் ஒப்பந்த நகலை அனுப்புமாறு வாதியை கேட்டுக் கொண்டார்கள். எதிர்வாதி மாணாக்கர்களுக்கு ஆதரளித்திருந்து வாதியின் சேவையை பெற்ற டைந்து நிலையில் அவர்களது தொழில் முறை கட்டணங்கள் செலுத்தலை அவர்கள் தள்ளி வைக்க இயலாது என வாதி மேலும் பணிந்து ரைக்கிறது. ஆகையால் அசல் தொகையான ரூ.6150796 மீதான எதிர்கால வட்டி ரூ.3321429 சேர்ந்து ரூ.9472225 தொகையை வசூலிக்க வாதி வழக்குடன் வந்துள்ளது.

4. வாதியின் சொன்ன கோரிக்கையை மொத்தமாக மறுத்துக் கொண்டு வழக்கு எதிர்வாதியால் எதிர்க்கபட்டது. எதிர்வாதியினது கூற்றுப்படி வழக்கு காவரம்பால தடையாகிறது. 1.1.2007 தேதிய தேவைபட்டியல் கடிதம் கீழ் வழக்கில் கோரப்படுவதாக சொல்லப்பட்ட தொகை ஏப்ரல் 2008 மார்ச் 2010இக்குள் உரித்தமானது என்பது அவர்களது கூடுதல் பணிந்துரையாகும். தேவைபட்டியல் கடினத் விதிமுறைகளுக்கு ஏற்ப வாதி எதிர்வாதியினது மாணாக்கர்களுக்கு பயிற்சி அளித்தார்கள் எனவும் ஒரு மாணாக்கருக்காக சம்மதிக்கப்பட்ட தொழில்முறை கட்டணம் ரூ.2000 ஆகும் எனவும். இந்த எதிர்வாதி பணிந்துரைக்கிறது. வாதியிடம் பாக்கியின்மை பற்றிய உறுதிப் படுத்தல் கோரிய அவர்களது 14.3.2009 தேதிய கடிதத்துக்குத இப்போதைய வழக்கு எதிர் தாக்குதலாகும் என எதிர்வாதி மேலும் பணிந்து ரைக்கிறது. அவர்களது கூற்று, 1.1.2007 இக்கு முந்திய கால கட்டத்துக்கு தொகை உரித்தம் ஏதுமில்லை, 1.1.2007 இலிருந்து செலுத்தல் விதிமுறைகளை தேவைப்பட்டியல் கடிதம் கவனித்துக் கொள்ளும் என்பதும் ஆகும். கா..ஒ.மே..ஆல் நடத்தப்படும் தேர்வில் வென்ற மானாக்கர்களுக்கு மட்டுமே செலுத்துகை செய்யப்படும் எனவும் அவர்கள் பணிந்து ரைக்கிறார்கள். கணக்கின் இயல்பையும் இந்த் எதிர்வாதி மறுக்கிறது. எதிர்வாதியின் கூற்றுப்படி வாதிக்கும் எதிர்வாதில்லு இடையான கணக்கு ஒரு தொடரும் கணக்காக இருக்கவில்லை. ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவில்லை அல்லது சென்னையில் வாதியால் பயிற்சி நடத்தப்பட வில்லை என்பதும் ஆகையால் வழக்கை விசாரித்திட இந்த நீதிமன்றத்துக்கு ஆளை யில்லை என்பதும் எதிர்வாதியின் கூடுதல் பணிந்துரையாகும். எனவே வழக்கை தள்ளுபடியாக்குமாறு எதிர்வாதி வேண்டியது.

5.ஒரு தரப்பால் ஏற்கப்பட்டு மற்ற தரப்பால் எதிர்க்கப்பட்ட மேலுள்ள் பொருண்மை மற்றும் சட்ட நெறி அடிப்படையில் தனி நீதிபதியால் கீழ் வரும் எழுவினாக்கள் வனையப்பட்டன.

(i) எதிர்வாதியால் வாதிடப்பட்டவாறு வழக்கு ஆள்வையின்மையால் மோசமானதாகிறதா?

(ii) கா.ஒ.மே.ஆ.இன் உரிம தேர்வுக்கு முன்னரக பல்வேறு பயிற்றுவிப்பு மையங்கலில் பயிற்சி நடத்தலுக்காக வாதியின் சேவைகள் பயன்படுத்திய தரப்பினர்கள் இடையிலான ஒப்பந்தத்தையும் புரிந்துணர்வையும் ஏற்றி ருக்கும் நிலையில், வாதியால் கோரப்படும்

கட்டன்ங்களையும் உரிம கட்டணங்களை செலுத்தலுக்கு எதிர்வாதி பொறுப்பானவர் ஆக மாட்டாரா?

(iii) வழக்கில் வாதியால் வாதுரைப்பானவாறு இது விஷயத்தில் கட்டணத்தையும் ப்யிற்சி கட்டணத்தையும் தொடரும் கனக்குப்படி எதிர்வாதி செலுத்தியதா?

(iv) எதிர்வாதியால் வாதிடப்பட்டவாறு வழக்கு காலவரம்பால் தடையாகிறதா?

(v) வாதிக்கு அருகதையாகும் பரிகாரம் என்ன?

6. வழக்கு விசாரணையில் ஒவ்வொரு தரப்பிலும் ஒவ்வொரு சாட்சி வாசா1 ஆகவும் எவாசா1 ஆகவும் விசாரிக்கப்பட்டார்கள். வாதி தரப்பில் சா.பி1-பி32 குறியீடாகின. அது போல எதிர்வாதி தரப்பில் 12 ஆவணங்கள் சா.டி1-டி12 எனவாக குறியீடாகியுள்ளன.

7. தொடர்புறு எழுவினாக்களை வாதிக்கு சாதகமாக விசாரணை நீதிபதி தீர்மானித்து வழக்கில் கோரப்பட்டவாறு இறுதியாக தீர்ப்பாணை யிட்டார். சொன்ன தீர்ப்பில் துயருற்று எதிர்வாதி இந்த நீதிமன்றத்தில் உள்ளார்.

8. மேமு சார்பில் திரு.எஸ்.நமசிவாயத்தை யும் எமேமு சார்பில் திரு.பி.சுனிலையும் நான் கேட்டறிந்தேன்.

9. வழக்கு 6.6.2011 அன்று தொடுக்கப் பட்டது வழக்கை காலவரம்பால் தடையான தாக்கும் என மேமு/எதிர்வாதி சார்பு வழக்குரைஞர் ஆவேசமாக வாதிட்டார். கோரிக்கைகளை அவர்கள் ஏற்கனவே தீர்த்திருந்து வாதிக்கு உரித்தம் ஏதும் கிடையாது என அவர் மேலும் வாதிட்டார். இப்போதைய வழக்கில் பரஸ்பர வேண்டுகை இல்லாததால், கணக்கு நடப்பிலும் திறந்ததாகவும் பரஸ்பர கணக்காகவும் உள்ளது என வாதியால் வைக்கப்படும் வாதம் அறுதியான கணக்கியல் கோட்பாடுகளுக்கு முரணானதாகும் என அவர் மேலும் வாதிட்டார். அனைத்துக் செலுத்தல்களையும் காசோலை மூலமாக செய்திருக்கும் நிலையில், தொகையை எதிர்வாதி செலுத்தியிருக்கவில்லை என்ற விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு பொருண்மை நிலைமைக்கு முரணன்றி வேறேதுமாக இருக்கவில்லை. என்பதும் எதிர்வாதியின் கூடுதல் வாதமாகும். வாரிய தீர்மானம் அல்லது அதிகாரபூர்வ கடிதம் இல்லாது நிறுவனத்தால் தாக்கலான வழக்கு உவிதொச வகுமுறை9 விதி1ஐ மீறலாகும் எனவும் அந்த அடிப்படையிலும் வழக்கு தள்ளுபடிக்கு ஏற்றதாகும் எனவும் வழக்குரைஞர் ஆவேசமாக வாதிட்டார். வழக்கை விசாரித்தலுக்கு இந்த நீதிமன்றத்துக்கு ஆள்வை கிடையாது எனவும் அவர் வாதிட்டு மேல்முறையீடை ஏய்டு வழக்கை தெள்ளுபடியாக்குமாறு அவர் இறைஞ்சினார். அவர் வாதத்துக்கு வலுவளிக்க வழக்குரைஞர் கீழ்வரும் தீர்ப்புகளில் நம்புகை வைத்தார்.

1.AIR 1997 SC 3இல் அறிவிப்பான யுனைடெட் பேங்க் ஆப் இந்தியா -எதிர்- நரேஷ்குமார் மற்றும் பிறர்.

2. 2008 (100) DRJ 712இல் அறிவிப்பான ஈரா கன்ஸ்ட்ரக்சன்(இந்தியா) லிமிடெட் -எதிர்- டி.கே.சர்மா.

3. 2013 SCC Online Del 3629இல் அறிவிப்பான அசோக் பர்சாத் -எதிர்- மகாலக்ஷ்மி சுகர் மில் கோ லிட்.

4. 1974 SCC Online Mad 134இல் அறிவிப்பான ராஜு மற்றும் பிறர் -எதிர்- எல்.குமரமுத்து.

10. எதிர்மாறாக, அனைத்து ஆவணங்களை யும் விசாரணை நீதிமன்றம் புலனில் கொண்டு பாக்கி உரித்தமானது என்பதை சா.பி. கணக்கு விளக்கவுரை மூலமாக சரியாக கண்டறிந்து உள்ளது என் எமேமு/வாதி சார்பு வழக்குரைஞர் தீவிரமாக வாதிட்டார். காலவரம்பை விரிவாக்க லுக்காக 26.5.2008 அன்று செய்யப்பட்ட செலுத்துகை வாதியின் நலனுக்கு உகந்ததாகும் என்பது வாதியின் கூடுதல் பணிந்துரையாகும். வழக்கு வாதியால் ஜுன் மாதத்தில் தாக்கலான போதிலும் அவர்களது கூற்றுப்படி நீதிமன்றம் மீண்டும் திறந்த நாளன்று அவர்கள் வழக்கை தாக்கலிட்டார்கள். ஆகவே வழக்கு கால வரம்புக்குள் வருகிறது எனவும் அவர் வாதிட்டார். இப்போதைய வழக்கில் காலவரம்பை கணக்கிடலுக்கு காலவரம்பு சட்டம் கீழ் பொருந்தும் உறுப்பு உறுப்பு 113 ஆகும் என்பது வாதியின் வாத மானது, பொறுப்பேற்பை எதிர்வாதி மறுத்த

பின்பாக மட்டுமே வாதிக்கு வழக்கிடல் உரிமை சேர்ந்தடைவதற்கு ஏற்ப வழக்கு கால வரம்புக்குள் உள்ளானதாகும் எனப்படும் வாதியின் வாதமானது. ஒப்பந்தம் செனனையில் பதியப்பட்டதாலும் எதிர்வாதியின் அலுவலகம் சென்னையில் ஆய்ந்துள்ளதாலும் இந்த நீதிமன்றத்துக்கு நிலைவெல்லை ஆள்வரை யுண்டு என எமேமு/வாதி சார்பு வாதி வழக்குரைஞர் மேலும் வாதிட்டார். இவ்வாறு தனி நீதிபதியால் இயற்றப்பட்ட தீர்ப்புரையையும் தீர்ப்பாணையையும் உறுதியாக்கிக் கொண்டு தற்போதய மேல்முறையீடை தள்ளுபடியாக்கு மாறு அவர் இறைஞ்சினார்.

1.1. ஒவ்வொரு தரப்பு பணிந்துரையி லிருந்தும் கீழ் வேம் எழுவினாக்கள் பரிசீலனையில் எழுகின்றன.

(i) வழக்கு காலவர?ஆல் தடையாகிறதா?

(ii) கோரப்பட்டவாறு வழக்கு கோருகைக்கு வாதிக்கு பாத்தியதையுண்டா?

(iii) உவிதொச வ்குமுறை 29 விதி 1பில் இல் சிந்திப்பானவாறு வழக்குரை அதிகாரபூர்வ நபரால் சரிபார்க்கப் பட்டதா?

(iv) இந்த வழக்கை விசாரித்திட ஒந்த நீதிமன்றம் ஆள்வை கொண்டிருக்கிறதா?

(v) வாதிக்கு அருகதையாகும் பரிகாரங்கள் என்ன?

கூறு எண் (i) & (ii)

12. வாதியால் வாதிடப்பட்டவாறு வாதிக்கும் எதிர்வாதிக்கும் இடையிலான கணக்கு பரஸ்பர கணக்கு அல்ல என் காலவரம்பு தொடர்பிலான வாதம் எதிர்வாதியால் வைக்கப்படுகிறது. பரஸ்பர கணக்கை விளக்கிட கீழ் வரும் தீர்ப்பு களில் வழக்குரைஞர் நம்புகை வைக்கிறார்.

1. AIR 1959 SC 1349இல் அறிவிப்பான இந்துஸ்தான் வன நிறுவனம் –எதிர்– லால் சந்த் மற்றும் பிறர்.

2. 2011 SCC Online Delஇல் அறிவிப்பான பாரத் தோல் கழகம் –எதிர்– தனேஜா தோல் நிறுவனம்.

1. 2017 SCC Online 5523இல் அறிவிப்பான பி ராஜேஸ்வரி –எதிர்– கந்தசாம் டிரேடர்ஸ்

2. AIR 1978 Mad 56இல் அறிவிப்பான வி.கே.ஆபிரகாம் –எதிர்– என்.கே.ஆபிரகாம்

13. இது விஷயத்தில் எதிர்வாதியின் வைக்கப் படும் பணிந்துரைகளுடன் நாங்கள் முழுமை யாக இணங்குகிறோம். ஏற்கப்பட்ட நிலைமைபடி வாதி ஆதரவளிப்பான மாணாக்கர்களை பயிற்றுவித்து விலைப்பட்டியை உருவாக்கினார். செலுத்தல்கள் செய்யப்பட்ட போதெல்லாம் அது வாதி கணக்கில் வரவில் வைக்கப்பட்டது என்பது வாதியினது வழக்காகும். மேலுள்ள நிலைமையை நிலையுறுத்திட எதிர்வாதி தொடர்பான மொத்த கணக்கு விளக்கவுரையையும் சா.பி25இல் வாதிகள் குறியிட்டார்கள். கூடுதலாக, கணக்கு விளக்கவுரை சா.பி5 எழுப்பப்பட்ட விலைப் பட்டியையும் செலுத்தல் வரவுகளையும் படம்பிடிக்கிறது. சா.பி25இன்படி மொத்த விலைப்பட்டி மதிப்பு ரூ.28470197 ஆகவும். பல்வேறு கால கட்டங்களில் எதிர்வாதியால் செய்யப்பட்ட மொத்த செலுத்துகை ரூ.22319402 ஆகவும் உள்ளது. இவ்வாறு சா.பி28இன்படி பாக்கியாக ரூ.6150795 உள்ளது.

14. எனினும் உரித்தம் ஏதுமில்லை என்பதும் அவர்கள் மொத்த உரித்தங்களையும் செலுலுத்தி யுள்ளார்கள் என்பதும் எதிர்வாதியின் குறித்த வாதமாக உள்ளது. இது விஷயத்தில் எதிர்வாதி சம்பந்தமாக வாதியின் பேரேடு கணக்காகும் சா.பி25இல் குறிப்பாடு வைப்பது பொருத்தமான தாகும். இந்த கணக்கை உறுதிப்படுத்திடலுக்கு வாதி நிறுவனத்தின் இயக்குனர் வாசா 1ஆக விசாரிக்கப்பட்டார். இங்கு, ஏற்கப்பட்டவாறு வாதிக்கும் எதிர்வாதிக்கும் இடையே பரிவர்த்தனை பற்றி தகராறு கிடையாது. எனினும் அவர்களது மொத்த பாக்கியையெல்லாம் அவர்கள் செலுத்தி யுள்ளார்கள் என எதிர்வாதி வாதிட்டார்கள். இது தொடர்பில் எவாசா1இன் சாட்சியத்தை ஆராய்தல் உசிதமானதாகும்.

15.எதிர்வாதி தரப்பில் திரு.பிரபு ரஞ்சன் சர்மா எவாசா 1 ஆக விசாரிக்கப்பட்டார். அவரது பெயராக இருந்ததுராந்தய பயிற்சி மேலாளர்] விற்பனை பயிற்சி என்பதாகும். அவரது நிரூபத் வாக்குமூலம் படி அவர் 2007இல் தான நிறுவனத்தில் சேர்ந்தார். அவரது குறுக்கு விசாரணையில் அவர் கீழ்வருவதை ஏற்றுக்

கொண்டார்.

''எங்களது அலுவலகத்தில் பராமரிக்கப் படும் கணக்கு பேரேடு வலிமையில் டிக் கணக்கு விளக்கவுரை தயாரிக்கப்பட்டிருந்தது என சொல்லுதல் சரியாகும். சா.டி6இன் ஒப்பீடுக்காக எங்களது அலுவலகத்தில் பராமரிக்கப்படும் அசல் கணக்கேடுகளை நான் முன்னிட்டிருக்க வில்லை. அந்த பிரமாண்ட பதிவெண்களை முன்னிட்டு நீதிமன்றம் அனுமதித்தால் உறுதி–சோதிப்புக்காக அசல் பேரேடு கணக்கை என்னால் முன்னிட இயலும்''

16. வினோதமாக அவரது மேலுள்ள பொறுப்பேற்பு இருந்தாலும் இந்த நீதிமன்றத்தில் அவர் பேரேடு கணக்கு அவ்வாறு எதனையும் சமர்ப்பிக்கவில்லை. ஒப்பீடில் சாடி7–டி12 கீழ் பெருவாரியான பற்றுச் சீட்டுகளையும் விலைப் பட்டியல்களையும் அவர்கள் சமர்ப்பித்தார்கள்.

17. இது தொடர்பில் எவாசா குறுக்கு விசாரிக்கப்பட்டபோது அவர் கீழ் வருமாறு ஒத்துக் கொள்கிறார்.

கே: சா.டி7–சா.12 உங்களது நிறுவன கணக்கேடுகள் அல்ல என்பதை நான் சொல்கிறேன்.

பதில்: அவைகள் கணக்கேடுகள் அல்ல. ஆனால் தனி கணக்கேடுகளை நாங்கள் பராமரித்துக் கொண்டிருக்கிறோம்.

கே: சாடி7–டி12 உங்கள் கணக்கேடுகளில் பிரதிபலிப்பாகிறதா?

பதில்: ஆம், அவை அனைத்தும் தாள் படி சாட்சியமாகும். ஒவ்வொரு நுணுக்க விவரமும் எங்களது கணக்கேடுகளில் காட்டப்படுகின்றன.

கே: இந்த வழக்கில் அந்த கணக்கெடுகளை சமர்ப்பித்துள்ளீர்களா?

பதில்: இவற்றை நாங்கள் முன்னிட்டி ருக்கவில்லை. கணக்கு பேரேடுகளை முன்னிடாத தற்கு குறித்த காரணம் ஏதும் கிடையாது.

18. மேலுள்ள ஏற்புரைகளிலிருந்து இந்த நீதிமன்றத்தில் எதிர்வாதி எந்த கணக்கேடையும் சமர்ப்பிக்கவில்லை என்பதும் மேலதிகமாக 2007இல் நிறுவனத்தில் சேர்ந்த எவாசா 1 ஆவணங்கள் மூலமாக மட்டுமே பரிவர்த்தனை பற்றி அறியலாம் என்பதும் பொறுப்படைவை மறுத்தலுக்கு எவாசா 1இக்கு அடித்தளம் ஏது மில்லை எனும் கூறுக்கு பேரேடை முன்னிடாமை இட்டுச் செல்லும் என்பதும் மிகுதியாக தெளிவாகிறது. வேறாக சொல்வதானால் வாசா1 மூலமாக சா.பி25ஐ வாதி மெய்ப்பித்த போது பாக்கி செலுத்தலை மெய்ப்பித்தலுக்கு பொறுப்பு எதிர்வாதிக்கு மாறுகிறது. ஆனால் அவர்களது பொறுப்பை நிறைவேற்ற அவர்கள் பரிதாபமாக தவறினார்கள். ஆகையால் விசாரணை நீதிமன்றத்தால் சரியாக கண்டறியப்பட்டவாறு முழு செலுத்துகை பற்றி எதிர்வாதி முன்னெடுத் தாலும் அதை ஏற்கதகும் சாட்சியம் மூலமாக நிலையுறுத்தியிருக்கவில்லை. இன்னுமதிக மாக, அவர்களுககு எதிரான அனுமானத்தை வனைதலுக்கு எதிர்வாதியால் பேரேடு தாக்கலா காதது நிச்சயமாக ஒரு முகாந்திர்மாக அமையும். இந்த கூறுக்கு வலுவேற்ற 2008 (3) LW 609இல் அறிவிப்பான எஸ்.பாபு –எதிர்– எஸ்.கே. இண்டஸ்ட்ரீஸ் லிட். வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் குறிப்பாடு வைத்தல் பொருத்த மானதாகும்.

19. காலவரம்பு பற்றிய மறுப்பரைக்கு திரும்புதலில் வாதிக்கும் எதிர்வாதிக்கு இடையி லான கணக்கு பரஸ்பர கணக்காக உள்ளது என்பது வழக்கு அல்ல. எனினும் அதி ஒரு தொடர் கணக்காக மட்டுமே உள்ளது என அவர்கள் வாதுரைத்தார்கள். ஆகையால் குறிப்பாக இது விஷயத்தில் குறித்த வாதுரை இல்லாதபோது வாதிக்கும் எதிர்வாதிக்கும் இடையிலான கணக்கு பரஸ்பர கணக்காக உள்ளதா என்பதை சோதித்தலுக்கான கேள்விக்குள் செல்ல இந்த நீதிமன்றத்துக்கு சந்தர்ப்பம் ஏற்கப் பட்டிருக்கவில்லை. வாதியினது கூற்றுப்படி இது ஒரு தொடரும் கணக்காக உள்ளது. தொடரும் கணக்கு என்பதை நாங்கள் இப்போது ஆராயலாம். ராமனாத ஐயரின் பத்தாவது பதிப்பு சட்ட அகராதிப்படி தொடரும் கணக்கு கிழ்வரு மாறு வரையறையாகிறது.

''கடனிப்பாகும் பண, செலுத்தப்படும் காசோலைகள் பிறவற்றுக்காக பிரதிமாதம் வரவு செலவு ஈடு செய்யப்பட்டு பாக்கி வைக்கப்பட்டு அதை மேலெடுத்து பற்றாக்கு வங்கியில் வைக்கப்படும் கணக்கு''

20. தொடரும் கணக்கு குறித்த தெளிவுறுத்தல் பெறலுக்காக 2011 SCC Online Del 5523 இல் அறிவிப்பான பாரத் தோல் கழகம் –எதிர்– தனேஜா தோல் நிறுவனம் பிரைவேட் லிட் வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் நம்புகை வைத்தல் பொருத்தமாகும். வாதியால் முன்னிறுத்தப்படும் அக்கவுண் கணக்கு தொடரும் கணக்கு ஆகாது என வேறுபடுத்திட இந்தத் தீர்ப்புரையில் எதிர்வாதியால் நம்புகை வைக்கப்பட்டது. இது விஷயத்தில் தீர்ப்புரையின் பத்தி 20இல் குறிப்பாடு வைத்தல் பொருத்தமானதாகும்.

''20 வாங்குனருக்கும் விற்பவருக்கும் இடையேயான ஒரு தொடரும் மற்றும் பரஸ்பரமற்ற கணக்கு விஷயத்தில், வாங்குபவருக்கும் விற்பவரால் பரால் சரக்குகள் ஒப்புவிக்கப்படும் போது பற்று நெடுவரிசையில் பொருட்களின் மதிப்பு பற்றில் வைக்கப்படும் விற்பவருக்கு தொகைகள் வாங்குபவரால் செலுத்தப்படும் போது அவை வரவு நெடுவரிசையில் வைக்கப் படுகின்றன. வேறுபாடு தொடர்ச்சியாக பாக்கியாக காட்டப்படுகிறது. இத்தகைய நேர்வில் பணம் செலுத்த வாங்குனர் தவறும்போது, கணக்கின் அடிக்கட்டத்தில் உள்ள பாக்கிக்காக மட்டுமே விற்பவரது செயல்பாடு உள்ளது. அது விற்கப் பட்ட சரக்குகளில் மதிப்புக்காக இருக்கவில்லை. இவ்வாறு வாங்குனருக்கும் விற்பவருக்கும் இடையிலான தொடரும் மற்றும் பரஸ்பரமற்ற கணக்கில் உரித்தாகும் பண வசூலிப்புக்கான வழக்குகளில் உறுப்பு 14 பொருந்துகை கொண்டிருக்காது.''

21. டில்லி உயர்நீதிமன்ற அமர்வின் மேலுள்ள விளக்கவுரையை நெருக்கமாக வாசித்தலில் விற்பவரால் ஒப்புவிப்பாகும் பல்வேறு சரக்குளை வாங்குபவரால் பிறழ்வு உள்ளபோது அடியிலுள்ள பாக்கி தொகைக்கு தொடரும் கணக்கு உள்ளதாகும். அது போன்ற கணக்கை நாங்கள் கையாண்டு கொண்டிருக்கிறோம். ஆனால் சரக்கு ஒப்புவித்தலுக்கு பதிலாக சேவை வழங்கப்பட்டது என்ற ஒரே வேறுபாடுடன் அது உள்ளது. ஆகையால் மேலுள்ள விளக்கவுரையை பொருத்திக் கொண்டு தொடரும் கணக்கின் வரம்புகளுக்குள் வாதிக்கும் எதிர் வாதிக்கும் இடையிலான கணக்கு பாதுகாப்பாக கொணரப்படவியலும்.

22. கூடுதலாக ஏற்றவாறு சா.பி25படி இறுதி செலுத்துகை 26.5.2008 அன்று செய்யப்பட்டது. இது எதிர்வாதியின் ஆவணம் சா.டி6 மூலமாக மெய்ப்பிக்கப்பட்டது. அது கடன் ஒப்புகையாக பொருளறியப்படும் என்பதால் காலவரம்பு சட்டப் பிரிவு 19 கீழான பகுதி உரித்தம் செலுத்தலும் காலவரம்பை விரிவாக்கும். 26.5.2008 தேதிய செலுத்தலை கடன் ஒப்புகையாக நாங்கள் பொருளறிந்தால் கையிலிலுள்ள வழக்கு 6.6.2011 அன்று தான் தாக்கலானது. ஆனால் வழக்கு மறுதிறப்பு நாளன்று தாக்கலானது என்பது வாதியின் வழக்காகும். ஆனால் இது குறித்து வாதுரை ஏதுமில்லை. அதேசமயத்தில் 6.6.2011 தான் மறுதிறப்பு நாளானது என்பது பற்றி எதிர்வாதியாலான தீவிர எதிர்ப்பு கிடையாது.

23. 2018 (4) CTC 419இல் அறிவிப்பான ரங்கனாதன் –எதிர்– சரவணா ஸ்டோர், (ii)2021 SCC Online Mad694இல் அறிவிப்பான சைதன்யா பில்டெர்ஸ் மற்றும் லீசிங்க் பிரைவேட் லிமிடெட் –எதிர்– ராஹுல் ஃபவுண்டேசன்ஸ் மற்றும் மேற்சொன்ன தனேஜா பட்டு நிறுவனம் அகும் வழக்குகளில் உச்ச நீதிமன்ற தீர்ப்புரையில் வாதியின் வழக்குரைஞர் நம்புகை வைத்தார். எதிர்வாதியாலான எதிர்ப்பு உள்ள போது மட்டுமே வழக்கிடல் உரிமை உற்றடைகிறது எனவும் வழக்கின் இப்போதைய பொருண்மைகளுக்கு பொருந்தும் உறுப்பு காலவரம்பு சட்ட உறுப்பு 113 ஆகும் எனவும் வாதிட்டார். ஆயத்த குறிப்பாடுக்காக உறுப்பு 113 கீழ் பொழிப்பாகிறது.

''உறுப்பு 113 வழக்கிடல் உரிமை உற்றடையும் தேதியிலிருந்து மூன்றாண்டுகள் வழக்கு தாக்கலிடப்பட வேண்டும். குறித்த கால அளவிலான காலவரம்பை கொண்டிருக்காத வழக்குகளுக்கு இந்த உறுப்பு பொருந்துறுவாகும்.''

24. மொத்த காலவரம்பு சட்டத்தில் தொடரும் கணக்கு பற்றி எந்த குறிப்பாடும் கிடையாது.

ஆனால் காலவரம்பு சட்ட உறுப்பு 1இல் பரஸ்பர கணக்கு பற்றி பேசப்படுகிறது. ஆகையால் காலவரம்பு சட்டத்தின் மீதுள்ள உறுப்பு கீழ் தொடரும் கணக்கு பொருந்தவியலும். நேர்வு அதுவாக இருக்குமானால் சா.பி27 மூலமாக வாதி 4.8.2010 அறிவிப்பு] சா.பி26சி அனுப்பியபோது 14.8.2010 அன்று பதில் அறிவுப்பு கீழ் கோருரிமையை எதிர்வாதி மறுத்தார். ஆகையால் தனி நீதிபதியால் சரியாக கருத்துரைக்கப்பட்டவாறு 14.8.2010 இலிருந்து மறுப்பு பாதுகாப்பாக மேலுள்ள பதிலிருந்து. பொருறியப்பட இயலும். வழக்கு அதுவாக இருககுமானால் காலவரம்பு சட்ட உறுப்பு 113 ஐ பொருத்திக் கொண்டு 13.8.2013 வரையில் வழக்கு தாக்கலிட வாதிக்கு காலவரம்பு உண்டு. அப்படியிருக்கையில் வழக்கு 2011 வாக்கில் தாக்கலிடப்பட்டது. இவ்வாறு எதிர்வாதியின் கடைசி செலுத்துகையிலிருந்தும் உரித்தத்தை அவர்கள் மறுப்பதிலிருந்தும் மூன்றாண்டு களுக்குள் வழக்கு தாக்கலானது என நாங்கள் சந்தேகமின்றி கருதுகிறோம். அவ்வாறாகவே, பிரிவு 18 மற்றும் காலவரம்பு சட்ட உறுப்பு 113 காரணத்தால் இப்பதைய வழக்கு காலவரம்பால் தடையாகவில்லை என் நாங்கள் பாதுகாப்பாக முடிவு செய்யலாம். அதற்கேற்ப, வழக்கு கால வரம்புக்குள் அமைகிறது விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு மூலமாகவும் தகுதிப்பாடுள்ளதாகவும் உறுதியாக்கப்பட ஏற்றதாகவும் உள்ளது. சா.பி25 மூலமாக எதிர்வாதியின் பொறுப்படைவை வாதி மெய்ப்பித்தார் என நாங்கள் ஏற்கனவே தீர்மானித்திருக் கிறோம். ஆகையால் (i) & (ii) கூறுகளுக்கு வாதிக்கு சாதகமாக விடையளிக்கப்படுகின்றன.

கூறு எண் : (iii)

25. உவிதொச வகுமுறை 29 விதி 1 கீழ் வழக்குரையை சரிபார்க்காமை பற்றிய மறுப்புரையை எதிர்வாதியினது வழக்குரைஞர் எழுப்பிய போதிலும் அத்தகைய மறுப்புரை தனி நீதிபதியிடம் வைக்கப்படவில்லை. ஆனால் இது சட்டப்படியான மறுப்புரை ஆகும் எனவும் அது எந்த கட்டத்திலும் எழுப்பப்படவியலும் எனவும் அவர்கள் வாதிடலாம். சொன்ன வாதத்தை நாங்கள் ஏற்றால் இயக்குனரால் வழக்கு தாக்கலாக நிறுவனத்தின் பூடக ஏற்பன்றி வேறேதுமில்லை. ஆகையால் அத்தகைய மறுப்புரையை மேல்முறையீடு கட்டத்தில் எதிர்வாதி எழுப்பவியலாது என நாங்கள் திடமாக கருதுகிறோம். வேறாகவும் கூட வழக்கு விசாரணை நடத்தல் மூலமாக வாதியால் நிறுவன் இயக்குனர் விசாரிக்கப்படுதல் மூலமாகவும் வழக்குரை தாக்கலிடலுக்கான இயக்குனரின் செய்கையை நிறுவனம் ஒத்திசைந்திருந்தது என நாங்கள் தீர்ப்பளிக்கலாம். இது தொடர்பில் AIR 1997SC 3இல் அறிவிப்பாகும். இந்திய ஒன்றியம் –எதிர்– நரேஷ்குமார் மற்றும் பிறர் வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புரையை குறிப்பாடில் வைத்தல் பயனுடையதாகும். ஆகையால் இந்த எழுவினாவும் வாதிக்கு சாதகமாக தீர்மானிக்கப் பட வேண்டியதாகிறது.

கூறு எண் iv

26.ஆள்வரைக்கு வருகையில், எதிர்வாதி யின் அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது எனவும் மேலதிகமாக சா.டி2 [ஒப்பந்தம்] சென்னையில் பதிவானது எனவும் ஆன முடிவை தனி நீதிபதி சரியாக எட்டியிருக்கிறார். ஆகையால் வழக்கை விசாரித்தலுக்கு இந்த நீதிமன்றத்தின் ஆள்வரை தொடர்பாக சந்தேகம் எதுவும் எங்களுக்குக் கிடையாது. அதற்கேற்ப இந்த கூறும் வாதிக்கு சாதகமாக தீர்மானிக்கப் பட வேண்டியதாகிறது.

27. மாபெரும் கூர்மதியுடன் அந்த அனைத்து கூறுகளையும் தனி நீதிபதி விரிவாக பரிசீலித்தி ருந்து இறுதியாக வழக்கில் கோரப்பட்டவாறு சரியாக தீர்ப்பாணையிட்டார் என்பது எங்களது திடமான கருத்தாகும். சாட்சியத்தின் மறுசீர்தூக்கல் அடிப்படையில் கூட சொன்ன தீர்ப்பிலிருந்து விலகிடலுக்கான முகாந்திரம் எதனையும் நாங்கள் காணவில்லை. அதற்கேற்ப இந்த மேல்முறையீடு தள்ளுபடியாதலுக்கு ஏற்றதா கிறது.

28. முடிவில் இந்த முதலேற்பு பிரிவு மேல்முறையீடு தள்ளுபடியாகிறது செலவு தொகை பற்றிய உத்தரவு இராது.

**மொழியாக்கம் : பா.ஞானசேகரன்**

# விற்பனையும் அதன் விளைவுகளும்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி என்.சதீஸ்குமார்**
**உ.சீ.எண் 1832/2025**
**நாள் : 25.7.2025**
**2025 (5) CTC 823**

**சஷிகுமார் சார்பாற்றம் அதிகார முகவர் எஸ்.கார்த்திகேயன் ...மனுதாரர்**

**–எதிர்–**

**ஜி.வசந்தா, சிம்ரிஜா சரத் சந்திரகுமார் 2.ஜேம்ஸ்பால்**
**3. சித்தார்த் கோபிநாத் ...எதிர்வழக்கீட்டாளர்கள்**

பி. பாரத் குமார், மனுதாரரின் வழக்கறிஞர்

கே.எஸ்.ஜெயகணேசன் எதிர்வழக்கீட்டாளர் எண் 2இன் வழக்கறிஞர் எதிர்வழக்கீட்டாளர் எண் 1, 3 எவரும் முன்னிலையாகவில்லை.

உ.சீ.ம.எண் வகை செய்யப்பட்டது. செலவுத் தொகையின்றி.

**கோரிக்கை**: தற்போதைய உ.சீ.ம. அதன் அறுதி ஆணைத் தேதிவரையில் சேர்த்து வட்டியுடன் ரூ.1,19,82,831/- இனை திருப்பியளிக்கப்பட்டது. உ.சீ.ம. கோயம்பத்தூரில் கோப்பில் உள்ளது. மு.வ.எண் 102/2007 தொடர்பாக. மு.மே.எண் 2/2024 முன்னிடப் பட்டது. 23.1.2025 எதிர்வழக்குள்ளாக்கப்பட்ட ஆணையினை தள்ளுபடி செய்யக் கோரி உரிமையியல் சீராய்வு மனு இந்திய அரச மைப்பில் 2, 7 ஆம் உறுப்பின்படி முன்னிடப் படுகிறது.

## தீர்ப்பு

1. மு.வ.எண் 102/2007 கோயம்புத்தூர் II கூடுதல் மாவட்ட நீதிபதியின் கோப்பில் உள்ளதில் மு.மே.எண் 2/2024, 23.1.2025இல் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணையினை தள்ளுபடி செய்யக் கோரி உரிமையியல் சீராய்வு மனு முன்னிடப்படுகிறது.

2. மனுதாரர் இதில் வாதி மற்றும் இரண்டாம் எதிர்வழக்கீட்டாளர் இந்தச் சீராய்வில் பின்னர் வாங்கியவர்/மூன்றாம் எதிர்வாதி. இந்த பிரச்சினை இந்த சீராய்வில் உள்ளடக்கியது தொடர்பாக சேர்ந்துள்ள வட்டியை திருப்பி யளிப்பது. அதாவது விற்பனையில் எஞ்சியுள்ள தொகை தொடர்பாக இதன் தொகை வைப்பீடு செய்யப்பட்ட தேதியிலிருந்து விற்பனை ஆவணம் நிறைவேற்றப்பட்ட தேதிவரையில் கணக்கிடப்பட்டு வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர் இதில் வாதி மற்றும் இரண்டாம் எதிர்வழக்கீட்டாளர் இந்த சீராய்வு முன்னிடுவதற் கான பின்புலன் சுருக்கமாக பின்வருமாறு.

(அ) முதல் எதிர்வழக்கீட்டாளர்/தீர்ப்புக் கடனாளி 1.8.2006 தேதியிடப்பட்ட விற்பனை உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. அதாவது சீராய்வு மனுதாரர்/வாதி/தீர்ப்பாணை பெற்றவர். தாவாவில் உள்ள சொத்தினை விற்பது. மொத்த விற்பனை மறுபயன் ரூ.1,54,18,000/- ரூ.30 லட்சம் முன் பணமாகப் பெறப்பட்டது. இரண்டாம் எதிர்வழக்கீட்டாளர், விற்பனை ஆவணத்தை நிறைவேற்ற முன் வந்துள்ளார். அதாவது விற்பனை உடன்படிக்கையின் வரையுரைகளின்படி, சீராய்வு மனுதாரர், மு.வ.எண்102/2007இனை முன்னிட்டுள்ளார். இது கோயம்புத்தூர் அமர்வு நீதிமன்றம் IIIஆவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் கோப்பில் உள்ளது. இதில் அதனை குறிப்பிட்டு நிறைவேற்றக் கோரப்பட்டுள்ளது. அதாவது வழக்கு நடப்பில் உள்ளபோது மனுதாரர்,

கண்டறிய வந்ததாவது முதல் எதிர்வாதி விற்பனை ஆவணத்தை இரண்டாம் எதிர்வாதி/ சிம்ரிகாஷரத் சந்திரகுமார் சார்பாக. நிறைவேற்றி யுள்ளார். அவர் மூன்றாம் எதிர்வாதி/ஜேம்ஸ் பால் சார்பாக விற்பனை ஆவணத்தை நிறைவேற்றியுள்ளார். எனவே, எதிர்வாதிகள் 2, 3 இடையீட்டாளராகச் சேர்க்கப்பட்டனர். இதில் எதிர்தரப்பில்லாதத் தீர்ப்பாணை அளிக்கப்பட்டது. 7.12.2012 தேதியிடப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை, சீராய்வு மனுதாரர் எஞ்சிய விற்பனை மறுபயனான ரூ.1,24,18,000இனை கோயம்புத்தூர் IIIஆவது மாவட்ட நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார்.

(ஆ) மூன்றாம் எதிர்வாதி, விண்ணப்பம் ஒன்றினை முன்னிட்டுள்ளார். மு.வி.எண் 556/ 2013, 7.12.2012 தேதியிடப்பட்ட தரப்பின ரில்லா தீர்ப்பாணையை தள்ளுபடி செய்ய கோரப்பட்டது மற்றும் அது அனுமதிக்கப்பட்டது. அதன் பின்னர் விசாரணைக்குப் பின்னர் வழக்கானது குறித்தவகை நிறைவேற்றுதலுக் கான தீர்ப்பாணை பெற்றது. 26.9.2016 தேதியிடப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இந்தத் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மூன்றாம் எதிர்வாதி மேல்முறையீடு ஒன்றினை முன்னிட்டுள்ளனர். மே.வ.எண் 114/2017. இந்த நீதிமன்றத்தில் முன்னிடப்பட்டது. இந்த நீதிமன்றத்தின் 30.12.2018 தேதியிடப்பட்ட தீர்ப்பாணை மற்றும் தீர்ப்பு. இதில் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. 14.12.2006 தேதியிட்ட விற்பனை ஆவணம் அவசரகதியில் செயற்படுத்தப்படுத்தப்பட்டதாக முதல் எதிர்வாதி சார்பாகவம் இரண்டாம் எதிர்வாதி சார்பாகவும் கூறப்பட்டது. இது முதல் எதிர்வழக்கீட்டாளரின் ஏமாற்றுதலான நடவடிக்கை என்றும் வாதியில் உரிமையினை மறுக்க செய்யப்பட்டதாக கூறப் பட்டது. ஏனெனில் அவர் உடன்படிக்கை வைத்திருப்பவர் அதாவது தாவாவில் சொத்து தொடர்பாக.

(இ) சி.அ.ம. மூன்றாம் எதிர்வழக்கீட்டாளரால் உச்சநீதிமன்றத்தில் முன்பு முன்னிடப்பட்டது. சி.ம.எண்கள் 17194, 17195/2019. இதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றத்தினால் விரிவான ஆணை. 29.7.2019 தேதியிடப்பட்டது மற்றும் விசாரணை நீதிமன்ற தீர்ப்பாணை அறுத்தி நிலை எட்டியது. சீராய்வு மனுதாரர் நிறைவேற்றுதல் மனுவினை முன்னிட்டார். நி.ம.எண் 104/2019 விற்பனை ஆவணத்தை நிறைவேற்றுவதற்காக எதிர்வாதிகள் 1 முதல் 3 வரையிலானவர்களுக்கு எதிராக நிறைவேற்றுதல் மனு நடப்பில் உள்ளபோது இரண்டாம் எதிர்வாதி இறந்துள்ளார். அதனால் E.A.2/2019 அனுமதிக்கப்பட்டது சட்டவாரிசுகள் இடையீட்டாளர்களாக்கப்பட்டனர். இது அனுமதிக்கப் பட்டது. 3.3.2010 தேதியிடப்பட்டது. விரிவான ஆணை செய்யப்பட்ட ஆணையை எதிர்த்து மூன்றாம் எதிர்வாதி சீராய்வினை முன்னிட்டார். உ.சீ.ம.எண் 1815/2021. எனினும் சொல்லப் பட்ட சீராய்வும் தள்ளுபடி செய்யப்பட்டது. விரிவான ஆணை 6.10.2021 தேதியிடப் பட்டது. ஈ.கா.ம.எண் 104/2019 விரிவான ஆணை 25.4.2022 தேதியிடப்பட்டது, சொல்லப் பட்ட ஆணையை எதிர்த்து சீராய்வு முன்னிடப் பட்டது. உ.சீ.ம.எண் 2004/2022 மற்றும் சொல்லப்பட்ட சீராய்வு தள்ளுபடி செய்யப்பட்டது. விரிவான ஆணை 30.6.2022 தேதியிடப் பட்டது. 11.7.2022 அன்று விற்பனை ஆவணம் மனுதாரர் சார்பாக நிறைவேற்றப் பட்டது. மேற்சொல்லப்பட்ட நிறைவேற்றுதல் மனு 11.86 ஏக்கர் இடத்திற்கு எதிரானது, 0.50 ஏக்கர் நெடுஞ்சாலைத் துறையில் வழக்கு நடப்பில் உள்ளது மற்றும் மூன்றாம் எதிர்வாதி சரியீட்டுத் தொகையாக ரூ.18,60,527/- பெற்றுள்ளார். மனுதாரர் உடைமையை மீளப் பெற கோரவில்லை. கா.ம.எண் 104/2019 முன்னிடப்பட்டது. நிறைவேற்றுதல் மனு நி.ம.எண் 169/2022 மீளப் பெறுதல் என்றும் உய்தி கையுடைமைக்கானது மற்றும் சொல்லப் பட்ட மனு 10.3.2023 அன்று அனுமதிக்கப் பட்டது. மனுதாரர்/தீர்ப்புக் கடனாளியினை பணிக்கிறது. 30.3.2023 கையுடைமையை ஒப்படைப்பதற்கும் 30.3.2023 அன்று சொத்து

தீர்ப்பாணை பெற்றவரிடம் ஒப்படைப்பு செய்யப் பட்டது. சீராய்வு முன்னிடப்பட்டது. உ.சீ.ம.எண் 1128/2023 மூன்றாம் எதிர்வாதியால் சொல்லப்பட்ட சீராய்வு தள்ளுபடி செய்யப்பட்டது. 28.6.2023 தேதியிடப்பட்ட ஆணை மூலமாக இந்த நிலையில், வாங்குபவர் வட்டியைக் கோரியுள்ளார். அதாவது வைப்பீடு செய்யப்பட்ட தேதியிலிருந்து விற்பனை ஆவணம் நிறைவேற்றப் பட்ட தேதிவரையில் அவ்வாறே மு.மே.எண் 6/2024 முன்னிடப்பட்டது. உரிமை மாற்றத்திற் காக ரூ.1,17,82,231/- அவரது கணக்கிற்கு வைப்பீடு செய்யப்பட்டது. எனினும் அது தள்ளுபடி செய்யப்பட்டது. 23.1.2025 தேதியிடப் பட்டஆணை மூலமாக. சொல்லப்பட்ட ஆணையை எதிர்த்து தற்போதைய சீராய்வு முன்னிடப்பட்டது.

4. மனுதாரர் இதில் வாதி மு.வ.எண் 102/2007. அவர் இந்த சீராய்வினையும் முன்னிட்டு எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணையை எதிர்த்து சீராய்வு 23.1.2025 தேதியிடப்பட்டது. மு.மே. எண் 2/2024 மு.வ.102/2007இன் மேல் பிறப்பிக்கப்பட்டது. இது கோயம்புத்தூரில் IIஆவது கூடுதல் மாவட்ட நீதிபதியில் கோப்பில் உள்ளது. 1882 சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 55, 61ஆம் உட்பிரிவின் (ஆ) கூறி வகைமுறைகள் ஆதாரமாக்கப்பட்டது.

5. மனுதாரரின் வழக்கறிஞர் வாதிட்டதாவது, வாங்குபவர் வைப்பீட்டின்பேரில் வட்டி கோரும் உரிமை பெற்றவர். அதாவது விற்பனை ஆவணம் நிறைவேற்றப்படும் தேதி வரையிலான வட்டி அல்லது உடைமை ஒப்படைப்பு செய்யப்படும் வரை இதில் எது முந்தியதோ அது வரையிலான வட்டி சொல்லப்பட்டவற்றை சட்டப்படி நடப்பதன் மூலமாக அவர் விண்ணப்பத்தினை மு.வ.எண் 2/2024இனை விசாரணை நீதிமன்றத்தின் முன்பு முன்னிட்டுள்ளார். அதில் வட்டி கோரியுள்ளனர். அதாவது எஞ்சிய விற்பனை மறுபயன்பேரில் அவரால் மு.வ.எண் 102/2007இன் வைப்பீடு செய்யப்பட்டது தொடர்பாக. சொல்லப்பட்ட மனு வாதிடப்பட்டது. இரண்டாம் எதிர்வழக்கீட்டாளர். பின்னர் வாங்கியவரால் இதில் இரண்டாம் எதிர்வழக்கீட்டாளர் கேட்டறிந்து எதிர்ப்பினை செய்துள்ளார். விசாரணை நீதிமன்றம் இந்த மனுவினைத் தள்ளுபடி செய்துள்ளனர். இதனால் குறையுற்றவர் வாதி/மனுதாரர் இந்த மனுவினை முன்னிட்டுள்ளார்.

6. முக்கிய வாதமாவது வழக்கறிஞர் எதிர்வாதிக் கானவர்/மூன்றாம் எதிர்வழக்கீட்டாளருக்கானர் இந்த தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புக்கு எதிரானது நீதியர் ஆயத்தில் மே.வ.எண் 114/2017க்கு எதிரானது இவர் ஏற்கனவே சீராய்வு விண்ணப்பத்தினை நடப்பில் கொண்டுள்ளார். எனவே இந்த சீராய்வு தள்ளுபடி செய்யக் கோரப்பட்டது.

7. எதிர்வழக்கீட்டாளர்கள் 1 மற்றும் 3 வழக்குத் தேதியிலிருந்து எதிர்தரப்பின்றி தீர்மானிக்கப்பட்டதில் இது கூடுதல் நீதிமன்றத்தில் பண்பானது இந்த தற்போதைய சீராய்வில் இதில் வெளியீடு இருந்தாலும் மற்றும் இந்தப் பட்டியலில் பெயர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் எதிர்வழக்கீட்டாளர்கள் 1, 23 எவரும் சார்பாற்றம் செய்யப்படவில்லை.

8. இரு தரப்பினர்களும் கேட்டறியப்பட்டனர் மற்றும் பதிவேட்டின்பேரில் வைக்கப்பட்டிருந்த பொருட்பாடுகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது.

9. முதல் எடுப்பில், இதில் தொடர்புற்றதாவது சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு (556)ஆ1 இன் சுருக்கம் அளிக்கப்படுகிறது. இது பின்வருமாறு படிக்கப்படுகிறது.

55. வாங்குபவர் மற்றும் விற்பவர்களின் உரிமைகள் மற்றும் கடமைப் பொறுப்புகள்

……….

(6) வாங்குபவர் பெற உரிமை

(அ) சொத்தின் உரிமை அவரிடம் உற்றடைகிறவிடத்து, இதில் ஏற்படும் மேம்பாடு அல்லது சொத்தின் மதிப்பு உயர்வது மற்றும் வாடகை மற்றும் நலப்பயன்கள் தொடர்பானவை.

(ஆ) இவர் சரியற்ற நிலையில் சொத்தின் ஒப்படைப்பினை ஏற்க மறுத்தாலன்றி, சொத்தின் மீதான பொறுப்பு விற்றவருக்கு எதிரானது, மற்றும் அனைத்து ஆட்களும் இவரின்படி கோருபவர்கள் அதாவது விற்றவர் சொத்தில் கொண்டுள்ள ஹேரிதா பற்றிய அனைத்து இதில் வாங்கியதன் பணம் உரியவாறு வாங்கு பவருக்கும் செலுத்தப்பட்டது என்பது. அதாவது ஒப்படைப்பின் எதிர்பார்ப்பில் மற்றும் அத்தகை தொகைக்கான வட்டி மற்றும் இவர் ஒப்படைப்பினை பெற மறுக்கிறவிடத்து இதில் ஏதேனுமிருப்பின் அந்தத் தொகை மற்றும் செலவினங்கள் (ஏதேனுமிருப்பின்) அதாவது அவருக்கு கொடுபட வேண்டியவை. அவருக்கு அளிக்கப்பட்டு குறித்தவகை நிறைவேற்றுகைக்கு கட்டாயப்படுகிறவிடத்து ஒப்பந்தம் அல்லது இதற்காக பெறப்பட்ட தீர்ப்பாணை.

இதில் உள்ள ஒரு -- அதனை வெளியிடுதல் அதில் பற்றி(1) கூறி (அ) பற்றி )5) கூறி (அ)இல் கூறப்பட்டது மோசடி தொடர்பானது.

10. மேற்சொல்லப்பட்ட வகைமுறையி லிருந்து அறியப்படுவது, ஓர் ஒப்பந்தம் மாறாக இல்லாதபோது வாங்குபவர் விற்பவரின் உரித்தத்தின்பேரில் இதன் மீது பொறுப்பு டையவர் அதாவது சொத்தின் மீது இதுவே விற்பனை உடன்படிக்கையின் நுதல் பொருளாகும். அத்தகைய தொகையின்பேரிலான வாங்கிய பணம் மற்றும் வட்டி அத்தொகைக்கானது இதில் வாங்குபவர் சரியற்ற முறையில் ஒப்ப டைப்பினை ஏற்க மறுத்திருந்தாலன்றி. இதில் பொறுப்பு விற்பவரை சார்ந்ததாகிறது மற்றும் இவர் மூலம் உரிமை கோருகிற அளவையர் சார்பாகவும் இந்த பொறுப்பு விற்பவர் சார்பானது மற்றும் அவரிடமிருந்து கோருபவர்களுடையதும். இது வாங்குபவர் சார்பாக மாறானது விற்பவர் பொறுப்பு சொத்து உரிமை மாற்றுச் சட்டம் 1882இன் பிரிவு 53(4)(ஆ)இன்படியானது. இது சட்டப்படியான பொறுப்பு மற்றும் இது ஒப்பந்தம் பொறுப்பிலிருந்து வேறுப்பட்டது. இது தனிப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் பெற உரிமை கொண்டவர் வாங்குபவர்.

11. பிரிவு 55இன் உட்பிரிவு இனைத் தெளிவுபடுத்துகிறது. வாங்குபவர், இதில் வட்டி பெற உரிமையுடையவர் ஆவார். அதாவது வாங்கிய பணம் அதற்கான செலுத்தப்பட்ட வட்டி இது வாங்குபவரின் பணத்தொகை செலுத்தத் தேதியிலிருந்து. சொத்தினை ஒப்படைப்பு செய்யும் தேதிவரை வட்டிக் கணக்கிடப்படுதல் வேண்டும் அல்லது விற்பனை ஆவணம் நிறைவேற்றப்படும் தேதி வரையில் இதில் எது முந்தியதோ எது வரையிலான வட்டி.

12. இது தொடர்பாக இதில் தொடர்புற்ற தாகும். இந்தத் தீர்ப்புகளைச் சுட்டுவது உச்ச நீதிமன்ற வழக்கான தில்லி மேம்பாட்டு அதிகார அமைப்பு –எதிர்– ஸ்கிப்பர் கட்டுமானப் பணி நிறுமம் (தனி) வரம்ப. மற்றும் பிறர், 2000 (1 த.த.வ. 507 (உச்.நீ.), 2000 (10) உச்.நீ.வ. 310. இது பின்வருமாறு படிக்கப்படுகிறது.

"31. 55ஆம் பிரிவில் உட்பிரிவு மேலே கூறப்பட்டுள்ளது. இதனை தெளிவுப்படுத்துவ தாவது வாங்குபவர் வாங்கும் தொகையில் பேரிலான வட்டிக்கு உரிமை உடையவர் என்பது. வட்டியானது வாங்குபவரின் பணம் செலுத்தத் தக்க தேதியிலிருந்து சொத்தினை வாங்குபவருக்கு ஒப்படைக்கும் தேதி வரை யிலானது அல்லது விற்பனை ஆவணம் நிறைவேற்றப்படும் தேதி வரையிலானது அல்லது விற்பனை ஆவணம் நிறைவேற்றப் படும் தேதி வரையிலானது, இதில் எது முந்தியதோ அது வரையிலான வட்டி. குறிப்பு 1, 3 வாங்குபவர் சார்பாக அவ்வாறே தீர்மானிக்கப் பட்டன."

13. இது போன்றே, தில்லி உயர்நீதிமன்றம், சர்வஜித் சிங் (அ) சுடர்குமாரிய மற்றும் பிறர் வழக்கில், 2018 உச்.நீ.வ. வலைதளம் தில்லி 8693 பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"5. ஒரு பிரச்சினை (ஆ) வட்டி வீதம் பற்றியது. 5,32,50,000 தொகை மீதமானது. 2013ஆம் காட்டிலிருந்து வைப்பீடு செய்யப்

பட்டுள்ளது. நான் சுட்டுவது சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 55(6)().

(ஆ) அவர் ஒப்படைப்பினை சரியற்ற முறையில் ஏற்க மறுத்திருந்தாலன்றி. சொத்தினை ஒப்படைப்பு செய்தல் பொறுப்பு சொத்தின் பேரிலானது அதாவது விற்பவருக்கு எதிரானது மற்றும் அவரின் கீழ் உரிமை கோருகிற அதை வகுக்குமானது. (...)

அதாவது சொத்தின் விற்பவருக்கு உள்ள உரித்தம் தொடர்பானதும் வாங்கப்பட்ட எதன் தொகை தொடர்பானதும் இது உரியவாறு பெறுபவருக்கு செலுத்தப்படுதலும் இது ஒப்படைப்பை எதிர்பாரத்து செய்யப்படுவது இது மற்றும் அத்தகைய தொகையில் பேரிலான வட்டி மற்றும் அவர் உரிய முறையில் ஒப்படைப்பினை ஏற்க மறுப்பாரானால் செலுத்தப்பட்ட உள்ள செலுத்தப்பட உள்ள நியாயமானத் தொகை எதற்குமாக மற்றும் அந்தத் தொகை அவருக்கு அளிக்கும்போது வழக்கானதுகுறித்த வகை நிறைவேற்றுதலுக்கு அதாவது ஒப்பந்தத்தை நிறைவேற்ற அல்லது அதனை மறுப்பதற்கான தீர்ப்பாணைக்கானது.

6. மேலும் தில்லி மேம்பாட்டு அதிகார –எதிர்– சகிப்பர் கட்டுமானம் பணி நிறுமம் (தனியார்) வரம்பிடப்பட்டது மற்றும் பிறர் (1) த.த.வ. 507 (உச்.நீ.) 2000 (10) உச்.நீ.வ. 130 நீதிமன்றம் கூறியதாவது.

29. மேற்சொல்லப்பட்ட வகைமுறைகளின் படி தெளிவாக்கப்படுவதாவது ஒப்பந்தம் இல்லாதபோது அப்போது மாறானது இல்லாத போது வாங்குபவர் விற்பவரின் உரித்தம் பொறுத்து ஒரு பொறுப்புடையவர். இது விற்பனை உடன்படிக்கையில் நுதல் பொருளாலும் அதாவது வாங்கும் தொகை மற்றும் வட்டி பொறுத்து அந்தத் தொகையின்பேரிலானது. இதில் வாங்குபவர் சரியற்ற முறையில் அதனை ஏற்க மறுத்தாலன்றி. இதில் பொறுப்புடையவன் எது பெறத்தக்கது. இது வாங்குபவர் சார்பானது இது விற்பவரின் பொறப்பை போன்றதே பிரிவு 55(4)(ஆ)இன்படியான பொறுப்பு. வாங்குபவரின் பொறுப்பும் இந்தப் பிரிவின்படியானது சட்டப் படியிலானது மற்றும் இது ஒப்பந்த பொறுப்பில், இருந்து மாறுபடுவது இதனை வாங்குபவர் கோரும் உரிமை பெற்றவர். இது தனிப்பட்ட ஒப்பந்தமாகும்.

31. 55ஆம் பிரிவின் உட்பிரிவு இதனைத் தெளிவாக்குகிறது. அதாவது வட்டி பெற உரிமை யுடையவர் ஆவார். அதாவது வாங்கும் பணம் தொடர்பாக. வட்டி வாங்குதலில் பணம் செலுத்தப்படும் தேதியிலிருந்து அந்தச் சொத்து ஒப்படைப்பு செய்யப்படும் தேதி வரையிலான வட்டி அல்லது விற்பனை ஆவணம் நிறைவேற்றப் படும் தேதி வரையில் குறிப்புகள் 1, 2 வாங்குபவர் சார்பாக. அவ்வாறே தீர்மானிக்கப் படுகிறது.

7. வீடியோகால் பிராப்பர்ட்ரீஸ் லிட். –எதிர்– டாக்டர் பாலசந்திர ஆய்வகங்கள் மற்றும் பிறர், 2004 (3) உச்.நீ.வ. 711. நீதிமன்றம் கூறிய தாவது.

“சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 55ஆம் பிரிவின் 6ஆம் பத்தியின் (B) கூறு இக்குறிக்கப் பட்டவரான வாங்குபவரின் பொறுப்பு நீட்டிக்கப் படும் மற்றும் வாங்கப்பட்ட பணம் அல்லது நியாயமானதே பணம் செலுத்தப்பட்டது. உரிமை மூல ஆவணத்தின் முன்பு செலுத்தப்பட்டது மற்றும் வாங்குபவர்களால் சொத்து ஒப்படைப்பு செய்யப்பட்டது. வாங்குபவரால் விற்பவருக்கு, விற்பவருக்கு சொத்தில் உள்ள உரித்தல் தொடர்பாக. இதில் வாங்குபவர் சரியற்ற முறையில் சொத்தினை ஒப்படைப்பதை ஏற்க மறுத்தாலன்றி அல்லது இதனை ஏற்க மறுப்பது அதன் மீதான வட்டித் தொகையை அளிக்காத காரணமானால் மற்றும் செலவுத் தொகை அளிக்கப்பட்டது. வாங்குபவருக்கு என்பதில் வழக்கு குறித்தவகை நிறைவேற்றுகைக்காக ஒப்பந்தப்படி அல்லது தீர்ப்பாணை பெறுவதற்கு, அல்லது ஆவண நிராகரிப்பதற்கு இதில் நெறிமுறை மேற்சொல்லப்பட்ட வகைமுறை களின்படி இது நீதியின் நெறிமுறைப்படியும் இயற்கை நியதி நேர்மை நெறி மற்றும்

மனச்சான்றின்படியாகும். இந்தப் பொறுப்பு இந்த செயற்பாடு நிறைவேற்றப்பட்டு விற்பவ ரால் கையுடைமை மாற்றப்பட்டு வாங்கு பவருக்கு அளிக்கப்படும் வரையிலானதாகும். அப்போது மட்டுமே இது சுற்றுப் போதிலும் இந்த பொறுப்பு உடைமையைப் பெறுவதன் மூலம் மட்டுமே முற்றுப் பெறாது. இதில் பொறுப்பு சட்டப் படியானது அதாவது வாங்குபவர் சார்பானது மற்றும் இது ஒப்பந்த வரைகளின் படியானது மற்றும் பொருட்டாக இதில் பொறுப்பின் நேரெதி ரானது விற்பவர் சார்பாக ஏற்படுத்தப்பட்டது. சட்டத்தின் பிரிவு 55(4)(ஆ) சட்டப்படியான தாகும்.

19. மேலும், இதில் தொடர்புற்றதாவது இது போன்ற இந்த நீதிமன்றத்தின் முன்பு வந்தது. கண்ணன் –எதிர்– டாக்டர் ஸ்ரீதரன் வழக்கில் உ.சீ.ம.(NPD) எண் 649/2017 விரிவான ஆவண 18.3.2022 தேதியிடப்பட்டது. 18.3.2022. இது தள்ளுபடி செய்யப்பட்டது. இதில் விசாரணை நீதிமன்ற ஆணை கூறப்பட்டதாவது மனுதாரர். வட்டியினை 6 சதவீதம் அளவிற்கு பெற உரிமையுடையவர் ஆவார். அதாவது தொகை / எஞ்சிய தொகை அதாவது விற்பனைத் தொகை யில் வைப்பீடு செய்யப்பட்டது. தொடர்பாக அதாவது விசாரணை நீதிமன்றத்தின் முன்பு அதாவது விற்பனை ஆவணம் நிறைவேற்றப் படும் தேதி வரையிலான வட்டிக் கணக்கிடப்படும்.

15. வட்டி செலுத்துவது தொடர்பாக. சட்டத்தின் பிரிவு 55(6)(ஆ) தொடர்பாக. சட்டம் குறிப்பாக எடுத்துக் கூறியதாவது வாங்கப்பட்ட தொகை தொடர்பாக. வட்டி செலுத்தப்படுதல் இந்த வழக்கில் எஞ்சிய விற்பனை மறுபயன் ரூ.1,24,18,000/–. இது நீதிமன்றத்தில் காப்பீடு செய்யப்பட்டது. 22.1.2013 அன்று இந்த மனுதாரரால், ஆனால் விற்பனை ஆவணம் 11.7.2022 அன்று மட்டுமே நிறைவேற்றப்பட்டது. கா.ம.எண் 104/2019 மு.வ.எண் 102/2007. மேலும், தீர்ப்பாணை யின்படி, முதல் எதிர்வழக்கீட்டாளர்/முதல் எதிர்வாதி எஞ்சிய விற்பனை தொகையான ரூ1,24,18,000/–இனைப் பெற உரிமை யுடையவர் ஆவார். சேர்ந்துள்ள வட்டியாவது, அந்த தொகைக்கான, தற்போது மனுதாரரால் கோரப்படுகிறது. அவர் எப்போதும் அவரது பங்கிற்கான ஒப்பந்தத்தினை நிறைவேற்ற ஆயத்தமாக உள்ளார் என்பது. அவர் எந்த ஒப்பந்த முறிவையும் செய்யவில்லை. அதாவது தீர்ப்பாணைப்படி அவர் 2013ஆம் ஆண்டில் எஞ்சிய விற்பனை விலையை வைப்பீடு செய்துள்ளார் மற்றும் வாங்கியவர்/மனுதாரர் தரப்பில் முறையற்ற நிலை எதுவும் இல்லை. இதன் விகிதாச்சரம் மேற்சொல்லப்பட்ட வழக்கு களில் கட்டப்படுவது மனுதாரரின் வாதங் களுக்கு ஆதாரமாக உள்ளது. ஆனால் விசாரணை நீதிமன்றம், பிரிவு 55(ஆ)(6)இல் கூறப்பட்டவற்றை ஏற்கமனமின்றி தவறுதலாக மனுவினைத் தள்ளுபடி செய்துள்ளது. ஏற்க முடியாத ஒன்றாகும். வாங்குபவரின் பொறுப்பு இந்தப் பிரிவின்படி ஒரு சட்டப் பொறுப்பு.

16. மூன்றாம் எதிர்வழக்கீட்டாளரின் வாத மாவது இந்த நீதிமன்ற நீதியர் ஆயத்தின் முன்பு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிரான சீராய்வு நடப்பில் உள்ளது. மே.வ.எண் 114/2017 உ.ப.ம.எண் 19249/2021 சீரா. வி. S.R. 117879/2019. இந்த நீதிமன்றம் கருதுவ தாவது சீராய்வு விண்ணப்பம் எண்ணிடப்படக் கூட இல்லை. எனவே, இத்தகைய விண்ணப்பம் நடப்பில் உள்ளது என்பது. எந்த நிறுத்தி வைப்பையும் செய்யாது. அதாவது அறுதியான தீர்ப்பளிப்பதில் இந்த சீராய்வை முடிவு செய்வதில் எந்த விளைவையும் ஏற்படுத்தாது.

17. மூன்றாம் எதிர்வழக்கீட்டாளரின் வாத மாவது எதிர்வாதி 1, 2 வழக்கில் முழுவதிலும் தரப்பினரின்றியே உள்ளார் மற்றும் அவர்கள் அவர்களது தொகையினை பெற்றுள்ளனர். அதாவது சொத்தினை பிறருக்கு விற்பதன் மூலமாக, ஆனால் மூன்றாம் எதிர்வழக்கீட்டாளர் /மூன்றாம் எதிர்வாதி மட்டுமே பாதிக்கப்பட்ட தரப்பினர், ஏனெனில் அவர் விற்பனைக்கான மறுபயனைச் செலுத்தியுள்ளார்.

18. முதல் எதிர்வாதி/முதன்மையாக விற்றவர் ஏற்கனவே, ரூ.30 லட்சம் முன்பணமாகப் பெற்றுள்ளார் என்ற பொருண்மை பற்றி அறிதல் வேண்டும். அதாவது விற்பனை உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட நேரத்தில் அதன் பின்னர் மீண்டும் அவன் அந்தச் சொத்தினை இரண்டாம் எதிர்வாதிக்கு விற்றுள்ளார் மற்றும் விற்பனை மறுபயனைப் பெற்றுள்ளார். மேலும் இரண்டாம் எதிர்வாதி அந்த விற்பனை மறுயனைப் பெற்று அதனை மூன்றாம் எதிர்வாதிக்கு/எதிர்க்கும் எதிர்வாதிக்கு விற்றுள்ளார். எதிர்வாதிகள் 1, 2 பொருண்மைப்படி அவர்களது பணத்தைப் பெற்றுள்ளனர். ஒரு வகையில் அல்லது வேறு வகையில் ஆனால் மூன்றாம் எதிர்வாதி இந்த பொருட்பாட்டில் வாதத்தில் உள்ளார்.

19. இந்த நீதிமன்றம் கருதுவதாவது, எதிர் வாதிகள் 1, 2 வழக்கு முழுவதிலும் எதிர் தரப்பினர் இங்கேயே இருந்துள்ளனர். எந்த பொருட் பாட்டின் கருத்தில் மூன்றாம் எதிர் வழக்கீட்டாளர் முதலான எஞ்சிய விற்பனை மறுபயன் ரூ.13,98,833 நீங்கலாக. நீதிமன்றத்தினால் ஆணையிடப்பட்ட தொகை யினை வாதி சார்பாக செலுத்த கடமைப் பொறுப்புடையவர். இந்த தொகையானது ரூ.13,19,833 விசாரணை நீதிமன்றத்தினால் ஆணையிடப்பட்டவாறு இந்தத் தொகை முதன்மை எஞ்சிய விற்பனை மறுபயனி லிருந்து கழிக்கப்பட வேண்டியது இது. விசாரணை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்ட தொகை எஞ்சிய தொகை யானது மூன்றாம் எதிர்வழக் கீட்டாளருக்கு உரிய விண்ணப்பத்தின்பேரில் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும். இது மூன்றாம் எதிர்வழக்கீட்டாளருக்கானது, அதாவது முதன்மை எஞ்சிய விற்பனை மறுபயனைப் பெறுவது அதாவது அதன் செலவுத் தொகையைக் கழித்து விட்டு அல்லது சீராய்வு விண்ணப்பத்தை முன்னிடுவது என்பது.

20. இந்தத் தேர்வில் மூன்றாம் எதிர் வழக்கீட்டாளர், விண்ணப்பத்தினை முன்னிட்டு உள்ளார். அதாவது எஞ்சிய விற்பனை மறு பயனைத் திரும்பிப் பெற அதுவும் செலவுத் தொகையைக் கழிந்த பின்னர், அவர் போதிய உறுதி மொழியினை நீதிமன்றத்திற்கு அளித்த பின்னர் அவர் அந்தத் தொகையினை பெற தெரிவு செய்யலாம்.

21. மொத்தமாக, எதிர்க்கப்பட்ட ஆணை, தள்ளுபடி செய்யப்படத்தக்கதாகும் மற்றும் அது தள்ளுபடி செய்யப்படுகிறது. அவ்வாறே, சீராய்வு மனுதாரர் சேர்ந்து வட்டியைப் பெற உரிமை யுடையவர் ஆவார். அதாவது எஞ்சிய விற்பனை மறுபயன் மீதான வட்டி. அதாவது விசாரணை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்ட தொகை அது வைப்பீடு செய்யப்பட்ட தேதியிலிருந்து விற்பனை ஆவணம் நிறைவேற்றப்பட்ட காலம் வரையிலான வட்டி மற்றும் ரூ.1,19,833/-. இது விசாரணை நீதிமன்றத்தினால் ஆணையிடப் பட்ட செலவுத் தொகை விசாரணை நீதிமன்றம், எஞ்சிய விற்பனை மறுபயன் மீதான சேர்ந்துள்ள வட்டியினை திருப்பிச் செலுத்தப் பணிக்கப் படுகிறது. அதாவது தொகை வைப்பீடு செய்யப் பட்ட 22.1.2013இல் இருந்து சீராய்வு மனுதார ருக்காக விற்பனை ஆவணம் நிறைவேற்றப் பட்ட தேதி வரையிலானதை அதாவது 11.7.2022 வரையிலானது மற்றும் ரூ.13,19,839/- தொகை விசாரணை நீதிமன்றத்தினால் ஆணை யிடப்பட்ட தொகையினை மனுதாரருக்கு இரண்டு வார காலத்திற்கு திருப்பி செலுத்த கோரப் படுகிறது.

20. மேற்சொல்லப்பட்ட கருத்துப்படி இந்த சீராய்வு வகை செய்யப்படுகிறது. செலவுத் தொகையின்றி, இதில் தெளிவாக்கப்படுவதாது, எதிர்வாதிகள் 1, 2/எதிர்வழக்கீட்டாளர்கள் 1, 2 மூன்றாம் எதிர்வாதி மூன்றாம் எதிர்வழக்கீட்டாள ருக்கு எதிராக கோரிக்கை ஏதேனும் இருப்பின் இதனை அவர்கள் மெய்ப்பித்து, சட்டம் அறி முறையில் செயற்படுதல் வேண்டும். ஏனெனில் இவர்கள் வழக்கு முழுவதிலும் முன்னிலையாக வில்லை. அனைத்து நடவடிக்கைகளுக்கும் மற்றும் இந்த நீதிமன்றத்தின் முன்பும் முன்னிலை யாகவில்லை என்பது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# ஓட்டுனர், நடத்துனர் பணிக்கு அமர்த்தப்பட்டவர்களை தொழிற்சங்க நிர்வாகி என இதரப் பணிகள் (OD) என்ற பெயரில் பணிசெய்ய அனுமதிக்கக் கூடாது

**சென்னை உயர்நீதிமன்றம் - மதுரை அமர்வு**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி என்.சதீஷ்குமார்**
**மாண்புமிகு நீதிபதி எம்.ஜோதிராமன்**
**நீ.பே.(மஅ) எண் 11596/2026**
**நாள் 05/06/2026**

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர் சம்மேளனம் சார்பாற்றம் - அதன் பொதுச் செயலாளர் திரு.கே.ஆறுமுகநயினார்,**
**52, குக்ஸ் சாலை, சென்னை 12. ...மனுதாரர்**

**-எதிர்-**

1. **தமிழ்நாடு அரசு - சார்பாற்றம் அதன் கூடுதல் தலைமைச் செயலாளர், போக்குவரத்துத் துறை,சென்னை 9.**
2. **நிர்வாக இயக்குனர், தநாஅபோக, திருநெல்வேலி**
3. **நிர்வாக இயக்குனர், தநாஅபோக, கும்பகோணம்**
4. **நிர்வாக இயக்குனர், தநாஅபோக, கோயம்புத்தூர்**
5. **நிர்வாக இயக்குனர், தநாஅபோக, விழுப்புரம்**
6. **நிர்வாக இயக்குனர், தநாஅபோக, சேலம்**
7. **நிர்வாக இயக்குனர், அவிபோக, சென்னை**
8. **நிர்வாக இயக்குனர், மாபோக, சென்னை ...எதிர்மனுதாரர்கள்**

**வேண்டுகை**: இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 226-வது பிரிவின் கீழ் பேராணை கோரும் மனு தாக்கல் செய்யப்பட்டு இதன் மூலம், எதிர்மனுதாரர்கள், ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களை அவர்கள் நியமிக்கப்பட்ட அந்தந்தப் பிரிவுகளில் வேலை ஒதுக்கீடு செய்யாமலோ அல்லது வேலை வாங்காமலோ, அவர்களை ‘இதர பணிகளில்’ ஈடுபடுத்துவதைத் தடுத்து நிறுத்துவதற்கும்;மேலும், போக்குவரத்து (சி1) துறையின் 31.10.2018 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.322 முதல் 328-க்கு முரணாகவும், 28.09.1995 நாளிட்ட ஒப்பந்தத்தின் இணைப்பில் உள்ள பிரிவு 9 மற்றும் 1947-ஆம் ஆண்டின் தொழில் தகராறுகள் சட்டத்தின் பிரிவு 12 (3)-ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட 31.08.2005 நாளிட்ட ஒப்பந்தத்தின் பிரிவு 12 (xviii)-க்கு முரணாகவும் அவர்களுக்குச் சம்பளம் வழங்குவதைத் தடுத்து நிறுத்துவதற்கும், ஒரு ‘செயல்பாட்டுப் பேராணை’ பிறப்பிக்க வேண்டும் என்று கோரப்படுகிறது.

மனுதாரர் தரப்பில்: மூத்த வழக்கறிஞர் திரு. எ. பிரபு ராஜதுரை, திரு. அ. ராகுல் அவர்களுக்காக

எதிர்மனுதாரர்கள் தரப்பில்: திரு. கு. வெங்கடேஷ் (கீ1), அரசு வழக்கறிஞர்

திரு.கீ.ராமையா (RR2, 6 & 8), கழகங்களுக்கான வழக்கறிஞர்

திரு. கு.இ. ஹெரால்டுசிங் (கீ7) வழக்கறிஞர்

## உத்தரவு

(நீதிபதி என். சதீஷ்குமார் அவர்களால் நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.)

ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களை அவர்கள் நியமிக்கப்பட்ட அந்தந்தப் பிரிவுகளில் வேலை ஒதுக்கீடு செய்யாமலோ அல்லது வேலை

வாங்காமலோ, அவர்களை 'இதர பணிகளில்' ஈடுபடுத்துவதைத் தடுத்து நிறுத்துவதற்கும்; மேலும், போக்குவரத்து (சி1) துறையின் 31.10.2018 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 322 முதல் 328-க்கு முரணாகவும், 28.09.1995 நாளிட்ட ஒப்பந்தத்தின் இணைப்பில் உள்ள பிரிவு 9 மற்றும் 1947-ஆம் ஆண்டின் தொழில் தகராறுகள் சட்டத்தின் பிரிவு 12(3)-ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட 31.08.2005 நாளிட்ட ஒப்பந்தத்தின் பிரிவு 12 (xviii)-க்கு முரணாகவும் அவர்களுக்குச் சம்பளம் வழங்குவதைத் தடுத்து நிறுத்தக் கோரி, ஒரு உத்தரவைப் பிறப்பிக்க வேண்டி இந்த பேராணை மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்தப் பேராணை மனுவில் எழுப்பப் பட்டுள்ள இதேபோன்றதொரு பிரச்சினையை, 02.03.2026 நாளிட்ட W.P.(MD)No.451 of 2019 என்ற வழக்கில் இந்த நீதிமன்றம் ஏற்கனவே பரிசீலித்து, பின்வருமாறு தீர்ப்பளித்துள்ளது:

'7. 2025-ஆம் ஆண்டில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தகவல்கள், ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களாக நியமிக்கப்பட்ட நபர்களுக்கு இதர பணிகள் வழங்கப் பட்டுள்ளதை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. அதேசமயம், மதுரை மண்டலத்திலிருந்து பெறப் பட்ட ஒரு தகவலின்படி, அவர்கள் வெளி ஆள்முறை அடிப்படையில் தற்காலிக ஓட்டுநர் களை நியமிக்க அனுமதி கோரியுள்ளது தெரிய வருகிறது. உண்மையில், 362 காலிப் பணி யிடங்கள் உள்ளதாகவும், அந்தப் பணி யிடங்கள் வெளிஆள்முறை மூலம் நிரப்பப்பட வேண்டும் என்றும் அதில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

நிரந்தரப் பணியாளர்கள் ஏற்கனவே ஒரு குறிப்பிட்ட பதவியில் நியமிக்கப்பட்டுள்ள நிலை யில், நிர்வாகப் பணி என்ற பெயரில் அவர் களுக்கு இதர வேலைகளை ஒதுக்குவதைப் பார்க்கும்போது, மனுதாரரின் வாதம் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே நாங்கள் கருது கிறோம். நபர்கள் நடத்துநர்களாகவோ அல்லது ஓட்டுநர்களாகவோ நியமிக்கப்படும்போது, அவர்களின் முதன்மையான பணி ஓட்டுநர் அல்லது நடத்துநர் பணியாக மட்டுமே இருக்க வேண்டும். அவர்கள் பணியின்போது ஏதேனும் ஊனம்/மாற்றுத்திறன் ஏற்பட்டு, ஓட்டுநர் அல்லது நடத்துநர் பணி செய்யத் தகுதி யற்றவர்கள் என்று கண்டறியப்பட்டால் தவிர, மற்றபடி அவர்களுக்கு வேறு எந்தப் பணியும் ஒதுக்கப்படக் கூடாது. அந்தச் சூழ்நிலையில் மட்டுமே, அவர்களின் ஆரோக்கிய நிலைக்கு ஏற்ப பொருத்தமான வேறு பதவிகளில் அவர்களுக்குப் பணி வழங்கப்படலாம்.

8. எனவே, போக்குவரத்து (சி1) துறையின் 31.10.2018 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.321 மற்றும் இது தொடர்பாக எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் பிரிவு 9 ஆகியவற்றை உடனடி யாகவும் கண்டிப்பாகவும் அமல்படுத்துமாறு எதிர்மனுதாரர்களுக்கு நாங்கள் உத்தரவிடு கிறோம். ஆளும் கட்சியைச் சார்ந்த எந்தவொரு தொழிற்சங்கத்தைச் சேர்ந்த ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கும், இனிமேல் 'இதர பணி' என்ற பெயரில் எந்தவொரு நிர்வாகப் பணியும் வழங்கப்படக் கூடாது என்பதை நாங்கள் தெளிவுபடுத்துகிறோம். எதிர்மனுதாரர்கள் இந்த நீதிமன்றத்தின் உத்தரவை மீறினால், எந்த வொரு தொழிலாளியோ அல்லது தொழிற் சங்கமோ நீதிமன்ற அவமதிப்பு மனுவைத் தாக்கல் செய்ய வழிவகை உள்ளது.'

3. மேற்கூறிய உத்தரவைக் கருத்தில் கொண்டு, இந்த பேராணை மேல்முறையீடு அதற்கேற்ப முடிவு செய்யப்படுகிறது. எதிர்மனுதாரர்கள்/அரசு அதிகாரிகள், அரசாணைகளை எவ்வித விலகலு மின்றி அதன் உண்மையான அர்த்தத்துடனும், நோக்கத்துடனும் அமல்படுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இந்த உத்தரவை நடைமுறைப் படுத்தாதது அல்லது மீறுவது போன்ற ஏதேனும் நிகழ்வுகள் ஏற்பட்டால், அது குறித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக இந்த நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும். இதன் விளைவாக, இதனுடன் தொடர்புடைய இதர மனுவும் முடிக்கப்படுகிறது. செலவுத் தொகை குறித்து எந்தவொரு உத்தரவும் இல்லை.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

# தடையுறுத்து ஆணையும் உரிமை மூல பாத்தியதையும்

சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்)
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி ஆர்.விஜயகுமார்
இ.மே.எண் 1105/106/2002
நாள் : 24.7.2025
இ.மே.எண் 1105/2002
2025 (5) CTC 815

ஆர்.திருஞானசம்பந்தமூர்த்தி ...மேல்முறையீட்டாளர்

–எதிர்–

1. என்.துரை 2. எம்.கோவிந்தராஜ்
3. எஸ்.ஆர்.ராமதாஸ் ...எதிர்வழக்கீட்டாளர்கள்

எம்.கண்ணன், மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்

ஆர்.தேவராஜ் எதிர்வழக்கீட்டாளர் எண் 1இன் வழக்கறிஞர், இ.மே.எண் 1105/200. இரண்டாம் எதிர்வழக்கீட்டாளருக்கான இ.மே. எண் 1106/2002, எதிர்வழக்கீட்டாளர் எண் 2, 3க்காக. அவன் முன்னிலையாகவில்லை. இ.மே.எண் 1105/2002 எதிர்வழக்கீட்டாளர் எண் 1 இ.மே.எண் 1106/2002.

இ.மே. தள்ளுபடி செலவுத் தொகையின்றி.

**கோரிக்கை** : இ.மே.எண் 1105/2002 இரண்டாம் மேல்முறையீடு மு.வ.எண் 32/1990. இது திருச்சிராப்பள்ளியில் II கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றக் கோப்பில் உள்ளது. இதன் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை 9.4.2001 தேதியிடப்பட்டது. இது IIஆம் கூடுதல் மாவட்ட நீதிபதி திருச்சிராப்பள்ளியில் கோப்பில் உள்ளது. மே.வ.எண் 172/2001 தேதிய வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப் பட்டது. இது 20.12.2001 தேதியிடப்பட்டது. இதில் உ.வி.தொ.ச.இன் 100ஆம் பிரிவின்படி இரண்டாம் மேல்முறையீடு முன்னிடப்பட்டது.

**இ.மே.எண் 1106/2002** மு.வ.எண் 1437/1994 திருச்சிராப்பள்ளி II கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றக் கோப்பில் உள்ளது. இதன் 9.4.2001 தேதியிடப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை. இதனை உறுதி செய்து மே.வ.எண் 173/2001இன் ஆணை இந்தக் கோப்பு II கூடுதல் மாவட்ட நீதிபதி திருச்சிராப்பள்ளியில் கோப்பில் உள்ளது. இதனை எதிர்த்து உ.வி.தொ.ச.இன் 100ஆம் பிரிவின்படி இரண்டாம் மேல்முறையீடு முன்னிடப்படுகிறது.

தீர்ப்பு 2.7.2025க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு 24.7.2025 வெளியிடப்பட்டது.

## தீர்ப்பு

1. திருஞானசம்பந்தமூர்த்தி இவர் வழக்கில் வாதி இதில் நிலையான தடையுறுத்து ஆணை கோரி விளம்பக் கோரப்பட்டது மற்றும் வேறு வழக்கில் மூன்றாம் எதிர்வாதி இது நிலையான தடையுறுத்து ஆணை கோரியதில் மேல்முறை யீட்டாளர்.

(ஆ) பொருண்மை பற்றி

2. வழக்கின் பட்டியல் சொத்து இரு வழக்கு களிலும், ஒன்றே, இது முதலில் ஏ.கிருஷ்ண மூர்த்தி என்பவருக்கு சொந்தமாக இருந்தது. சொல்லப்பட்ட ஏ.கிருஷ்ணமூர்த்தி மெசர்ஸ் சுஜாதா ரேடியஸ் கார் யுரேனியம் கடன் வாங்கி யிருந்தார். சொல்லப்பட்ட கார்ப்பரேஷன் மு.வ.எண் 467/1972இன் முன்னிட்டு கடன் தொகையைப் பெற முயற்சித்தது. வழக்கு நடப்பில் உள்ளபோது இடைநிலை பற்றுகை அதாவது வழக்கின் சொத்தினை இணைத்து உள்ளது. இது மு.மே.எண் 378/1972இல் 23.6.1992 தேதியிடப்பட்டது. இதில் பற்றுகை 29.6.1992 முழுமைப்படுத்தப்பட்டது. இடைநிலைப் பற்றுகை ஆணை செயற்பாட்டில் உள்ளபோதே சொல்லப்பட்ட கிருஷ்ணமூர்த்தி ஒரு பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணத்தை முருகன் வங்கியாளர்கள் சார்பாக செய்துள்ளார். ExA1இன்படி 4.10.1972 அன்று முருகன் வங்கியாளர்கள்

இவர்கள் பங்காக சொத்தினை விற்றுள்ளனர். துரை என்பவருக்கு அவர் வாதி மு.வ.எண் 32/1990. ExA2 18.11.1992 தேதியிட்டதில்.

சொத்தானது காம.எண் 87/1974இன் ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டது மற்றும் ஏலம் வைக்கப்பட்டது. 12.2.1975 அன்று. திரு.என். கோவிந்தராஜ் இதனை வாங்கியுள்ளார். சொல்லப்பட்ட விற்பனை உறுதி செய்யப்பட்டது மற்றும் விற்பனைச் சான்றிதழ் பிறப்பிக்கப் பட்டது அவர் சார்பாக. 23.4.1976 அன்று.

4. ஏலத்தில் வாங்கியவர் (கோவிந்தராஜ்) ஆக விற்பனை உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அதாவது ராமதாஸ் என்பவருடன் 7.3.1983 அன்று காட்சி பி1 அதன் பின்னர் ஏலத்தில் வாங்கியவர்/கோவிந்தராஜ் ஒரு பதிவு செய்யப்பட்ட விடுவிப்பு ஆவணத்தை நிறைவேற்றினார். அதாவது முதன்மை சொந்தக்காரர் சார்பாக/தீர்ப்புக் கடனாளி சார்பாக. அதாவது ஏ.கிருஷ்ணமூர்த்தி சார்பாக. அதாவது ஏ.கிருஷ்ணமூர்த்தி சார்பாக ExB2 4.4.1983இன்படி இந்த விடுவிப்பு ஆவணத்தின் அடிப்படையில் சொல்லப்பட்ட கிருஷ்ணமூர்த்தி ஒரு பதிவு செய்யப்பட்ட அதிகார ஆவணம் ராமதாஸ் சார்பாக Ex B18, 25.9.1989 தேதியிட்ட வாதி அதன் பின்னர், சொல்லப்பட்ட ராமதாஸ் ஒரு பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணத்தை திரு.ஞானசம்பந்த மூர்த்தி சார்பாக நிறைவேற்றினார். இது 15.3.1994 தேதியிடப்பட்டது. Ex B10இன்படி (தற்போதைய மேல்முறையீட்டில் அவர் மேல்முறையீட்டாளர்).

5. 18.11.1972 தேதியிடப்பட்ட விற்பனை ஆவணத்தின் அடிப்படையில் துரை மு.வ.எண் 32/1990இனை முன்னிட்டார். இது எம்.கோவிந்தராஜ்க்கு எதிரானது. ராமதாஸ் மற்றும் திருஞானசம்பந்தமூர்த்தி உரிமைமூல ஆவணம் விளம்புகை செய்யக் கோரினார் மற்றும் நிலையான தடையுறுத்து ஆணை Ex B10 விற்பனை ஆவணத்தை ஆதாரமாகக் கொண்டார். அது 15.3.1994 தேதியிடப்பட்டது. திருஞானசம்பந்தமூர்த்தி மு.வ. எண் 1437/994 முன்னிடப்பட்டது. இதில் நிலையான தடையுறுத்து ஆணை கோரப்பட்டது.

இரண்டு வழக்குகளும் ஒன்றாக விசாரிக்கப்பட்டனர் மற்றும் தீர்ப்பாணை விசாரணை நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டது. விசாரணை நீதிமன்றம் இதில் தீர்ப்பாணை பிறப்பிக்க முன் வந்தது. மு.வ.எண் 32/1990 என்.துரையால் முன்னிடப்பட்டது. திருச்சியில் இதில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை எதிர்க்கப்பட்டது. விசாரணை நீதிமன்றத்தினால் இரண்டு வழக்குகளிலும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம், இரண்டு மேல்முறையீடுகளையும் தள்ளுபடி செய்தது. இது திருஞானசம்பந்த மூர்த்தியால் முன்னிடப்பட்டது. இதில் ஒருங்கிணைந்த கண்டறிதல்களை எதிர்த்தது.

தற்போயை இரண்டாம் மேல்முறையீடு திருஞானசம்பந்தமூர்த்தியால் முன்னிடப்பட்டது.

6. இரண்டாம் மேல்முறையீடுகள் பொருட்டான சட்டக் கேள்வியின்பேரில் ஏற்கப்பட்டது.

கீழ்நிலை நீதிமன்றங்களின் தீர்ப்புகள் மற்றும் தீர்ப்பாணைகள் சட்டப்படி பொருட்டானதா. ஏனெனில் இவற்றில் சாட்சியத்தினை ஆதரிக்கவில்லை. அதாவது பதிவேட்டில் கிடைத்த சாட்சிகளை மற்றும் இதில் சரியான சட்டநில இந்த பொருண்மைகளுக்கு பொருந்தத்தக்கது இந்த வழக்கில்

(அ) இரு தரப்பினர்களின் வழக்கறிஞர்களாலும் பணிந்தனுப்புதல்கள் பின்வருமாறு.

7. மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையாகி வழக்கறிஞர் பணிந்தளித்தது. அந்த விற்பனை ஆவணம் கிருஷ்ணமூர்த்தியால் நிறைவேற்றப்பட்டது. Ex A1இன்படி முருகன் வங்கியாளர் சார்பாக 4.10.1972 தேதியிடப்பட்டது. இது ஒரு விரிவான ஆவணம் இதில் பொருண்மையின் கருத்துப்படி பற்றுகை ஆணை விசாரணை நீதிமன்றத்தினால் செய்யப்பட்டது. இது இருந்து வருகிறது. இத்தகைய சூழ்நிலைகளில் சொல்லப்பட்ட முருகன் வங்கியாளர்கள் எந்த உரிமை மூல ஆவணத்தை அளிக்க முடியாது. ஆவணத்தை திரு.என் துரைக்கு (வாதி மு.வ.எண் 32/1990) இது E2இன்படி 18.11.1972 தேதியிடப்பட்டவாறு).

8. மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் மேலும் பணிந்தளிப்பது சொத்தினை வாங்குவதற்கு முன்னர் இவர் வில்லங்க சான்றிதழுக்காக விண்ணப்பத்திருந்தார் மற்றும் அது (Ex B31, 32) என தேதியிடப்பட்டது. வில்லங்க சான்றிதழ்கள் Ex A1 அல்லது A2 விற்பனை ஆவணத்தை குறிப்பிடவில்லை. எனவே, மேல்முறையீட்டாளர் இதனை மதிப்பான மறுபயனுக்காக நல்லெண்ணத்தில் வாங்கியவராவார். அதாவது முந்திய விற்பனை எதுவும் அறிந்திராத நிலையில்.

9. வழக்கறிஞர் மேலும் கூறியதாவது முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் தவறுதலாக சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 5 இன்படியான முரண் தடையைக் கொண்டு வந்துள்ளது. அவருக்கிணங்க மேல்முறையீட்டாளர் நல்லெண்ணத்தில் விளங்கியவர். மதிப்பான மறுபயனுக்காக, இதில் உரிமை மூல பாத்தியதை முருகன் வங்கியருக்கு உரிமையை உறுதி செய்யாது. வழக்கறிஞர் மேலும் கூறியதாவது. உ.வி.தொ.ச.இன் பிரிவு 64இன் கருத்தில் தனியார் விற்பனை கிருஷ்ணமூர்த்தியால் செய்யப்பட்டது. முருகன் வங்கியாளர்கள் சார்பாக ExA1இன்படி விழலானதாகும். அந்த விற்பனை ஆவணம் விழலானதாகும்போது, இது செய்யத்தக்கதாகாது. அதாவது முரண் தடைக்கு எதிராக செயற்படுவதாகக் கொள்வது. இதில் சட்டத்திற்கு எதிராக முரண் தடை என்னும் பொருண்மையே இல்லை.

10. மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையாகிற வழக்கறிஞர் மேலும் கூறியதாவது ExB12 விற்பனைச் சான்றிதழ் 16.2.1976 தேதியிடப்பட்டதில் அறியப்படுவது. பல்வேறு வில்லங்கங்கள். தெளிவு செய்ய வேண்டி யுள்ளது. அதாவது ஏலத்தில் வாங்கியவர் தொடர்பாக. இந்த வில்லங்கங்கள் ராமதாஸால் தெளிவாக்கப்பட்டன. ExB13 to B16 வரையி லானவர்களின்படி. எனவே, இதில் தெளிவாவது விற்பனை சான்றிதழ்களில் குறிப்பிட்ட வில்லங்கங்கள் சரி செய்யப்பட்டன. ராமதாஸ் என்பவரால் அதாவது சொத்து விற்கப்படுவதற்கு முன்னர் மேல்முறையீட்டாளர் சார்பாக ExB10 15.3.1934 தேதியிடப்பட்டதன் மூலம்.

11. மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர், உச்சநீதிமன்ற வழக்கின் தீர்ப்பினை ஆதாரமாகக் கொண்டுள்ளார். ஜெஹால் தன்தி மற்றும் பிறர் –எதிர்– நாகேஷ் வா சிங் (இறப்பு) அவரது சட்ட வாரிசுகள் மூலம் 2013 (14) உச்.நீ.வ. 689. இதில் வாதமாவது தடையுறுத்து ஆணைக்குப் பின் உடனடியாக சொத்தானது. பராதீனம் செய்யப்படும்போது இதனை பிறப்பித்த விசாரணை நீதிமன்றத்தின் எதிர்ப்பு அல்லது மறுபயன் பற்றி கருதுகை செய்யப்பட வேண்டும். அதாவது அது சட்டப்படியானதா என்பதை எனவே விற்பனை விழலாகக் கூடும். தற்போதைய வழக்கில், அவருக்கிணங்க விற்பனை, பற்றுகை ஆணைக்கு மீறுகையாக செய்யப்பட்டிருக்கும் போது அது விழலாகும் மற்றும் சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 43 செயற்படுத்தப்பட முடியாது.

12. மாறாக எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் பணிந்தளிப்பது பற்றுகை ஆணை ExB9இன்படி செயற்படுத்தப்பட்டது. இது பற்றி அலுவலகத்தில் எனவே விற்பனை கிருஷ்ண மூர்த்தி செய்யப்பட்டது. அதுவும் முருகன் வங்கியர் சார்பாக. ExA1இன்படி இது செல்லத் தக்க ஆவணம் முருகன் வாங்கினார். அதாவது வாதி துரை இதனை நல்லெண்ணத்தில் வாங்குபவர்கள். இவர் நீதிமன்றத் தீர்ப்பினை ஆதாரமாகக் கொண்டுள்ளார். இ.மே.எண் 797/2017, 8.3.2024 தேதியிடப்பட்டது. (ஆர்.கருப்பண்ணன் –எதிர்– நடராஜன் (இறப்பு) மற்றும் பிறர், 2024 (2) த.த.வ. 594, 2024 (2) (M.W.N.) (உரிமையியல்) 119. இந்த நீதிமன்றம் இதனை கருதுகை செய்ய முற்பட்டதில் கட்டளை 38 விதி 11(ஆ) உ.வி.தொ.ச.இன்படி இது அவருக்கு ஆதாரமாக உள்ளதான வாதம்.

13. எதிர்வழக்கீட்டாளருக்கான வழக்கறிஞர் மேலும் பணிந்தளித்ததாவது விடுவிப்பு ஆவணம். கட்டுச் சொந்தக்காரர்களுக்கிடையே மட்டுமே அது நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில் ஒரு முன்பே உள்ள உரிமை இருக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில் ஒரு முன்னே உள்ள உரிமை இருக்குமானால் மட்டுமே. இந்த விடுவிப்பு ஆவணம் நிறைவேற்றப்படுகிறது என்பது () விடுவிப்பு ஆவணம் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்பட்டது. இது ஏலத்தில் வாங்குபவரால்

கிருஷ்ணமூர்த்தி சார்பாக செய்யப்பட்டது. இது செல்லத்தக்க ஆவணம் அல்ல.

14. எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் மேலும் பணிந்தளித்ததாவது உ.வி.தொ.ச.இன் பிரிவு 64 ஒரு நடைமுறையில் தன்மை பற்றியது. இது தேன் கோரிக்கையை மட்டுமே பாதிக்கும். இவை பற்றுகை ஆணையிலிருந்து எழுவது மற்றும் விற்பனை ஆவணம் எதுவும் இந்த பற்றுகை ஆணையில் மீறுகை கருதுகை செய்யப்பட முடியாது. இது ஒரு விரலான ஆவணம். வழக்கறிஞர் மேலும் பணிந்தளிக்கப் படுவதாவது திருஞானசம்பந்தமூர்த்தியில் உரிமை மூல ஆவணம் கேள்வியாக்கப்பட்டது. நுரையீரலில் மற்றும் இவர் மு.வ.எண் 32/1990 முன்னிடப்பட்டது. உரிமை மூல ஆவணம் விளம்புகை செய்யப்படுகிறது மற்றும் நிலையான தடையுறுத்து ஆணை திருஞான சம்பந்தமூர்த்தி கூறியதாவது. மூன்றாம் எதிர் வாதி. இத்தகைய சூழ்நிலைகளின் திருஞானசம்பந்த மூர்த்தி மு.வ.எண் 1437/1994இனை முன்னிட்டுள்ளார். இவர் தடையுறுத்து ஆணை என்னும் உய்தியைக் கோர முடியாது. அதாவது உரிமை மூல ஆவணம் என்று விளம்புகை செய்வதற்கான கோரிக்கையின்றி.

15. எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் மேலும் பணிந்தளித்ததாவது, உரிமை மூல ஆவண விளம்புகைக்கான வழக்கு மற்றும் நிலையதனை தடையுறுத்துகளை 4.1.1990இல் துரை என்பவரால் முன்னிடப்பட்டது. திருஞான சம்பந்தமூர்த்தி வழக்கின் இணைப்புச் சொத்தினை 15.3.1994 அன்று வாங்கியுள்ளார். இதில் வழக்கு நடப்பில் இருக்கிறது. எனவே, வழக்கு உள்ளபோது, இதனை வாங்கியவர் மற்றும் இவர் அந்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு கட்டுப் பட்டவர். மு.வ.எண் 32/1990இன்படி எனவே, இவர் தனிப்பட்ட உரிமை மூல ஆவண உரிமை கோர முடியாது.

16. எதிர்வழக்கீட்டாளருக்காக முன்னிலை யாகிற வழக்கறிஞர் மேலும் பணிந்தளித்த தாவது திருஞானசம்பந்தமூர்த்தி இதனை நல்லெண்த்தில் வாங்கியவர் அல்ல. இவர் ராமதாஸ் என்பவரின் நெருங்கிய நண்பர் மற்றம் இதன் பற்றுகை ஆணை பற்றி. இவர் அறிந்திருந்தார் மற்றும் ExA. அண்ட் Aஇன்படி செய்ப்பட்ட பராதீனம். இத்தகைய சூழ்நிலைகளில் இவர் ஒரு நல்லெண்ணத்தில் வாங்கும் வாங்குபவர் அல்ல. எனவே, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் சரியாகவே பிரிவு 43. சொத்து உரிமை மாற்றுச் சட்டத்தினை செயற்படுத்தியுள்ளது. அதுவும் தற்போதைய மேல்முறையீட்டுக்காரருக்கு எதிராக.

17. எதிர்வழக்கீட்டாளருக்கான வழக்கறிஞர் மேலும் பணிந்தளித்ததாவது, கிருஷ்ணமூர்த்தி ராமதாஸ் சார்பாக. ------- ஆவணத்தை நிறைவேற்றியுள்ளார். அது ExB18 25.9.1989 தேதியிடப்பட்டது. இது அறவு செய்யப்பட்டது மற்றும் தாங்கள் வெளியிடப்பட்டது. 15.9.1953 அன்று ExA11 இன்படி இந்த பகர அதிகார ஆவணம் இரத்தான பின்னர், சொல்லப்பட்ட ராமதாஸ் ஒரு விற்பனை ஆவணத்தை நிறைவேற்றியுள்ளார். அதாவது திருஞானசம்பந்தமூர்த்தி சார்பாக. ExB10 இன்படி 15.3.1994 அன்று. எனவே, விற்பனை ஆவணம் நிறைவேற்றப்பட்ட தேதியன்று பகர அதிகார ஆவணம் முகவர் சார்பாக ரத்து செய்யப்பட்டது மற்றும் இது செய்தித்தாளில் வெளியிடப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலைகளில் விற்பனை ஆவணம் திருஞானசம்பந்தமூர்த்தி சார்பாக. ExB10இன்படி செய்யப்பட்டது. ஒரு செல்லத்தக்க ஆவண மல்ல. எனவே இவர் இந்த மேல்முறையீடுகளை தள்ளுபடி செய்ய கோரியுள்ளனர்.

18. இரு தரப்பினருக்கும் கேட்டறியப் பட்டனர். பதிவேடுகள் கூர்ந்தாய்வு செய்யப் பட்டன.

19. கலந்தாய்வு முதன்முதலான வாத மாவது மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் தாவாவில் உள்ள இணைப்புச் சொத்து முதலில் கிருஷ்ணமூர்த்தி என்பவருக்குச் சொந்தமானது. இது பற்றுகை செய்யப்பட்ட மு.வ.எண் 378/1978, 25.3.1972 தேதியிடப்பட்டதில் மற்றும் 29.6.1972இல் அது முழுமையாக்கப்பட்டது. எனினும் விற்பனை ஆவணம் குழுக்கள் வங்கியாளர்கள் சார்பாக கிருஷ்ணமூர்த்தியால்

18.11.1972 அன்று நிறைவேற்றப்பட்டது. ExA2 இன்படியானது. எனவே, விற்பனை ஆவணம் கிருஷ்ணமூர்த்தியால் எழுதியளிக்கப் பட்டது. முருகன் வங்கியாளர் சார்பாக எழுதி கொடுக்கப்பட்டது. அதாவது பற்றுகை ஆவண செயற்பாட்டில் உள்ளபோது அது விழலாகம். அதாவது உ.வி.தொ.ச. 64ஆம் பிரிவின்படி.

20. உச்சநீதிமன்றத் தீர்ப்பு பாலகிருஷ்ண குப்தா மற்றும் பிறர் –எதிர்– சுவஅஅ பாலி டெக்னிக் மற்றும் பிறர் பிறர், 1985 (2) உச்.நீ.வ. 167 பத்தி 30 பின்வருமாறு.

“30. 1708 உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 64 கூறிய தாவது ஒரு சொத்தில் பற்றுருதி செய்யப்படுகிற விடத்து, பற்றுதல் செய்யப்பட்ட சொத்து, உரிமை மாற்றம் செய்யப்படுகிற அல்லது ஒப்படைப்பு செய்யப்படுகிறவிடத்து அல்லது உள்ள உரித்தம் எதுவும் மற்றும் தீர்ப்புக் கடனாளியினால் செய்யப்படுகிற செலுத்தம் எந்த கடன் ஆதாயப் பங்கு, அல்லது பிற பயன்கள். பற்றுவைக்கு மாறானது அது விழலானத்தக்கதான. அதாவது பற்றுக்காக செயற்பாடுபடுத்தப்படுகிறவிடத்து உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 64 பிரிவின்படி இது தடை செய்யப்பட்டுள்ளது. தனியார் உரிமை மாற்றம் தீர்ப்பு கடனாளி தொடர்பாக. பற்றுகை செய்யப்பட்ட சொத்து தொடர்பாக. பற்றுகைக்கு எதிரானவை. தீர்ப்பாணை பெற்றவருக்கு முரணாக உள்ளது. எதிர்பார்ப்பு பற்றி தீர்ப்பாணை பற்றுகை செயற்பாட்டினால், ஒரு தனியார் உரிமை மாற்றும் உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் 64ஆம் பிரிவின் படி. இதில் நடைமுறை விழலானதாகும். அதாவது உலகத்திற்கே எதிராக விழலாகும். ஆனால் பற்றுகையை செயற்படுத்துவதற்கு எதிரான கோரிக்கைகளுக்கு மட்டுமே விழலான தாகும். உள்ளபடியே சொத்து விற்கப்படும் வரையில் தீர்ப்புக் கடனாக பற்றுகை செய்யப் பட்ட சொத்து தொடர்பாக.

21. சட்டப்படியான கருத்துப்படி உச்ச நீதிமன்றம் மேலே கூறப்பட்டவாறு இது தெளிவாக்கப் படுவதாவது. நிறைவேற்றப்பட்ட ஆவணம். அதாவது பற்றுகை ஆணைக்கு மீறதலானது. இது முழுவதுமாக விழலானதாகும். ஆனால் விழலானது பற்றுகை ஆணைக்க மட்டுமே எதிரானது. எனவே, இதில் தெளிவாக்கப்படுவ தாவது கிருஷ்ணமூர்த்தியால் செயற்படுத்தப்பட்ட விற்பனை ExA1இன்படி சட்டத்தின் கண்களில் செல்லத்தக்கதாகும். அதாவது உலகம் முழுவதற்கும் எதிராக ஆனால் தீர்ப்புக் கடனாளி நீங்கலாக. மு.வ.எண் 4671/1972 பெயர் பழ.அஜந்தா வியாபார கார்க்கரேஷன். தற்போதைய வழக்கில் ஏற்கப்பட்டவாறு தீர்ப்புக் கடனாளி (அதாவது அஜந்தா வியாபார கார்ப்பரேஷன் அல்லது ஏலத்தில் விற்றவர் (கோவிந்தராஜ்) ஏதேனும் எதிர்ப்பை எழுப்பியிருப்பார். அதாவது தனிப்பட்ட பராதீனம் தொடர்பாக. கிருஷ்ணமூர்த்தியால் செய்யப்பட்டது தொடர்பாக. இத்தகைய சூழ்நிலை களில், எதிர்க்கப்பட்ட விவாதங்கள் மேல்முறை யீட்டாளரின் வழக்கறிஞர் அதாவது விழலானது தொடர்பாக. ExA1 விற்பனை ஆவணம். இது நிராகரிக்க கடப்பாடுடையது.

22. ஏற்கப்பட்டவாறு கிருஷ்ணமூர்த்தி சொத்தின் சொந்தக்காரர் 4.10.1972 தேதியிடப்பட்ட ExA, விற்பனை ஆவணத்தை அவர் நிறைவேற்றி யுள்ளார். முருகன் வங்கியாளர் சார்பாக. அதன் பின்னர், முருகன் வங்கியாளர் அந்தச் சொத்தினை ExA2க்கு விற்றுள்ளார். 18.11.1972 அன்று வாதி சார்பாக மு.வ.எண் 32/1990இன்படி மீண்டும் அந்த கிருஷ்ணமூர்த்தி ஒரு பகர அதிகார ஆவணத்தை ராமதாஸ் சார்பாக நிறைவேற்றி யுள்ளார். அதாவது ExB18 25.9.1989இன் பேரில், அவர் இந்தச் சொத்தினை ஏற்றுள்ளது. மேல்முறையீட்டாளர் சார்பாக ExB18 பேரில் 15.3.1994 அன்று எனவே, இதில் தெளிவாக்கப்படுவது கிருஷ்ண மூர்த்தி அந்த தாவாவில் உள்ள இணைப்புச் சொத்தினை இருமுறையாக பாராதீனம் செய்துள்ளார். சொத்துரிமை மாற்றம் சட்டத்தின் புது சட்டப்பிரிவில் கருத்துப்படி அதே அசையாச் சொத்து உரிமை மாற்றம் செய்யப்படுகிறவிடத்து வெவ்வேறு காலங்களில் இதில் இரண்டாம் உரிமை மாற்றம் முதல் உரிமை மாற்றத்தின் உரிமைக்க உட்பட்டதாக இருக்கும். இதில் வேறு சிறப்பான ஒப்பந்தம் இருந்தாலன்றி அல்லது

முதல் உரிமை மாற்றம் செய்பவரின் ஒதுக்கீட்டுகளை கட்டுப்படுத்துவதாக அமையும். அத்தகைய ஒதுக்கீடு எதுவும் அல்லது சார்பு கூறு ExA1இல் காணப்படுவது வாங்குபவரின் உரிமைகளை கட்டுப்படுத்துகிறது. அதாவது சொல்லப்பட்ட ஆவணத்தின்படி இத்தகைய சூழ்நிலைகளில் ExA, A விற்பனை ஆவணங்கள் முன்னுரிமை பெறும். அதாவது ExB10 விற்பனை கருத்துப்படி சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 48ஆம் பிரிவின்படியான கருத்தில்.

23. இதில் மேல்முறையீட்டாளர், DW4ஆக விசாரிக்கப்படுகிறார். முதன்மையான விசாரணையில் மேல்முறையீட்டாளர் கூறியுள்ளதாவது அவர் ராமதாஸ் என்பவருடன் விசாரணை செய்துள்ளார். அதாவது சொத்தின் வில்லங்கங்கள் பற்றி அதாவது ExB12இல் குறிப்பிடப்படாதவை பற்றி. ExB12 விற்பனைச் சான்றிதழ் தொடர்பாக. அதன் அனைத்து வில்லங்கங்கள் பற்றியும் கேட்டறிந்துள்ளார். அவை தீர்க்கப்பட்டது பற்றியும். இவர் குறுக்கு விசாரணை செய்யப்படும் போது அவர் தெளிவாக ஏற்றதாவது அவர் ராமதாஸ் மு.வ.எண் 32/1990 நடப்பில் உள்ளது பற்றிக் கூறவில்லை. மேல்முறையீட்டாளர் ஏற்றுக் கொள்வதாவது அதாவது அவருக்கு ராமதாஸினை அவரது இளம்பருவத்திலிருந்தே தெரியும் என்பது மற்றும். இவர் வில்லகங்கங்கள் பற்றி சரிபார்த்துள்ளார். விற்பனைச் சான்றிதழ் பற்றியும் அறிந்துள்ளார். ஆனால் இவருக்கு வழக்கு எண் 32/1990 நடப்பில் உள்ளது பற்றி கூறப்படவில்லை அல்லது கிருஷ்ணமூர்த்தியால் நிறைவேற்றப்பட்ட விற்பனை ஆவணம் பற்றி கூறப்படவில்லை. அதாவது ExA1இன்படி எனவே, இதில் தெளிவாக்கப்படுவது மேல்முறையீட்டாளர் நல்லெண்ணத்தில் இதை வாங்குபவர் இத்தகைய சூழ்நிலைகளில் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் சரியாகவே சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 43இனைச் செயற்படுத்தியுள்ளது. அதாவது முருகன் வங்கியாளருக்கு உரிமைமூல ஆவணத்தை உறுதி செய்வதற்காக மற்றும் வாதி மு.வ.எண் 32/1990. இதில் ExA1 விற்பனை ஆவணம் விழலான ஆவணம் துணிபு கொண்டபோதிலும்.

24. இந்த நீதிமன்றம் ஏற்கனவே கூறியுள்ளதாவது ExA1இன்படி விற்பனை பற்றுகை ஆணைக்கு மீறு தலையிடாது. இருந்தாலும் ஏலத்தில் வாங்குபவர் விடுதலை ஆவணத்தை நிறைவேற்றிய உடன் அதாவது கிருஷ்ணமூர்த்தி சார்பாக ExB2இன்படி கிருஷ்ணமூர்த்தி அதன் சொந்தக்காரர் சுனிராவ் கிருஷ்ணமூர்த்தி அவரின் சொந்தக்காரர் அல்லது என்று. துணிவு கொண்டால் ExA1 முருகன் வங்கியாளர் சார்பாக நிறைவேற்றப்பட்டது. ExB2 மூலமான உரிமை மூல ஆவணம் கட்டாயமாக சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 43 செயற்படுத்தப்படும். சொல்லப்பட்ட கிருஷ்ணமூர்த்தி அவர் சொத்தினை ExA1 இன்படி விற்றபோது அதாவது முருகன் வங்கியாளருக்கு இவருக்கு உரிமை மூல பாத்தியதை இல்லை என்று கூற முடியாது. இத்தகைய சூழ்நிலையில் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் சரியாகவே முரண்தடை மூலம் வாதியை அந்த ஏறக்குறைய செயற்படுத்துவது. அதாவது மு.வ.எண் 32/1970இன்படி என்பது.

25. ExB8 அதிகார ஆவணம் கிருஷ்ணமூர்த்தியால் நிறைவேற்றப்பட்டதை கூர்ந்தாய்வு செய்வதில், இது ராமதாஸ் சார்பாக என்பதும் இது பகர அதிகார ஆவணம் உடன் உரித்தத்துடனானது. ExA11இனை கூர்ந்தாய்வு செய்ததில் 15.9.1993 தேதியிட்ட தாளில் வெளியிடப்பட்டது. அதில் குறிப்பிட்டுள்ளதாவது அதிகார ஆவணம் ரத்து சொல்லப்படுகிறது என்பது. எனினும் மேல்முறையீட்டாளர் சார்பான விற்பனை ஆவணம் ராமதாஸினால் நிறைவேற்றப்பட்டிருந்தது. ExB10 இன்படி இது 15.3.1994 தேதியிடப்பட்டது. எனவே இதில் தெளிவாவது, அதிகார ஆவணம் அறவு செய்யப்பட்ட பின்னர், முகவர் ஒரு விற்பனை ஆவணத்தை மேல்முறையீட்டாளர் சார்பாக நிறைவேற்றியுள்ளார். இத்தகைய சூழ்நிலைகளில் ExB10 விற்பனை ஆவணம் மேல்முறையீட்டாளர் சார்பானது. இத்தகைய சூழ்நிலைகளில் ExB10 விற்பனை ஆவணம் சட்டத்தின் கண்களில் செல்லத்தக்கதல்ல மற்றும் இது மேல்முறையீட்டாளர் சார்பாக உரிமை மூல பாத்தியதை ஏற்படுத்தவில்லை என்பது.

26. இணைப்புச் சொத்தினைக் கூர்ந்தாய்வு செய்வதில் அறியப்படுவதாவது தாவாவில் உள்ள இணைப்புச் சொத்தில் வீட்டு சொத்து உள்ளது. வீட்டு வரி சீட்டுகள் சொல்லப்பட்ட வீட்டிற்கானது ExA3, A4, A7 முதல் A10 வரை யிலானவை மற்றும் மின்சார நுகர்வுக்கான கட்டணங்கள் ExA5, A6இன் படியானது முன்னிடப் பட்டுள்ளது. இதில் தெளிவான மெய்ப்பிக்கப் படுவதாவது மு.வ.எண் 32/1990இல் வாதி தாவாவில் உள்ள இணைப்புச் சொத்தினை கையுடைமையில் கொண்டுள்ளார். ExB20, எதிர்வாதிகள் தரப்பில் முன்னிடப்பட்டுள்ளன. அதாவது வீட்டு வரி சொத்துக்கள் ஏலத்தில் விற்றவர் சார்பான ஆவணங்களை அதாவது கோவிந்தராஜ் பெயரில் இந்த ஆவணங்கள் 1989 முதல் 1991 வரையிலான காலங்கக பொருண்மையின்படி 14.4.1983 ExB2இன்படி சொல்லப்பட்ட கோவிந்தராஜ் விடுவிப்பு ஆவணம் எதனைக் கூறுவதானது ஏலத்தில் வாங்கியவர் இணைப்புச் சொத்துக்கள் கையு டைமையில் தடுக்கவில்லை. அதாவது பாகப் பிரிவினை வழக்கின் கருத்தில் இது கிருஷ்ண மூர்த்தியின் இளையர் மகள் முன்னிடப்பட்டது. எனவே இந்த நீதிமன்றம் 1989 முதல் 1997 வரை யிலான வீட்டு வரி சீட்டுகளை நம்பத் தயாராக இல்லை. இவை கோவிந்தராஜ் பெயரில் உயிலை அதாவது (ஏலத்தில் வாங்கியவர் பெயரில்)

27. கு.வ.எண் 32/1990 தவிர என்பவரால் முன்னிடப்பட்டது. இதில் உரிமை மூல பாத்தியதை விளம்புகை மற்றும் நிலையான தடையுறுத்து ஆணை கோரப்பட்டது. சொல்லப் பட்ட வழக்கு, இதில் தற்போதைய மேல்முறை யீட்டாளர் இடையீட்டாளராக மூன்றாம் எதிர்வாதி தற்போயை மேல்முறையீட்டாளர் இந்த வழக்கை முன்னிட்டுள்ளார். மு.வ.எண் 1437/1994 தடையுறுத்து ஆணை கோரியுள்ளார். மு.வ.எண் 32/1990 இல் வாதியால் இணைப்புச் சொத்தின் உரிமை மூல ஆவணம் பூசலில் உள்ளது என்பது அவர் நன்கு அறிந்தது.

28. உச்சநீதிமன்றம் இந்தத் தீர்ப்பில் அதாவது அலிதுல்லா சுதாகர் –எதிர்– பி.புச்சி ரெட்டி இறப்பு சார்பாற்றம் ச.சா.2008 (6) த.த.வ. 237 (உச்.நீ.). 2008 (4) உச்.நீ.வ. 594, பத்தி எண் 21(அ) வில் கூறப்பட்டதாவது வாதியின் உரிமை மூல ஆவணம் தொடர்பாக சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருக்கிறவிடத்து வழக்கு விளம்புகைக் காகவும் உள்ளடக்காகவும் அதனுடனான தடையுறுத்து ஆணையுடனோ இல்லாமலோ கோருவது உய்தியாகும். தற்போதைய வழக்கில் இந்த நீதிமன்றம் ஒரு கண்டறிதலும் ஏற்கனவே வந்துள்ளது. தற்போதைய மேல்முறையீட்டாளர் எந்த ஆவணத்தையும் முன்னிடவில்லை. அதாவது அவரது உடைமையை நிரூபிப்ப தற்காக உதுவும் தாவாவில் உள்ள இணைப்புச் சொத்து தொடர்பாக அதாவது வழக்கு தொடுக்கப் பட்ட தேதியில், வேறு வகையில் வாதிகள் மு.வ. எண் 32/1990இல் அவரது உடைமையை நிரூபித்துள்ளார். அதாவது இணைப்பு வழக்கின் இணைப்புச் சொத்து தொடர்பாக. அதாவது வழக்கு முன்னிடப்பட்ட தேதியில், இதில் சந்தேகம் எழுப்பப்படும்போது அதுவும் மேல்முறை யீட்டாளரின் உரிமை மூல ஆவணம் பற்றி, இதில் தடையுறுத்து ஆணை கோருவது செல்லத் தக்கதாகாது. அதுவும் உரிமை மூல ஆவண விளம்புகையைக் கோராமல்.

29. இதில் மேலும் வாதிடப்பட்டதாவது ExB12 இன்படியான வில்லங்கம், விற்பனை சான்றிதழ் இது அதிகார முகவர் ராமதாஸினால் தெளிவாக்கப்பட்டது. அதன் பின்னர் இது மேல் முறையீட்டாளருக்கு விற்கப்பட்டது. எனவே, மேல்முறையீட்டாளர் இதனை நல்லெண்ணத்தில் வாங்குபவர் இந்த பதிவேடுகளை கூர்ந்தாய்வு செய்வதில் அறியவருவதாவது. வில்லங்கங்கள் சரிய செய்யப்பட்டன என்பது அதுவும் அதிகார முகவரால் அதுவும் மு.வ.எண் 32/1990 முன்னிடப்பட்டதற்குப் பின்னர் எனவே இத்தகைய வாதம் பற்றி எதிர்த்து கூற இயலாது.

30. மேற்சொல்லப்பட்ட வாதங்களின் கருத்துப்படி, பொருட்டடான சட்டக் கேள்வியானது மேல்முறையீட்டாளருக்கு எதிராக அளிக்கப் படுகிறது. தீர்ப்பு மற்றும் தீர்ப்பான்மை அதுவும் கீழ்நிலை நீதிமன்றங்களுக்கிடையேயான உறுதி செய்யப்படுகிறது. இரண்டாம் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை யின்றி.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# நீதியும் ஏஐ-யும் ஒரு புதிய திருப்பம்

## மனித நேயத்தை மீறாமல் பயன்படுத்த வேண்டிய தொழில்நுட்பம்

– மாண்புமிகு டாக்டர் நீதிபதி எஸ்.விமலா,
உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி



நீதி தேவதையின் தராசுத் தட்டில் இன்று ஒரு புதிய எடைக்கல்லாகச் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) வந்து அமர்ந்துள்ளது. உச்சநீதிமன்றத்தின் செயற்கை நுண்ணறிவுக் குழு வெளியிட்டுள்ள 2026ஆம் ஆண்டுக்கான வரைவு விதிமுறைகள், காலத்தின் கட்டாயத்தை உணர்ந்த ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நுகர்வு, மனிதர்களின் முதன்மைத்தன்மை, வெளிப்படைத் தன்மை, நீதித் துறைச் சுதந்திரம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு இந்த வரைவு உருவாக்கப்பட்டுள்ளது மிகுந்த பாராட்டுக்குரியது.

நீதியரசின் மூளையும் கணினியின் வேகமும் இணையும் இந்தப் புதிய பயணம், சட்ட நடைமுறைகளை எளிமையாக்கும் எனக் கணிக்கப்படுகிறது . அதே வேளையில், மனித மாண்புகளைத் தொலைத்துவிடக் கூடாது என்பதே நம் அனைவரின் கவலை. இந்தத் தொழில்நுட்பத்துக்கும் நீதித் துறைக்குமான உறவு, ஒரு சிறந்த உற்ற துணையாகப் பரிணமிக்க வேண்டும். இந்த வரைவின் சில முக்கிய அம்சங்களைப் பார்க்கலாம்.

### அனுமதிக்கப்பட்ட ஏஐ பயன்பாடுகள்

செயற்கை நுண்ணறிவு ஓர் உதவி செய்யும் கருவியாக மட்டுமே, உரிய அதிகாரிகளின் முன் அனுமதியுடன் பயன்படுத்தப்பட வேண்டும். முந்தைய தீர்ப்புகள், சட்ட மேற்கோள்கள் (citations) சரிபார்த்தல், சட்ட ஆவணங்களைச் சுருக்குதல் ஆகிய சட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ளலாம். நீதிமன்ற நடைமுறைகளை மக்கள் எளிதில் புரிந்து கொள்ள ஏஐ உரையாடல் உதவியாளர்கள் (Chatbots) மூலம் வழிகாட்டலாம்.

குரல்–எழுத்து, எழுத்து–குரல் மாற்றம்/பிரெய்லி (Braile) வசதிகள் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்குச் சேவை வழங்கலாம். தனிப்பட்ட அடையாளங்களை மறைத்தல் (Anonymisation) சம்மன்/நோட்டீஸ் தானியங்கி உருவாக்கம் போன்ற நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளலாம்.

### தடை செய்யப்பட்ட ஏஐ பயன்பாடுகள்

மனிதத் தலையிடு இன்றி வழக்கின் இறுதி முடிவை ஏஐ வழங்கக் கூடாது. தண்டனை தொடர்பான ஏஐ பகுப்பாய்வு ஆலோசனையாக மட்டுமே இருக்க வேண்டும். மனிதக் கண்காணிப்பு கட்டாயம், ஒருவர் மீண்டும் குற்றம் செய்வாரா, பிணையில் தப்புவாரா, சாட்சி உண்மையா என்பதைக் கணிப்பதில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தக் கூடாது. அடிப்படை உரிமைகளைப் பாதிக்கும் வழக்குகளின் விளக்கமளிக்க முடியாத ஏஐ கருவிகளைப் பயன்படுத்தக் கூடாது. நீதிமன்ற வளாகங்களில் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், மக்கள் ஆகியோரை ஏஐ மூலம் தொடர்ச்சியாகக் கண்காணிக்கக் வடாது.

### வலுப்படுத்த வேண்டியவை

சட்டமும் தர்மமும் வெறும் காகிதங்களில் மட்டும் இல்லை அவை வழக்காடு மன்றங்களில் கண்ணீரோடு நிற்கும் சாமானிய மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தவை. இந்த வரைவு விதிமுறைகள் மனிதர்களின் முதன்மைத் தன்மையையும் தரவுப் பாதுகாப்பையும் உறுதி செய்வதை ஒரு நற்செய்தியாகவே பார்க்க முடிகிறது.

இருப்பினும் ஒரு முக்கியப் பாதுகாப்பு ஏற்பாடாக, 'கறுப்புப் பெட்டி' (Black Box) முடிவுகளை எவ்வாறு எடுக்கிறது என்பதை விளக்க முடியாத ஏஐ அமைப்புகளை நீதிமன்றங்களில் பயன்படுத்துவதைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும். தீர்ப்புகளின் அடிநாதமாக விளங்குவது வெளிப்படைத்தன்மை, ஓர் இயந்திரம் எவ்வாறு குறிப்பிட்ட முடிவுக்கு அல்லது நிலைக்கு வந்து சேர்ந்தது என்று விளக்க முடியாத நிலை ஏற்பட்டால், அது நீதித் துறை மீதான மக்களின் ஆழமான நம்பிக்கையைச் சிதைத்து விடும்.

மேலும், வழக்காடுபவர்களின் தனிப்பட்ட/முக்கியமான நீதித் துறைத் தரவுகள் இந்த அமைப்புகளில் பயன்படுத்தப்படும்போது, அவற்றின் தனியுரிமை காக்கப்பட வேண்டும். அநாமதேயமாக்கல் (anonymisation) போன்ற தொழில்நுட்பப் பாதுகாப்புகள் காகிதத்தில் மட்டுமல்லாமல், நடைமுறையில் எந்தவிதச் சமசரமும் இன்றிப் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்த ஒரு சுதந்திரமான தணிக்கைக் குழுவின் நேரடிக் கண்காணிப்பு அவசியம்.

**தேவைப்படும் திருத்தங்கள்**

நடைமுறைச் சிக்கல்களைப் பார்க்கும்போது, இந்த வரைவில் சில முக்கியமான திருத்தங்கள் தேவைப்படுகின்றன. வழக்கறிஙர்கள் அல்லது வழக்காடுபவர்கள் ஏஐ உதவியோடு ஆவணங்களைத் தயாரிக்கும்போது ஏற்படும் பிழைகளுக்கோ அல்லது சட்ட முன்மாதிரிகளைத் தவறாக உருவாக்கும் 'மாயத்தோற்றங்களுக்கோ' (Hallucinations) பயனர்களே முழுப்பொறுப்பு என வரைவு குறிப்பிடுகிறது. ஏற்கனவே பணிச்சுமையில் இருக்கும் வழக்கறிஞர்களின் தோள்களில் பெருஞ்சுமையை இது ஏற்றுகிறது. நீதிமன்றத்தின் அன்றாடச் செயல்பாட்டு நெருக்கடிகளில், இயந்திரம் தரும் ஒவ்வொரு தரவையும் நுணுக்கமாகச் சரிபார்ப்பது பெரும் சவாலான காரியம். எனவே, இந்தத் தொழில்நுட்பத்தை வழங்கும் தனியார் நிறுவனங்களுக்கும் (AI Service Providers) இயந்திரங்களில் ஏற்படக் கூடிய தவறுகளில் சரிபாதி சட்டரீதியான பொறுப்பு (shared liability) இருப்பது கறித்த ஒரு திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும்.

மேலும், ஆவணங்களைத் தயாரிப்பதில் ஏஐ பயன்படுத்தப்பட்டதை வெளிப்படுத்த, ஒவ்வொரு முறையும் ஒரு தனிச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும் என்கிற கட்டாயம், நீதிமன்ற நடைமுறைகளை மேலும் தாமதப்படுத்தலாம். இதற்குப் பதிலாக, மின்னணுத் தாக்கல் (E-filing) தளங்களிலேயே ஓர் எளிய 'டிக்-பாக்ஸ்' (tick-box) முறையை அறிமுகப்படுத்துவது வழக்கறிஞர்களுக்கும் நீதிமன்ற ஊழியர்களுக்கும் பணிச் சுமையைக் குறைக்கும்.

**விழிப்புணர்வும் திறன் வளர்ப்பும் அவசியம்**

ஏஐ உருவாக்கும் தவறுகளைக் கண்டறிவது எப்படி என்பது குறித்து வழக்கறிஞர்களுக்கும் நீதிமன்ற ஊழியர்களுக்கும் தொடர்ச்சியான, கட்டாயப் பயிற்சிகளை (capacity building) நடைமுறைப்படுத்த வேண்டும்.

சட்டமும் சமதர்மமும் தழைக்க நாம் தொழில்நுட்பத்தைக் கைக்கொள்ள வேண்டும். ஆனால் அது மனிதநேயத்தை மீறியதாக இருக்கக் கூடாது. நீதிமன்றங்களில் செயற்கை நுண்ணறிவு நுழைவது, நீதியை விரைவுபடுத்தும் ஒரு கருவியாக மட்டுமே இருக்க வேண்டும். மனித உணர்வுகளையும் சமூகச் சூழலையும் வழக்காடுபவர்களின் வலிகளையும் உணர்ந்து தீர்ப்பளிக்கும் ஆளுமை மனிதர்களுக்கு மட்டுமே உண்டு. உச்ச நீதிமன்றத்தின் இந்த வரைவு விதிமுறைகள் அதற்கான ஒரு சிறந்த அடித்தளத்தை அமைந்துள்ளன. இந்த நடைமுறைத் திருத்தங்களையும் வலுவான பாதுகாப்பு அரண்களையும் இணைத்தால், இந்திய நீதித் துறைக்கே இது ஒரு சிறந்த முன்னுதாரணமாகத் திகழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**நன்றி : இந்து தமிழ் திசை 16.6.2026**

# நீதித்துறையில் ஊழல் இல்லை என யாரும் மறுக்க முடியாது நீதிபதிகளை புனிதர்களாக சித்தரிக்கும் அவசியமில்லை

**‘கருப்பு’ திரைப்படத்துக்கு தடை கோரிய வழக்கில் நீதிபதிகள் உத்தரவு**

நீதித்துறையில் ஊழல் இல்லை என யாரும் மறுக்க முடியாது. அதேபோல நீதிபதிகளை புனிதர்களாகச் சித்தரிக்க வேண்டிய அவசியமும் இல்லை என்று கருப்பு படத்துக்கு தடை கோரிய வழக்கை தள்ளுபடி செய்து, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

நடிகரும், இயக்குநருமான ஆர்.ஜே.பாலாஜி இயக்கத்தில் நடிகர் சூர்யா, நடிகை த்ரிஷா நடித்து சமீபத்தில் வெளி வந்துள்ள கருப்பு திரைப்படத்தில் நீதித் துறையையும், நீதிபதிகளையும் அவமதிக்கும் வகையில் காட்சிகள் எடுக்கப்பட்டுள்ளதால் அப்படத்துக்கு தடை விதிக்க வேண்டும் எனக் கோரி கோடம்பாக்கத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஆர்.எஸ்.தமிழ்வேந்தன், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை தள்ளுபடி செய்து நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது.

‘கருப்பு’ திரைப்படத்தின் கதைக்களம் முழுக்க, முழுக்க நீதித்துறையின் செயல்பாடுகளை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ளது. அப்படத்தில் வரும் நீதிபதி ஊழல்வாதியாகவும், செல்வாக்குமிக்க வழக்கறிஞர் நீதிமன்ற நடைமுறைகளில் அதீத அதிகாரம் செலுத்தும் மையப் புள்ளியாக திகழ்வதாகவும் காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. நீதித் துறையில் ஊழல் இல்லை என்று யாரும் இங்கு மறுக்க முடியாது. ஊழல் நீதிபதிகள் நேற்றும் இருந்தார்கள். அதேபோல், நீதிபதிகளை புனிதர்களாகச் சித்தரிக்க வேண்டிய அவசியமும் இல்லை.

நாட்டில் உள்ள 20 சதவீத நீதிபதிகள் ஊழல்வாதிகள் என்பதை உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி பருச்சா கேரளாவில் நடைபெற்ற ஒரு சட்ட கருத்தரங்கில் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார். மும்மை உயர்நீதிமன்றம் தொடர்பான ஒரு வழக்கில், ஊழல் என்னும் புற்றுநோய் செல்கள் நீதித்துறையின் உயிர் நாடிகளுக்குள் தொடர்ந்து ஊடுருவி வருவதாக உச்சநீதிமன்றமும் கருத்து தெரிவித்துள்ளது

நீதித்துறை அந்த அபாயகரமான செல்களை அறுவை சிகிச்சையின் மூலம் வேரோடு களைய வேண்டும் என்றும், சீர்திருத்த நடவடிக்கைகள் மூலமாக நீதித்துறை சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டிய அவசியம் குறித்தும் உச்சநீதிமன்றம் அந்த தீர்ப்பில் எடுத்துரைத்துள்ளது.

வழக்கறிஞர்கள் சிலர் ஊழல் வாதிகளுடன் தொடர்பு கொள்ளாமல் நீதித்துறையில் ஊழல் நடைபெற வாய்ப்பு கிடையாது. நீதித்துறையில் நடைபெறும் ஊழல் நிகழ்வுகளை நாங்களும் அறிவோம். அதேநேரம் அந்த கூற்றை முழுமையாக ஆதரிக்க மாட்டோம்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் முழு நீதிபதிகள் அமர்வு அவ்வப்போது இதுபோன்ற கருப்பு ஆடுகளை களையெடுத்துக் கொண்டு தான் இருக்கிறது. கருப்பு திரைப்படத்தில் வரும் காட்சிகள் மிகைப்படுத்தி எடுக்கப்பட்டுள்ளன என்பது உண்மைதான் என்றாலும், அதை முழுவதுமாக மறுக்க முடியவில்லை.

கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம், படைப்பாளியான திரைப்பட கலைஞர்களுக்கும் பொருந்தும். தனது அதீத கற்பனையால் அரசியல் ரீதியாக கருத்து சித்திரம் வெளியிடும் ஒரு கார்ட்டூனிஸ்டுக்கு என்ன பரந்த உரிமை உள்ளதோ அதே உரிமை திரைப்படக் கலைஞர்களுக்கும் உள்ளது.

'கருப்பு' திரைப்படத்துக்கு தணிக்கை வாரியமே சான்று அளித்திருக்கும்போது, நீதிமன்றம் அதன் கருத்தை மாற்றியமைக்க முடியாது. நாம் இப்போது சமூக ஊடகங்களின் யுகத்தில் இருக்கிறோம். யார் வேண்டுமென்றாலும் எதையும் சொல்லி எளிதாக தப்பி விடலாம். கூற்று கொஞ்சம் கொடூரமானதாக இருந்தாலும் அதை புறக்கணித்து நீதித்துறையின் பயணம் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

இந்தப் படத்தில் ஏழுகிணறு நீதிமன்றம் என கற்பனையாக சித்தரிக்கப்பட்டு அங்கு ஊழல் நடக்கிறது என படத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதேயன்றி, ஒட்டு மொத்த நீதித்துறையையும் அந்தப் படம் கேள்விக்குறியாக்கவில்லை. மேலும் ஏழுகிணறு நீதிமன்றம் என்ற பெயரில் சென்னையில் எந்த நீதிமன்றமும் இல்லை என்பதால் இந்த வழக்கில் நீதிமன்ற அவமதிப்பு இருப்பதாகக் கருதி படத்தின் இயக்குநர் மீதும், படத்தில் நடித்த நடிகர்கள் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. இவ்வாறு உத்தரவிட்டு வழக்கை தள்ளுபடி செய்துள்ளனர்.

**நன்றி: இந்து தமிழ் திசை 29.05.2026**

---

## ட்ரம்ப் அமல்படுத்திய எச்1பி விசா கட்டண உயர்வு ரத்து அமெரிக்க மாசசூசெட்ஸ் மாகாண பெடரல் நீதிமன்றம் தீர்ப்பு

எச்1பி விசா கட்டண உயர்வை அமெரிக்க நீதிமன்றம் ரத்து செய்துள்ளது. கடந்த 1990ஆம் ஆண்டில் எச்1பி விசாவை அமெரிக்க அரசு அறிமுகம் செய்தது. இதன் மூலம் அமெரிக்க நிறுவனங்கள், திறன்வாய்ந்த வெளிநாட்டு, ஊழியர்களை தற்காலிக அடிப்படை யில் பணியமர்த்தி வருகின்றன. எச்1பி விசாவுக்கான கட்டணம் ரூ.1,000 டாலர் முதல் 7,500 டாலராக (ரூ.1 லட்சம் முதல் ரூ.6 லட்சம் வரை) இருந்தது.

கடந்த ஆண்டு செப்டம்பரில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், எச்1பி விசாவுக்கான கட்டணத்தை ஒரு லட்சம் டாலராக (ரூ.95 லட்சம்) உயர்த்தினார். இதற்கு அமெரிக்காவின் பன்னாட்டு நிறுவனங்கள், ஜனநாயக கட்சி கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

இந்த சூழலில் எச்1பி விசா கட்டண உயர்வை எதிர்த்து கலிபோர்னியா, மாசசூசெட்ஸ், அரிசோனா, கொலராடோ, கனெக்டிகட், டெலவெயர், ஹவாய், இலினாய், மேரிலேண்ட், மிச்சிகன், மினசோட்டா உள்ளிட்ட 20 மாகாண பெடரல் நீதிமன்றத்தில் கடந்த ஆண்டு டிசம்பரில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை நீதிபதி லியோடி சொரோகின் விசாரித்து நேற்று முன்தினம் தீர்ப்பு தீர்ப்பு வழங்கினார். "அமெரிக்க நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி எச்1பி விசா கட்டணத்தை அதிபர் ட்ரம்ப் உயர்த்தி உள்ளார். இது சட்ட விரோதமானது. எனவே எச்1பி விசா கட்டண உயர்வு ரத்து செய்யப்படுகிறது என்று தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த தீர்ப்பு குறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறும்போது, பெடரல் நீதிமன்ற நீதிபதிகள் பெரும் சவாலை அளித்து வருகின்றனர். நீதிமனற நடைமுறைகளுடன் போராடுவது பெரும் தொல்லை யாக உள்ளது. நமது நாட்டில் நலனுக்கு எதிராக நீதிபதிகள் செயல்படுவது மிகுந்த வருத்தம் அளிக்கிறது" என்றார்.

அமெரிக்க உள்துறை செயலாளர் மார்க்வெயன் முல்லின் கூறும்போது, "நாட்டு மக்கள், குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் அதிபர் ட்ரம்ப் செயல்பட்டு வருகிறார். அமெரிக்காவின் வேலை வாய்ப்புகளை வெளிநாட்டினர் தட்டிப் பறிப்பதை தடுக்கவே எச்1பி விசா கட்டணம் உயர்த்தப்பட்டது. வெளிநாட்டினரால் நாடு முழுவதும் குற்றங்கள் பெருகுகின்றன. நாட்டின் கலாச்சாரம் சீர்குலைக்கிறது" என்றார். அமெரிக்கா அதிபர் மாளிகை செய்தித் தொடர்பாளர் டெய்லர் ரோஜர்ஸ் கூறும்போது, "எச்1பி விசா கட்டண உயர்வு தொடர்பான மாசசூசெட்ஸ் மாகாண பெடரல் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து அமெரிக்க அரசு சார்பில் மேல்முறையீடு செய்யப்படும். இந்த மேல்முறையீட்டு வழக்கில் அமெரிக்க மக்களுக்கு சாதகமான தீர்ப்பு கிடைக்கும் என உறுதியாக நம்புகிறோம்" என்றார்.

அமெரிக்கா அரசு சார்பில் ஓராண்டில் 65,000 வெளிநாட்டினருக்கு எச்1பி விசா வழங்கப்படுகிறது. இந்த விசாக்களை பெறுவோரில் 73 சதவீதம் பேர் இந்தியர்கள் ஆவர். மாசசூசெட்ஸ் மாகாணபெடரல் நீதிமன்றத் தீர்ப்பை இந்திய தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள் முழு மனதோடு வரவேற்று உள்ளனர். இது குறித்து அமெரிக்காவில் பணியாற்றும் குல்தீப் குமார் கூறும்போது, "அமெரிக்காவின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், மருத்துவமனைகள், நிதி நிறுவனங்கள், ஆய்வு நிறுவனங்கள் இந்திய நிபுணர்களை அதிக அளவில் பணியில் அமர்த்தி இருக்கின்றன. எச்1பி விசாவால் அமெரிக்க நிறுவனங்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. தற்போதைய நீதிமன்ற உத்தரவை அமெரிக்கா நிறுவனங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளன" என்றார்.

**நன்றி : இந்து தமிழ் திசை 10.6.2026**

# 1994ஆம் தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்விச் சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 33/1995)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Compulsory Elementary Education Act 1994 (Tamil Nadu Act No. 33 of 1995)

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 1995ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

தமிழ்நாடு மாநிலத்தில், கட்டாயத் தொடக்கக் கல்வி தொடர்பான சட்டத்தைத் திருத்தி ஒருங்கிணைப்பதற்காகவும் அதற்கெனச் சிறந்த வகைமுறைகளைச் செய்வதற்காகவுமான ஒரு சட்டம்.

இந்திய அரசமைப்பின் 45ஆம் அமைப்பு விதியின்படி அரசானது அரசமைப்பின் தொடக்கத்திலிருந்து பத்தாண்டுக் காலத்திற்குள்ளாக அனைத்துக் குழந்தைகளுக்கும், அவர்கள் பதினான்கு வயதினை நிறைவடைகின்ற வரையில், இலவசமாக கட்டாயக் கல்வியினை வழங்குவதற்கு முயற்சித்தல் வேண்டும் என்பதாலும்.

இந்த மாநிலத்தில் பள்ளி செல்லும் வயதினை அடைந்த குழந்தைகள் அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்குவது எனக் கொள்கை அளவிலான முடிவு ஒன்று தமிழ்நாடு அரசினால் எடுக்கப்பட்டிருப்பதாலும்.

அந்தக் கொள்கை அளவிலான முடிவிற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்கு அத்தகைய அனைத்துக் கட்டாயமாக்குவது தேவையான இருப்பதாலும்.

குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒவ்வொருவரின் பேரிலும், தொடக்கப் பள்ளி ஒன்றில் குழந்தையைப் பயிலச் செய்வதை கட்டாயமான கடமையாக்குவதும் கூட தேவையானதாக இருப்பதாலும்

இந்திய குடியரசின் நாற்பத்து ஐந்தாம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு.

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்** : (1) இந்தச் சட்டம் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்விச் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிப்பிடப்படும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் வேறுபட்ட வகைமுறைகளுக்கு வேறுபட்ட தேதிகள் குறிப்பிடப்படலாம்.

**2. பொருள்வரையறைகள்**: இந்தச் சட்டத்தின், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி.

(1) தொடக்கப்பள்ளி ஒன்றில் வருகைப் பதிவு என்பது. வகுத்துரைக்கப்படும் நாட்களின் எண்ணிக்கை மற்றும் ஓராண்டில் அத்தகைய நாட்கள் மற்றும் ஒவ்வொரு நாளுக்குமான வகையில் கால அளவில் அல்லது கால அளவுகளில் தொடக்கப் பள்ளி ஒன்றில் பயில்வதற்கான வருகைப் பதிவு எனப் பொருள்படும்.

(2) தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு என்பது, அரசினால் பிரிவு 6இன்படி நியமிக்கப்பட்ட தகுதி வாய்ந்த அலுவலர் எனப் பொருள்படும்.

(3) தொடக்கக் கல்வி என்பது வகுத்துரைக்கப்படும் பாடத் திட்டங்களில் அத்தகைய வகுப்பு வரையிலான கல்வி எனப் பொருள்படும்.

(4) தொடக்கப் பள்ளி என்பது, தகுதி வாய்ந்த அதிகார அமைப்பினால், தொடக்கப் பள்ளி என அங்கீகரிக்கப்பட்ட பள்ளி எனப் பொருள்படும் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரால் அல்லது கல்வித் துறையின் அலுவலர் எவராலும் அவ்வாறு அனுமதிக்கப்பட்டு, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று இருந்து வருகின்ற தொடக்கப் பள்ளி எதனையும் உள்ளடக்கும்.

(5) அரசு என்பது மாநில அரசு எனப் பொருள்படும்.

(6) பாதுகாவலர் என்பது, சட்டப்படி அல்லது இயற்கையான உரிமைப்படி அல்லது ஏற்கப்பட்ட வழக்காறின்படி குழந்தை எதனையும் கவனிப்பதோ, பேணி வளர்ப்பதோ அல்லது பாதுகாப்பதோ செய்கின்ற நபர் எவருமோ அல்லது குழந்தை எதனையும் கவனிப்பதையோ, பேணி வளர்ப்பதையோ அல்லது பாதுகாப்பதையோ ஏற்றுக் கொண்டுள்ள அல்லது மேற்கொண்டுள்ள நபர் எவருமோ அல்லது சட்டப்படியான அதிகார அமைப்பு எதனாலும் குழந்தை எதனையும் கவனிப்பதோ, பேணி வளர்ப்பதோ அல்லது பாதுகாப்பதோ ஒப்படைக்கப்பட்டுள்ள நபர் எவருமோ எனப் பொருள்படும்.

(7) பெற்றோர் என்பது, குழந்தை ஒன்றின் தந்தை அல்லது தாய் எனப் பொருள்படும் மற்றும் அது மகவேற்புச் செய்த தந்தையோ அல்லது தாயையோ உள்ளடக்கும்.

(8) பள்ளி செல்லும் வயது என்பது குழந்தை ஒன்றைப் பொறுத்தவரையில் வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய வயது எனப் பொருள்படும்.

(9) ஆண்டு என்பது, ஜுன் திங்கள் 1ஆம் நாளில் தொடங்குகின்ற கல்வியாண்டு எனப் பொருள்படும்.

3. தொடக்கக் கல்வி கட்டாயமாக்கப்படுதல் வேண்டும் (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, பள்ளி செல்லும் வயதை அடைந்த குழந்தை ஒவ்வொன்றுக்கும் தொடக்கக் கல்வியானது கட்டாயமாக்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன் வகைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக, அரசானது, இம்மாநிலத்தில் தேவையானது எனக் கருதும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுடன் கூடிய அத்தகைய எண்ணிக்கையிலான தொடக்கப் பள்ளிகளுக்கு வகை செய்தல் வேண்டும்.

**4. பள்ளி செல்லும் வயதடைந்த குழந்தை ஒன்றின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒவ்வொருவரின் கடமை**: தொடக்கப் பள்ளி ஒன்றில், குழந்தை ஒன்றைப் பயிலச் செய்வது, பள்ளி செல்லும் வயதடைந்த ஒரு குழந்தையின் பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் கடமையாகும்.

**5. விலக்களிப்புகள்** : பள்ளி செல்லும் வயதடைந்த ஒரு குழந்தையின் வருகைப் பதிவானது.

(1) [1][xxx]

(2) நோய், பலவீனம் அல்லது வகுத்துரைக்கப்படும் பிற காரணத்திற்காக, குழந்தையானது தொடக்கப் பள்ளிக்கு வந்த பயில்வதற்குத் தடையாக இருக்குமானால்,

(3) பயிற்றுவிக்கப்படும் கல்வியானது, மனநிறைவளிக்கும் வகையில் இருக்கிறது எனத் தகுதி வாய்ந்த அலுவலரால் விளம்பப்படுகிற நிலையில் அங்கீகாரம் பெறாத பள்ளி எதிலும் குழந்தையானது வந்து பயில்கின்றது என்றால்.

1. 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்வி (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 49/1997) 2ஆம் பிரிவினால் விட்டு விடப்பட்டது.

(4) மனநிறைவளிக்கறி வகையில் இருக்கின்றது எனத் தகுதி வாய்ந்த அலுவலரால் விளம்பப்படக் கூடிய பிற முறை எதிலும் குழந்தையானது பயிற்றுவிக்கப்படுமானால்;

(5) தொடக்கக் கல்விக்கு என வகுத்துரைக்கப்பட்ட வகுப்பு வரையில், தொடக்கப்ப பள்ளியொன்றிலோ அல்லது பிறவாறாகவோ அத்தகைய குழந்தையானது ஏற்கனவே பயிற்றுவிக்கப் பட்டிருக்குமானால்; அல்லது

(6) வகுத்துரைக்கப்படும் பிற காரணம் எதனின்பேரிலும், குழந்தையானது பள்ளிக்கு வந்து பயில்வதில் இருந்து விலக்களிக்கப்படுமானால் கட்டாயம் ஆக்கப்படுதல் கூடாது.

**6. தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு**: (1) அரசு அறிவிக்கையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளையும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளையும் நிறைவேற்றிச் செயற்பாட்டிற்குக் கொண்டு வரும் நோக்கத்திற்காக, மாவட்டக் கல்வி அலுவலரின் படிநிலைக்குக் குறையாத கல்வித் துறையின் அலுவலர் எவரையும் தகுதி வாய்ந்த அலுவலராக நியமிக்கலாம் மற்றும் வெவ்வேறு பகுதிகளுக்கு தனித்தனியாக தகுதி வாய்ந்த அலுவலர்கள் நியமிக்கப்படலாம்.

(2) தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு : (1) அரசு அறிவிக்கையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளையும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளையும் நிறைவேற்றிச் செயற்பாட்டிற்குக் கொண்டு வரும் நோக்கத்திற்காக, மாவட்டக் கல்வி அலுவலரின் படிநிலைக்குக் குறையாத கல்வித் துறையின் அலுவலர் எவரையும் தகுதி வாய்ந்த அலுவலராக நியமிக்கலாம் மற்றும் வெவ்வேறு பகுதிகளுக்கு தனித்தனியாக தகுதி வாய்ந்த அலுவலர்கள் நியமிக்கப்படலாம்.

(2) தகுதி வாய்ந்த அலுவலர்கள், வகுத்துரைக்கப்படும் அதிகாரங்களைச் செலுத்துதலும், அலுவல் பணிகளை ஆற்றுதலும் வேண்டும்.

**7. பணத்தண்டம்**: பிரிவு 4இன்படி தம் கடமையை ஆற்றுவதற்குத் தவறுகிற, பள்ளி செல்லும் வயதடைந்த குழந்தை ஒன்றின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒவ்வொருவரும் நூறு ரூபாய் வரை நீட்டிக்கப்படக் கூடிய பணத் தண்டம் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**8. குற்றச் செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்**: நீதிமன்றம் எதுவும் இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படதத்தக்க குற்றச்செயல் எதனையும், இது குறித்து பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் எழுத்து வடிவில் செய்யப்பட்ட முறையீடு ஒன்றின் பேரில் தவிர, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் கூடாது.

**9. தகுதி வாய்ந்த அலுவலர் முதலானோர் பொது ஊழியர்களாக இருப்பர்**: பிரிவு 6இன்படி நியமிக்கப்பட்ட தகுதி வாய்ந்த அலுவலரும், பிரிவு 8இன்படி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரும், 1860ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) பிரிவு 21இன் பொருளின்படி பொது ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**10. பணிப்புரை வழங்க அரசுக்குள்ள அதிகாரம்**: அரசானது, பொது நலனில் அக்கறை கொண்டு, ஆணையின் வாயிலாக, தகுதி வாய்ந்த அலுவலரை ஆணையில் குறிப்பிடப்பட்ட எந்த நிகழ்விலும் இந்தச் சட்டத்தின்படி விசாரணை செய்யுமாறோ அல்லது தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறோ பணிக்கலாம் மற்றும் தகுதி வாய்ந்த அலுவலரானவர். வகுத்துரைக்கப்படும் கால அளவிற்குள் அவரால் செய்யப்பட்ட விசாரணை அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முடிவினை அரசுக்கு அறிக்கையளித்தல் வேண்டும்.

**11. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்பு**: இந்தச் சட்டத்திற்க அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதற்கும் இணங்கிய வகையில் நல்லெண்ணத்துடன், செய்யப்பட்டுள்ள அல்லது செய்யக் கருதப்பட்டுள்ள செயல் எதற்காகவும்,

அரசுக்கு அல்லது அரசின் அலுவலர் எவருக்கும் எதிராக, உரிமை வழக்கோ, குற்ற வழக்கோ அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவுமோ தொடுத்தல் கூடாது.

**12. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்:** (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதையேனும் நிறைவேற்றுவதற்கு விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்டதற்குப் பின்னர், கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடரோ அல்லது அதனையடுத்து வரும் கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்னர், அப்பேரவையானது அத்தகைய விதி அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதையும் செய்யுமானால் அல்லது அவ்விதி அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதல் ஆகாது என அப்பேரவையானது முடிவு அதன் பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் அல்லது செயல் விளைவு பெறாது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதி அல்லது ஆணையின்படி இதற்கு முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**13. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்:** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமானால், அரசானது, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணை ஒன்றில் மூலமாக, அந்த இடர்ப்பாட்டினை அகற்றும் பொருட்டு சூழல் கோருகிறவாறு, தேவையானவை என்றோ அல்லது உகந்தவை என்றோ, நமக்குத் தோன்றக் கூடிய.ஆனால் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

**வரம்புரை:** ஆனால், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவு முடிவுற்ற பின்பு ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது,

[1][**14. நீக்கமும் காப்பும்:** (1) இதன் பின்பு இந்தப் பிரிவில் கூறப்பட்ட சட்டம் என்று குறிப்பிடப்படுவதான) 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு தொடக்கக் கல்விச் சட்டத்தின் (சட்ட எண் VIII/1920) 32,33,34,35,36,37,38,39 மற்றும் 40 ஆகிய பிரிவுகள் இதனால் நீக்கம் செய்யப்படுகின்றது.

(2) கல்விக்கான வரி விதிப்பு, தீர்வை, கணிப்பு மற்றும் வசூலிப்பு மற்றும் நகராட்சிகளைப் பொறுத்த தொடக்கக் கல்விக்கான நிதிக்கு அரசின் பங்களிப்பு ஆகியவை. மேற்சொன்ன சட்டத்தின் பிரிவுகள் வகையங்களுக்கு இணங்கியவாறும் கூறப்பட்ட பிரிவுகளானவை இந்தச் சட்டத்தில் எப்போதும் இணைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுவது போன்றும் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.]

1. 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்வி (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 49/1997) 3ஆம் பிரிவினால் மாற்றாக அமைக்கப்பட்டது.

**நன்றி: தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**


# ரூ.900/- பணம் செலுத்தி சட்டக்கதிர் ஆண்டு சந்தாதாரர் ஆகுங்கள்

தொடர்புக்கு:

*தொலைபேசி*: **044-24953915** *இமெயில்*: **sattakadir1992@yahoo.co.in**

# 2006ஆம் தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 26/2006)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Educational Development Day (Declaration and Celebration) Act, 2006 (Tamil Nadu Act No. 26 of 2006)

## (as on 31st October, 2023)

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 2006ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15-ஐ **"கல்வி வளர்ச்சி நாள்"** என விளம்புகை செய்வதற்கும், அதனுடன் தொடர்புடைய அல்லது இடைவிளைவான விபரங்களுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15-ஐ **"கல்வி வளர்ச்சி நாள்"** என விளம்புகை செய்வது எனவும், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கல்வி வளர்ச்சி நாளைக் கொண்டாடுவது எனவும் தமிழ்நாடு அரசால் கொள்கை முடிவு ஒன்று எடுக்கப்பட்டுள்ளதால்,

இந்திய குடியரசின் ஐம்பத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு.

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்** : (1) இந்தச் சட்டம் 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் மூலம் குறிக்கக் கூடிய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள்வரையறைகள்**: இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி.

(a) ''தகுதி வாய்ந்த அலுவலர்'' என்பது பிரிவு 5இன்படி அரசினால் நியமிக்கப்பட்ட தகுதி வாய்ந்த அலுவலர் எனப் பொருள்படும்.

(b) ''அரசு'' என்பது மாநில அரசு எனப் பொருள்படும்.

(c) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்.

(d) ''பள்ளி'' என்பது

(i) மாநிலத்தால் அல்லது உள்ளாட்சி அமைப்புகளால் பேணி வரப்படும் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப்பள்ளி எதுவுமோ அல்லது

(ii) அரசமைப்பின் 30ஆம் அமைப்பு விதி (1ஆம் கூறின்கீழ் நிறுவப்பட்டு நிருவகிக்கப்படும் மாநில நிதியிலிருந்து இருந்து உதவி பெறுகிற அல்லது உதவி பெறாத சிறுபான்மையினர் பள்ளி உள்ளடங்கலான தனியார் கல்வி முகவாண்மை எதனாலும் நிறுவப்பட்டு, நிருவகிக்கப்பட்டு அல்லது

பேணி வரப்படும் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி எதுவுமோ  அல்லது

(iii) அரசமைப்பின் 30ஆம் அமைப்பு விதி (1)ஆம் கூறின்கீழ் நிறுவப்பட்டு நிருவகிக்கப்படும் மாநில நிதியிலிருந்து உதவி பெறுகிற அல்லது உதவி பெறாத சிறுபான்மையினர் பள்ளி உள்ளடங்கலான மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி, பதின்மர் (மெட்ரிக்குலேஷன்) பள்ளி, ஆங்கிலோ இந்தியர் பள்ளி அல்லது கீழ்த்திசைப் பள்ளி (oriental school) எதுவுமோ அல்லது

(iv) இதன் பொருட்டு, அரசால் அறிவிக்கப்படக் கூடிய அத்தகைய பிற பள்ளி எதுவுமோ,

எனப் பொருள்படும்.

**விளக்கம்**: இந்தக் கூறின் நோக்கத்திற்காக,

(i) மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி என்பன, மழலையர் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) தொடக்கப் பள்ளி என்பது, ஒன்று முதல் எட்டு வரையிலான வகுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) நடுநிலைப்பள்ளி என்பது, ஒன்று முதல் எட்டு வரையிலான வகுப்புகளையோ அல்லது ஆறு முதல் எட்டு வரையிலான வகுப்புகளையோ கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) உயர்நிலைப் பள்ளி, ஒன்று முதல் பத்து வரையிலான வகுப்புகளையோ அல்லது ஆறு முதல் பத்து வரையிலான வகுப்புகளையோ அல்லது ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளையோ கொண்டிருத்தல் வேண்டும்.

(v) மேல்நிலைப் பள்ளி என்பது ஒன்று முதல் பன்னிரெண்டு அல்லது ஆறு முதல் பன்னிரெண்டு அல்லது ஒன்பது முதல் பன்னிரெண்டு வரையிலான வகுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**3. கல்வி வளர்ச்சி நாளை விளம்புகை**: செய்தல் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15, கல்வி வளர்ச்சி நாள் என இதன் மூலம் விளம்புகை செய்யப்படுகிறது.

**4. கல்வி வளர்ச்சி நாளைக் கொண்டாடுதல்**: (1) ஒவ்வொரு பள்ளியும் கல்வி வளர்ச்சி நாளைக் கொண்டாடுதல் வேண்டும்.

(1) ஒவ்வொரு பள்ளியும் கல்வி வளர்ச்சி நாளைக் கொண்டாடுதல் வேண்டும்.

(2) கல்வி வளர்ச்சி நாளானது, பின்வருமாறு குறித்துரைக்கப்பட்ட முறையில் கொண்டாடப்படுதல் வேண்டும்.

(a) தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப்படமானது அலங்கரிக்கப்பட்டு, அவருக்கு மாணவர்கள் புகழ் அஞ்சலி செலுத்துதல் வேண்டும்.

(b) தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கல்விக்காக ஆற்றிய பணிகள் குறித்து கட்டுரை எழுதுதல், படம் வரைதல் மற்றும் வண்ணம் தீட்டுதல் மற்றும் பேச்சுப் போட்டி போன்ற பல்வகைப்பட்ட போட்டிகள் மாணவர்களுக்கான நடத்தப்படுதல் வண்டும்.

(E) வகுத்துரைக்கப்படும் பிற முறையில்,

(3) கல்வி வளர்ச்சி நாள் விதிமுறை நாளில் வருமானால், அன்றைய நாள் அனைத்து பள்ளிகளுக்கும் பதிலாக மற்றொரு வேலை நாள் விடுமுறை நாளாக தகுதி வாய்ந்த அலுவலரால் விளம்புகை செய்யப்படுதல் வேண்டும்.

**5. தகுதி வாய்ந்த அலுவலர்** : (1) அரசு அறிவிக்கையின் வாயிலாக மாவட்டக் கல்வி அலுவலர் படிநிலைக்கும் குறையாக கல்வித் துறையின் அலுவலர் எவரையும், இந்தச் சட்டத்தில்

வகைமுறைகளைச் செயல்படுத்தும் நோக்கத்திற்காகத் தகுதி வாய்ந்த அலுவலராக நியமிக்கலாம் மற்றும் வெவ்வேறு பகுதிகளுக்கு வெவ்வேறு தகுதி வாய்ந்த அலுவலர்களை நியமிக்கலாம்.

(2) தகுதி வாய்ந்த அலுவலர் வகுத்துரைக்கப்படக் கூடிய அதிகாரங்களைச் செலுத்தலும் பிற பணிகளை ஆற்றுதலும் வேண்டும்.

**6. தகுதி வாய்ந்த அலுவலர் பொது ஊழியராதல் வேண்டும்:** பிரிவு 5இன் கீழ் நியமிக்கப்பட்ட தகுதி வாய்ந்த அலுவலர் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) பிரிவு 21இன் பொருளின்படி ஒரு பொது ஊழியராகக் கருதப்படுதல் வேண்டும்.

**7. பணிப்புரை வழங்குவதற்கான அரசின் அதிகாரம்:** (1) அரசானது, ஆணையின்மூலமாக பொது நலனை முன்னிட்டு அந்த ஆணையில் குறித்துரைக்கப்பட்ட நிகழ்வு எதிலும், இந்தச் சட்டத்தின்படி தகுதி வாய்ந்த அலுவலர் விசாரணை ஒன்றைச் செய்வதற்கோ அல்லது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ பணிக்கலாம், மற்றும் தகுதி வாய்ந்த அலுவலர் தன்னால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் முடிவைக் குறித்தோ அல்லது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முடிவைக் குறித்தோ வகுத்துரைக்கப்படக் கூடிய கால அளவிற்குள் அரசிற்கு அறிக்கையை அளித்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படி தகுதி வாய்ந்த அலுவலரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டதன்பேரில், அரசானது, அது பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய பணிப்புரைகளைப் பிறப்பித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய பணிப்புரையானது இறுதியானதாகவும் கட்டுரைப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

**8. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு:** இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதன்படியோ நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும் தகுதி வாய்ந்த அலுவலருக்கோ, அரசுக்கோ அல்லது அதன் அலுவலர்கள் எவருக்குமோ எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படுதல் கூடாது.

9. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம் (1) அரசு, இந்தச் சட்டத்தில் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடரோ அல்லது அதற்கு அடுத்து வரும் கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்பு அப்பேரவை அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் செய்யுமானால் அல்லது அப்பேரவை அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் கூடாது என்று முடிவு செய்யுமானால், அவ்விதி அல்லது அந்த அறிக்கை அல்லது அவ்வாணை அதற்குப் பின்னர் அவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற்ப நடைமுறைக்கு வராமல் போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாறுதலோ, நீக்கமோ அந்த விதி அல்து அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னர் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**10. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்:** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக, அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ, உகந்ததாகவோ தனக்குத் தோன்றுகிற அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

**வரம்புரையாக:** அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவு முடிவடைந்ததற்கு பின்னர் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

**நன்றி: தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**

# 2021ஆம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டம்
# (தமிழ்நாடு சட்ட எண் 17/2021)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

## The Tamil Nadu State Commission for the Scheduled Castes and Scheduled Tribes Act, 2021)
## (Tamil Nadu Act No. 17 of 2021)

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 2021ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

தமிழ்நாடு மாநிலத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம் ஒன்றை அமைத்துருவாக்குவதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதன் விளைவான பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

இந்திய குடியரசின் எழுபத்து எட்டாம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு.

**அத்தியாயம் - I**

**முன்னுரை**

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்** : (1) இந்தச் சட்டம் 2021ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் மூலம் குறிக்கக் கூடிய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள்வரையறைகள்**: இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி.

(a) ''தலைவர்'' என்பது, பிரிவு 3இன்படி நியமிக்கப்பட்ட ஆணையத்தின் தலைவர் எனப் பொருள்படும்.

(b) ''குடிமை உரிமைகள்'' என்பது, இந்திய அரசமைப்பின் 17ஆம் அமைப்பு விதியின் மூலம் தீண்டாமை ஒழிப்பின் காரணமாக ஒருவர் அடைந்த உரிமை எதுவும் எனப் பொருள்படும்.

(c) ''ஆணையம்'' என்பது, பிரிவு 3இன்படி அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம் எனப் பொருள்படும்.

(d) ''அரசு'' என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்.

(e) ''உறுப்பினர்'' என்பது, ஆணையத்தின் ஓர் உறுப்பினர் எனப் பொருள்படும் மற்றும் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர் செயலாளரை உள்ளடக்கும்.

(f) ''வகுத்துரைக்கப்பட்டது'' என்பது, இந்தச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்.

(g) ''ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்'' என்பது, முறையே, இந்திய அரசமைப்பின் 366ஆம் அமைப்பு விதியின் (24) மற்றும் (25)ஆம் கூறுகளில் அவற்றிற்கு அளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(h) ''மாநிலம்'' என்பது, தமிழ்நாடு மாநிலம் எனப் பொருள்படும்.

**அத்தியாயம்** II

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தமிழ்நாடு மாநில ஆணையம்**

**3. ஆணையத்தினை அமைத்து உருவாக்குதல்**

(1) மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக, தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம் என்று அழைக்கப்படும் ஓர் அமைப்பை இந்தச் சட்டத்தின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை செலுத்துவதற்கும் அதற்கு குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளை ஆற்றுவதற்கும் அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) ஆணையமானது

(i) அரசால் நியமனம் செய்யப்பட்ட பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது

(a) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொடர்பான பொருட்கூறுகளில் சிறந்த அறிவு கொண்டுள்ள உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர். தலைவராக இருத்தல் வேண்டும்.

(b) ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்திற்காகப் பணியாற்றியுள்ள ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினர் எவரையும் சார்ந்த சிறப்புமிக்க நபர் ஒருவர் துணைத் தலைவராக இருத்தல் வேண்டும்.

(c) ஏதேனும் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த மூன்று உறுப்பினர்கள், ஏதேனும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த ஒருவர் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொடர்பான பொருட்கூறுகளில் சிறந்த அறிவு கொண்டுள்ள சிறப்புமிக்க நபர் ஒருவர் உள்ளடங்கிய ஐந்து உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும்.

**வரம்புரை** : உறுப்பினர்களில் ஒருவர் மகளிராக இருத்தல் வேண்டும் மற்றும்

(ii) அரசு கூடுதல் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத இந்திய ஆட்சிப் பணியின் அலுவலர்களிலிருந்து அரசினால் அமர்த்தப்பட்ட உறுப்பினர் செயலாளர் ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**4. தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலமும் பணி நிபந்தனைகளும்**: (1) ஆணையத்தின் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர் ஒவ்வொருவரும் அரசின் விருப்பத்திற்குட்பட்டு, மூன்று ஆண்டுகளுக்கு மிகாத காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும் மற்றும் இரண்டாவது முறைக்கான மறுபணியமர்த்தத்திற்குத் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

**வரம்புரை**: தலைவர் எழுபது ஆண்டுகள் வயது நிறைவடையும் தேதி வரை மற்றும் துணைத் தலைவர் மற்றும் பிற உறுப்பினர்கள் அறுபத்தைந்து ஆண்டுகள் வயது நிறைவடையும் தேதி வரை பதவி வகித்தல் வேண்டும்.

**மேலும் வரம்புரை** : தலைவர் வராதிருத்தல் காரணமாக அல்லது பிற காரணம் எதற்காகவும் அவரது அலுவல் பணிகளை நிறைவேற்ற இயலாதிருப்பின், தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டு அப்பணிகளில் ஈடுபடும் வரையில் அல்லது அந்தத் தலைவர் அவர் பணிகளை மேற்கொள்ளும்

வரையில், துணைத் தலைவர் அல்லது அரசினால் பணித்துரைக்கப்பட்ட அத்தகைய பிற உறுப்பினரால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

**இன்னும் வரம்புரை**: அவ்வாறு பின் நியமிக்கப்பட்ட நபர், அவர் எவரது இடத்தில் நியமிக்கப் பட்டுள்ளாரோ அவ்வுறுப்பினரின் எஞ்சியுள்ள பதவிக் காலத்திற்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

(2) தலைவர், துணைத் தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவர், எந்த நேரத்திலும், அரசுக்கு முகவரியிட்டுத் தன் கைப்பட எழுத்து மூலம் தெரிவித்து, நிகழ்வுக்கேற்ப, தலைவர், துணைத் தலைவர் அல்லது உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம். ஆனால் அவரது பதவி விலகல் அரசினால் ஏற்றுக் கொள்ளப்படும் வரை அவர் பதவியில் தொடருதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், நபர் ஒருவர்

(a) அவர், தீர்க்கப்படாத நொடிப்பு நிலையராக இருக்கிறார் என்றால், அல்லது

(b) அரசின் கருத்தில் ஒழுக்கம் கேட்டினை உள்ளடக்கிய குற்றச்செயல் ஒன்றிற்காகக் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளவராக இருப்பார் என்றால் அல்லது

(c) அவர், மனச்சீர்கேடுற்றவராக, ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் விளம்புகை செய்யப்பட்டு இருப்பார் என்றால், அல்லது

(d) அவர் செயல்பட மறுப்பார் என்றால் அல்லது செயல்படத் திறனற்றுப் போவார் என்றால், அல்லது

(e) அவர் ஆணையத்தின் அனுமதி பெறாமல் ஆணையத்தின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வராதிருப்பார் என்றால், அல்லது

(f) அரசின் கருத்தில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்குக் கேடு விளைவிக்கும் வகையில் அந்த நபர் தாம் தொடர்ந்து பதவியில் இருக்கும் பொருட்டு, நிகழ்வுக்கேற்ப, தலைவர், துணைத் தலைவர் அல்லது உறுப்பினரின் பதவி நிலையைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார் என்றால்,

அரசானது தலைவர், துணைத் தலைவர் அல்லது உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து நீக்கம் செய்தல் வேண்டும்.

**வரம்புரை**: அந்த உறுப்பினருக்குக் கேட்பதற்கு நியாயமான வாய்ப்பொன்று வழங்கப்படும் வரையில், உறுப்பினர் எவரும் பதவியிலிருந்து நீக்கப்படுதல் கூடாது.

(4) தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கென செலுத்த வேண்டிய [1][ஊதியங்கள் மற்றும் படித்தொகைகள்] மற்றும் அவர்களின் பணிவரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படும் வகையில் இருத்தல் வேண்டும்.

5. ஆணையத்தினால் செயல்முறைகள் ஒழுங்குபடுத்தப்படுதல் (1) ஆணையமானது, குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தேவைப்படும்போது கூடுதல் வேண்டும் மற்றும் தலைவர் பொருத்தமெனக் கருதும் நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டும்.

(2) ஆணையத்தின் அனைத்து ஆணைகளும் முடிவுகளும் உறுப்பினர் செயலாளர் அல்லது இதன் பொருட்டு உறுப்பினர் செயலாளரால் உரிய அதிகாரமளிக்கப்பட்ட ஆணையத்தின் பிற அலுவலர் எவராலும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

---

1. 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருச்சச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்ட எண் 25/2022) பிரிவு 3இன் மூலம் மாற்றாக அமைக்கப்பட்டது.

**6. காலியிடங்கள் முதலானவை ஆணையத்தின் நடவடிக்கைகளைச் செல்லத்தகாததாக ஆக்குதல் கூடாது**: ஆணையத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், பொருட்பாட்டின் தகுதிகளைப் பாதிக்காத நிலையில் ஆணையத்தில் காலியிடம் அல்லது அதன் அமைப்பில் குறைபாடு அல்லது தலைவராக அல்லது ஓர் உறுப்பினராகச் செயல்படுகின்ற நபர் ஒருவரை நியமிப்பதில் குறைபாடு அல்லது ஒரு உள்ளடங்கலான ஆணையத்தின் செயல்முறையில் முறைகேடு எதுவும் உள்ளது என்ற காரணத்தினால் மட்டுமே வினவப்படுவது அல்லது செல்லத்தகாதது ஆகக் கூடாது.

**7. ஆணையத்தின் அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்கள்** : (1) அரசு, இந்தச் சட்டத்தின்படி நிறைவேற்றுவதற்குத் தேவைப்படக் கூடிய அத்தகைய அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் ஆணையத்தில் வகை செய்தல் வேண்டும்.

(2) ஆணையத்தின் அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய பணிவரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட அலுவலர்களும் பணியாளர்களும் தலைவரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் வருதல் வேண்டும்.

## அத்தியாயம் III

## ஆணையத்தின் செயற்பணிகள்

**8. ஆணையத்தின் செயற்பணிகள்**: ஆணையத்தின் செயற்பணிகள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

(a) தன்னிச்சையாக அல்லது பாதிக்கப்பட்ட ஒருவரால் அல்லது அவரின் பொருட்டு நபர் எவராலும்

(i) 1955ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (மையச் சட்டம் 22/1955) மற்றும் 1989ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் (மையச் சட்டம் 33/1989) மற்றும் அவற்றின்படிச் செய்யப்பட்ட விதிகளில் வழங்கப்பட்ட உரிமைகள் எவற்றையும் மீறல் அல்லது அதற்கு உடந்தையாயிருத்தல்.

(ii) பொதுப் பணியாளர் ஒருவரால், அத்தகைய உரிமை மீறலைத் தடுப்பதில் கவனக் குறைவு.

குறித்து அளிக்கப்பட்ட மனுவில் பேரிலான புகாரினை விசாரித்தல்.

(b) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்களைப் பாதுகாப்பது தொடர்பான அவரது கடமைகளை நிறைவேற்றுதல் குறித்துப் பொதுப்பணியாளர் எவரும் கடும் கவனக் குறைவாக அல்லது முழு அக்கறையின்றி செயல்பட்டுள்ளார் என ஆணையம் கருதுகிற நிகழ்வில், அதனை விசாரித்து மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கை தொடங்குமாறு அரசுக்குப் பரிந்துரைத்தல்.

(c) 1955ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (மையச் சட்டம் 22/1955) மற்றும் 1989ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் (மையச் சட்டம் 33/1989) அல்லது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களிலும் ஒழுங்குறுத்தல் விதிகளிலும் பிற ஆணைகள் எதிலும் வரையறுக்கப்பட்ட நபர் ஒருவருக்கு உரித்தான பல்வகையான பாதுகாப்பு விதிகள் மற்றும் குடியியல் உரிமைகள் செயலாற்றலை மதிப்பிடுதல் மற்றும் அரசியலமைப்பின்படியும் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதன்படியும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக வழங்கப்பட்ட பாதுகாப்பு விதிகள் தொடர்பான விவரங்கள் அனைத்தையும் புலனாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்.

(g) 1955ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் சட்டம் (மையச் சட்டம் 22/1955) மற்றும் 1989ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டம் (மையச்

சட்டம் 33/1989) தொடர்பான கல்வியறிவினை சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கிடையே பரப்புதல் மற்றும் வெளியீடுகள், ஊடகம், கருத்தரங்குகள் மற்றும் கிடைக்கக் கூடிய வழிவகைகள் மூலம் இவ்வுரிமைகளின் பாதுகாப்பிற்காக இருக்கக் கூடிய பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.

(h) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான பாகுபாட்டினைத் தவிர்க்கும் எழுவினாவின் மீதான ஆய்வு ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வினை மேற்கொள்ளுதல்.

(i) ஆதி திராவிடர் மற்றும் பழங்குயினர் தொடர்பாக அரசால் மேற்கொள்ளப்பட வேண்டிய தகுந்த சட்ட மற்றும் நல நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்குதல்.

(j) சட்டங்களின் நிறைவேற்றமானது, செயலற்றதாயிருக்கிற அல்லது நெறிப்படுத்தப்படாதிருக்கிற பகுதிகளை அடையாளம் காணும் நோக்கத்துடன் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண்கள் தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்டங்களின் செயல்பாட்டை கண்காணித்தல் மற்றும் மேற்கொள்ள வேண்டிய செயலாட்சி அல்லது சட்ட நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

(k) மனித உரிமைகள் துறையில் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் செயல்படும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் முயற்சிகளை ஊக்குவித்தல்.

(l) காலமுறையிலான அறிக்கைகளை வகுத்துரைக்கப்படும் முறையில் மற்றும் கால இடைவெளியில் அரசுக்கு அனுப்புதல் மற்றும்

(m) இந்தச் சட்டம் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளினால் அதற்கு அளிக்கப்படும் அல்லது விதிக்கப்படும் பிற செயற்பணிகளை நிறைவேற்றுதல்.

**வரம்புரை**: அரசியலமைப்பின் 338ஆம் அமைப்பு விதியின்படி நிறுவப்பட்ட ஆதி திராவிடருக்கான தேசிய ஆணையம் அல்லது அரசியலமைப்பின் 338A–ஆம் அமைப்பு விதியின்படி நிறுவப்பட பழங்குடியினருக்கான தேசிய ஆணையம் ஆகியவற்றின் கருத்துகள் மிஞ்சி இருக்குமானால் அத்தகைய விவரம் தொடர்பாக இவ்வாணையத்தின் அதிகார வரம்பானது அற்றுப்போதல் வேண்டும் மற்றும் முரண்பாடான பரிந்துரைகள் உள்ளபோது ஆதி திராவிடருக்கான தேசிய ஆணையம் அல்லது பழங்குடியினருக்கான தேசிய ஆணையத்தின் பரிந்துரையானது நிகழ்வுக்கேற்ப இவ்வாணையத்தின் பரிந்துரைக்கு மேலோங்கி நிற்கும்.

**9. ஆணையத்தின் அதிகாரங்கள்**: ஆணையானது, பிரிவு 8இன்படியான செயற்பணிகளை நிறைவேற்றுகையில், 1908ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின்படி (மையச் சட்டம் V/1908) படி உரிமை வழக்கு ஒன்றை விசாரணை செய்யும் உரிமையியல் நீதிமன்றம் ஒன்றின், குறிப்பாக, பின்வரும் விவரங்கள் தொடர்பான, அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது

(a) நபர் எவருக்கும் அழைப்பாணை விடுத்தல் மற்றும் அவரது வருகையைக் கட்டாயப்படுத்துதல் மற்றும் அவரை உறுதிமொழியின்பேரில் விசாரித்தல்.

(b) ஆவணம் எதனையும் வெளிக்கொணர்ந்து முன்னிலைப்படுத்துமாறு கோருதல்.

(c) உறுதிமொழி ஆவணங்களின்பேரில் சான்றினைப் பெறுதல்.

(d) பொதுப் பதிவுறு அல்லது அதன் படி (நகல்) எதனையும் நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் கோருதல்.

(e) சாட்சிகள் மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்வதற்காகப் பணிப்புரைகளைப் பிறப்பித்தல் மற்றும்

(f) வகுத்துரைக்கப்படும் பிற விவரங்கள் எதுவும்.

**10. ஆணையத்தை அரசு கலந்தாலோசித்தல்**: அரசானது, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களைப் பாதிக்கும் முக்கியமான கொள்கை விவரங்களின்பேரில், ஆணையத்தைக் கலந்தோசிக்கலாம்.

## அத்தியாயம் IV

### நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை

**11. அரசினால் வழங்கப்படும் மானியங்கள்**: (1) அரசானது, இதற்காக சட்டத்தின் மூலம் மாநிலச் சட்டப் பேரவையினால் தக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட, பிறகு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வற்கு அரசு பொருத்தமெனக் கருதும பணத்தொகையை மானியங்கள் மூலமாக ஆணையத்திற்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஆணையமானது, இந்த சட்டத்தின்படியான செயற்பணிகளை நிறைவேற்றுவதற்காக, அது பொருத்தமெனக் கருதக் கூடிய அத்தகைய தொகைகளை மானியங்களிலிருந்து செலவு செய்யலாம் மற்றும் அத்தகைய தொகையானது உட்பிரிவு (1)இல் குறிக்கப்பட்ட மானியங்களிலிருந்து செலுத்தப்பட்ட செலவீனமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படத்தக்க [1][ஊதியங்கள் மற்றும் படித் தொகைகள்] மற்றம் உறுப்பினர் செயலாளர், அலுவலர்கள் மற்றும் ஆணையத்தின் பிற பணியாளர்களுக்கு வழங்கப்படத்தக்க [2][ஊதியங்கள் மற்றும் படித் தொகைகள்] உள்ளிட்ட நிருவாகச் செலவினங்களானவை, உட்பிரிவு (1)இல் குறிக்கப்பட்ட மானியங்களிலிருந்து வழங்கப்படுதல் வேண்டும்.

**12. கணக்குகள் மற்றும் தணிக்கைகள்:** (1) ஆணையத்தின் கணக்குகளானவை, வகுத்துரைக்கப்படும் முறையிலும் படிவத்திலும் பேணி வரப்படுதல் வேண்டும். ஆணையமானது, வகுத்துரைக்கப்படும் படிவத்தில் ஆண்டுக் கணக்கு விவர அறிக்கை ஒன்றை தயாரித்தல் வேண்டும்.

(2) ஆணையத்தின் கணக்குகளானது, அரசால் இதற்காக நியமிக்கக் கூடிய தணிக்கையாளரால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (2)இன்படி நியமிக்கப்பட்ட தணிக்கையாளர் தணிக்கையின் நோக்கங்களுக்காக வகுத்துரைக்கப்படும் உரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் அதிகார உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) உறுப்பினர் செயலாளர், தணிக்கை அறிக்கையை அச்சிடுவதற்கும் அதன் அச்சுப்படியை அதன் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அனுப்பி வைப்பதற்கும், அத்தகைய அறிக்கையை அதன் அடுத்த கூட்டத்தில், பரிசீலனைக்காக ஆணையத்தின் முன்பாக வைத்தல் வேண்டும்.

(5) ஆணையம், தணிக்கை அறிக்கையில் சுட்டிக் காட்டப்படக் கூடிய குறைபாடு அல்லது முறைகேடு எதனையும் களைவதற்கு உரிய நடவடிக்கையை உடனே எடுத்தல் வேண்டும்.

(6) தணிக்கையாளரால் சான்றளிக்கப்பட்ட ஆணையத்தின் கணக்குகள், தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து ஆணையம் அதன் மீது வழங்கும் குறிப்புகளுடன், அரசுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படும் முறையில் வெளியிடப்படுதல் வேண்டும்.

---

1. 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்ட எண் 25/2022) பிரிவு 3இன் மூலம் மாற்றாக அமைக்கப்பட்டது.

---

2. 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்ட எண் 25/2022) பிரிவு 3இன் மூலம் மாற்றாக அமைக்கப்பட்டது.

(7) அரசு, தணிக்கை அறிக்கையில் குறைபாடுகள் எவையேனும் தெரிவிக்கப்பட்டிருக்குமானால், எழுத்து வாயிலான ஆணை மூலமாக, அந்த ஆணையில் குறித்துரைக்கப்பட்ட கால அளவிற்குள், அக்குறைபாடுகளைக் களைவதற்கு அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் நடவடிக்கையை எடுக்குமாறு ஆணையத்தைப் பணிக்கலாம். ஆணையம் அத்தகைய பணிப்புரைக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

**13. ஆண்டறிக்கை**: ஆணையம், நிதியாண்டு ஒவ்வொன்றிற்கும் அதன் தணிக்கை அறிக்கையில், முந்தைய நிதியாண்டின்போதான அதன் நடவடிக்கைகள் முழுவதையும் விவரமாக அளித்து, வகுத்துரைக்கப்படும் முறையிலும் நேரத்திலும் தயாரித்து, அரசிற்கு அதன் நகல் ஒன்றினை அனுப்புதல் வேண்டும்.

**14. ஆண்டறிக்கையும் தணிக்கை அறிக்கையும் சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும்**: ஆண்டறிக்கையை, அதில் அடங்கிய பரிந்துரைகளில் அரசு தொடர்பானவற்றின் மீது எந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற குறிப்புடனும் அந்தத் தணிக்கை அறிக்கையையும் சேர்த்து அந்த அறிக்கைகள் அந்த அறிக்கையை சட்டமன்றப் பேரவை முன்பு வைப்பதற்கு அரசு ஆவண செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் V

### பல்வகை

**15. ஆணையத்தின் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் முதலானோர் பொது ஊழியர்கள் ஆவர்** : (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி அல்லது ஆணைய அல்லது பணிப்புரை எதனின்படியும் ஒட்டிச் செயல்படுகின்ற அல்லது செயல்படுவதாகப் புலப்படுகின்றபோது, ஆணையத்தின் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860 ) பிரிவு 21இன் பொருளின்படி, பொது ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**16. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு**: இந்தச் சட்டம் அல்லது இதன்படிச் செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, ஆணை அல்லது பணிப்புரையினை ஒட்டி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும், ஆணையத்தின் உறுப்பினர் எவருக்கும் அல்லது அலுவலர் அல்லது பிற பணியாளர் எவருக்கும் எதிராக அல்லது அரசின் அல்லது ஆணையத்தின் பணிப்புரையின்படிச் செயல்படுகின்ற நபர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் கூடாது.

**17.விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்**: [1][(1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எவற்றையுமோ நிறைவேற்றுவதற்காக பின் தேதியிட்ட அல்லது முன் தேதியிட்ட விதிகளைச் செய்யலாம்.]

(2) குறிப்பாகவும் முன் சொன்ன அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்கு ஊறின்றியும் அத்தகைய விதிகள், பின்வரும் விதிகள், பின்வரும் விவரங்கள் அனைத்திற்குமோ அல்லது அவற்றில் எவற்றிற்குமோ வகை செய்யலாம். அதாவது

(a) தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படத்தக்க [2][ஊதியங்கள் மற்றும் படித்தொகைகள்] மற்றும் பிரிவு 4இன் உட்பிரிவு (4)இன்படி தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி பற்றிய வரையறைகளும் நிபந்தனைகளும் மற்றும் பிரிவு 7இன் உட்பிரிவு (2)இன்படி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படத்தக்க ஊதியங்களும் படித்தொகைகளும் மற்றும் பிற பணிவரையறைகளும் நிபந்தனைகளும்.

(b) பிரிவு 12இன் உட்பிரிவு (1)இன்படி கணக்குகள் எந்தப் படிவத்திலும் முறையிலும் மற்றும் ஆண்டுக் கணக்குகளின் விவர அறிக்கை எந்தப் படிவத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதும்.

(c) பிரிவு 13இன்படி ஆண்டறிக்கை எந்தப் படிவத்தில் மற்றும் எந்த நேரத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

---

1. 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்ட எண் 25/2022) பிரிவு 3இன் மூலம் மாற்றாக அமைக்கப்பட்டது.

(d) அரசிற்கு ஆணையத்தினால் அனுப்பப்படும் அறிக்கையின் கால அளவு முறை மற்றும் கால இடைவெளிகள்.

(e) இந்தச் சட்டத்தின்படி தேவைப்படும் அல்லது வகுத்துரைக்கப்படும் பிற விவரம் எதுவும்.

(3) (a) இந்தச் சட்டத்தின்படிச் செய்யப்பட்ட விதிகள் அனைத்தும், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்ட வெளிப்படையாகத் தெரிவிக்கப் பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்படும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் விதிகள், அறிவிக்கைகள் அல்லது ஆணைகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட நாளில் அவை நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்படும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி அல்லது அறிவிக்கை அல்லது பிறப்பிக்கப்படும் ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடரோ அதை அடுத்து வரும் கூட்டத் தொடரோ முடிவடைவதற்க முன்னர் அத்தகைய விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமானால் அல்லது அந்த விதியோ, அறிவிக்கையோ அல்லது ஆணையோ செய்யப்படுதலோ பிறப்பிக்கப்படுதலோ கூடாது எனச் சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால், அதன் பின்பு அந்த விதியோ அறிவிக்கையோ அல்லது ஆணையோ அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல்வடிவம் பெறாது போகச் செய்வது எதுவும், அந்த விதியின்படியோ அறிவிக்கையின்படியோ அல்லது ஆணையின்படியோ முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**18. நபர்களால் ஆணையத்திடம் தாக்கல் செய்யப்படும் அறிக்கைகள்**: ஆணையம் அல்லது பிரிவு 9இல் குறிப்பிடப்பட்ட அலுவலர் அல்லது முகமை அல்லது நபர் எவரின் முன்பும் சான்று வழங்கும்போது நபர் ஒருவரால் செய்யப்பட்ட அறிக்கை எதுவும், அத்தகைய அறிக்கையினால் பொய்ச்சான்று வழங்கப்பட்டதற்கான சட்ட நடவடிக்கையைத் தவிர, உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை எதற்கும் அவரை உள்ளாக்குதல் கூடாது அல்லது அவருக்கெதிராக பயன்படுத்துதல் கூடாது.

**வரம்புரை**: அறிக்கையானது

(a) ஆணையத்தினால் அல்லது அத்தகைய அலுவலர் அல்லது முகமை அல்லது அத்தகைய நபரினால் விடையளிப்பதற்காகக் கோரப்பட்ட வினாவிற்கு அளிக்கப்பட்ட பதில் அல்லது

(b) விசாரணையின்படியான விவரத்துடன் தொடர்புடையது.

**19. பிற சட்டங்களின் பொருந்துகையைத் தடை செய்தல் கூடாது** : இந்தச் சட்டத்தில் வேறுவிதமாக வழி செய்யப்படாத நிலையில், இந்தச் சட்டங்களின் வகைமுறைகள் கூடுதலாக இருக்குமேயன்றி, அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதனையும் மதிப்புக்குறைவு செய்தல் கூடாது.

**20. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்**: இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில், அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானவை என்றோ உகந்தவை என்றோ அதற்குத் தோன்றுகிற வகைமுறையைச் செய்யலாம்.

**வரம்புரை**: அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டும் ஆண்டுகள் கால அளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதல் கூடாது.

**நன்றி: தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**



THINK AHEAD. STAY AHEAD.
Bharath UNIVERSITY
30 YEARS OF EXCELLENCE
RATING AA+
பாரத் பல்கலைக்கழகம்
B.TECH
AERONAUTICAL ENGINEERING
AUTOMOBILE ENGINEERING
BIO-PROCESS ENGINEERING
BIO-INFORMATICS
BIO-MEDICAL ENGINEERING
CHEMICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
COMPUTER SOFTWARE ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
ELECTRONICS AND CONTROL ENGINEERING
ELECTRONICS AND INSTRUMENTATION ENGG.
ELECTRONICS AND TELECOM ENGINEERING
FOOD PROCESS ENGINEERING
GENETICS ENGINEERING
INDUSTRIAL BIO-TECHNOLOGY
INFORMATION TECHNOLOGY
INSTRUMENTATION AND CONTROL ENGG.
MECHANICAL ENGINEERING
MECHATRONICS
NANO TECHNOLOGY
PRODUCTION TECHNOLOGY
M.TECH
[For Program details, please visit: www.bharathuniv.ac.in ]
EVENING PROGRAMME : B.TECH & M.TECH
MECHANICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
B.TECH LATERAL ENTRY ALL PROGRAMME
Eligibility : Diploma / B.Sc.
M.S. BY RESEARCH AND Ph.D.
All Disciplines Full time and Part time
INTEGRATED PROGRAMME
B.TECH + MBA - 5 Years and B.TECH + M.TECH - 5 Years
MBA
[ Full time and Part time ]
MCA
HOTEL MANAGEMENT & CATERING
Courses : Diploma, B.Sc., & MBA
B.ARCH Eligibility : As per Council of Architecture norms
PLACEMENT 100%
1st among the participants from 125 Countries in International competition on Robotics
Job Placements : 100% with the highest salary package of ₹10 L. P.A.
Collaborations with R&D Institutions and Industries like IBM, Nokia, CISCO, SAP, Etc.,
Internationally acclaimed curriculum in tune with global trends.
Scholarships worth ₹12.00 crores to the meritorius students
27 Centers of excellence to promote research and industry aided / driven projects
SCHOLARSHIP (TUITION FEES GRANT) ■ 100%-State Toppers of all Boards ■ 50%-School toppers, participated in National Level Sports Competition / Event ■ 30%-Students having participated in State Level Sports Competition / Event ■ 35%-Students securing 90% above Marks in the Board examinations ■ 25%- "SARVA SIKSHA" Scheme I Scheduled Caste / Scheduled Tribe candidate I Parent being an Ex-servicemen I Physically Handicapped candidate I First Graduate candidate
HOW TO APPLY: Application forms can be obtained: In person or by sending a Demand Draft for ₹ 750/- drawn in favor of "Bharath University", payable at Chennai, to the Dean-Admission, Bharath University. ■ Application forms can also be downloaded from our website and filled in forms should be sent to the University address along with DD of ₹ 750/-. Eligibility : As per UGC/AICTE norms.
BHARATH UNIVERSITY, 173, Agharam Road, Selaiyur Tambaram, Chennai 600 073. Ph 044-22290247
Corp. Off: 1, First Main Road, Kasturibai Nagar, Adyar, Chennai 600 020. Ph 044-42115251 / 91-98410 64199
Apply online : www.bharathuniv.ac.in
ADMISSION HELPLINE
1800-419-1441
Check us out on YouTube www.youtube.com/thebharathuniversity
BY REGISTRAR

**Posted at Egmore RMS. Partrika Channel Registered News Magazine Posted on 3rd to 9th of July 2026**
**SATTAKADIR - Tamil Law Journal /Monthly July 2026 / Publication First Week of Every month.**
**Registration of News Papers for India, Reg. No. 62767/92**
**Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026**




On behalf of SATTAKADIR, Published at 3/2, Swathiram Towers, Jupiter Campus,
3, Durgabai Deshmukh Road, R.A. Puram, Chennai - 600 028. Printed by I. Stephen,
Printed at Canaan Press Pvt. Ltd., 62/1, Peters Road, Royapettah, Chennai - 600 014.
**Editor : Dr. V.R.S. Sampath**